வெளியீடு 12-2-99 Issued 12-2-99

4212/99

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

திங்கட்கிழமை, ஏப்ரல் 20 1998 – தொகுதி 45– எண் 2

**Monday the 20th April, 1998 – Volume 45 – No. 2**

D.
V41,3/4/98.
21645

...ப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009
...ve Assembly Secretariat, Fort St. George,
Chennai-600 009

[Price Rs. 3.00

4919
99

**20-4-1998**

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| 1. | வினாக்கள்-விடைகள்— | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 293-342 |
| 2. | ஒத்திவைப்புத் தீர்மானம்— | |
| | பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வுக்கான வினாத்தாள் தேர்வுக்கு முன்னரே வெளியாகியுள்ளது | 343-348 |
| 3. | கவன ஈர்ப்பு— | |
| | (அ) கரும்பு விலை உயர்த்தப்படாததால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு | 348-353 |
| | (ஆ) வேலூர் மாவட்ட அரியூர் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டுள்ளது | 354-361 |
| 4. | அறிக்கைகள் அளித்தல்— | |
| | (அ) பொதுக் கணக்குக் குழு | 361 |
| | (ஆ) பொது நிறுவனங்கள் குழு | 361-362 |
| 5. | அறிவிப்பு— | |
| | பேரவை அலுவல் | 362 |
| 6. | மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி | |
| | (அ) கோரிக்கை எண் 5 - முத்திரைத் தாள்கள்-நிருவாகம் | 363-442 |
| | (ஆ) கோரிக்கை எண் 6 - ஆவணப் பதிவு | |
| | (இ) கோரிக்கை எண் 47 - ஊரகத் தொழில்கள் | |
| | (ஈ) கோரிக்கை எண் 59 - ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு | |

| | பக்கங்கள் |
|---|---|
| **6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி** | |
| *மாண்புமிகு திரு. இ. பெரியசாமி | 363, 364, 366, 367, 372, 373, 376, 418-434, 435 |
| திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் | 369, 374-381, 439 |
| திரு. அ. அசோகன் | 381-386 |
| திரு. கே. தங்கமணி | 386-390 |
| திரு. குழந்தை தமிழரசன் | 390-399 |
| திரு. ஆர்.ஆர். சேகரன் | 402-408 |
| திரு. அ.வ. அப்துல் நாசர் | 408-413 |
| திரு. ந. கருப்பண்ண உடையார் | 413-418 |
| **(உ) கோரிக்கை எண் 26 - கதர்-கிராமத் தொழில்கள் —** | |
| * மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு | 442, 445, 447-448, 449, 463-464, 476-486, 487 |
| திரு. சி. ஞானசேகரன் | 442, 445-447, 449, 450-451, 464, |
| திரு. ம. சண்முகம் | 451-455 |
| * திரு. லி. அய்யலுசாமி | 456-458 |
| * திரு. டி மணி | 458-463 |
| திரு. ஜி. பி. வெங்கிடு | 465-470 |
| திரு. சோ. பாலகிருஷ்ணன் | 470-476 |





| | பக்கங்கள் |
|---|---|
| **7. தகவல் கோரல் —** | |
| (அ) 'பாரத ரத்னா' விருது பெற்ற திரு. சி. சுப்ரமணியம் அவர்களை முதல்வர் பாராட்டவில்லை எனும் செய்தி | 399-402 |
| (ஆ) பேரவைக் கூட்டம்-மாலை நேரங்களில் தவிர்த்தல் | 487-488 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 491 |


D
V21/3/98
N99.45.2

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 7, வெகுதான்ய – திருவள்ளுவர் ஆண்டு - 2029

## 1998 ஏப்ரல் 20, திங்கட்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. **பிடிஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்."

தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட ஓயாது உழைப்பவனுக்குத் தெய்வச் செயல் எனக் கூறப்படும் இயற்கையின் ஆற்றல்கூட வரிந்து கட்டிக்கொண்டு வந்து துணைபுரியும்.

## I. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 241, திரு. ச. புரட்சிமணி, மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**241—**

### மதிப்பூதியம் உயர்த்தி வழங்குதல்

***7078—திரு. ச. புரட்சிமணி :**

மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பாடநூல்களுக்குப் பாடங்கள் எழுதித்தரும் ஆசிரியர்களுக்கு தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம் வழங்கிவரும் மதிப்பூதியம் மிகக் குறைவாக உள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், அதை உயர்த்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

[1998 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்பொழுது பாடநூல்கள் எழுதித்தரும் குழுத் தலைவர்/ மேலாய்வாளர்–நூலாசிரியர் நிலையில் உழைப்பூதியம் மற்றும் மதிப்பூதியம் (Remuneration and Royalty) தொகை வழங்குவது 1995-96 ஆம் கல்வி ஆண்டு முதல் தமிழ்நாட்டுப் பாடநூல் கழக நிதிக் குழுவின் பரிந்துரையின்படி நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

(ஆ) இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 242, திரு. கொ.வீ. நன்னன், மாண்புமிகு கல்வி அமைச்சர்.

**242—**

### மகளிர் கல்லூரி அமைத்தல்

***7298—திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் தொகுதியில் மகளிர் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், கல்வி அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

**திரு. கொ.வீ. நன்னன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி அறிவே இல்லாத பெண்கள் இல்லை என்ற நிலையை உருவாக்க, மிகவும் பின்தங்கிய என்னுடைய செங்கம் தொகுதியில் வாழும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட பெண்களின் கல்விக் கண்களைத் திறந்திட, செங்கத்தில் மகளிர் கல்லூரி ஒன்றை அரசு அமைக்க ஆவன செய்ய வேண்டுமாய், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.ஜி. தனபால்.

**திரு. வி.ஜி. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் பெண்கள் கல்லூரியை அமைக்க முன்வரும்போது நகர்ப் பகுதிக்கு 5 ஏக்கர் நிலம் தேவை என்றும், கிராமப்பகுதிக்கு 15 ஏக்கர் நிலம் தேவை என்றும் கூறுகிறார்கள். கிராமப் பகுதிக்கு 10 ஏக்கர் என்று நிர்ணயிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சில விதிகள் ஏற்படுத்தப்படுகின்றன. அந்த விதிகளில், குறிப்பிட்ட வேண்டுகோள் அடிப்படையில், 15 ஏக்கர் என்று இருக்கிறது. நடைமுறை சாத்தியம் இல்லாத ஓர் இடத்தில் அப்படி ஒரு கல்லூரியைத் துவங்க வேண்டுமானால், அது தனிப்பட்ட வகையில் ஆய்வு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பா. கோபால்.

**திரு. பா. கோபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேட்டூர் தொகுதியில் அரசு சார்பிலோ, தனியார் சார்பிலோ எந்தக் கல்லூரியும் இல்லை. மேலும், அங்கே அரசு நிலம் நிறைய இருக்கின்றது. பொதுமக்களுடைய பங்குத் தொகையாக ஒரு தொகையைச் செலுத்தி நாங்கள் அங்கு கலைக் கல்லூரியைத் துவங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த வட்டாரத்தில் கல்லூரிக் கல்வி பெறுவதற்கான வாய்ப்பு எந்த அளவுக்குத் தேவை என்று பார்த்து அதுபற்றி ஆலோசிக்கப்படும். தொகுதிக்கு ஒரு கல்லூரி என்ற அந்த முறையை ஏற்படுத்துவது சாத்தியமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் கல்லூரியை அமைக்கின்றபோது அதற்கு 10 இலட்சம் ரூபாய் அரசாங்கத்திற்கு முதலிலே கட்ட வேண்டும் என்ற ஒரு விதி இருக்கிற காரணத்தினால், அந்த 10 இலட்சம் ரூபாயைக் கட்டிவிட்டு பிறகு கல்லூரி துவங்குவது என்பது சிரமமாக இருக்கிறது. என்னுடைய வேலூரிலேகூட, திருப்பதி தேவஸ்தானம், வெங்கடேஸ்வரா மேல்நிலைப்பள்ளி, ஒன்றை நடத்திக் கொண்டிருக்கிறது. அவர்கள் கல்லூரி துவங்குவதற்கு 10 இலட்சம் ரூபாய் கட்டாமல் இருக்கிற

[1998 ஏப்ரல் 20

காரணத்தினால் கல்லூரி வராமல் இருக்கிறது. எனவே, திருப்பதி தேவஸ்தானத்திற்காவது நீங்கள் விதி விலக்கு அளிப்பீர்கள் என்று சொன்னால், அந்த இடத்தில் ஒரு கல்லூரி வர வாய்ப்பு ஏற்படும். அதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு அடிப்படையான தவறுகளோடு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வியை எழுப்பியிருக்கிறார்கள். ஒன்று, 10 இலட்சம் ரூபாயை அரசுக்குக் கட்டுவது என்பது அரசாங்கத்திற்கு அல்ல. அந்தக் கல்லூரி தொடர்ந்து நடைபெறுவதற்குக் காப்பு நிதியை—Endowment என்ற முறையில், அரசாங்கத்தோடு சேர்ந்து அந்த நிதியை அவர்கள் வைக்க வேண்டும். குறைந்தபட்சம் 10 இலட்சம் ரூபாய்கூடக் கட்ட முடியாத அவர்கள் கல்லூரி என்று ஆரம்பித்தால் எவ்வளவுக்கு விற்பார்கள் என்பதைக் கணக்கிட்டு பார்க்க வேண்டும். அதைப்போல, மற்றொன்று, திருப்பதி தேவஸ்தானம் 10 இலட்சம் ரூபாய் கட்டமுடியவில்லை என்றால், தேவஸ்தானத்திற்கு இஷ்டமில்லை என்றுதான் அர்த்தமே தவிர, கட்ட முடியவில்லை என்று பொருள் அல்ல.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 243, திரு. க. மணிவர்மா, மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

**243—**

### தண்டராம்பட்டை வட்டத் தலைமையகமாக மாற்றுதல்

**13877—திரு. க. மணிவர்மா:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தண்டராம்பட்டை, வட்டத் தலைமையகமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?



1998 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன், வருவாய்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை மாவட்டம், தண்டராம்பட்டை வட்ட தலைமையகமாக மாற்றும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி தண்டராம்பட்டு. அங்குள்ள மக்கள் தாலுக்கா அலுவலகம் செல்ல வேண்டுமென்றால் 70, 80 கிலோ மீட்டர் தூரம், மூன்று பஸ்கள் மாறி மாறிச் செல்ல வேண்டியுள்ளது. இப்படி ஒருநாள் முழுவதும் அல்லல்பட்டுச் சென்றால்தான் தாலுக்கா அலுவலகம் செல்ல முடிகிறது. எனவே, செங்கம் வட்டத்தை இரண்டாகப் பிரித்து, தண்டராம்பட்டை தலைமையிடமாகக் கொண்டு, தனி தாலுக்கா அமைக்க வேண்டுமென்று என்னுடைய தொகுதி மக்கள் நீண்ட நாட்களாக கோரிக்கை வைத்து வருகிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களும் இந்தக் கூட்டத் தொடரில் அறிவிப்பார்கள் என்று நானும், எனது தொகுதி மக்களும் பெரும் நம்பிக்கையோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். எங்கள் நம்பிக்கையையும், எதிர்பார்ப்புகளையும் கருத்தில் கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து நிறைவேற்றித் தருவார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய வட்டங்கள் மற்றும் வருவாய்க் கோட்டங்கள் போன்ற நிர்வாக அமைப்புகளை நிதிநிலைமை காரணமாக 20-06-1998 வரை உருவாக்குவதில்லை என்று இந்த அரசு கொள்கை முடிவு எடுத்துள்ளது. எனவே வரும் 20-6-1998-க்குப் பிறகு உறுப்பினரின் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 244, திரு. ப. மோகன் கந்தசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

**244—**

### தரம் வாய்ந்த பழச்செடிகள் விற்பனை

***7790—திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[1998 ஏப்ரல் 20

வேளாண்மைத் துறை மூலம் கூடுதலாக, தரம் வாய்ந்த பழச்செடிகள் விற்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தோட்டக்கலைத் துறை மூலம் செயற்படுத்தப்பட்டு வரும் திட்டங்களின் மூலமும் மற்றும் அரசுத் தோட்டக்கலைப் பண்ணைகள் மூலமும் தரம் வாய்ந்த பழச்செடிகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி முழுக்க முழுக்க விவசாயிகள் நிறைந்த பகுதி என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியும். இப்போது விவசாயிகள் வெங்காயம் போன்ற அழுகும் பொருட்களைப் பயிரிட்டு வருகிறார்கள். எனவே அதிக ஊட்டச் சத்து நிறைந்த பழச்செடி வகைகளைப் பயிரிட—அங்கே உரிய அதிகாரிகளை அனுப்பி, மண்ணுக்குத் தகுந்தவாறு எந்தப் பழச் செடிகள் வரும் என்பதைக் கவனித்து—அதற்குரிய ஊக்கத்தை விவசாயிகளுக்குத் தர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள் நம்முடைய தோட்டக்கலைத் துறை அலுவலகங்களுக்குச் சென்று, அதிகாரிகளை அணுகி, அவர்களுடைய நிலத்தின் மண்ணின் தரத்தை அறிந்து எந்தப் பழச்செடிகளைப் பயிரிடலாம் என்று ஆலோசனை கேட்டால், ஆலோசனை வழங்கப்படும். இப்போது மா ஒட்டு, சப்போட்டா ஒட்டு, கொய்யா கன்று, எலுமிச்சை கன்று—பதியம் வைத்த கன்றுகள் — சீதா கன்று, மாதுளை கன்று, நெல்லி கன்று, பப்பாளி கன்று போன்ற வகைகளை எல்லாம் 50 சதவிகித மானியத்திலே நாம் விவசாயிகளுக்கு வழங்குகிறோம். இதை அந்தப் பகுதி விவசாயிகள் பயன்படுத்திக்கொள்ள வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 245, திரு. ரா. ஈஸ்வரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 20]

**245—**

**சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்துதல்**

***8793—திரு. ரா. ஈஸ்வரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வாசுதேவநல்லூர் தொகுதியில் மலர்கள் மூலமாக 'சென்ட்' தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது தொடங்கப்படும்?

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): வாசுதேவநல்லூர் தொகுதியில் மலர்கள் மூலமாக சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திருமதி பொன்னம்மாள் அவர்கள் உட்கார வேண்டும். வாசுதேவநல்லூருக்கும், உங்களுக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறது? நான் கூப்பிட்டால்தான் நீங்கள் எழுந்திருக்க வேண்டும். திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், பனமரத்துப்பட்டியில் அதிக அளவு மல்லிகைப் பூக்கள் உற்பத்தியாகின்றன. அந்த மல்லிகைப் பூக்கள் அனைத்துமே, தினமும் பெங்களூருக்கு விற்பனைக்காகச் சென்று கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதியில் ஒரு சென்ட் தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டுமென்பது விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கையாகும். சென்ற ஆட்சிக்காலத்தில், இதற்கென ஆய்வுகள் நடத்தப்பட்டன. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் சொந்தத் தொகுதியாக இருக்கின்ற காரணத்தாலும், அங்கே விவசாயிகளினுடைய கோரிக்கையை மனதில் வைத்து, சென்ட் உற்பத்தி செய்யும் ஒரு தொழிற்சாலையை அமைப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 20

முற்பகல் 9-40

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்த மாவட்டம் என்பது உண்மை. ஆனால் சொந்தத் தொகுதி அல்ல, பனமரத்துப்பட்டி தொகுதி அல்ல. நான் வீரபாண்டி தொகுதி. மல்லிகைப் பூ ஒன்றும் பனமரத்துப்பட்டி தொகுதியில் இல்லை; ரோஜாப் பூதான் அதிகம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டை தொகுதி தொடர்புடைய ஏரியாவில் அதிகப்படியான மல்லிகைப் பூக்கள் உற்பத்தி ஆகின்றன. காலை 5 மணிக்கே அந்த மக்கள் மல்லிகைப் பூவை எடுத்து வந்து, அதிலுள்ள நீர் வடிவதற்கு முன்பாகவேகூட, அவர்கள் வெளியூர்களுக்கு அனுப்பிக்கொண்டு வருகிறார்கள். நான் முன்பே ஒரு தடவை இந்தக் கேள்வியைக் கேட்டு இருக்கின்றேன். கடந்த அரசு இதைச் செய்வதற்கு சாத்தியம் இல்லை என்றே சொல்லிவிட்டார்கள். இருந்தாலும், இந்த மல்லிகைப் பூ விவசாயம் செய்யக்கூடிய சிறு சிறு விவசாயிகளுடைய பொருளாதாரத்தை உயர்த்தக்கூடிய அளவில் அங்கே ஒரு ஜாஸ்மின் சென்ட் தொழிற்சாலையை ஏற்படுத்த வேண்டும். மேல்நாடுகளில் சென்ட்டின் விலை அதிகப்படியான விலைக்கு விற்கப்படுவதாகச் சொல்கின்றார்கள். ஆகையினால், ஜாஸ்மின் சென்ட் தயாரிக்கும் ஒரு தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது வழிவகை செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசின் சார்பிலே இதுபோன்ற சென்ட் தொழிற்சாலை ஆரம்பிக்கின்ற திட்டம் தற்போது பரிசீலனையில் இல்லை. ஆனால், இப்பொழுது தனியார்கள் சென்னை, கோயம்புத்தூர், திருச்சி, மதுரை, நாகர்கோவில் போன்ற இடங்களிலும் இன்னும் சில இடங்களிலும், மொத்தம் 27 இடங்களில் சென்ட் தொழிற்சாலைகளை நடத்துகின்றார்கள். மதுரை மாவட்டப் பகுதியிலே இதுபோன்ற தொழிற்சாலை அமைக்க தனியார் முன்வந்தால் நம்முடைய மாநில அரசாங்கம் சார்பில் 'தாய்' நிறுவனத்தின் மூலம் அவர்களுக்கு உதவியாக, நிதி உதவிகூடத் தந்து ஊக்குவிக்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.



1998 ஏப்ரல் 20]

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய சேலம் மாவட்டத்திலே மனதைக் கவரும் மல்லிகை மிக அதிகமாக விளைகிறது. தமிழ்நாட்டின் தலை நகரமான சென்னைக்கும் பெங்களூருக்கும் தினசரி பல லோடுகள் ஏற்றி அனுப்பப்படுகின்றன. அந்த சேலம் மாவட்டத்திலே மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு இஷ்டமான ஓர் இடத்திலே சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலையை நிறுவ அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு சென்ட்டின் மீது மோகம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். பெரியசாமி

**திரு. என். பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வாசனைத் திரவிய ஆலைகள் அமைக்கப்படும்போது சுற்றுப்புறச் சூழல் குறித்து வேளாண்மைத் துறை கவனம் செலுத்துகிறதா? அதற்காக என்ன நிபந்தனைகள் வேளாண்மைத் துறையின் மூலம் விதிக்கப்படுகின்றன? அதுகுறித்துத் தொடர் கண்காணிப்பு இருக்கிறதா என்பதைத் தங்கள் மூலமாக அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லிகைப் பூவிலிருந்து சென்ட் எடுப்பதற்கு சுற்றுச்சூழல் ஒன்றும் பார்ப்பது இல்லை. ஒரு டன் மல்லிகைப் பூவிலிருந்து 3 கிலோ சென்ட் தயாரிக்கலாம் என்று இருக்கிறது. அதுபோன்ற சென்ட் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்க வேண்டும் என்றால் Viable ஆக இருக்க வேண்டும்; தொடர்ந்து அவர்களுக்கு மல்லிகைப் பூ கிடைக்கவேண்டும். அப்படிக் கிடைக்கக்கூடிய இடத்தில் தனியார் முன்வந்தால் தாராளமாக அரசு அனுமதிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 246, திரு. மீ.அ. வைதியலிங்கம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**246—**

**மீனம்பாக்கம் விமான ஓட்டுநர் பயிற்சிக்கூடம்**

***3620—திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1998 ஏப்ரல் 20

(அ) சென்னை மீனம்பாக்கம் விமான ஓட்டுநர் பயிற்சிக் கூடத்தை அரசு எடுத்துக்கொள்ளும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் தற்போதைய நிலை என்ன?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) சென்னை மீனம்பாக்கம் விமான ஓட்டுநர் பயிற்சிக் கூடத்தை (Madras Flying Club Limited) திறம்படச் செயல்படுத்துவதற்கு உரிய வழிமுறைகளை அரசு எடுத்து வருகிறது.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விமான ஓட்டுநர் பயிற்சிக் கூடத்தின் மூலமாக பலபேர், பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் எல்லாம் விமான ஓட்டிகளாக மாறி இருக்கிறார்கள். மிகச் சிறந்த முறையில் நடைபெற்றுக் கொண்டிருந்த அந்தப் பயிற்சிக்கூடம், தற்பொழுது சிறுகச்சிறுக மூடப்பட்டுவிடுமோ என்கின்ற அளவிற்கு, அங்கே ஓய்வு பெற்றவர்கள், இயற்கை அடைந்தவர்கள் ஆகியோர் வகித்த பொறுப்புகளுக்கு ஆட்கள் நியமிக்கப்படாமல், 60 பேர் இருந்த இடம் தற்போது 40 பேர் கொண்ட இடமாக மாறியிருக்கின்றது. மேலும் அங்கே இருக்கிற தொழிலாளர்களுடைய அச்சத்தைப் போக்குகிற அளவிற்கு, பயிற்சியாளர்களுடைய அச்சத்தைப் போக்குகிற அளவிற்கு, அதை இலாபகரமாக நடத்தும் விதமாக அரசே அதை எடுத்து நடத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-45

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதை அரசு எடுத்து நடத்துவதற்கான உத்தேசம் எதுவும் இப்போது அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும் தனியாரே இதைச் சிறப்பாக நடத்துவதற்காக ஒரு குழு நியமிக்கப்பட்டு, 'பல்லவன் கன்சல்டன்சி' மூலமாக ஆய்வு செய்யப்பட்டது. அதன் காரணமாக, அவர்கள் கோரியிருந்த உதவித் தொகையில் 10 இலட்சம் ரூபாய் உதவித் தொகையாகவும் அரசு வழங்கியிருக்கிறது. அது மட்டுமல்லாமல், மானியத் தொகையாக அவர்களுக்குக் கொடுக்க அரசு முன்வந்து, நம்முடைய அரசின் பொறுப்பில், பாதுகாப்பில் இருக்கிற இரண்டு விமானங்களையும் அங்கேயே நிறுத்திவிட்டு, அதற்கான வாடகையும் அரசு சார்பில் அவர்களுக்குத் தரப்படுகிறது. அதுமட்டுமல்லாமல், மானியத் தொகையாக மூன்று மாதத்திற்கு ரூ.95,000 அவர்களுக்கு வழங்கப்படுகிறது. ஆகவே, தனியார் நடத்துவதற்கான அனைத்து ஊக்கத்தையும் அரசு அளித்து வருகிற கால கட்டத்தில், அரசே அதை எடுத்து நடத்துகிற குறிப்புகள் எதுவும் இல்லை. அது இலாபகரமான தொழிலும் இல்லை. ஆகவே அரசு நடத்துகிற பேச்சுக்கே இடமில்லை. தனியார் நடத்துவதற்கான அனைத்து ஊக்கத்தையும் அரசு அளித்து வருகிறது. அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, முன்பணமாகக்கூட ரூ.3,39,000 அரசு வழங்கியிருக்கிறது.



1998 ஏப்ரல் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 247, திரு. இரா. மதிவாணன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

**247—**

### சென்னையில் கூடுதல் பேருந்துகள் இயக்குதல்

***7716—திரு. இரா. மதிவாணன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னையில் மக்கள் தொகைப் பெருக்கத்திற்கேற்ப, போக்குவரத்துப் பேருந்துகளை அதிக அளவில் இயக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சென்னையில் மக்கள் தொகைக்கேற்ப போக்குவரத்துத் துறையில் அதிக வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்றன.

**திரு. இரா. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழித்தடம் எண் 1, தண்டையார்பேட்டை— திருவல்லிக்கேணி (வழி: இராயபுரம், பாரிமுனை), வழித்தடம் எண் 4 மற்றும் 4-டி, தண்டையார் பேட்டை—எழும்பூர் (வழி: லேடீஸ் மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவமனை, பொது மருத்துவமனை) ஆகியவற்றைப்

[1998 ஏப்ரல் 20

பொறுத்தவரையில், 1989-90 வரையிலும் 18 பேருந்துகள் விடப்பட்டன. ஆனால் கடந்த ஐந்தாண்டுகளில் அந்தப் பேருந்துகள் எல்லாம், திருவொற்றியூரிலிருந்தும், டோல்கேட்டிலிருந்தும் புறப்பட்டுச் செல்வதால், இராயபுரம் பகுதி மக்கள் அந்தப் பேருந்துகளில் செல்வது சிரமமாக இருந்து வருகின்ற காலகட்டத்திலே, அவற்றில் ஐம்பது சதவீத வண்டிகளையாவது, பழையபடி தண்டையார்பேட்டையிலிருந்து இயக்க ஆவன செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்கிறபோது சென்னை மாநகரில் அப்போது இருந்த பல்லவன் மற்றும் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகங்கள் மூலமாக மொத்தம் 2,611 பேருந்துகள்தான் இயக்கப்பட்டு வந்தன. இந்த அரசு பொறுப்பேற்ற இந்த இரண்டாண்டுகளில் ஏறத்தாழ 350 பேருந்துகள் கூடுதலாக விடப்பட்டிருக்கின்றன. மேலும் Cut Service என்ற குறுகிய புதிய வழித்தடங்களில் அதிகப் பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. அது மட்டுமல்லாமல், நெருக்கடி நேரப் பேருந்துகளாக 50 பேருந்துகள் விடப்படுகின்றன. மேலும் பேருந்துகளில் வசதிகளை அதிகரிக்கிற வகையில் சென்ற வாரம் ஆய்வுகள் செய்யப்பட்டதில், மற்ற போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகள் இங்கே வருகிற நேரத்தில், ஏறத்தாழ அப்படிப்பட்ட பேருந்துகள் 50 முதல் 60 வரை சாலைகளில் பகலில் வெறுமனே நிற்கின்றன. இப்படி வெறுமனே நிறுத்தி வைத்திருக்கிற அத்தனைப் பேருந்துகளையும் இங்கே நெருக்கடி நேரங்களில், காலையில் 8 மணி முதல் 11 மணி வரை பயன்படுத்தலாமா என்ற ஆய்வும் அரசிடம் இருக்கிறது. எனவே அந்தப் பேருந்துகளையும் பயன்படுத்திக்கொள்கிறபோது, மாநகர மக்களின் பேருந்துத் தேவையைப் பூர்த்தி செய்கிற முயற்சியில் அரசு நிச்சயம் வெற்றிபெறும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ந. பூ. இராமஜெயம்.

**திரு. ந. பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் 'Peak hours-ல்' அரசுக்கு அவப்பெயர் ஏற்படுத்தும் வகையில் சில பேர், பேருந்துகளை Break-down என்று சொல்லி நிறுத்திவிடுவதாகப் புகார்கள் இருக்கின்றன. அதைக் கண்காணிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 20]

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்றபோது இருந்த எண்ணிக்கையைவிட இப்போது Break-down கணிசமாகக் குறைந்திருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அறிவார்கள். இதுபோன்று நடத்துநர்களோ, ஓட்டுநர்களோ விருப்பப்பட்டு Break-down-க்குக் காரணமாக இருப்பார்களேயானால், அரசு உரிய நடவடிக்கையை நிச்சயமாக எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செங்கை சிவம்.

**திரு. செங்கை சிவம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், சென்னையில் ஓடுகின்ற பஸ்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். இப்போது தாம்பரத்திலிருந்து பாரிமுனைக்கு விடப்பட்டிருக்கிற சொகுசுப் பேருந்துக்கு மக்கள் மத்தியில் நல்ல வரவேற்பு இருக்கிறது. ஆகவே இந்த பஸ்ஸில் வசூலாகும் தொகை அதிகரிக்கப்பட்டு இருக்கிறதா? மேலும் தென் சென்னையில் இருப்பதைப்போல, வடசென்னையிலும், பூந்தமல்லியிலிருந்து தலைமைச் செயலகம் அல்லது பாரிமுனைக்கும், அதைப்போலவே செங்குன்றத்திலிருந்து தலைமைச் செயலகம் அல்லது பாரிமுனைக்கும் இதுபோன்ற பேருந்துகளை இயக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 9-50*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது தாம்பரத்திலிருந்து பாரிமுனை வரை செல்கின்ற அளவுக்கு ஒரு சொகுசுப் பேருந்து விடப்பட்டிருக்கிறது. அதிலே 41 பயணிகள் பயணம் செய்ய முடியும். அதிலே நின்று பயணம் செய்ய பயணிகள் அனுமதிக்கப்படுவதில்லை. அதனுடைய கட்டணம் 5 ரூபாய், 7 ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. இது இரண்டு மடங்கு கட்டணமாகும். இந்த பஸ்சிலே ஏறத்தாழ 3,250 ரூபாய் ஒரு நாளைக்கு வருமானம் வரவேண்டும். இப்போது, இந்த ஒருவாரம் 10 நாட்களாக ஓடிக்கொண்டிருக்கிற இந்த காலகட்டத்தில் ஏறத்தாழ 3,100 ரூபாய் 3,200 ரூபாய் என்று வருமானம் அதிலிருந்து வந்து கொண்டிருக்கிறது. ஆகவே, அதற்கு வரவேற்பு இருப்பதாகத்தான் கருதுகிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, படிப்படியாக இதுபோன்ற சொகுசுப் பேருந்துகளை மற்ற வழித் தடங்களிலேயும் விடுவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

[1998 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்.

**திரு. எஸ்.ஆர். சிவலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறங்களில் பஸ் வசதியில்லாத இடங்களிலே மினி பஸ் விடுவதற்காக அந்தப் பகுதிகளைத் தனியாருக்குக் கொடுப்பதற்காக இந்த அரசு முன்வந்திருக்கிறது. அதைப்போல நகரப் பகுதியானாலும், மாநகரப் பகுதியானாலும் பஸ் வழித்தடங்கள் இல்லாத இடங்களில் மினி பஸ் உரிமம் வழங்குவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபோன்ற பேருந்து வசதிகள் இல்லாத கிராமப் பகுதிகளுக்குத்தான் மினி பேருந்துகள் வழங்க வேண்டுமென்று அரசு அறிவித்து அதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. நகரப் பகுதிகளிலேயும் மாநகரப்பகுதிகளிலேயும் இதுபோன்று பேருந்து வசதிகள் இல்லாத இடங்கள் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அப்படிக் குறிப்பாக இதுபோன்ற இடங்கள் இருக்குமென்று சொன்னால், உரிய விதிகளுக்குட்பட்டு — அதாவது 16 கிலோ மீட்டர் என்றால் அதிலே ஒரு கிலோ மீட்டர்தான் Unserved Area இருக்க வேண்டும். அதாவது ஏற்கெனவே பேருந்துகள் செல்கிற இடம் அதில் ஒரு கிலோமீட்டர்தான் இருக்க வேண்டும் என்று விதி முறைகள் இருக்கின்றன. அந்த விதிமுறைகளுக்குட்பட்டு—அதுபோன்ற பகுதிகளில் பயண வசதிகள் இல்லையென்று சொன்னால் அதை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. மணிவர்மா.

**திரு. க. மணிவர்மா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளி மாணவர்கள் காலையிலும், மாலையிலும் பேருந்துகளில் செல்கின்றபோது பெரும் நெரிசலில் அவதிப்படுகின்றார்கள். எனவே, பள்ளி மாணவர்களுக்கென காலையிலும் மாலையிலும் தனியாகப் பேருந்து விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என, தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களுக்கு அரசு இலவச பஸ் பாஸ் வழங்குகிறது. அவர்களுக்காக பேருந்துகள் தனியாக விட வேண்டும் என்று சொன்னால் அது இலவச பஸ்ஸாகவேதான் இருக்கும். அதிலே பயணச் சீட்டுகள் வாங்கிச் செல்பவர்களும் இருந்தால்தான் அந்தப் பேருந்தினுடைய நட்டத்தையும் ஈடு கட்டுவதற்கு வாய்ப்பாக இருக்கும். ஆகவே, தனியாக அதுபோன்ற பேருந்துகள் விடுகிற செயற்குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை. நிச்சயமாக அது இயலாத ஒன்று.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரைப் பற்றிய கேள்வி. எனது தொகுதியில் மன்னை நகரிலேயும் அப்படிப்பட்ட பிரச்சினை இருக்கிறது. ஆகவே, சென்ற ஆட்சியிலே நிறுத்தப்பட்ட வழித்தடங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக இயக்குவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா? அதைப்போலவே சட்டமன்ற உறுப்பினர்களுக்காக வழங்கப்படும் என்று சொன்ன 2 வழித்தடங்களில் ஒன்று மட்டும் வழங்கப்பட்டிருக்கிறது. மற்றொன்று வழங்கப்படவில்லை. தாங்கள் வெள்ள நிவாரணப் பணிகளுக்காக நேரில் வருகை தந்தபோதே கூறினீர்கள். அதற்குப் பின்னாலும் தேவையான நடவடிக்கை எடுத்து வழங்கப்படவில்லையே, அதையும் வழங்குவதற்கான முயற்சிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 2 வழித்தடங்கள் என்று கொடுத்ததில் கூடுமானவரை அந்தப் போக்குவரத்துக் கழக எல்லைக்குட்பட்ட போக்குவரத்துக் கழகங்களில் அது கேட்கப்பட்டிருந்தால் அது விடப்பட்டிருக்கும். ஆனால் பல சட்டமன்ற உறுப்பினர்கள் — அது போக்குவரத்துக் கழகங்களுக்குச் சாதகமாக இருந்தாலும்கூட — குறிப்பாக மன்னார்குடியிலிருந்து சென்னைக்கு என்று கேட்கிறபோது, மற்ற போக்குவரத்துக் கழகங்களையும் கலந்தாலோசித்தபின் விட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதுபோன்று சில பேருந்துகள்தான் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய போக்குவரத்துக் கழக எல்லைக்குட்பட்டே பேருந்து கேட்பார்கள் என்றால் அந்தப் பேருந்துகளை உடனடியாக விடுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வ. அன்பழகன்.

**திரு. வ. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகரைப் பொறுத்தவரையில் நம்முடைய அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு போக்குவரத்து அமைச்சர் அவர்கள் மிக

[1998 ஏப்ரல் 20

அதிக அளவிலே பேருந்து வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள் என்பது உண்மைதான். ஆனால் கிராமங்களின் நிலைதான் பரிதாபகரமாக இருக்கின்றது. சென்ற ஆண்டு ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு 2 வழித்தடங்கள் என்ற அளவிலே வழங்கினீர்கள். ஆனால், கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய சிரமங்களைக் கருத்திலே கொண்டு இந்த ஆண்டு ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு குறைந்தது 4 வழித்தடங்களாவது வழங்க நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா (மேசையைத் தட்டும் ஒலி) என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசினுடைய கொள்கையினால் கடந்த ஆண்டிலே மட்டும் கிட்டத்தட்ட ஆயிரத்திற்கு மேற்பட்ட புதிய வழித்தடங்கள் விடப்பட்டு இருக்கின்றன. 15,000 பேருந்துகள் ஓடிக்கொண்டிருந்தன. இப்போது 17,000 பேருந்துகளாக அதிகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, ஓடிக்கொண்டிருக்கிற பேருந்துகள் சரியான நேரத்திற்கு ஓடும்படியாகவும், சரியான வண்டிகளாக அவற்றை மாற்றுவதற்கும்தான் அரசு இந்த ஆண்டு முக்கியத்துவம் கொடுத்து முயற்சிகள் மேற்கொண்டிருக்கின்றன. கூடுதல் வழித்தடங்களைப் பற்றி, மக்களுடைய கோரிக்கைகளை ஏற்று அவ்வப்போது அரசு அதற்கான முடிவுகளை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இரா. தாமரைக்கனி.

**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 2 மாடி பஸ் விடப்படும் என்று சொன்னார்கள். எத்தனை பஸ்கள் இதுவரை விடப்பட்டிருக்கின்றன?. இன்னும் நெரிசலைத் தவிர்ப்பதற்கு அதிக பஸ்கள் விட ஆவன செய்யப்படுமா? அதற்கடுத்தபடியாக கோவை, மதுரை, நெல்லை, திருச்சி போன்ற நகரங்களுக்கும் 2 மாடி பஸ் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா? இன்னும் ஜனநெருக்கம் அதிகமாக இருந்தால் 3 மாடி பஸ் விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு)

முற்பகல் 9-55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகரத்தில் இப்போது ஒரு பேருந்துதான் மாடிப் பேருந்தாக ஓடிக் கொண்டிருக்கிறது. நெரிசலைக் குறைக்கிற வகையில் Vestibule



1998 ஏப்ரல் 20]

என்ற அடிப்படையில் இரண்டு பேருந்துகள், இணைப்புப் பேருந்துகளாக ஓடுகிற பேருந்துகள் 20 விட வேண்டுமென்று முடிவு எடுத்து, அதிலே 5 பேருந்துகள் ஓடிக் கொண்டிருக்கின்றன. அதற்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாடிப் பேருந்துகளைவிட இணைப்புப் பேருந்துகளாக நடத்துவதற்கு வாய்ப்புகள் அதிகம் இருக்கின்றன. வெளிநாட்டுப் பேருந்துகளை இங்கே வரவழைத்து, அதுபோன்று சிறப்பாகச் செயல்பட முடியுமா என்ற அடிப்படையிலேதான் VALVO என்ற கம்பெனியைச் சேர்ந்தவர்கள்கூட இங்கே பரீட்சார்த்தமாக ஒரு பேருந்தை ஓட்டிக் காண்பித்திருக்கிறார்கள். பரீட்சார்த்தமாக அவர்களின் மூலமாக சில பேருந்துகளை விட முடியுமா என்பதும் அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்.

**திரு. பி.வி.எஸ். வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயிரோடு இருக்கின்றபோது கண்தானம் வழங்குகின்றார்கள். இறந்த பின்னாலே அந்தக் கண்களை எடுக்கிறபோது, 6 மணி நேரத்திற்குள் அந்தக் கண்களை எடுத்து கோயம்புத்தூருக்கோ, சென்னைக்கோ அல்லது மதுரைக்கோ எடுத்துச் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே அப்படிக் கண்களை இலவசமாகக் கொடுக்கின்றபோது, அதை எடுத்துச் செல்வதற்குண்டான தொகை அதிகமாக இருக்கிற காரணத்தினால், பேருந்துகளிலே அந்தக் கண்களை எடுத்துச் செல்வதற்கு இலவசமாக பஸ் பாஸ் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்களை இலவசமாகக் கொடுப்பவர்கள், பஸ்ஸுக்குக் கொடுக்கிற காசை இலவசமாகக் கொடுப்பதற்கா முன்வர மாட்டார்கள்? நிச்சயமாக முன்வருவார்கள். அதற்குச் சட்டமன்ற உறுப்பினர்களும் உதவியாக இருக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரா. சேதுநாதன்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சிப் பகுதிகளில் நெரிசல் நேரங்களில் கூடுதலாக பஸ்களை விடுவதைப்போல, நகரங்களிலும், கிராமங்களிலும் 'Peak hours' என்று சொல்கின்றோமே, அந்த நேரங்களில் மாணவர்கள், பொது மக்கள்

[1998 ஏப்ரல் 20

நெரிசலைத் தவிர்ப்பதற்குக் கூடுதலாக பஸ்கள் விடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவைக்கேற்ப அவ்வப்போது ஆங்காங்கே பேருந்துகள் அதிகரித்து இயக்கப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய தலைநகரமான சென்னையில் அதிகப் பேருந்துகளை அமைச்சரவர்கள் விட்டிருக்கிறார்கள். அதேபோல என்னுடைய சேலம் மாவட்டத்திலே பேருந்துகள் புதிதாக எத்தனை விட்டார்கள் என்பதையும், என்னுடைய எடப்பாடி தொகுதியில் இருக்கக்கூடிய, எலம்பள்ளி, அழகப்பன்பாளையம் புதூரிலிருந்து சேலத்திற்கு ஆயிரக்கணக்கிலே மக்கள், தொழிலுக்காகச் செல்கிறார்கள். மாலையில் வரும்போது, பேருந்தின் கூரையிலே அமர்ந்து கொண்டு வருகின்றார்கள். ஆகவே அந்த வழித்தடங்களிலாவது புதிய நகரப் பேருந்துகளைவிட அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதோ சென்னையில் மட்டும் புதிய பேருந்துகள் இயக்கப்பட்டதாகச் சொல்கிறார்கள், அது தவறான கருத்து. சென்னையில் விடப்பட்டிருக்கிற பேருந்துகள் சுமார் 300-லிருந்து 400 வரைதான். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, கிட்டத்தட்ட 6 ஆயிரம் பேருந்துகள் தமிழகம் முழுவதும் புதிய பேருந்துகளாக விடப்பட்டிருக்கின்றன. புதிய வழித்தடங்கள் மட்டும், மற்றப்பகுதிகளிலேயும், சட்டமன்ற உறுப்பினரின் கோரிக்கைக்கு ஏற்பவும், பொது மக்களின் கோரிக்கைக்கு ஏற்பவும், சுமார் 1000 புதிய வழித் தடங்கள், இந்த ஓராண்டிலே விடப்பட்டு இருக்கின்றன. எப்போதும் இல்லாத அளவிற்கு புதிய வழித்தடங்களிலே பேருந்துகள் இயக்கப்பட்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில குறிப்பிட்ட வழித்தடங்களைக் குறிப்பிட்டுக் கேட்டிருக்கிறார். சட்டமன்ற உறுப்பினருக்கு ஒதுக்கப்பட்ட இரண்டு வழித்தடங்களை அவர் வாங்கி விட்டு, அதிகமாக இப்போது கேட்டுக்கொண்டு இருக்கிறார். மக்களுடைய தேவைகள் அதிகமாக இருக்குமானால், நிச்சயமாகப் பேருந்துகளை விடுவதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும்.



1998 ஏப்ரல் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். பொன்முடி.

**திரு. எஸ்.எஸ். பொன்முடி:** சென்னை மாநகரத்தில், பேருந்து ஓட்டுநர்கள் முறையாக விதிமுறைகளைக் கடைபிடிப்பதில்லை. பொதுவாக, பஸ்களை நடுரோட்டில் நிறுத்தி, பயணிகளை இறக்கி விடுகிறார்கள், ஏற்றிச் செல்கிறார்கள். அரசுப் பேருந்துகளை ஓட்டுகிறபோது, அந்த ஓட்டுநருக்கு. எந்த விதிமுறையும் இல்லை என்ற நினைப்பில் ஓட்டுவதுபோல் தெரிகிறது. அவர்கள் அந்த விதிமுறையோடு ஓட்டுவதற்கு அரசு அவர்களைக் கட்டுப்படுத்துமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டுநர்மீது மட்டுமே இந்தக் குறையைச் சொல்ல முடியாது. குறிப்பாக நானேகூட, நடைமுறையாகச் சென்று பார்த்தேன். பெரும்பாலான பேருந்து நிறுத்தங்களில், ஓட்டுநர்கள் பேருந்துகளை நிறுத்தவேண்டும் என்று சொன்னால், அங்கே ஆட்டோக்களை பலபேர் நிறுத்தி வைத்திருக்கிறார்கள். இங்கேயிருக்கிற பொதுமக்களும் வரிசையில் நின்று பழக்கப்படாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. பம்பாய் போன்ற நகரங்களில் பார்க்கிறபோது, அங்கே வரிசையில் நின்று ஏறுகிற பழக்கம் இருக்கிறது. நானேகூட நேரடியாக பல பேருந்து நிறுத்தங்களில் இதற்கான முயற்சிகளை எடுத்து, ஒரு வாரம் அதற்காக நானே நின்றுகூடப் பார்த்தேன். ஆனால் இங்கேயிருக்கிற அவசரத்தின் காரணமாக பொது மக்கள், வரிசையில் நிற்கிற பழக்கத்தை மேற்கொள்வதில்லை. இரயில்வேயில்கூட இந்த முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறார்கள். ஆகவே பொது மக்கள், ஆட்டோ ஓட்டுநர்கள், பேருந்து நடத்துநர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து, முனைப்பாகச் செயல்படுகிறபோதுதான் இதை நடைமுறைப்படுத்த முடியும். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரக்கணக்கான தனியார் பஸ்கள் பல ஊர்களிலிருந்து சென்னைக்கு காலை 5 மணி, 5-½ மணிக்குள்ளாக வந்து சேர்ந்து விடுகின்றன. பிறகு மறுபடியும் அவற்றை இரவு 7-00 மணிக்கு

[1998 ஏப்ரல் 20

மேலேதான் எடுக்கிறார்கள். ஆகவே நம்முடைய சென்னை நகரத்தினுடைய நெருக்கடியைக் கருதி, இந்த ஆம்னி பஸ்கள் என்று சொல்லக்கூடிய அந்தத் தனியார் பஸ்களைக் காலை நேரத்திலேயும், மாலை நேரத்திலேயும் சென்னை நகருக்குள் அனுமதித்து, இந்தக் கூட்டத்தைக் குறைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆம்னி பஸ்கள் என்பது இப்போது சட்டத்திற்குப் புறம்பாகவே பல நேரங்களில் ஓடிக் கொண்டிருப்பதுதான் உண்மை. அது Contract Carriage அல்ல. அவர்கள், குறிப்பாக ஓர் இடத்திற்குச் செல்லவேண்டும் என்று சொன்னால், 100 பேர்கள் புக் செய்து கொண்டு செல்லவேண்டும். ஆனால் இப்போது டிக்கெட் போட்டே விற்றுக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பல நேரங்களிலே புறம்பாகவே செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் அரசுப் பேருந்துகளைத்தான் இயக்கவேண்டும் என்று விதியும் இருக்கிறது; சட்டமும் இருக்கிறது. தனியார் பேருந்துகளை இங்கே இயக்க அனுமதிக்க முடியாது. ஆகவே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கோரிக்கையின் அடிப்படையிலேதான் - நான் முன்பு பதில் சொன்னதைப்போல - வெளிப்போக்குவரத்துக் கழகங்களிலேயிருந்து இங்கே கிட்டத்தட்ட 60 பேருந்துகள் பகலிலே நிற்கின்றன. இந்த 60 பேருந்துகளை மட்டும் முதலிலே இயக்குவதற்கான சாத்தியக்கூறுகளை அரசு ஆராய்ந்து, அதற்கான உரிய நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 248, திரு. லா. சந்தானம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**248—**

### சோழவந்தானில் புறவழிச் சாலை அமைத்தல்

***7844— திரு. லா. சந்தானம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழவந்தான் தொகுதியின் தலைமையிடமான சோழவந்தானுக்கு புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா?



1998 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

சோழவந்தான் நகருக்கு புறவழிச்சாலை அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்துவது உட்பட பெரும் தொகை தேவைப்படுகிற காரணத்தால் அந்தப் புறவழிச்சாலை அமைப்பதற்கு இப்போது சாத்தியக்கூறு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 249, திரு. ஆர். தமிழ்ச்செல்வன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்.

**249—**

### மாற்று வழிப்பாதை அமைத்தல்

***9394—திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சிபுரம்-திருத்தணி நெடுஞ்சாலையிலிருந்து திருத்தணி சர்க்கரை ஆலைக்கு அதிக அளவில் கரும்பு லாரிகள் வருவதால் நகரத்தில் ஏற்படும் போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்க வீட்டு வசதி வாரியம், எஃகு ஆலை வழியாக மாற்று வழிப்பாதை அமைத்துத் தரப்படுமா?

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அரசு ஆண்டுதோறும் இத்துறைக்கு பகுதி-2 திட்டத்திற்குக் குறைந்த அளவே நிதி ஒதுக்கீடு செய்து வருவதால் பெருந்தொகை தேவைப்படும் இப்பணியை அண்மைக்காலங்களில் இத்துறையின் பகுதி-2 திட்டத்தின்கீழ் மேற்கொள்ளும் சாத்தியக்கூறு இல்லை.

**திரு. ஆர். தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரக்கோணம் நகரம் வளர்ந்துவரும் நகரமாகும். இந்த அரக்கோணம் நகரத்தினுடைய சுற்றுப் பகுதியிலிருந்து திருவாலங்காட்டிலுள்ள திருத்தணி கூட்டுறவுச் சர்க்கரை ஆலைக்குச் கரும்பு அரைவைக்காக லாரிகளிலும், டிராக்டர்களிலும் எடுத்துச்

[1998 ஏப்ரல் 20

செல்லப்படுகிறது. அது அரக்கோணத்தினுடைய முக்கிய சாலை வழியாகச் செல்லும்போது, அது குறுகலான பாதையாக இருக்கின்ற காரணத்தால், பல மணி நேரம் போக்குவரத்து ஸ்தம்பித்துப் போய்விடுகிறது. அப்படி ஸ்தம்பித்துப் போவது மட்டுமின்றி, மின்சாரக் கம்பிகள் எல்லாம் அறுந்து விழுகின்ற நிலை இருக்கின்ற காரணத்தால், திருவள்ளூர் சாலையை இணைக்கின்ற வீட்டு வசதி வாரியக் குடியிருப்பு வழியாக ஒரு புறவழிச்சாலை அவசியமாகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, அந்த புறவழிச்சாலையை அமைத்துத்தர ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மைக்காலமாக வளர்ந்து வருகின்ற நகரங்களில் அரக்கோணம் நகரம் முதன்மையானது என்பதை நான் அறிவேன். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் தெரிவிக்கின்ற கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடிய கருத்து. புறவழிச்சாலை அமைப்பதற்காக ஏற்கெனவே முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, இரயில்வே மேம்பாலம் கூட ஒன்று கட்டப்பட்டது. அதற்குத் தேவையான சாலை அமைக்கின்ற பணியிலே ஈடுபட்டபோதுதான், அந்தப் பகுதியிலே நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த அதிகாரி ஒருவருடைய கையையே வெட்டி எடுத்து விட்டார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரியும். எனவே, அந்தப் பகுதியிலே உள்ள மக்களுடைய ஒத்துழைப்பு அதிகம் தேவைப்படுகிறது. அந்த ஒத்துழைப்பை நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் பெற்றுத் தரவேண்டும். எனவே, பகுதி-2 திட்டத்தின்கீழ் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த முடியவில்லை என்றாலும், அரக்கோணம்-திருத்தணி சாலையில் கிலோ மீட்டர் 1/4-லிருந்து வீட்டுவசதி வாரியச் சாலை வழியாக அரக்கோணம்-திருவள்ளூர் சாலையை இணைப்பதற்கு 5.5 கிலோ மீட்டர் நீளம் உள்ளது. இப்பகுதியை மட்டும் கிராமச்சாலைகள் திட்டத்திலே, நபார்டு திட்டத்திலே சேர்த்து அதைச் செயல்படுத்தலாமா என்று துறை ஆலோசித்துக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கோ. தளபதி.

**திரு. கோ. தளபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழவந்தான், பேரூர் போன்ற சிறிய ஊர்களிலே தெருக்கள் மிகவும் குறுகலாக இருக்கின்றன. சென்னைக்குப் போகக்கூடிய சில லாரிகளும், வாகனங்களும் இதை மெயின் சாலையாகப் பயன்படுத்தி. போய்க் கொண்டு இருக்கக்கூடிய அந்த ஊர்களுக்கு, புறவழிச்சாலை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் மறுபரிசீலனை செய்து, இதற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து, அந்த புறவழிச்சாலையை அமைத்துத் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 20]

**மாண்புமிகு திரு. பசும்பொன் தா. கிருட்டிணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது சோழவந்தானை விட்டு இரயில் அரக்கோணத்திற்கு வந்துவிட்டது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் இந்தக் கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுவதைப்போல, திண்டுக்கல்-மதுரை சாலை மிக நெருக்கடியான சாலையாக இருக்கிறது என்பது உண்மை. தற்போது மெட்டூர் கேட்டிலிருந்து பள்ளப்பட்டி, சோழவந்தான், மேலக்கால் வழியாக ஒரு மாவட்டச்சாலை இருக்கிறது. அந்தச் சாலை வழியாகத்தான் பெரிய ஊர்திகள் எல்லாம், கனரக ஊர்திகள் எல்லாம் சென்று கொண்டிருக்கின்றன என்பது உண்மை. ஆனாலும் சோழவந்தானுக்குப் புறவழிச்சாலை அமைப்பதற்கு அதிக நிதி தேவைப்படுகிறது. அதை நம்முடைய மாநில அரசு ஏற்றுக்கொள்ள முடியாத சூழ்நிலை இருக்கிறது. என்றாலும் தேசிய நெடுஞ்சாலைத் திட்டத்தில் இன்னொரு புறவழிச்சாலையாக அதே மெட்டூர்கேட்டிலிருந்து தொடங்கி சோழவந்தானுக்குப் புறவழிச்சாலை அமைத்து கருமாத்தூருக்குப் பக்கத்திலே அந்தச் சாலை கடந்து, திருமங்கலத்திற்கு ஒரு புறவழிச்சாலை அமைக்கப்படும் ஒரு திட்டத்தை நாம் தயார் செய்து மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறோம். மத்திய அரசின் தரைவழிப் போக்குவரத்துத் துறை இந்தத் திட்டத்தைக் கொள்கை அளவிலே ஒப்புக்கொண்டிருக்கிறது. எனவே, மேலும் அதுகுறித்துப் பரிசீலித்து, பரிசீலிக்கப்பட்ட இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியுமா என்று அரசு யோசிக்கும்.

முற்பகல் 10-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 250, திரு. இரா. பொன்னாற்டு, மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 20

**250—**

## குடியிருப்போரின் நிலங்களுக்குப் பட்டா வழங்குதல்

***8372—திரு. இரா. பொன்னார்டு:**

*மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்போரின் நிலங்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?*

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கோயிலுக்குச் சொந்தமான இடங்களில் குடியிருப்போரிடமிருந்து பெறப்படும் வாடகை, குத்தகை போன்ற வருவாயினைக் கொண்டு, தினப்படி பூசைகளும் மற்ற சிறப்புகளும் செய்யப்பட்டு வருவதால், மேற்படி இடங்களுக்குப் பட்டா வழங்க இயலாது.

**திரு. இரா. பொன்னார்டு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயிலுக்குச் சொந்தமான நிலங்களில் குடியிருப்போர் பெரும்பாலும் ஏழைகளே. சொந்த நிலமற்ற, நல்வாழ்வு இன்றித் தவிக்கும் ஏழைகளுக்கு உணவு, உடை, உறைவிடம் வழங்க, "ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற கொள்கை கொண்ட நம்முடைய கலைஞர் அரசு அறநிலையத் துறைக்குச் சொந்தமான அல்லது அரசுக்குச் சொந்தமான வேறு இடங்களிலாவது வீட்டுமனைப் பட்டா வழங்க முன்வருமா என்பதோடு, கோயில் நிலங்களை முறையாகக் கையகப்படுத்தி, கோயில்களில் திருப்பணி சிறப்பாக நடைபெற, வருமானத்தைப் பெருக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறநிலையச் சட்டத்தில் எந்த ஓர் இடத்தையும் யாருக்கும் பட்டா வழங்குவதற்கான அனுமதியோ, இசைவோ கிடையாது. அதுமட்டுமல்லாமல் கோயிலுக்குச் சொந்தமாக இருப்பது ஏறத்தாழ 4.81 இலட்சம் ஏக்கர் நிலங்கள். பலவகையான



1998 ஏப்ரல் 20]

22,592 கோயில் நிலங்கள் - கிரவுண்டுகள் - இருக்கின்றன. அந்த அடிப்படையில் வருகின்ற வருவாயைக் கொண்டுதான் தமிழகத்தினுடைய கோயில்கள் எல்லாம் சிறப்பாகப் பேணப்படவேண்டுமென்ற அடிப்படையில் பல முன்னோர்கள் அவர்களுடைய இறையன்பைப் புலப்படுத்துவதற்காகவே தங்களுடைய சொத்துக்களுக்கு வேறு பாதுகாப்பு இல்லையென்று கருதி, இந்த அறநிலையத் துறை பாதுகாக்கும் என்ற நம்பிக்கையில்தான் அவற்றை எழுதி வைத்திருக்கிறார்கள். எனவே அந்தவகையில் அவை முறைப்படுத்தப்படும் என்பது ஒன்று. இரண்டாவது அவருடைய வினாவிலே இதற்கு முறையான வருவாய் தரப்படுமா என்று கேட்டார்கள். இன்றைக்கு இந்த அரசு பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு, 26 இடங்களில் இருக்கின்ற சொத்துக்கள் முறைப்படி மீட்கப்பட்டு, அப்படி மீட்கப்பட்டதன் வாயிலாக ரூ. 125 கோடி பெறுமான சொத்துக்களின் உரிமை இன்றைக்கு அரசுக்கு நேரடியாக, ஆக்கிரமிப்பிலிருந்து அகற்றப்பட்டு, கிடைத்திருக்கிறது. இதுகுறித்து ஏற்கெனவே வரவு-செலவுத் திட்டத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அறநிலையத் துறை மானியக் கோரிக்கையின்போது முழுமையான பட்டியல் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாகக் குடியிருப்பவர்களுக்குக் கோயில் நிலங்களிலே குடியிருப்பு மனைப் பட்டா வழங்க முடியாவிட்டாலும்கூட, பள்ளி, கல்லூரிகளை, அரசுக் குடியிருப்புகளை கோயில் நிலங்களிலே கட்டுவதற்கு அரசு அனுமதிக்குமா? அல்லது அதற்கும் மேற்குறித்த தடைகள் விதிக்கப்பட்டிருக்கின்றனவா? இதுபோன்று பல்வேறு நகரங்களிலே அரசினுடைய புறம்போக்கு நிலங்கள் இல்லாத காரணத்தால், அரசினுடைய கட்டடங்களைக் கட்டமுடியாத ஒரு நிலைமை இருக்கிறது என்பதை அரசு அறியுமா? இதற்கான மறு உத்தரவை இடுவதற்கு அரசு ஆலோசிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அரசு சார்பான நிறுவனங்களைக் கட்டுவதற்கு இந்த அரசு தன்னுடைய நிலங்களை

[1998 ஏப்ரல் 20

ஒப்படைக்கின்றன. அப்படி வருகிறபோது இரண்டு எடுத்துக்காட்டைச் சொல்லலாம். பரமத்திவேலூரில் 6.37 ஏக்கர் நிலத்தைப் பள்ளிக் கல்வித் துறைக்கு இந்த அரசு தந்திருக்கிறது. அதற்காக ரூ.6 இலட்சம் கொடுத்து, அது வரவு வைக்கப்பட்டு தரப்பட்டிருக்கிறது. அதுபோன்று திருப்பூர் நகராட்சிக்கு 7.37 ஏக்கர் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் ரூ.3.25 கோடியை அறநிலையத் துறைக்குத் தந்திருக்கிறார்கள். எனவே, அரசுத் துறை எப்போது கேட்டாலும் அதற்கு முறைப்படி சந்தை விலை நிர்ணயம் செய்யப்பட்டு, அந்த விலை பெற்றுக் கொள்ளப்படுகிறது. அதற்கும் முழு அனுமதி உண்டு. மற்றபடி வேறு எதற்கும் அனுமதி இல்லை என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. ரங்கநாதன்.

**திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக சென்னை, கோயம்புத்தூர், மதுரை, திருச்சி இன்னும் பிற முக்கிய நகரங்களில் கோயிலுக்குச் சொந்தமான வீட்டுமனை இடங்களிலும், அதேநேரத்தில் கோயிலுக்குச் சொந்தமான வீடுகளிலும், அதிலே ஆக்கிரமித்துள்ளவர்கள் அல்லது வாடகைக்கு உள்ளவர்கள் குறைந்த வாடகையில் இருக்கிறார்கள். இதனால் இந்து அறநிலையத் துறைக்கு வருமானம் குறைவாகக் கிடைக்கின்றது. குறிப்பாக, சென்னையை எடுத்துக்கொண்டோமேயானால், ஒன்றிரண்டு உதாரணங்களைச் சொல்ல முடியும். அண்ணாநகர் தொகுதிக்கு உட்பட்ட நேரு பார்க் அருகில் ஒன்றரை ஏக்கர் நிலம் காலியாக உள்ளது. அந்த ஒன்றரை ஏக்கர் நிலத்தில் மிகப் பெரிய, கோயிலுக்குச் சொந்தமான கட்டடமும் உள்ளது. அந்த இடத்தில் குறைந்த வாடகையில், அதாவது 2,000 ரூபாய்க்குள்ளேதான் வாடகை வருகிறது. ஆனால் இன்றைக்கு அதனுடைய மதிப்பு 5 கோடி அல்லது 6 கோடி ரூபாய். ஆக, சென்னை நகரில் ஜார்ஜ் டவுன், பாரிமுனை, பாண்டி பஜார், தி.நகர், மயிலாப்பூர், லஸ் பகுதிகளில் எல்லாம் விலை மதிக்கமுடியாத வீட்டுமனை இடங்கள், குடியிருப்புகளில் எல்லாம் ஆக்கிரமிப்பு செய்துள்ளார்கள். இந்த ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி, அந்த இடத்தைப் பொது ஏலத்திற்கு விட்டு, அந்தத் தொகையைக் கொண்டு கோயில்களைப் பராமரிக்கலாம். அந்த வழிமுறையை அரசு எடுக்குமா என அறிய விரும்புகிறேன்.



1998 ஏப்ரல் 20]

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னது நூற்றுக்கு நூறு உண்மை. சென்னை நகரில் இருக்கிற இடங்களில் அநேகமாக மூன்றில் ஒரு பங்கு இடம் கோயிலுக்குச் சொந்தமானதாகத்தான் இருக்கிறது. அந்தவகையில், இப்போது ஒவ்வொரு வகையிலும் இனம் கண்டுபிடிக்கப்பட்டு யார் யார் எல்லாம் ஆக்கிரமித்து வீடு கட்டியிருக்கிறார்களோ, அவர்களை அகற்றுவதற்கும் அதேநேரத்தில் அப்படி அகற்றாமல் இருந்தால்கூட அடிமனைக்கு வாடகை கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு, முறைப்படி ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றன. அதற்குமேல், ஏற்கெனவே இருக்கிற வீடுகளில் வாடகை 5 ரூபாய் என்றெல்லாம் சொல்லி—இப்போது கிட்டத்தட்ட 1,000 ரூபாய், 1,500 ரூபாய் வாடகை வரவேண்டிய இடங்களில் எல்லாம் ரூ. 5 கொடுத்து—கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வாடகை நிர்ணயம் செய்வதற்கு ஒரு குழு இன்றைக்குத் தமிழகம் முழுவதும், அதிலும் குறிப்பாகச் சென்னையிலே வாடகை நிர்ணயம் செய்து, அந்தக் குழு பெரிய வாடகையைப் பெற்றுக் கொண்டிருக்கிறது; பெற முயற்சி செய்து கொண்டிருக்கிறது. எடுத்துக்காட்டாகச் சொல்லப்போனால், அடையாறில், மலர் மருத்துவமனைக்கு எதிரே இருக்கிற இடத்தில் அம்மாயி அம்மாள் என்பவர் 1909-ல் திருவண்ணாமலை கோயிலுக்கு 559 Ground நிலங்களை எழுதி வைத்திருக்கிறார். அதிலே 200 Ground நிலங்கள் காணாமல் போய் இருக்கின்றன. அவை என்னவாயிற்று என்று தெரியவில்லை. 313 Ground இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. இந்த வாரத்தில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல், திருவல்லிக்கேணி ஜாம்பஜார் பாரதி சாலையில் 229 வீடுகள் ஆக்கிரமித்து கட்டப்படுவது கண்டுபிடிக்கப்பட்டு இப்போது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. எனவே, வெகு விரைவில் அதற்கான முழு நடவடிக்கை முடுக்கிவிடப்படும், அரசு இவற்றை முறைப்படுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது கோயில் நிலங்கள் மற்றும் அறக்கட்டளைக்குச் சொந்தமான நிலங்கள் ஏறக்குறைய 100-க்கு 85 சதவிகிதம் ஆக்கிரமிப்பிலே இருந்து கொண்டிருக்கின்றன. அவற்றை நாம் மீட்க வேண்டும். ஆனால் அதற்கு சில சட்டங்கள் தடையாக இருக்கின்றன. அறக்கட்டளை

[1998 ஏப்ரல் 20

நிலங்களுக்கு Rent Control Act -'லே இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. Ciltivating Tenants Protection Act, City Tenants Protection Act, Limitation Act,' போன்றவற்றிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்படாத காரணத்தினால், அவற்றை மீட்பதற்கு சட்டத்திலே இடம் இல்லாத காரணத்தினால், நாம் பல நிலங்களை இழந்து நிற்கிறோம். இந்தச் சட்டங்களிலிருந்து விதிவிலக்கு ஏனைய மாநிலங்களில் அளிக்கப்பட்டிருக்கின்றது. எனவே, அந்த அடிப்படையில் தமிழகத்திலும் இந்த அறக்கட்டளைச் சொத்துகளுக்கு, கோயில்களுக்கு, மசூதிகளுக்கு, மற்றவைகளுக்கெல்லாம் சொந்தமான நிலங்களுக்கு விதிவிலக்கு அளித்து சட்டம் இயற்ற நம்முடைய அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுபற்றிய கருத்து ஏற்கெனவே எங்களால் பெறப்பட்டு இருக்கிறது. அந்த வகையில் மாண்புமிகு முதலமைச்சரோடு கலந்து பேசி, அதற்கான திட்டவட்டமான சட்டங்களை இயற்ற முடியுமா என்பதைப் பேசிக் கொண்டிருக்கிறோம். வெகுவிரைவில், அனைவரும் அமர்ந்து, இதற்கான சட்டங்களை இயற்றி, எந்தவகையில் ஆக்கிரமிப்புகள் ஏற்பட்டாலும், அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்படும் வகையிலும், நிலங்களுக்கான குத்தகை முறையாகப் பெறப்படும் வகையிலும், வேறுவகையான தள்ளுபடி ஏதும் செய்யப்பட்டாலும், அது கோயில்களைப் பாதிக்க முடியாது என்ற அடிப்படையிலும், முறைப்படுத்துவதற்கான வழிவகைகள் வெகுவிரைவில் முடிவு செய்யப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. நடராசன்.

**திரு. ஆ. நடராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே இருக்கின்ற சுண்டைக்காமுத்தூர் கிராமத்தில் கோயில் நிலம் 2 ஏக்கரை சந்தை மதிப்பு விலையிலே 6 இலட்சம் ரூபாய்க்கு அரசாங்கம் வழங்குவதாக அனுமதித்து இருக்கிறது. ஆனால் அந்தப் பகுதியில் ஏழை மக்கள் வாழ்கின்ற காரணத்தினால் guide line value ஒரு ஏக்கர் 76,000 ரூபாய் விலையில் வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-15

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த ஒரு விலையையும் அமைச்சரோ



1998 ஏப்ரல் 20]

மற்றவர்களோ நிர்ணயிக்க முடியாது. அந்தப் பகுதியில் சந்தை விலை என்ன இருக்கிறதோ அந்த அடிப்படையில்தான் இதைப் பரிமாற்றம் செய்ய முடியும். எனவே, அதில் பேரத்திற்கோ அல்லது கூட்டிக் குறைத்துச் செய்வதற்கோ எங்களுக்கு எந்த அதிகாரமும் இல்லை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்.

**திரு. ஆ. இராசேந்திரன் என்கிற தீரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்து இருக்கின்ற ஆண்டவனுக்கே கோயில் போன்ற இடங்கள் தேவைப்படுகிறபோது ஏதுமற்ற ஏழைகள் பல ஆண்டு காலமாகக் குடியிருக்கின்ற நிலங்களை அவர்களுக்குப் பட்டா செய்து தருகின்ற வகையிலே ஏன் இந்த அரசு சட்டத்திருத்தங்களைச் செய்யக்கூடாது என்பதை அறிய விரும்புகிறேன். இன்னொரு கேள்வி—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு கேள்விதான். இன்னொரு கேள்வி என்று வரிசையாக அடுக்கிக்கொண்டு போகக்கூடாது.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏராளமான இடங்களில் அரசினுடைய இடங்கள் புறம்போக்கு நிலங்களாக இருக்கின்றன; வேறுவகையில் அமைந்திருக்கின்றன. அவற்றிற்கு உள்ள விதிமுறைகள் வேறு. ஆனால் இந்த இடங்கள் புறம்போக்கு நிலங்கள் அல்ல. யாரோ ஒருவரால் இறையன்பு காரணமாக அரசுக்குத் தரப்பட்டவை. அவற்றைப் பேணிப் பாதுகாத்து அவர்கள் எந்த நோக்கத்திற்காக அவற்றை ஒப்படைத்தார்களோ அதைச் செய்வதுதான் எங்கள் கடமையே தவிர இவர்கள் குடியிருந்து விட்டார்களே என்பதற்காகவோ, ஆக்கிரமித்து விட்டார்களே என்பதற்காகவோ, பட்டா போட்டுக் கொடுக்கிற அந்த உரிமை இந்த அரசுக்கு என்றைக்கும் இல்லை, எந்த அரசுக்கும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெசு. திருவேங்கடம்.

[1998 ஏப்ரல் 20

**திரு. பெ.சு. திருவேங்கடம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை கோயில் நிலங்களைப்பற்றிச் சொன்னார்கள். பல வசதி படைத்தவர்கள், பெரிய நிறுவனங்கள்கூட 100 ஆண்டுகளுக்கு முன்னதாகக் குறைந்த வாடகை என்கிற பெயரால், இன்னும் அந்த அருணாசலேஸ்வரருடைய கோயிலுக்கு வரவேண்டிய வருவாயை ஏமாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள்மீது அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அதிகமான உடனடி நடவடிக்கைக்கு ஆளாகியிருப்பதே திருவண்ணாமலை அருணாசலேஸ்வரர் கோயிலுக்குரிய சொத்துக்கள்தான். அதுவும் சென்னையிலே அடையாறு பகுதியிலும், புது வண்ணாரப்பேட்டையிலும் இருக்கிற சொத்துக்களை மீட்டாலே திருவண்ணாமலை கோயில் பல மடங்கு தன்னுடைய நிதி நிலையில் உயர்ந்துவிடும். நிச்சயமாக அந்த நடவடிக்கை எடுக்கப்படும். அது உறுதி அளிக்கப்பட்டு, இந்த 6 மாத காலத்திற்குள் அது விடுவிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே. சுப்பராயன்.

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுமக்களைப் பொறுத்தவரையிலும் ஆண்டவனுடைய பிள்ளைகள்தான் என்று ஆன்மீகப் பெருமக்கள் சொல்கிறார்கள். தாயினுடைய சொத்து பிள்ளைக்கு உரியது என்றால், ஆண்டவனுடைய மக்கள்தானே பொதுமக்கள்; அவர்களுக்கு அந்த உரிமையை ஏன் வழங்கக்கூடாது? எனவே, மாநில அரசு, ஆண்டவனின் பிள்ளைகள் மக்கள் என்று ஒப்புக்கொண்டது உண்மையானால், அவர்களுக்கு உரிய சொத்தை, பிள்ளைக்குத் தருகின்ற முறையில் உரிய சட்டத்திருத்தம் கொண்டு வந்து, குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டவனின் பிள்ளைகள்தான் மக்கள் என்பதை எல்லோருமே ஒத்துக்கொள்வார்கள். ஆனால், அதே நேரத்தில் இதைக் கொடுத்தவர்கள் இந்தத் தாயினுடைய பிள்ளைகள் அல்ல. இன்னொரு தாயினுடைய பிள்ளைகள். எனவே தாயினுடைய பிள்ளைகள் இவர்கள்



1998 ஏப்ரல் 20]

என்றாலும்கூட, என் பக்கத்து வீட்டில் இருப்பவர்களை சின்னம்மா, பெரியம்மா என்று கூப்பிட்டாலும்கூட, அவர்களுடைய சொத்திலே நான் பங்கு கேட்க முடியாது. அந்தத் தாய், இந்தக் கோயிலுக்கு அம்மாயி அம்மாள் போன்றவர்கள் 559 கிரவுண்டு நிலங்களை என்னுடைய பிள்ளைகளுக்கு எல்லாம் வழங்குங்கள் என்பதற்காகக் கொடுக்கவில்லை; அருணாசலேஸ்வரருக்கு பூசை செய்யுங்கள் என்று அதை ஒழுங்காகச் செய்வதற்காகக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அடிப்படைக் கோட்பாட்டைத் திசை திருப்ப மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மா. இராமச்சந்திரன்.

**திரு. மா. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோயிலினுடைய நிலங்கள் எல்லாம் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டு அந்தக் குத்தகைகள் எல்லாம் அறவே வசூலிக்கப்பட முடியாமல் அப்படியே இருக்கிற காரணத்தினாலே நிரந்தரமாக அந்தக் கோயிலுக்கு வருவாய் இல்லாமல் போய்விட்டது. ஆகவே, குத்தகைக்கு இருக்கிறவர்களுக்கு நிலத்தைச் சொந்தமாக்கி, அதற்காக உள்ள தொகையை வசூலித்து, வைப்புத் தொகையாக வைத்து, கோயில்கள் பராமரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வசூல் செய்யப்படாமல் இல்லை. நிலுவையில் இருக்கிறது என்பதுதான் உண்மை. பசலி 1406-க்கு நாங்கள் கேட்பாக எவ்வளவு தொகை வரவேண்டும் என்பதை நிர்ணயித்தபோது 196 இலட்சம் ரூபாய் என்று நிர்ணயிக்கப்பட்டது. அதிலே 139 இலட்சம் வசூலாகியிருக்கிறது. எனவே நிலுவையில் இருக்கிறது என்பதுதான் உண்மையே தவிர, அறவே வசூல் ஆகவில்லை என்று சொன்னால் எந்தக் கோயிலினுடைய நடவடிக்கைகளும் பேணப்படமாட்டாது. ஆனாலும்கூட அப்படி வசூல் செய்வதிலே இருக்கிற தடங்கல்கள், அதற்கு ஏற்படுகிற வழக்குகள் என எண்ணற்றவை இன்றைக்கு நீதிமன்றங்களுக்குப் போகின்றன. இவற்றை எல்லாம் எதிர்கொண்டுதான் இவற்றைச் செய்ய வேண்டியிருக்கிறது. என்றாலும்கூட இந்த அரசு சிலபேரோடு நேரடியாகப் பேசி அவற்றின் அடிமனைக் குத்தகை எல்லாம் வரையறுக்கப்பட்டு இன்றைக்குப் பல வழக்குகள் திரும்பப் பெறப்பட்டு ஏராளமான நிதி சேர்ந்திருக்கிறது. இந்த 10 மாத காலத்திலே

[1998 ஏப்ரல் 20

மட்டும் கிட்டத்தட்ட அந்த வகையில் 8, 9 கோடி ரூபாய் அதிகமான நிதி வந்திருக்கிறது என்பதையும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 251, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்த சமய அறநிலையத் துறை அமைச்சர்.

**251—**

**குத்தகை பாக்கித் தொகையை வசூல் செய்தல்**

***9374—திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் :**

மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு, மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கோவில்களுக்குச் சொந்தமான விவசாய நிலங்களிலிருந்து கிடைக்க வேண்டிய குத்தகை பாக்கித் தொகை அதிகம் நிலுவையிலுள்ளது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அதனை வசூல் செய்ய அரசு தீவிர நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன், தமிழ் ஆட்சிமொழி, தமிழ்ப் பண்பாடு மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்படும் இனங்கள் உடனுக்குடன் வசூல் செய்யப்பட்டு வருகின்றன. திருக்கோயிலுக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து வசூலிக்கப்பட வேண்டிய குத்தகை பாக்கிகளை வசூலிக்கும் பொருட்டு, 30-6-1997 முடியவுள்ள காலத்தில் 28,604 வழக்குகள தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இவற்றிற்கு உட்பட்ட தொகை ரூ. 2737.08 இலட்சம். இவற்றில் 13,448 வழக்குகள் முடிவு செய்யப்பட்டு ரூ.837.78 இலட்சம் வசூல் செய்யப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 20]

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கக்கூடிய ஆயிரக்கணக்கான கோவில்களுக்குச் சொந்தமான விவசாய நிலத்தினுடைய வருமானமும், கட்டடங்களின் வாடகையின் மூலம் வரக்கூடிய வருமானமும் மிகக் குறைந்த அளவில் இருக்கக்கூடிய நிலையை எல்லாம் மாற்றி உடனடியாக வசூல் 'செய்வதற்கு சட்ட திட்டங்களை எல்லாம் மாற்றி அமைத்து, ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் உள்ள அருள்மிகு சங்கமேஸ்வரர் ஆலயத்திற்கும், அருள்மிகு செல்லி ஆண்டவர் ஆலயத்திற்கும் வரவேண்டிய குத்தகை பாக்கியை உடனடியாக வசூல் செய்து கொடுக்க அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னர் இதுபோன்ற குத்தகை பாக்கிகளை வசூல் செய்வதற்கு சிவில் நீதிமன்றத்தில் உரிமையியல் வழக்குக்கள்தான் தொடரப்பட்டன. இப்போது 79 (பி) என்ற சட்டம் திருத்தப்பட்டு நேரடியாகக் குற்றவியல் வழக்குகள் தொடரலாம் என்று அரசு சட்டத்தைத் திருத்தியிருக்கிறது. அப்படித் தொடருகிறபோது யார் ஆக்கிரமித்திருக்கிறார்களோ அவர்கள்மீது அந்த வழக்குகள் தொடரப்பட்டு அந்த வழக்கிலே தீர்ப்பு வருகிற காலத்திலே அவர்கள் 5 ஆயிரம் ரூபாய் தண்டம் கட்ட வேண்டும் என்றும், 3 மாதத்திலிருந்து 5 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை பெற வேண்டும் என்றும் கடுமையாக ஆக்கப்பட்டிருக்கிறது. அந்த வகையில் இப்போது வழக்குகள் தீர்வுக்கு உள்ளாகியிருக்கின்றன. வெகுவிரைவில் இந்தச் சட்டம் இறுக்கப்பட்டு, இதிலே சரியான தீர்வு கிடைக்கவில்லை என்றால் மேலும் சட்டத் திருத்தம் செய்வது குறித்து இந்த அரசு சிந்திக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. செ. இராமலிங்கம்.

**திரு. செ. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பயிரிடும் குத்தகைதாரர்களுடைய துயர் துடைப்புக்காக 1972 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குத்தகைப் பாக்கிகள் தள்ளுபடிச் சட்டம் கொண்டு வந்தார்கள், 81 ஆம் பசலிக்கு. இப்போது இந்த ஆண்டு மழையால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிலவரியை இரத்து செய்திருக்கிறார்கள். கடன்களை மாற்றிக் கொடுத்திருக்கிறார்கள். இந்த நிலையில் ஆலயங்களுக்குச் சொந்தமான நிலங்களுக்கான குத்தகை

[1998 ஏப்ரல் 20

பாக்கிகளை இந்த ஆண்டுக்கு மட்டுமாவது தள்ளுபடி செய்ய அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு அந்தக் கோவில்களை எப்படி நடத்துவது என்பது பற்றி நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆலோசனை தெரிவித்தால் அதன்படி பின்பற்றலாம். காரணம் கோவில்களுக்கு நிதி வசூல் நின்று போய்விட்டால், அல்லது முறைப்படியான குத்தகை பாக்கி நின்று போய் விட்டால் அந்தக் கோவில்களுடைய திருப்பணிகள் எப்படி நடைபெறும்? ஒரு கோவிலுக்கு வருவாய் என்பது 200 ரூபாய் வருகிறது அல்லது 2 ஆயிரம் ரூபாய் வருகிறது. ஆனால் அந்தக் கோவில் பாழடைந்து போயிருக்கிறது, அதைத் திருப்பணி செய்யவேண்டும் என்று வருகிறபோது ரூபாய் 10 இலட்சம் தேவைப்படுகிறது. எனவே, பொதுமக்கள் ஒன்றிரண்டு இலட்சம் ரூபாய் கொடுத்தால்கூட மீதியை எல்லாம் அரசுதான் ஏற்க வேண்டியிருக்கிறது. எனவே இந்த நிதிச் சுமையை அரசு தாங்குவதற்கு முன்னால் குத்தகை வசூலைச் செம்மையாகச் செய்ய வேண்டியிருக்கிறது. என்றாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்துதான் இதுகுறித்து முடிவு எடுக்க முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.எஸ். மணி நாடார்.

**திரு. எஸ். எஸ். மணி நாடார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் தொகுதியில் ஆரணி வட்டாரத்தில் தென்திருப்பேரை என்ற ஒரு பிரசித்திப்பெற்ற ஆலயம் இருக்கிறது. அந்த ஆலயத்திலே 15 வருடத்திற்கு முன்னர் அதற்கு இருந்த நகைகள் எல்லாம் திருடு போய் விட்டன. அந்தத் திருடர்களைத் தமிழகப் போலீசார் பிடித்து சிறையில் அடைத்து விட்டார்கள். அந்த நகைகள் எல்லாம் கோர்ட்டில் இருக்கின்றன. அந்த நகைகளைத் திரும்ப மீட்டுத் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏராளமான இடங்களில்-அண்மைக்காலங்களில் நீங்கள் செய்தித்தாள்களில் பார்த்து இருப்பீர்கள். பல இடங்களில் களவாடப்பட்ட சிலைகள் மீட்கப்பட்டுள்ளன. பல இடங்களில் இது தொடர்பான திருடர்கள் பிடிக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, நீதிமன்ற



1998 ஏப்ரல் 20]

வழக்கு முடியும் தறுவாயில் அந்த நகைகள் மீட்கப்பட்டு முறைப்படி அந்தக் கோவிலுக்குக் கொண்டு வந்து சேர்க்கப்படும். அதுமட்டுமல்லாமல் இன்றைக்குச் சொத்துப் பதிவேடுகள் என்ற முறையில், அசையும் சொத்துக்கள், அசையாச் சொத்துக்கள் என்பனவற்றையெல்லாம் முறைப்படுத்துவதற்கு இந்த அரசு கடுமையான முயற்சிகளைச் செய்து கொண்டிருக்கிறது. 1925-லிருந்து இன்றைய வரையிலான 74 ஆண்டுகளாக 1,000 கோவில்களுக்கு மட்டும்தான் சொத்துப் பதிவேடுகள் இருந்தன. இந்த ஓராண்டு காலத்தில் மட்டும் மேலும் 1,000 கோவில்களுக்குச் சொத்துப் பதிவேடுகளை உருவாக்கியிருக்கிறோம். அதிலே நகைகளும் அடங்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். எனவே, எல்லாக் கோவில்களிலும் இருக்கிற நகைகள் முறைப்படி சரிபார்க்கப்பட்டு, அதாவது ஓராண்டுக்கு ஒருமுறை, இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் சரிபார்க்கப்பட்டு அவை ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கின்றன. எனவே, தாங்கள் விரும்பியவாறு இந்த வழக்கு முடிந்ததும் அவை முறைப்படி அந்தக் கோவிலுக்குக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டு, சொத்துப் பதிவேடு பொதுமக்களுடைய பார்வைக்கு வைக்கப்படும்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. குத்தாலம் பி. கல்யாணம்.

**திரு. குத்தாலம் பி. கல்யாணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கழக அரசு முதன்முறையாக ஆட்சி செய்தபொழுது குத்தகைதாரர்களுடைய சுமையைக் குறைக்க வேண்டும், கோவில்களுக்கும் வருமானம் வர வேண்டுமென்ற அடிப்படையில், 1381 ஆம் பசலி மட்டும் கட்டினால் போதும், மற்றக் குத்தகை பாக்கிகள் அனைத்தும் தள்ளுபடி செய்யப்படும் என்று ஒரு சட்டத்தைக் கொண்டு வந்து சிறப்பாக நிறைவேற்றி இருக்கிறது. அப்படி ஒரு சட்டத்தை நம்முடைய அரசு இப்பொழுது கொண்டு வந்து நிறைவேற்றி, குத்தகைதாரர்களையும் காப்பாற்றி, அரசுக்கும் வருவாயைச் சேர்க்க ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு முனைவர் மு. தமிழ்க்குடிமகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, ஒட்டுமொத்தமாகத் தள்ளுபடி செய்வதற்கு இதுபோன்ற விதி விலக்குச் சட்டம் அனுமதிக்கப்பட்டால் அந்தப்

[1998 ஏப்ரல் 20

பகுதியில் இருக்கிற கோயில்கள் பேணப்படுவதில் எவ்வளவு இடர்ப்பாடு இருக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் நன்றாக அறிவார். குறிப்பாக, திருவாரூரில் இருக்கிற தியாகராஜ சுவாமி கோவிலுக்குப் போதுமான வருவாய் இல்லை. ஆனால், தொடக்கக் காலத்தில் அதற்கு எழுதி வைக்கப்பட்ட நிலங்கள் 1,000 வேலிக்கு மேல் என்று சொல்லப்படுகிறது. இப்பொழுதுதான் அவற்றிற்கெல்லாம் நேரடியாகக் கவனம் செலுத்தப்பட்டு அவையெல்லாம் மீட்கப்படுகின்றன. இப்படிப்பட்ட நிலையில், குத்தகைக்கு மொத்தமாக விதி விலக்குத் தந்து, கோவில்களுக்கான வருமானமே இல்லாமல் ஆக்கினால் நிலை என்ன ஆகும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றாக உணர்வார்கள் என்று நான் கருதுகிறேன். எனினும் எந்தச் சட்டமாயினும் மாண்புமிகு முதலமைச்சர்களோடு கலந்து, முறைப்படியாகக் கோவில்களுக்கு வருவாய் வரக்கூடியதை முதன்மையாக வைத்து, மற்ற நோக்கங்களை இரண்டாவதாக வைத்துத்தான் இந்த அரசு முடிவு செய்ய முடியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 252—திரு. ந. பாண்டுரங்கன், மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**252—**

**பகுதிநேர நியாய விலைக் கடை திறத்தல்**

*** 6140—திரு. ந. பாண்டுரங்கன்:**

மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் பேரூராட்சி, பேரூரின் வடக்குப் பகுதியில் ஆதிதிராவிடர்களுக்கு புதிய அல்லது பகுதிநேர நியாய விலைக் கடை திறக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், பெரணமல்லூர் பேரூராட்சி பேரூரின் வடக்குப் பகுதியில் ஆதிதிராவிடர்



1998 ஏப்ரல் 20]

காலனியில் 150 குடும்ப அட்டைகள் மட்டுமே உள்ளன. ஊரகப் பகுதியில் முழுநேரக் கடை அமைக்க குறைந்தது 500 குடும்ப அட்டைகள் தேவை. மேலும் இப்பகுதிக்கும், தற்போது அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படும் பெரணமல்லூர் கூட்டுறவு நியாயவிலைக் கடைக்கும் இடையே உள்ள தூரம் 2 கிலோ மீட்டருக்கும் குறைவாக உள்ளது. புதிய கடை அமைக்க வேண்டுமென்றால் இரண்டு கிலோ மீட்டருக்கு அதிகமாக இருக்க வேண்டுமென்ற காரணத்தால் அங்கே கடை அமைக்கக்கூடிய சாத்தியக்கூறுகள் இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**திரு. ந. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிராமப்புறத் தாய்மார்கள் தங்கள் பகுதிகளுக்கெல்லாம் பகுதி நேரக் கூட்டுறவுக் கடை வேண்டுமென்று இந்த அரசிடம் மிகுந்த ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே, அரசு விதிகளைத் தளர்த்தி, 150 குடும்ப அட்டைகளும், ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்திலும் உள்ள குடியிருப்புப் பகுதிகளுக்குப் பகுதி நேரக் கூட்டுறவுக் கடை வழங்க அரசு முன் வருமா அல்லது ஆதிதிராவிடர் குடியிருப்புப் பகுதிகளிலுள்ள இப்படிப்பட்ட குடியிருப்புகளுக்காவது அரசு பகுதி நேரக் கூட்டுறவுக் கடை வழங்க முன் வருமா, ஆகவே அரசு மறுபரிசீலனை செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அரசாணையிலேயே தெளிவாக இருக்கிறது. 800 குடும்ப அட்டைகளுக்கு மேல் கூடுதலாக 500 அட்டைகள் இருந்தால் புதிய கடைகளாகவும், 200 அட்டைகளுக்கு மேல் இருந்தால் பகுதி நேரக் கடைகளாகவும் திறக்கலாம் என்றும், இரண்டு கிலோமீட்டர் தூரம் இருந்தால் அந்தக் கடையைத் திறக்கலாம் என்றும், இரண்டு கிலோமீட்டருக்குக் குறைவாக இருக்கின்ற இடத்தில் அத்தியாவசிய நிலையைக் கருதி, அங்கு ஜாதிப் பிரச்சினை இருக்குமானால் அல்லது மற்றவர்களோடு இவர்கள் சண்டைப் போடுகின்ற ஒரு சூழ்நிலை இருக்குமானால் மாவட்ட ஆட்சித் தலைவரே நேரடியாகத் தலையிட்டு அந்தக் கடையை அமைக்கலாம் என்றும் அரசாணையிலேயே இருக்கிறது. அப்படி எங்கேனும் அவசியம் அமைத்தாக வேண்டுமென்றால் மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா 253, திரு. சைதை கா. கிட்டு, மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**253—**

**உதவி ஆணையர் அலுவலகம் திறத்தல்**

*** 7476— திரு. சைதை கா. கிட்டு:**

*மாண்புமிகு உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

(அ) உணவு வழங்கல் உதவி ஆணையர் அலுவலகத்தில் கூட்ட நெரிசலைத் தவிர்த்திட ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் குடும்ப அட்டை வழங்குவதற்கான உணவு வழங்கல் உதவி ஆணையர் அலுவலகம் திறக்கப்பட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அந்தத் திட்டம் எப்போது முதல் செயல்படத் தொடங்கும்?

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு, உணவு, பொது விநியோகம் மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1-10-1997 முதல் செயல்படத் தொடங்கிவிட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந.பூ. இராமஜெயம்.

**திரு. ந. பூ. இராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய காலகட்டத்தில் குடும்ப அட்டை என்பது மக்களுடைய சொத்தாகக் கருதப்படுகிறது. எனவே, அந்த அட்டையைப் பெறுவதில் உணவு வழங்கல் உதவி ஆணையர் அலுவலகத்தில் மட்டுமல்ல; அதைப் பெறுவதற்காக சட்டமன்ற உறுப்பினர்கள் அலுவலகத்திலும் மக்கள் நெரிசல் அதிகமாக இருக்கிறது. எனவே, இந்த நெரிசலைப் போக்கி, விரைவாக அந்த அட்டையைப் பெறுவதற்கு ஏதுவாக, ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினர் தொகுதியிலும், அந்த அட்டையை



1998 ஏப்ரல் 20]

வழங்குவதற்கான உணவு வழங்கல் உதவி ஆணையர் அலுவலகத்தைத் திறப்பதற்கு அரசு மறு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கா.நா. நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு உறுப்பினர் சைதை கிட்டு அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 10 மண்டலங்களாக இருந்ததை 14 மண்டலங்களாகப் பிரித்து அந்த அலுவலகங்கள் எல்லாம் இன்றைக்குச் செயல்படத் தொடங்கியிருக்கின்றன. கிட்டத்தட்ட 96 அதிகாரிகள் அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். 14 மண்டலங்களாக அவை இயங்கிக் கொண்டிருக்கின்றன. குடும்ப அட்டைகளைப் பொறுத்தவரையில் சென்னை மாநகரத்திற்கு, மாநகராட்சிப் பகுதிகளிலே பழைய அட்டைகளைப் புதுப்பித்தல், அட்டை இல்லாது விண்ணப்பித்தவர்களுக்கு புது அட்டை வழங்குதல் ஆகிய இரண்டையும் ஆய்வுசெய்து, வருகின்ற 1 ஆம் தேதியிலிருந்து புதிய அட்டைகள் வழங்க ஆரம்பிக்க இருக்கிறோம். இதிலேகூட ஓர் அறிவிப்பு வந்திருக்கிறது. கிராமப்புறங்களிலே புதிய அட்டைகள் வழங்குவதற்காக மனுவைப் பெறலாம் என்று அறிவிப்பு வந்திருக்கிறது. இப்போது மாநகரப் பகுதிகளிலே அந்த நேரத்திலே அந்த மனுவைப் பெறாதவர்களும், மனுவைப் பெற்றும், கொண்டு வந்து தராதவர்களும் மீண்டும் விண்ணப்பிக்கலாம்; 1.6.1998-லிருந்து விண்ணப்பிக்கலாம் என்றும் அரசு அறிவித்திருக்கிறது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள், யாருக்கேனும் புதிய குடும்ப அட்டைகள் வேண்டுமென்று சொன்னால், உண்மையாக இருக்குமானால், அந்த மனுவைப் பெற்று, எங்களுக்குத் தந்தால் அந்த அட்டைகளை வழங்குவதற்கு அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 254, டாக்டர் ஆ. ஞானசேரகன், மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர்.

[1998 ஏப்ரல் 20

254—

## வேளச்சேரியில் விட்டுமனை ஒதுக்கீடு

***6026—டாக்டர் ஆ. ஞானசேகரன்:**

மாண்புமிகு பால்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நடைபாதைவாசிகளுக்காக வேளச்சேரியில் ஹட்கோ நிதி உதவியோடு எல்லா வசதிகளுடன் உருவாக்கிய இரண்டாயிரம் மனைகளை நடைபாதைவாசிகளுக்கு ஒதுக்கீடு செய்யாமல் வேறு நபர்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. சுந்தரம், பால்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நடைபாதைவாசிகளுக்கும் மற்றும் துரித இரயில் போக்குவரத்துத் திட்டம் 1-ன்கீழ்ப் பாதிக்கப்பட்ட குடிசைவாசிகளுக்கும் தவிர வேறு யாருக்கும் ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

(ஆ) எழவில்லை.

**டாக்டர் ஆ. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் நடைபாதைவாசிகளுக்கு வேறு எந்தெந்த இடங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்கிற விவரத்தைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நடைபாதைவாசிகளுக்கான வீட்டுமனை வழங்கும் திட்டத்தின்கீழ், சென்னை மாநகரில், கொடுங்கையூர், தமிழர் நகர், கொருக்குப்பேட்டை மற்றும் பள்ளிக்கரணை ஆகிய பகுதிகளில் 3,900 மனைகள் வழங்கப்பட்டுள்ளன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை நடைபாதைவாசிகளுக்கு மாற்று இடம் அளிக்கும் பகுதி, தாம்பரம் தொகுதியில் இருக்கின்ற காரணத்தால்,



1998 ஏப்ரல் 20]

பள்ளிக்கரணையில் ஒதுக்கியிருக்கின்ற இடத்தில் இன்னும் எத்தனை இடங்கள் காலியாக உள்ளன? அவை அத்தனையும் முறைப்படியாகத்தான் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனவா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கரணைப் பகுதியில் மொத்தம் 2,202 மேம்படுத்தப்பட்ட மனைகள். துரித இரயில் திட்டம் 1ன்கீழ் காலி செய்யப்பட்ட குடிசைவாசிகளுக்கு 1,972 மனைகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. மீதம் 230 காலி மனைகள் உள்ளன. இவற்றில் 1,138 மனைகளில் முறைகேடுகள் இருப்பது தெரியவந்துள்ளன. எனவே, மறுபரிசீலனை செய்யப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 255, திரு. டி.சி. விஜயன், மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர்.

255—

## புகையினால் மக்கள் பாதிக்கப்படுவதைத் தடுத்தல்

***4716—திரு. டி.சி. விஜயன்:**

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவொற்றியூர் நகரின் மையப் பகுதியில் பழைய இரும்பை உருக்கி, புதிய கம்பி தயார் செய்யும் தொழிற்சாலை மூலம் ஏற்படும் கரும்புகையினால் மக்கள் பாதிக்கப்படுவதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப்படும்?

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி, கைத்தறித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருவொற்றியூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் 14 தொழிற்சாலைகள் பழைய இரும்பிலிருந்து புதிய கம்பி தயாரிப்பவை. இவற்றுள் ஒரு தொழிற்சாலை தற்போது இயக்கத்தில் இல்லை. மீதமுள்ள 13 தொழிலகங்கள், காற்று மாசுக் கட்டுப்பாடுக் கருவிகளைப்

[1998 ஏப்ரல் 20

பொருத்தியுள்ளன. இத்தொழிற்சாலைகளில் சில, குடியிருப்பு மற்றும் மிதமான தொழிற்சாலைப் பகுதிகளில் இயங்கி வருவதால் இந்தத் தொழிற்சாலைகளுக்கு, விளக்கம் கோரும் தாக்கீது, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தால் அனுப்பப்பட்டுள்ளது. அவற்றின்மீது பெறப்பட்ட விளக்கங்களைப் பரிசீலனை செய்த பின் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. டி.சி. விஜயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால் பாதிக்கப்படும் மக்களுக்கு நிவாரணத் தொகை அளிக்கப்படுமா எனத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்த அளவிற்குப் பாதிப்பு யாருக்கு ஏற்பட்டது என்பதையெல்லாம் இதிலே சொல்வதற்கு வாய்ப்பில்லை. ஏனென்றால், அந்தப் பகுதியிலே காற்று மண்டலத்தில் இருக்கின்ற சல்பர் டையாக்சைட், நைட்ரஜன் ஆக்சைட் போன்றவை எந்த அளவிற்கு இருக்க வேண்டுமோ, அதற்கு மேல் இருக்கின்றனவா என்பதை அறிவதற்கு நகராட்சி மன்றத்தில் ஒரு தொடர் ஆய்வுப் பணி நடைபெற்று வருகிறது. அது சற்று அதிகப்பட்டாலோ அல்லது சமமாக இருந்தாலோ அதை முறைப்படுத்துகின்ற பணியும் நடைபெற்று, அதிலே இதுவரை கிடைக்கப்பெற்ற செய்தியின்படி, மிதக்கும் தூசுப் பொருட்களுடைய அளவுதான் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட சற்று அதிகமாக இருக்கிறது. அதற்கும் தக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு.பெ. சாமிநாதன்.

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குறிப்பிட்ட சிறு தொழிற்சாலையை அமைப்பதற்குக்கூட நம்முடைய மத்திய மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய அனுமதியைப் பெற வேண்டும் என்று, இங்கே இருக்கிற அதிகாரிகள் தொழில் துவங்குபவர்களை அச்சுறுத்துவது போன்ற செயல்களில் ஈடுபட்டு வருகின்றார்கள். அதுபோன்ற சூழ்நிலையைத் தவிர்க்க, குறிப்பிட்ட தொழிற்சாலைகளுக்கு மட்டுமாவது அல்லது குறிப்பிட்ட முதலீட்டுத் தொகையிலே தொடங்கப்படும் தொழிற்சாலைகளுக்கு மட்டுமாவது, தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியத்தினுடைய அனுமதி பெற்றாலே



1998 ஏப்ரல் 20]

போதும் என்ற வகையில் நடைமுறைப்படுத்த அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய புதிய கொள்கைகள் பலவற்றை நாம் மறுபடியும் ஆராய்ந்து, அவை பற்றிச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. இது ஒரு குழந்தை. இப்போதுதான் தவழ்கிற குழந்தை. ஆகவே, பல நேரங்களிலே, செய்ய இயலாத சில காரியங்களைக்கூடச் செய்ய வேண்டிய கட்டாயத்திற்கு நிர்ப்பந்தங்கள் ஏற்படுகின்றன. ஆகவே, இதையெல்லாம் முறைப்படுத்துவதற்கு மாசுக் கட்டுப்பாடுத் துறையிலே ஒரு புதிய திட்டத்தை வகுத்தாலே, எதிர்காலத்திலே சுலபமாக இருக்கும் என்ற எண்ணம் இப்போது நம்முடைய அரசுக்கு இருக்கிறது. அந்த வகையில், இதையெல்லாம் முறைப்படுத்துகின்ற பணியிலே ஈடுபட்டு ஒரு புதிய திட்டத்தையே மாசுக் கட்டுப்பாடு வாரியம் இங்கே அளிக்க இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண். 256, திரு. த. நடராஜன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்.

**256—**

**பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைத்தல்**

***7397—திரு. த. நடராஜன்:**

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சியில் ஒரு பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைப்பது குறித்த

[1998 ஏப்ரல் 20

செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. த. நடராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செஞ்சி ஒரு வட்டத் தலைநகரம். பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் அதிகமாக வாழும் பகுதி. செஞ்சியில் உள்ள மேல்நிலைப் பள்ளியில் சுமார் 2,000 மாணவர்கள் 15, 20 கிலோ மீட்டர் தூரத்திலிருந்து வந்து படிக்கின்றார்கள். கிராமப்புறங்களிலேகூட பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைந்துள்ள இந்தக் காலகட்டத்தில், வட்டத் தலைநகரான செஞ்சியில் பிற்படுத்தப்பட்டோர் நல மாணவர் விடுதி அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வு செய்வார்களா? அதற்கான இடத்தை நாங்கள் ஒதுக்கித் தந்தால் இந்த ஆண்டே மாண்புமிகு முதல்வர் மற்றும் அமைச்சர் அவர்கள் எப்படியாவது எங்களுக்கு விடுதி வழங்க முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு புதிய விடுதி தொடங்குவதற்கான நிபந்தனைகள் என்னவென்றால், நிதியாதாரத்தின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் சில நெறிமுறைகளுக்குட்பட்டு புதிய விடுதிகள் தொடங்கிட அனுமதி வழங்கப்படுகிறது. குறிப்பாகப் புதிய விடுதிகள் தொடங்கப்பட இடத்தைத் தேர்வு செய்யும்போது அருகிலுள்ள உயர்நிலைப் பள்ளிகள், மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் ஆகியவற்றில் பயிலும் மாணவ, மாணவியர்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் ஆகியோர் போதிய எண்ணிக்கையில் இருக்க வேண்டும். மற்றொன்று, விடுதி தொடங்கிட அனைத்து வசதிகளுடன் கட்டடங்கள் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்க வேண்டும். இவை இருந்தால் இந்தக் கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா என் 257, திரு. ரா. சேதுநாதன், மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 20]

**257—**

## அரசு அலுவலர்களுக்குக் குடியிருப்புகள் கட்டுதல்

***8655—திரு ரா. சேதுநாதன்:**

மாண்புமிகு வீட்டுவசதித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டத்தில் அரசு அலுவலர்களுக்கு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் குடியிருப்புகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி, வீட்டுவசதித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**திரு. ரா. சேதுநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் மாவட்டத்தில், விழுப்புரம், திண்டிவனம் ஆகிய இரண்டு நகரங்கள் இருக்கின்றன. திண்டிவனம் நகரத்தில் பல அரசு அலுவலகங்கள் இருக்கின்றன. பஞ்சாயத்து யூனியன்களிலே வேலை செய்கின்ற அரசு ஊழியர்களுக்கும், நகரத்திலே இருக்கின்ற அரசு ஊழியர்களுக்கும் ஏதுவாக, வீட்டுவசதி வாரியத்தின் சார்பாகக் குடியிருப்புகள் திண்டிவனத்தில் அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட எல்லா மாவட்டத் தலைநகரங்களிலும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி, அரசு ஊழியர்களுக்காக வாடகை வீடுகளைக் கட்டும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சார்ந்துள்ள விழுப்புரம் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே விழுப்புரத்தில் 72 வீடுகளும், திருக்கோவிலூரில் 60 வீடுகளும், திண்டிவனத்தில் 120 வீடுகளும், பனம்பட்டியில் 72 வீடுகளும் அரசு ஊழியர்களுக்காகக் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. தற்போது விழுப்புரம்,

[1998 ஏப்ரல் 20

மகாராஜபுரத்தில் ரூபாய் 381.43 இலட்சம் மதிப்பீட்டில் அரசு ஊழியர்களுக்காக 120 வாடகை வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது. திண்டிவனத்தில் தேவையான அரசு நிலத்தினை மாவட்ட நிருவாகம் வழங்கினால் அங்கு வீடு கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 258. டாக்டர் அ. மணி, மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்.

**258—**

**கால்நடை மருத்துவமனை அமைத்தல்.**

***10128—டாக்டர் அ. மணி:**

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை ஒன்றியம், காட்டு எடையார் கிராமத்தில் கால்நடை மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு புலவர் பூ.ம. செங்குட்டுவன், கால்நடைப் பராமரிப்புத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் அ. மணி, இருக்கையில் இல்லை.

வினா எண் 259, திரு. கு. மனோகரன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.



1998 ஏப்ரல் 20]

**259—**

**அனாதைக் குழந்தைகள் விடுதிக்குக் கட்டடம் கட்டுதல்.**

***6181—திரு. கு. மனோகரன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தருமபுரியை அடுத்த அன்னசாகரத்தில் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் அரசு அனாதைக் குழந்தைகள் விடுதிக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தருமபுரி மாவட்டம் அன்னசாகரத்தில் அரசு குழந்தைகள் காப்பகம் தற்பொழுது மாதம் ரூ.4300/- வாடகையில் தனியார் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. இக்காப்பகத்திற்குக் கட்டடம் கட்ட நிலம் தற்சமயம் ஒதுக்கீடு செய்யப்படவில்லை. இதற்குக் கட்டடம் கட்ட நிலம் ஒதுக்கீடு செய்யப்படும்போது சொந்தமாகக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கு. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதியில், தருமபுரி நகரை அடுத்த அன்னசாகரத்தில் சுமார் 250 மாணவ, மாணவிகள் மாதம் ரூபாய் 4300/- வாடகைக் கொடுத்து அங்கேயே தங்கியிருக்கும் அவல நிலையில், அந்தக் காப்பகம் இயங்கி வருகிறது. தருமபுரி தொகுதியில் பல இடங்களில் அரசுப் புறம்போக்கு நிலங்கள் உள்ளன. அதற்குத் தேவையான இடத்தை நான் ஏற்பாடு செய்து தருகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தில் கட்டடம் கட்டித் தர இந்த ஆண்டு ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்ற ஆர்வம் மாண்புமிகு உறுப்பினருக்கு இருப்பது பாராட்டத்தக்கது. சொந்தக் கட்டடம் கட்ட, நிலம் ஆர்ஜிதம், அரசிதழ் வெளியீடு மூலமாகச் செய்வதற்கு, தருமபுரி மாவட்ட சமூக நலத் துறை

[1998 ஏப்ரல் 20

அலுவலரால், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. அரசால், தகுந்த இடம் அறிவிக்கப்படும்போது, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட இடத்தையும் மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவித்து, அது உகந்த இடமாக இருக்கும் என்று சொன்னால், அரசுக்கு அவரும் பரிந்துரை செய்து அனுப்பலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 260, திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

**260—**

**ஊனமுற்றவர்களுக்கு ஒய்வூதியத்தை உயர்த்துதல்**

***8636—திரு மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடல் ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் ஒய்வூதியத் தொகையை உயர்த்தும் எண்ணம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன், சமூக நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கடந்த 27-3-1998 அன்று மாண்புமிகு முதல்வர் அவர்களால் தாக்கல் செய்யப்பட்ட நிதிநிலை அறிக்கையில், "நலிந்த பிரிவினருக்காக இவ்வரசு பல்வேறு சமூகப் பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது; நெசவாளர்கள், மீனவர்கள், நிலமற்ற விவசாயத் தொழிலாளர்கள், விதவைகள், ஆதரவற்ற பெண்கள், உடல் ஊனமுற்றோர் போன்ற எல்லாப் பிரிவினருக்கும் வயதின் அடிப்படையில் வழங்கப்பட்டு வந்த ஒய்வூதியம் மாதம் ஒன்றுக்கு 100 ரூபாயிலிருந்து, வரும் ஆண்டிலிருந்து 150 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும், அதற்காக வரும் ஆண்டில் 150 கோடி ரூபாய் ஒதுக்கப்படும்" என்று அறிவித்துள்ளார்கள். சம்பந்தப்பட்ட செயற்குறிப்பு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்குச் சுற்றனுப்பப்பட்டுள்ளது. விரைவில் ஆணை வெளியிடப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 20]

**திரு. மு. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய பொருளாதார நிலை, தற்பொழுதுள்ள விலைவாசி நிலை, உடல் ஊனமுற்றோருடைய அவல நிலை, இவற்றைக் கருத்தில் கொண்டு, பெற்ற தாய்-தந்தைகூட ஊனமுற்றவர்களைச் சரியாகக் கவனிக்காத இந்தக் காலத்தில், கருணையுள்ளம் கொண்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் உடல் ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் ஒய்வூதியத் தொகையை, சிறப்பு நேர்வாகக் கருத்தில் கொண்டு, மேலும், உயர்த்திக் கொடுக்க ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கருணையுள்ளத்தோடுதான், கனிவான உள்ளத்தோடுதான் 100 ரூபாயிலிருந்து 150 ரூபாயாக அந்த உதவித் தொகையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உயர்த்தி வழங்கியிருக்கிறார்கள். இதன் மூலமாக ஆண்டொன்றுக்கு 150 கோடி ரூபாய் அரசுக்கு அதிகமாகச் செலவாகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையைப் பரிசீலிப்பதற்கில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. சுதர்சனம்.

**திரு. டி. சுதர்சனம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டொன்றுக்கு ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகையில் புதிதாக எத்தனை சதவிகிதம் ஊனமுற்றோருக்கு இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 50%-க்கு மேற்பட்ட ஊனமுற்றோர், உதவித் தொகை வேண்டி மனுச் செய்திருக்கிறார்கள் என்று சொன்னால், அவர்களுடைய வயது 45 என்று இருக்கும்பட்சத்தில், அவர்களுக்கு அந்த உதவித் தொகை வழங்கப்படுகிறது. எத்தனை பேர் என்று வரம்பு கிடையாது. எத்தனை பேர் மனுச் செய்திருந்தாலும், அத்தனை பேருக்கும் வழங்கப்படுகிறது. இதுவரை 54,240 பேர் இந்த உதவித் தொகையைப் பெற்று வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1998 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி. அய்யலுசாமி.

முற்பகல் 10-45

**திரு. வி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐம்பது சதவிகிதத்திற்குமேல் ஊனமுற்றவர்களுக்கு ஊனமுற்றோர் உதவித் தொகையாக நமது அரசு மாதம் ஒன்றிற்கு ரூ.150/- கொடுத்து வருகிறது. அந்த ஊனமுற்ற ஏழையெளியவர்களுக்கு, கருணை உள்ளத்தோடு, அதை மேலும் அதிகப்படுத்தி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூல வினாக் கேட்டவருடைய துணை வினாவே அதுதானே! அதற்குப்பின் நீங்களும் அதையே திருப்பிக் கேட்டுக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? திருமதி ஆர். சரஸ்வதி.

**திருமதி ஆர். சரஸ்வதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதியோர் உதவித் தொகைக்கு விண்ணப்பம் செய்த அனைவருக்கும் தகுதியின் அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகிறது. அதுபோல, விண்ணப்பம் செய்துள்ள உடல் ஊனமுற்றவர்கள் அனைவருக்கும் விரைவில் ஓய்வூதியம் வழங்க அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திருமதி எஸ்.பி. சற்குணபாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றவர்களாக இருப்பினும், அவர்கள் வேலை செய்யக்கூடிய தகுதி படைத்தவர்களாக இருப்பார்களேயானால், அவர்களுக்கு முதியோர் உதவித் தொகை என்ற அடிப்படையில் தரப்படுகின்ற உதவித் தொகை தருவதற்கில்லை. எனவேதான். வயது அடிப்படையும், 50 சதவிகித ஊனம் என்பதும குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]



## 2. ஒத்திவைப்புத் தீர்மானம்

### பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வுக்கான வினாத்தாள் தேர்வுக்கு முன்னரே வெளியாகியுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, ஒத்திவைப்புத் தீர்மானம். தமிழகத்தில் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வுக்கான வினாத்தாள் தேர்வுக்கு முன்னரே வெளியாகியுள்ளது குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. இரா. தாமரைக்கனி, திரு. சி. ஞானசேகரன், திரு. வை. சிவபுண்ணியம் ஆகியோர், விதி 56-ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில், திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற வாரம் பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வின் ஆங்கிலப் பாட வினாத்தாள் சென்னை போன்ற பகுதிகளில் out ஆகி...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன out?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தூய தமிழில் சொல்ல வேண்டுமானால், வெளியாகி, சில ஜெராக்ஸ் கடைக்காரர்கள் ஒரு கேள்வித்தாள் ரூ.1000/-, ரூ.1500/- என்றெல்லாம் ஏலம் விட்டு, கல்வியை வியாபாரம் ஆக்கிய கொடுமைகளெல்லாம் இங்கே நடந்திருக்கின்றன. அந்த 10 ஆம் வகுப்பு கேள்வித்தாள் மாநகரப் பகுதியிலே மட்டும் வெளியான காரணத்தினால், அங்கு தேர்வு எழுதிய மாணவர்கள் அதிகமான மதிப்பெண்களைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதே நேரத்தில், கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற மாணவர்கள் மிகவும் ஏமாற்றம் அடையக்கூடிய ஒரு சூழ்நிலையும் உருவாகியிருக்கிறது. இதுபோன்று கேள்வித்தாள் வெளியாவதற்குக் காரணமானவர்கள் யார் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கொஞ்சம் ஆய்ந்து பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஏற்கெனவே, கேள்வித்தாளை 'set' செய்தவர்கள் வெளியாக்கியிருக்கலாம். அல்லது பிரின்டிங் பிரஸ்சிலிருந்து வெளியாகியிருக்கலாம். அல்லது இயக்குநர் அலுவலகத்திலிருந்தோ, சி.ஈ.ஓ. அலுவலகத்திலிருந்தோ, custody-க்குக் கொடுக்கும்போது, அங்கிருந்து வெளியாகியிருக்கலாம். இப்படி ஏதோவொரு முனையிலிருந்து

[திரு. சி. ஞானசேகரன்] [1998 ஏப்ரல் 20

அது வெளியாகி, பிறகு ஜெராக்ஸ் கடைக்கெல்லாம் சென்று, வியாபாரம் ஆக்கப்பட்டிருக்கிறது. அந்த ஜெராக்ஸ் கடைக்காரர் ஏற்கெனவே கைது செய்யப்பட்டிருக்கிறார். அவர் மூலமாகக் காவல் துறையினர் ஏதாவது கருத்துக்களை— எப்படியெல்லாம் இது நடந்தது என்ற விஷயங்களைக்— கேட்டறிந்திருக்கிறார்களா என்பது எனக்குத் தெரியவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து அவைக்குத் தெரிவிப்பதுடன், அப்படி வெளியிட்டவர்களை உடனடியாக வேலை நீக்கம் செய்வதற்கான நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இப்படி, கல்வியை வியாபாரம் ஆக்கக்கூடிய புல்லுருவிகள் இன்று கல்வித் துறையிலே இருக்கின்ற காரணத்தினால், நம்முடைய கட்டுப்பாட்டில் இருக்கின்ற கல்வியை இவர்களெல்லாம் கெடுத்துக் கொண்டிருக்கின்ற சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டுமென்று சொன்னால், அவர்களை நாட்டிற்கு அடையாளம் காட்டிக் கொடுத்து, கேள்வித்தாள் வெளியானதற்குக் காரணமாக இருந்தவர்களை உடனடியாக வேலை நீக்கம் செய்து, இன்னும் ஒரு வார காலத்திற்குள் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க அரசு ஆவன செய்யுமா என்பதையும், எந்தெந்தப் பகுதிகளிலெல்லாம் அந்தக் கேள்வித்தாள் வெளியானதோ, அந்தப் பகுதிகளில் ஏற்கெனவே எழுதிய தேர்வு செல்லாது என ஆக்கி, மீண்டும் அந்தப் பத்தாம் வகுப்பு மாணவர்களுக்கு மறுதேர்வு நடத்த அரசு ஆவன செய்யுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்தாம் வகுப்பு கேள்வித்தாள் வெளியானது, பத்திரிகைச் செய்தியாக வந்திருக்கிறது. இது வேதனைத் தரத்தக்க செய்தியாக இருக்கிறது. சென்னையிலே புளியந்தோப்புப் பகுதியிலே இந்தக் கேள்வித்தாள் விற்பனை செய்யப்பட்டதாகப் பத்திரிகைச் செய்தி வந்திருக்கிறது. குறிப்பாக, ஒரு ஜெராக்ஸ் கடையிலே 54 பிரதிகள் எடுக்கப்பட்டதாகவும் பத்திரிகைச் செய்தி கூறுகிறது. அந்த ஜெராக்ஸ் கடைக்காரர், சின்னதுரை என்பவரைக் கைதுசெய்து விசாரணை செய்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், அந்தக் கேள்வித்தாள் ஐநூறு ரூபாய், ஆயிரம் ரூபாய் அளவிற்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. பத்தாம் வகுப்பு மாணவர்கள் யாரெல்லாம் பரிட்சை எழுதுகிறார்களோ, அவர்களது வீட்டிற்குத் தேடிச் சென்று



1998 ஏப்ரல் 20] [திரு. வை. சிவபுண்ணியம்]

விற்றதாகத் தகவல் சொல்லப்பட்டிருக்கிறது. குறிப்பாக, இதிலே அச்சுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கும், தேர்வுத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளுக்கிடையே தொடர்பு இருக்குமோ, அதன் மூலமாகக் கேள்வித்தாள் வெளியிடப்பட்டிருக்குமோ என்ற அச்சம் வெளியிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இதில் உரியமுறையில் விசாரணை நடத்தப்படுமா என்பதை அறிய விரும்புவதோடு, காவல் துறையின் மூலமாக இதற்கான வழக்குப் பதிவு செய்யப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்படுவதாகச் செய்திகள் வந்திருக்கின்றன. இருந்தாலும், இப்படிப்பட்ட மோசமான நடவடிக்கைக்கு உள்ளானவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுத்து, தமிழகத்தில் கல்வியைக் காப்பாற்றுவதற்குரிய முயற்சிகளை அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு இரா. தாமரைக்கனி.

•**திரு. இரா. தாமரைக்கனி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 16-4-1998 ஆம் நாள், சென்னை, புளியந்தோப்புப் பகுதியிலுள்ள ஜெராக்ஸ் கடையில், எஸ்.எஸ்.எல்.சி. கேள்வித்தாள் 'அவுட்' ஆனதாகச் சொல்லி, சின்னதுரை என்பவரைக் கைதுசெய்து இருக்கிறார்கள். 54 பிரதிகள் கைப்பற்றப்பட்டுள்ளன. சென்னை நகரத்தில் மட்டுமல்ல; தமிழ்நாட்டிலுள்ள பல நகரங்களிலும், இப்படி ஆங்கிலப் பாடத்திற்கான கேள்வித்தாள் 'அவுட்' ஆகியிருப்பதாகச் சொல்கிறார்கள். ஆங்கிலம் மட்டுமல்லாமல், மற்ற பாடங்களுக்கான கேள்வித்தாள்களும் 'அவுட்' ஆகியிருப்பதாகப் பேசப்படுகிறது. இதுசம்பந்தமாக அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது. சில பேர்களுக்கு இந்தக் கேள்வித்தாள் கிடைத்திருக்கிறது; அவர்கள் 'பாஸ்' ஆகிவிடுவார்கள். ஆகையினால், பரிட்சை எழுதியவர்கள் எல்லோருக்குமே 'பாஸ் மார்க்' போடப்போகிறீர்களா அல்லது இன்னொரு தடவை பிள்ளைகளைப் பரிட்சை எழுதவைக்கப் போகிறீர்களா? இதுசம்பந்தமாக, எஜுகேஷன் டைரக்டரையோ அல்லது கல்வி இலாக்காவில் உள்ள சி.ஈ.ஓ. அல்லது டி.ஈ.ஓ. யாரையாவது 'சஸ்பென்டு' செய்திருக்கிறீர்களா? இதற்குப் பொறுப்பு யார்? அவர்கள் மீது அரசால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது? இது சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இப்படி நடந்துவிட்டதே என்று வருத்தம் ஏதாவது தெரிவிக்க

[திரு. இரா. தாமரைக்கனி] [1998 ஏப்ரல் 20

இருக்கிறாரா? இல்லையென்றால், வேறு ஏதாவது மன்னிப்பு என்ற வகையில் தெரிவிக்கப்போகிறாரா? 'இந்த அதிகாரிகள் எனக்குக் கட்டுப்படமாட்டேன் என்கிறார்கள்; எனக்கு இந்த இலாக்கா வேண்டாம்; வேறு இலாக்கா கொடுங்கள்' என்று முதலமைச்சரிடம் கேட்கப் போகிறாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வியமைச்சர்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் விவரம் தெரிந்துகொள்ள விரும்புவார்கள் என்ற அடிப்படையில், நேற்றையதினமே இதுகுறித்து இந்தத் துறையினுடைய இயக்குநர் மூலமாகச் செய்தியைப் பெற்று வந்திருக்கிறேன். ஆகவேதான், இன்று காலையிலே, ஒத்திவைப்புத் தீர்மானம் என்ற இந்த அறிவிப்பைப் பார்த்தவுடன், உடனே இதை எடுத்துக் கொள்ளலாம் என்று பேரவைத் தலைவரிடம் நான் தெரிவித்தேன். முதலில் விவரத்தைத் தெரிவித்து விட்டு அதற்குமேல் மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்ன கருத்துக்களை நாம் எண்ணிப் பார்க்கலாம் என்று கருதுகிறேன்.

பத்தாம் வகுப்பு ஆங்கிலப் பாடக் கேள்வித்தாள் நகல் எடுக்கப்பட்டது சம்பந்தமாக, சென்னை, புளியந்தோப்பு காவல் நிலையத்தில், கிரைம் எண் 616/98-ன்கீழ் 16-4-1998 அன்று வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதுசம்பந்தமாக, புளியந்தோப்பு, சுரேஷ் ஜெராக்ஸ் கம்பெனியில் பணிபுரியும் திரு. சின்னதுரை என்பவர் கைது செய்யப்பட்டு ரிமாண்டில் உள்ளார். இந்தக் கேள்வித்தாள் தட்டச்சு செய்யப்பட்டு, நகல் எடுக்கப்பட்டுள்ளது. அவருக்குத் தட்டச்சு செய்யப்பட்ட பிரதியை யார் கொடுத்தது என்பது தெரியவில்லை. இது சம்பந்தமாகத் தீவிர விசாரணை நடைபெற்று வருகிறது. அவ்வாறு ஜெராக்ஸ் எடுத்த 'காப்பி' ஏறத்தாழ 59 என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். அது நகல் எடுக்கப்பட்ட வினாத்தாள். அவை முழுவதும் உடனடியாகப் பறிமுதல் செய்யப்பட்டன. பறிமுதல் செய்யப்பட்ட வினாத்தாளும், அதற்கு மறுநாள் 17 ஆம் தேதி தேர்வுக்குக் கொடுக்கப்பட்ட வினாத்தாளும் ஒப்பிட்டுப் பார்க்கப்படும்போது, ஒரே மாதிரியாக இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி மேற்கொண்டும் விசாரணை நடைபெற்று வருகிறது. ஒரு கேள்வித்தாள் வெளியிலே விற்பதற்குத் தயாராக இருப்பதாக ஒரு செய்தி, கல்வித் துறைக்குக் கிடைத்து, அவர்கள் காவல் துறைக்குத் தெரிவித்து, உடனடியாகக்



1998 ஏப்ரல் 20] [பேராசிரியர் க. அன்பழகன்]

காவல் துறையினர் அந்த ஜெராக்ஸ் நிலையத்திற்குச் சென்று அந்தப் பிரதிகளைக் கைப்பற்றினார்கள். அது எப்படிக் கிடைத்தது என்ற கேள்விக்கு, 'அங்கே ஒருவர் 'டைப்' அடிப்பதற்காக வந்தார்; அதை நான் எடுத்து வைத்துக்கொண்டேன்' என்று சொன்னதாக Oral—வாய்மொழியாகச் சொன்ன செய்தியும் கிடைத்திருக்கிறது. ஆனால், இப்படி ஒரு தாள் வெளியிலே வருமானால், தமிழ்நாட்டிலே வேறு எங்கேயாவது இந்தத் தாள் வெளிவந்ததாகச் செய்தி வந்திருக்கிறதா என்பதையும், எந்தப் பள்ளிக்கூடத்திலாவது மாணவர்கள் இப்படி ஒரு தாளைப் பயன்படுத்துகிற நிலைமை இருக்கிறதா என்பதையும் தேர்வுத் துறை இயக்குநரும், கல்வித் துறை அலுவலர்களும், தமிழ்நாடு முழுவதும் எல்லா மாவட்டங்களிலும் கூர்ந்து கவனிக்கும்படி ஆணையிடப்பட்டிருக்கிறார்கள். ஏனென்றால் கேள்வித்தாள், முதல் நாள் இரவு 9 மணி அல்லது 10 மணி அளவில் கண்டுபிடிக்கப்பட்ட காரணத்தினால், இது தமிழ்நாட்டில் வேறு எங்கேயாவது பரவி இருக்கிறதா; வெளிவந்த கேள்வித்தாளை வைத்து விடை எழுதுகிற நிலைமை, தமிழ்நாட்டில் வேறு எந்தத் தேர்வு மையத்திலாவது இருக்கிறதா, குறிப்பாகச் சென்னையிலே எந்தத் தேர்வு மையத்திலாவது இருக்கிறதா என்பதைக் கல்வித் துறையாளர்கள் தொடர்ந்து கண்காணித்து வந்த வகையில், அப்படி இதுவரையில் — அப்படிச் சில குறிப்புகள் எப்போதாவது கிடைக்கும் — ஒரு குறிப்பும் கிடைக்கவில்லை.

முற்பகல் 10-55

காவல் துறை, கைது செய்யப்பட்டவர்களைக் கொண்டு இந்தத் தாள், எங்கிருந்து அவர் கைக்கு வந்து சேர்ந்தது, யார் மூலம் வந்தது என்பதைக் கண்டுபிடிப்பதில் தீவிரமாக இருக்கிறது. அப்படிக் கிடைப்பதற்கு யாரேனும் கல்வித் துறையைச் சேர்ந்தவர்கள் ஒரு காரணமாக இருந்திருப்பார்கள் என்பது புலப்படுமானால், அது விசாரணையில் உறுதிப்படுத்தப்படுமானால், தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால் ஒன்று. இந்தக் கேள்வித்தாள் தமிழ்நாட்டில் வேறு எங்கும் விற்கப்பட்டதாக, வாங்கியதாக, வேறு எந்த ஆதாரமான செய்தியோ அல்லது விடை எழுதுகின்றபோது இந்தக் கேள்வித்தாள் முன்கூட்டிக் கிடைத்து, அதைப் பயன்படுத்திக் கொண்டதாகவோ இதுவரையில் செய்தி இல்லை. அப்படி யாரும் பயன்படுத்தியதாகச் செய்தி இல்லாதபோது, மறுபடியும் ஒரு தேர்வு என்று மாணவர்களுக்குப்

[பேராசிரியர் க. அன்பழகன்] [1998 ஏப்ரல் 20

பெரிய சுமையை ஏற்படுத்துவது அரசாங்கம் செய்ய வேண்டிய ஒரு காரியமாக நான் கருதவில்லை. எங்காவது வெளியிடப்பட்டு, அது எங்காவது பயன்படுத்தப்பட்டு, அதனால் சில குறைபாடுகள் ஏற்பட்டு, மாணவர் வெற்றி பெறுவது, வெற்றி பெறாதது என்பதைத் தீர்மானிப்பதற்கு அது ஒரு காரணமாக ஆகிவிடுவது போன்ற ஒரு சூழ்நிலை இருக்குமானால், மறுதேர்வு நடத்தலாமே தவிர, அப்படி இல்லாதபோது, குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்பட்டு, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படுவதற்குக் காவல் துறை மூலமாக, தீவிரமாக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும். கல்வித் துறையைச் சேர்ந்த அலுவலர்கள் யாராக இருந்தாலும், எந்தவிதமான தாட்சண்யமுமின்றிக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று நான் உறுதி கூறுகிறேன். இதற்காக அமைச்சர் பொறுப்பை மாற்றும்படி முதலமைச்சரை நான் கேட்பதாக இல்லை. இதற்காக அவையின் இதர அலுவல்களை ஒத்திவைக்கத் தேவையில்லை என்பதையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்குப் பிறகு, ஒத்திவைப்புத் தீர்மானத்திற்கு இசைவு மறுக்கப்படுகிறது.

## 3. கவன ஈர்ப்பு

### (அ) கரும்பு விலை உயர்த்தப்படாததால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜி.கே. மணி மற்றும் திரு. சி. ஞானசேகரன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். திரு. சி. ஞானசேகரன் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கரும்பு விலையை உயர்த்தாததால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.



1998 ஏப்ரல் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது :

### அறிக்கை

கரும்புக்கான சட்டப்பூர்வ குறைந்தபட்ச விலை ஒவ்வோர் ஆண்டும் மைய அரசால் 1966 ஆம் ஆண்டின் கரும்புக் கட்டுப்பாடு ஆணை பிரிவு 3-ன்கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு நிர்ணயம் செய்யப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டிற்கு 8.5 சதவீத சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட ஒரு டன் கரும்பிற்கு, சட்ட பூர்வ குறைந்த விலையாக ரூ. 484.50 மைய அரசால் அறிவிக்கப்பட்டுள்ளது. இவ்விலை கட்டுப்படியாகவில்லை என்றும், கூடுதலாக விலை கிடைக்கும்படிச் சர்க்கரை ஆலைகளுக்கு அறிவுரை கூறும்படி, கரும்பு பயிரிடுவோர் மாநில அரசிடம் முறையிட்டுள்ளார்கள். இதனை அடுத்து, ஒவ்வோர் ஆண்டும் வழக்கமாக மாநில அரசு செய்வதுபோன்று கரும்பு பயிரிடுவோர் சங்கப் பிரதிநிதிகள், சர்க்கரை ஆலை அதிபர்கள் ஆகியோருடன் தனித்தனியாகக் கூட்டம் நடத்தி அவர்களது கருத்துப் பெறப்பட்டது. கரும்பு பயிரிடுவோர், ஒரு டன் கரும்பிற்கு ரூ.1,000 விலையாகப் பரிந்துரை செய்ய வேண்டுமென்று முறையீடு செய்தார்கள். அவர்களது முறையீடு மற்றும் சர்க்கரை ஆலைகளின் நிதி நிலைமை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, 1997-98-ஆம் ஆண்டிற்கு 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட ஒரு டன் கரும்பிற்கு ரூ.660 மாநில அரசின் பரிந்துரை விலையாக அரசால் அறிவிக்கப்பட்டது. இது மைய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட சட்டபூர்வ குறைந்தபட்ச விலையைவிட ரூ. 175.50 அதிகம் ஆகும். கடந்த 1996-97-ல் மைய அரசால் நிர்ணயம் செய்யப்பட்ட சட்டபூர்வ குறைந்தபட்ச விலையைவிட ரூ. 140 கூடுதலாக மாநில அரசு பரிந்துரை விலை அறிவித்தது. 1995-96-ல் மத்திய அரசு நிர்ணயம் செய்த சட்டபூர்வ குறைந்த விலையைவிட ரூ. 135 கூடுதலாக மாநில அரசு பரிந்துரை விலையாக அறிவித்தது.

மாநில அரசு பரிந்துரை விலை அறிவிப்பதற்கு முன்பு கரும்பு பயிரிடுவோரின் நலன் மற்றும் சர்க்கரை ஆலைகளின் நிதி நிலைமை

[திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்] [1998 ஏப்ரல் 20

ஆகியவற்றைச் சீர்தூக்கிப் பார்த்து, சர்க்கரைப் பொருளாதாரத்தின் இரு கண்களாக விளங்கும் இரு தரப்பினரின் நலனையும் கருத்தில் கொண்டு, இருவரும் பாதிக்கப்படாத வகையில் கரும்புக்கு விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட ஒரு டன் கரும்பிற்கு ரூ.650/- விலையாகக் கொடுத்தாலே, 13 முதல் 14 சர்க்கரை ஆலைகள் இழப்பில் இயங்க வேண்டியிருக்கும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. கரும்பு பயிரிடுவதற்கான சாகுபடிச் செலவு ஒரு எக்டேருக்கு ரூ.42,263/- என்றும், வரவு ரூ.61,952/- என்றும், நிகர இலாபம் ரூ.19,688/- என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. கரும்பு ஓராண்டுப் பயிர் என்பதால் ஓராண்டுக் காலத்தில் நெல் முதல் போகம், நெல் இரண்டாம் போகம், மணிலா ஆகிய மூன்று பயிர்கள் செய்வதால் ஒரு எக்டேருக்கு சாகுபடிச் செலவு ரூ.30,961/- ஆகும் என்றும், வரவு ரூ.59,680/- ஆக இருக்கும் என்றும், நிகர இலாபம் ரூ.28,719/- என்றும் கணக்கிடப்பட்டுள்ளது. 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட ஒரு டன் கரும்பிற்கு ரூ.630/- விலையாகக் கொடுத்தால், சராசரி உச்சக் கட்டுமானமான 9.5 சதவீதத்திற்கு ஒரு டன்னுக்கு ரூ.704/- விலையாகக் கொடுக்க வேண்டியிருக்கும். இதன் அடிப்படையில் சர்க்கரை உற்பத்தி செய்வதற்கான செலவு ரூ.1144/- எனக் கணக்கிடப்பட்டுள்ளது. ஆனால் சர்க்கரை விற்பனை, சர்க்கரைக் கழிவுப்பாகு விற்பனை மூலம் கிடைக்கும் வரவு ரூ.1142/- என்று கணக்கிடப்பட்டுள்ளது. ஏனவே, ஒரு டன் கரும்பை அரைவை செய்வதால் சர்க்கரை ஆலைகளுக்கு ரூ.2/- இழப்பு ஏற்படுகிறது என்று கணக்கிடப்படுகிறது. இத்தகைய நிலையால் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் கரும்பு விலை நிலுவையைக் கடந்த ஆண்டு கொடுக்க இயலாத நிலை இருந்ததால், அதற்கு அரசு, வழிவகை முன்பணம் கொடுத்து, கரும்பு விலை நிலுவையைக் கொடுக்க உதவி செய்ய வேண்டியதாயிற்று. ஆகவே, சர்க்கரை ஆலைகளுக்கும் அதிக இழப்பு ஏற்படாமல் இருக்கவும், கரும்பு பயிரிடுவோருக்கும் நியாய விலை கிடைப்பதற்கும், இரு தரப்பு நிலைமைகளையும் சமன் செய்து சீர்தூக்கிப் பார்த்து அரசு 8.5 சதவீதக் கட்டுமானம் கொண்ட ஒரு டன் கரும்பிற்கு ரூ.660/- விலையாகப் பரிந்துரை செய்துள்ளது. நான்கு ஆலைகளைத் தவிர, ஏனைய ஆலைகளில் பிழியப்படும் கரும்பின் மூலம் 8.5 சதவீதத்திற்கு மேல் சர்க்கரைத் திறன் கிடைக்கிறது. இதன் மூலம், சராசரியாக ஒரு டன் கரும்பிற்கு, ரூ.660/-க்கு மேலேயே ரூ.846.40 வரை விலை கிடைக்கிறது.



1998 ஏப்ரல் 20]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையிலே ஏற்கெனவே 8.5 சதவீதம் ரெக்கவரி வரக்கூடிய கரும்புகளுக்கு மட்டும் அரசாங்கம் பரிந்துரை விலை என்று கொடுத்து ஒரு டன்னுக்கு 660 ரூபாய் கொடுப்பதாக அந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் விவசாயிகள் கரும்பு விதைக் கரணை வாங்கி, நிலத்தை உழுது அதை அவர்கள் நட்டு, அதற்குப் பிறகு தண்ணீர் பாய்ச்சி, அதைக் களையெடுத்து வளர்ப்பதற்கு அவர்களுக்கு ஒரு டன்னுக்கு 1,000 ரூபாய் கொடுத்தால்கூட அது கட்டுப்படியாகக்கூடிய விலையாக அமையவில்லை என்கிற காரணத்தினால் தமிழகத்தில் இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம், கரும்பு உற்பத்தியாளர்கள் எல்லாம் பெருத்த நஷ்டத்திற்கு ஆளாகி, அவர்கள் போராட்டங்களில் எல்லாம்கூடக் குதித்துக் கொண்டிருக்கிறார்கள். அடிக்கடி அரசை அணுகிக் கூட அவர்கள் டன்னுக்கு 1,000 ரூபாய் எங்களுக்கு நீங்கள் கொடுக்க வேண்டுமென்று அரசுக்கு அவர்கள் பலமுறை கோரிக்கைகள் வைத்திருக்கிறார்கள். ஏற்கெனவே நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் தேர்தல் அறிக்கையிலே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியைக் கேளுங்கள். இது ஏற்கெனவே கேட்கப்பட்டு முதலமைச்சர் பதில் சொல்லியாகிவிட்டது. கவன ஈர்ப்பை அனுமதித்து உங்களை விளக்கக் கேள்வி கேட்க அழைத்தால் திரும்பவும் பழைய கதையையே சொல்லிக் கொண்டிருந்தால் எப்படி?

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் வாயிலாக நான் கேட்டுக்கொள்வது எல்லாம் விவசாயிகளுடைய அந்தக் கஷ்டங்களைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 5 ஆண்டு காலக் கட்டத்திற்குள் நாங்கள் படிப்படியாக 1,000 ரூபாயைக் கொடுப்போம் என்று சொல்வதைக் கொஞ்சம் மாற்றி அமைத்துக் கொண்டு இந்த நடப்பு மாதத்திலேயே கரும்புக்கு டன் ஒன்றுக்கு 1,000 ரூபாய் என்று விலையை உயர்த்திக் கொடுப்பதற்கு அரசு ஆவன செய்யுமா? தன்னுடைய கொள்கையை அது மாற்றிக்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு பரிந்துரை

[திரு. வீரபாண்டி. எஸ். ஆறுமுகம்] [1998 ஏப்ரல் 20

விலையாக 8.5 சதவீதம் சர்க்கரைக் கட்டுமானம் கொண்ட ஒரு டன் கரும்பிற்கு ரூ.484.50 என்று விலையை நிர்ணயம் செய்தது. இந்த விலையை அடிப்படையாகக் கொண்டு சர்க்கரை ஆலை அதிபர்கள், கரும்பு விவசாயிகள் ஆகியவர்களை அழைத்துப் பேசி அவர்களுடைய கருத்துக்கள் எல்லாம் கேட்கப்பட்டன.

முற்பகல் 11-00

மாநில அரசாங்கம், மத்திய அரசாங்கம் நிர்ணயித்த விலையைவிட ரூ.175.50 உயர்த்தி, 8.5 சதவீதம் கட்டுமானத்திற்கு, டன் ஒன்றுக்கு 660 ரூபாய் என்று நிர்ணயித்தது. 8.5 சதவீதக் கட்டுமானம் என்று நிர்ணயித்தாலும் 9.00 சதவீதக் கட்டுமான சர்க்கரையாக, 9.5 சதவீதக் கட்டுமான சர்க்கரையாக இருந்தால், அந்த ரெக்கவரி அடிப்படையிலே விலையும் கூடிக்கொண்டே இருக்கும். 8.5 சதவீதக் கட்டுமானம் அளவுக்குத்தான் விலை என்று அல்ல. அப்படிப் பார்க்கிறபோது, இப்போது 8.5 சதவீதக் கட்டுமானத்திற்கு 660 ரூபாய் என்று விலை நிர்ணயம் செய்தாலும்கூட, 14 சர்க்கரை ஆலைகள் நஷ்டத்தில்தான் இயங்கும் என்று துறையின் சார்பில் கணக்கிடப்பட்டிருக்கிறது. ஆகவே, இப்படி நஷ்டம் இருந்தாலும்கூட, விவசாயிகளுக்குக் கொஞ்சம் கூடுதலாகத் தரவேண்டும் என்று கருதி 8.5 சதவீதக் கட்டுமானத்திற்கு ரூ.660 என்று நிர்ணயித்திருக்கிறோம். அந்த அடிப்படையில் 9.5 சதவீதம் அளவுக்கு ரெக்கவரி வரும்போது டன் ஒன்றுக்கு சராசரியாக மாநில அளவில் 846 ரூபாய் 40 காசு வரை விலை கிடைக்க வாய்ப்பிருக்கிறது. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பிறகு, 20 கிலோ மீட்டர் வர வேண்டியதற்கான வண்டி வாடகையை விவசாயிகளே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று இருந்ததைக்கூட 10 கிலோ மீட்டர் என்று குறைத்தோம். அப்படிக் குறைத்து விலையைக் கூட்டித் தந்ததன் அடிப்படையிலே, அந்தத் தொகையைக்கூட, சில ஆலைகள், கூட்டுறவு, பொதுத் துறை, தனியார் ஆலைகள் எல்லாம் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு அதற்காக அரசாங்கம் பல்வேறு உதவிகளை அளித்து, விவசாயிகளுக்கு, கரும்பு விவசாயிகளுக்கு பணம் கிடைக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம். ஆலைகள் நடைபெற வேண்டும், விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகக்கூடிய விலை தரப்பட வேண்டும் என்பதில் அரசுக்கு எந்தவிதமான மாறுபாடான கொள்கையும் கிடையாது. ஆனால், அரசாங்கம் 1997-98-க்கு நிர்ணயம் செய்திருக்கிற விலையை, கரும்பு உற்பத்தி செய்கின்ற விவசாயிகளுக்கு, ஆலைகள்



1998 ஏப்ரல் 20] [திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்]

கொடுத்தால், S.M.P., S.A.P. தொகையைக் கொடுத்தால் போதும், எங்களுக்கு மகிழ்ச்சி, அது நல்ல விலைதான் என்று விவசாயிகள் பேசுகிறார்கள். அரசியலுக்காக, ஏதோ விவசாயிகளுக்காக வாதாடுவதைப்போல் சில பேர் கருத்துக்களை நாட்டிலே பரப்பி வருகிறார்கள். ஆனால் இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையிலே இந்த விலைக்கு மேல், 1997-98-க்கு நாம் நிர்ணயித்து இருக்கின்ற விலையைத் தவிர, கூட்டித் தருவதற்கு வாய்ப்பு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த கவன ஈர்ப்பு.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**HON. SPEAKER:** There is no automatic right for you to raise a question. It all arises out of the reply. I am satisfied that there is no need for more questions.

**திரு. சி. ஞானசேகரன்:** அரசியல் ஆக்குகிறார்கள் என்று சொல்லுகிறார்கள். திராவிட முன்னேற்ற கழகத் தேர்தல் அறிக்கையில் இது குறித்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள்தான் அரசியல் ஆக்குகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசியல் ஆக்கவில்லை, நீங்கள் அடுத்ததற்கு வாருங்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுடைய தீர்ப்புக்கு நான் கட்டுப்பட்டிருக்கிறேன். உறுப்பினர் ஏதோ நாங்கள் அரசியல் ஆக்குவதைப்போல் சொல்லுகிறார். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையிலே சொல்லப்பட்டிருப்பது என்னவென்றால், ஒரு டன் கரும்புக்கு ரூ.1,000 கிடைக்க, திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் முயற்சிக்கும் என்றுதான் சொல்லியிருக்கிறோம். அதை இல்லை என்று சொல்லவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் அதைத்தான் சொன்னார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும். மாண்புமிகு அமைச்சர், உட்காருங்கள்.

[1998 ஏப்ரல் 20

## (ஆ) வேலூர் மாவட்ட அரியூர் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"வேலூர் மாவட்டத்தில், அரியூர் கூட்டுறவு நூற்பாலை மூடப்பட்டுள்ளது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே; கீழ்க்கண்ட விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பெற்றுள்ளது.

### அறிக்கை

வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை வேலூர் மாவட்டம் அரியூரில் 1-11-1965-ல் நிறுவப்பட்டது. இதில் 30,240 கதிர்கள் நிறுவப்பட்டன. இந்த நூற்பாலையில் 9 தொழில்நுட்ப ஊழியர்களும், 43 நிர்வாக ஊழியர்களும், 726 தொழிலாளர்களுமாக மொத்தம் 778 பேர் பணிபுரிந்து வந்தனர். மூலப்பொருளான பஞ்சின் அபரிமிதமான விலை அதிகரிப்பால் உற்பத்திச் செலவு அதிகரித்தது. மின்கட்டண உயர்வு, அதிகப்படியான ஆட்களை வேலைக்கு அமர்த்தியது, அதிகப்படியான வட்டிச் சுமை, ஆலையின் இயந்திரங்களை உரிய காலத்தில் நவீனப்படுத்தாமை ஆகிய காரணங்களினால் ஆலை தொடர்ந்து நட்டத்தில் செயல்பட்டு வந்தது. இதன் காரணமாக ஆலை, பருத்தி வியாபாரிகளுக்குத் தர வேண்டிய பாக்கித் தொகைகளை, நஷ்டமாக கரைந்து விட்டதால் உடனடியாக பாக்கித் தொகையினை செலுத்தாத காரணத்தால், வியாபாரிகள் அனைவரும் இவ்வாலைக்குப் பஞ்சு விற்பனை செய்ய மறுத்ததால், ஆலைக்குத் தேவையான பஞ்சினை வாங்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டு ஆலை முழுவதுமாக இயக்க முடியாத நிலை ஏற்பட்டுவிட்டது. அதிகப்படியான நட்டத்தின்



1998 ஏப்ரல் 20] [திரு. என்.கே.கே. பெரியசாமி]

விளைவாக ஆலை சட்டப் பூர்வமான பாக்கிகளைச் செலுத்த இயலாத நிலை ஏற்பட்டது. மேற்படி நிறுவனங்களின் பாக்கிகளை வசூலிப்பதற்காக ஆலையின் அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை அவ்வப்போது முடக்குவது போன்ற சட்டப் பூர்வ நடவடிக்கைகளை அத்துறையினர் மேற்கொண்டனர். இதன் காரணமாக ஆலையின் இயக்கம் முழுவதும் பாதிக்கப்பட்டு 26-12-1996 ஆம் தேதி முதல் ஆலை முற்றிலும் இயங்காத நிலை ஏற்பட்டது. ஆலையினை மீண்டும் இயக்குவதற்கு அரசு, ஆலைக்கு ரூ.150.00 இலட்சம் அனுமதித்து, மேற்படி தொகையினைக் கொண்டு ஆலையினை இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு தொழிற்சங்கங்களுடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தி 9-07-1997 ஆம் தேதியன்று 12(3) ஒப்பந்தம் தொழிற் தகராறு சட்டப்படி ஏற்படுத்திக் கொள்ளப்பட்டது. இதனடிப்படையில், 11-7-1997 ஆம் தேதி முதல் ஆலை மீண்டும் உற்பத்தியைத் துவக்கியது. அரசு ஆலைக்கு அனுமதித்த ரூ.150 இலட்சத்தில் தன்னியலான ஓய்வுத் திட்டத்திற்கு ரூ.30.00 இலட்சமும் சட்ட பூர்வ பாக்கிகளில் பகுதித் தொகை செலுத்துவதற்கு ரூ.30.00 இலட்சமும் இயந்திரங்களைப் பராமரிப்பதற்கு ரூ.10.00 இலட்சமும், பருத்திக் கொள்முதல் செய்ய ரூ.80.00 இலட்சமும் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

நிதி நிலைப் பற்றாக்குறைக் காலத்திலேயும் தொழிலாளர்களின் நலன் மற்றும் அவர்களின் குடும்பங்களின் நலன்களில் அக்கறை கொண்டு, இந்நூற்பாலையை இயங்குவதற்குத் தேவையான அத்தனை முயற்சிகளையும் மேற்கொண்டு, 30-11-1997 வரை இயக்கப்பட்டது. நூற்பாலைக்குப் பஞ்சு வாங்கியதால் ஏற்பட்டக் கடன், தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி, தொழிலாளர் காப்பீட்டுறுதித் திட்டம் மற்றும் இதர சட்ட ரீதியாகச் செலுத்தப்பட வேண்டிய தொகைகள் ஆகியவற்றைச் சேர்த்து மொத்தம் ரூ.1726.81 இலட்சம் நூற்பாலையின் மூலம் பட்டுவாடா செய்யப்படாமல் உள்ளது. மேலும், நூற்பாலையில் நட்டம் ஏற்பட்டதால் பஞ்சு கொள்முதல் செய்யப்பட்டதற்குப் பணப் பட்டுவாடா உடனுக்குடன் செய்ய முடியவில்லை. ஆதலால், பஞ்சு கொடுப்பதற்கு எவரும் முன்வரவில்லை. மேலும், நிதி நிறுவனங்கள்— வாங்கிய கடனில் நிலுவையிலுள்ள தொகையனைத்தும் தவணை கடந்துவிட்டதால் அவற்றை உடன் செலுத்த கோரி நீதிமன்றங்களில்— வழக்குத் தொடர்ந்துள்ளனர். வணிக வரித் துறையினரும், தொழிலாளர் காப்பீட்டுறுதித் திட்ட அலுவலர்களும் தங்களது நிலுவையை உடனடியாகச் செலுத்த வேண்டி ஆலை இயந்திரங்களை ஜப்தி

[திரு. என்.கே.கே. பெரியசாமி] [1998 ஏப்ரல் 20

செய்துள்ளனர். அனைத்து வங்கிக் கணக்குகளையும் முடக்கம் செய்துள்ளனர். மேலும், மின் கட்டணம் செலுத்த இயலாத நிலையில் மின்சாரம் முழுமையாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாலை 1-12-1997 முதல் செயல்படவில்லை.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு நூற்பாலைகளின் செயல்பாடுகள் குறித்து 'ITCOT' நிறுவனமும், திரு. எஸ்.வி.எஸ். ராகவன் தலைமையிலான நிபுணர்கள் குழுவும் தனித்தனியாக ஆராய்ந்து அறிக்கைகள் சமர்ப்பித்துள்ளனர். அவர்களின் பரிந்துரைகள் ஒரே மாதிரியானவை. இந்த நூற்பாலைகளின் நிதி ஆதாரம், தொழில்நுட்பம் மற்றும் செயல்திறன் போன்றவற்றின் அடிப்படையில் ராகவன் குழு இந்த 18 நூற்பாலைகளையும் தரம் வாரியாக வரிசைப்படுத்தி உள்ளது. அவ்வரிசைப்படி, புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை 18 ஆவது இடத்தையும் வட ஆற்காடு மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை 17 ஆவது இடத்தையும்தான் பெற முடிந்தது. இந்த அறிக்கைகளை 18-3-1998 அன்று ஆய்வு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மூடப்பட்டுள்ள இந்த இரண்டு நூற்பாலைகளையும் திறந்து நடத்த ஏற்பாடு செய்யும்படி உத்தரவிட்டுள்ளார்கள். தவிர, நூற்பாலைகளுக்குத் தேவையான உதவிகளை வழங்கிட கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறைச் செயலர், நிதித் துறை, கூடுதல் செயலர் மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநர் ஆகியோரைக் கொண்ட ஒரு அலுவலர் குழுவை நியமிக்குமாறும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சரின் உத்தரவுக்கிணங்க நடவடிக்கைகள் தொடங்கப்பட்டு மூடப்பட்டுள்ள நூற்பாலைகளைத் திறந்து நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

முற்பகல் 11-05

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கையைப் படித்துப் பார்த்தேன். ஏற்கெனவே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்களும், அமைச்சரும் நேருக்குநேர் பேசக்கூடாது. இது ஒரு மரபு.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையில் 'ITCOT' நிறுவனமும், திரு. எஸ்.வி.எஸ். ராகவன் தலைமையிலான குழுவும் ஏற்கெனவே இதுகுறித்து ஆராய்ந்து பார்த்து ஒரு அறிக்கையைச் சமர்ப்பித்ததாகவும் அந்த அறிக்கையை மாண்புமிகு



1998 ஏப்ரல் 20] [திரு. சி. ஞானசேகரன்]

அமைச்சர் அவர்கள் முதலமைச்சர் அவர்களிடம் தந்து இந்த ஆலையைத் திறப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதாகவும் கூறியிருக்கிறார்கள். இந்த ஆலை கிட்டத்தட்ட ஒன்றரை ஆண்டு காலமாக மூடப்பட்டிருக்கிறது. இடையிலே அது திறக்கப்பட்டு ஒன்றிரண்டு மாதங்களில் அந்த ஆலை மீண்டும் மூடப்பட்டுவிட்டது. அப்போது ஏற்கெனவே என்னுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இசைவுடன் 1½ கோடி ரூபாயை இந்த ஆலைக்காகத் தந்தார்கள். நான் அப்போதே 5 கோடி ரூபாயைக் கேட்டிருந்தேன். அந்த ஐந்து கோடி ரூபாயைத் தந்திருந்தால் இப்போது நாம் பஞ்சுக்காரர்களுக்கு எல்லாம் கடனை அடைத்திருக்கலாம், அதேபோல, வங்கிகளில் இருக்கக்கூடிய கடன் மற்றும் அதுபோல Voluntary retirement-ல் போகக்கூடியவர்களுக்கு பணம் மற்றும் இதுபோன்றவைகள் சரி செய்யப்பட்டு, இன்று இந்த ஆலை மீண்டும் மூடப்படக்கூடிய ஒரு நிலைக்கு ஆளாகியிருக்காது. இப்போது பஞ்சுக்காரர்களுக்கு பணம் சேரவில்லையென்றும், எலெக்ட்ரிக் பில் கட்டவில்லையென்றும் பல பிரச்சினைகளைச் சொல்லி இந்த ஆலையை மூடிவிட்டார்கள். மூடிய ஆலைகளைத் திறப்பதுதான் இந்த அரசினுடைய நோக்கம். என்னுடைய மாவட்டத்திற்கு இருப்பது ஒரே ஒரு கூட்டுறவு நூற்பாலை. இந்த நூற்பாலையில் பணியாற்றிக் கொண்டிருந்த கிட்டத்தட்ட 750, 800 தொழிலாளர்கள், பாவம் ஆறு மாத காலமாகச் சம்பளமே பெறாமல் மிகவும் வாடிக்கொண்டு இருக்கின்றார்கள். அவர்கள் வாழ்வா, சாவா என்ற ஒரு நிலையில் இருந்துகொண்டிருக்கின்ற காரணத்தினால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ரூ. 5 கோடி ரூபாயை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து எப்படியாவது பெற்று அதன் மூலம், இருக்கக்கூடிய கடன்களையெல்லாம் அடைத்துவிட்டு, அதுபோல Voluntary retirement-ல் போக விருப்பம் தெரிவித்தவர்களையெல்லாம் வீட்டிற்கு அனுப்பிவிட்டு, அதுபோல அங்கே Excess Labourers இருக்கிறார்கள். அவர்களையும் அனுப்பி விட்டு, தொடர்ந்து இந்த ஆலை ஓடவும் இனி இந்த ஆலை மூடப்படவே மாட்டாது என்ற உறுதியை நீங்கள் அளித்து, இந்த ஆலை இயங்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்றும், மேலும் ஐந்து கோடி ரூபாயை இந்த ஆலைக்காக அமைச்சர் அவர்கள் பெற்றுத்தருவார்களா என்றும், அந்த ஆலையை என்று திறப்பார்கள் என்கிற தேதியை அறிவிக்குமாறும் தங்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** எந்தத் தேதியில் திறப்பார் என்றெல்லாம் கேட்கக்கூடாது. திறப்பதாக அமைச்சர் சொன்னால்தான் அடுத்த கேள்வியை நீங்கள் கேட்கலாம்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் அரியூர் கூட்டுறவு நூற்பாலை பற்றிய பல விளக்கங்களை இங்கே சொல்லி, 5 கோடி ரூபாய் கொடுத்தால் அந்த ஆலையைச் சிறப்பாக நடத்த முடியும் என்று தெரிவித்ததாகச் சொன்னார்கள். ஆனால், அவர் அந்த 5 கோடி ரூபாயை எந்தக் கணக்கிலே கேட்டார் என்பதை அவர் எந்த நேரத்திலும் தெரிவிக்கவில்லை. இந்த அரசு வந்தபோது தமிழகத்திலே இருக்கின்ற 18 கூட்டுறவு நூற்பாலைகளும் நலிந்துதான் இருந்தன. ஆனால் 16 நூற்பாலைகள் இன்று வரை ஓடிக்கொண்டிருக்கின்றன. இந்த நூற்பாலையினையும் எப்படியாவது ஓட்ட வேண்டுமென்ற அடிப்படையிலேதான் அதற்கு 1½ கோடி ரூபாய் அளவிற்கு முதலீடு செய்தும், தொழிலாளர்கள் ஒத்துழைப்பு அங்கே சிறப்பாகக் கிடைக்காத காரணத்தினால் அந்த ஆலை ஒரு நான்கு மாத காலத்திலேயே மீண்டும் மூடப்படவேண்டிய நிலை ஏற்பட்டது. இந்த ஆலை 1965-லே 12,000 கதிர்களோடு தொடங்கி, 1984-லே 30,000 ஸ்பின்டல்களுக்கு வந்து, 1984-லே 50,000 ஸ்பின்டல்கள் என்கிற அளவுக்கு அங்கே ஆட்கள் பணிக்கு அமர்த்தப்பட்ட காரணத்தினால் இந்த ஆலையினுடைய accumulated loss ஏறத்தாழ 23 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவுக்கு ஏற்பட்டுவிட்டது. அதிகப்படியான ஆட்களை வேலைக்கு அமர்த்தியது, வட்டிச் சுமை, உரிய காலத்தில் இயந்திரங்களை நவீனப்படுத்த இயலாத நிலை, அதுபோல வணிக வரி, தொழிலாளர் காப்பீட்டுத் தொகை இவைகளையெல்லாம் கட்ட இயலாத அளவிற்குப் போய் Attachment என்ற நிலைமை வந்தது. பஞ்சு கொள்முதல் செய்ததற்கு கடந்த காலத்தில் கொடுக்கப்பட வேண்டிய பாக்கி காரணமாக ஏற்பட்ட மதிப்புக் குறைவு, இப்படித் தொடர்ந்து சில நிலைமைகள் ஏற்பட்டன. இதற்கிடையிலும் எப்படியாவது இந்த ஆலையை ஓட்டித்தான் ஆகவேண்டுமென்ற அடிப்படையிலேதான் நூற்றி ஐம்பது இலட்சம் ரூபாயைப் பெற்று, முப்பது இலட்சம் ரூபாய் ஓய்வூதியத் திட்டத்திற்காகவும், சட்டபூர்வமான பாக்கிகளுக்காக ரூபாய் முப்பது இலட்சமும், இயந்திரங்களைப் பராமரிப்பதற்காக ரூபாய் பத்து





இலட்சமும், மேற்கொண்டு பஞ்சுக் கொள்முதலுக்கு ரூபாய் என்பது இலட்சமும் கொடுக்கலாம் என்ற அடிப்படையிலேதான் நாம் அதைத் தொடங்கினோம்.

12(3) ஒப்பந்தம் எல்லாம் போட்டு, தொழிலாளர்களுடைய முழுமையான ஒத்துழைப்புக் கிடைக்காத காரணத்தினால் அங்கே கொண்டு சென்று வைக்கப்பட்ட 1,000 பஞ்சு பேல்களையே வெளியே எடுக்கமுடியாமல் ஒரு 40 நாட்களுக்குத் திண்டாடவேண்டிய ஒரு கட்டாயம் ஏற்பட்டது.

முற்பகல் 11-10

தமிழகத்தைப் பொறுத்தவரையில்தான் இன்று கூட்டுறவு நூற்பாலைகள் இந்த அளவுக்கு ஓடிக்கொண்டிருக்கின்றன. மராட்டியத்திலே, ஆந்திரத்திலே எல்லாம் ஏற்கெனவே எல்லாவற்றையும் தனியார்களுக்கு விற்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது. ராகவன் கமிட்டியினுடைய பரிந்துரையின் பேரில் இரண்டாவது சுற்றுப் பேச்சு வார்த்தை நடைபெற்று வருகிறது. கலைஞருடைய அரசு, எக்காரணம் கொண்டும் கூட்டுறவு நூற்பாலைகளை மூடுவது இல்லை என்ற ஒரு தெளிவான முடிவில் இருப்பதுடன் இந்த அரியூர் மற்றும் புதுக்கோட்டை ஆலைகளை எப்படியும் திறப்பதற்குரிய சூழ்நிலையை உருவாக்குவதற்காகத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகளையும் நடத்திக் கொண்டிருக்கிறது. இன்னும், இந்த 18 ஆலைகளையும் நல்ல முறையில், எதிர்காலத்திலே இலாபகரமாக ஓட்டுவதற்குரிய வழிமுறைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிற பணி நடைபெற்றுக் கொண்டிருப்பதால், இதற்குமேல் இதை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வலியுறுத்தாமல், இந்த அளவுக்குச் சிறப்பாகச் செய்ததற்கு அவர்கள் என்னைப் பாராட்டித்தான், மீண்டும் என்னிடம் வேலை வாங்கவேண்டும் என்று பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே எஸ்.ஓ.வே கிடையாது—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நீங்கள் முதலிலேயே சொல்ல வேண்டியதுதானே? இதை, நீங்கள் இரண்டாவது கேள்வி கேட்க வேண்டும் என்பதற்காக வைத்துக் கொள்வதா? There is no automatic right, I have told you. There is no rule. It is the power of the Speaker. You are interfering in my right. I will pull you up. (குறுக்கீடு) Go on.

[1998 ஏப்ரல் 20

**திரு.சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அரியூர் நூற்பாலைக்கு...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதை நீங்கள் முதலிலேயே கேட்க வேண்டியதுதானே? இரண்டு கேள்விகள் கேட்க வேண்டும் என்பதற்காகப் பாதி விஷயத்தைச் சொல்லிவிட்டு, மீதியைப் பிறகு கேட்கலாம் என்று கருதி உட்கார்ந்து விடுவதா? எஸ்.ஓ. இல்லை என்பதை முதலிலேயே சொல்ல வேண்டியதுதானே? (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையை நிர்வாகம் செய்வதற்கு ஏற்கெனவே 1½ கோடி ரூபாய் கொடுத்தபோது அங்கே ஒரு எம்டி இருந்தார். அவர் அந்தப் பணத்தை வாங்கி, பஞ்சுக்காரர்களுக்கு எல்லாம் கொடுத்துவிட்டுப் போனவர்தான், மீண்டும் அவர் திரும்ப வரவே இல்லை. இப்போது அங்கே எம்டிகூட இல்லை. திறமையான நிர்வாகி யாரும் இல்லாமல் அந்த ஆலை இருந்து கொண்டிருக்கிற காரணத்தினால், திறமையான நிர்வாகியை உடனடியாகத் தாங்கள் அங்கே நியமித்து, அந்த ஆலையை இந்த மாதத்திற்குள் திறப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. என்.கே.கே. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அதிர்ச்சியிலே அவருக்கு ஒரு கையும், காலும் செயல்பட முடியாமல் பாதிக்கப்பட்டு விட்டார். 12(3) அக்ரிமெண்ட் போட்டு, இரண்டு மாத காலச் சம்பளத்தைக் கொடுத்து, மறுநாள் வேலைக்கு வருவது என்று முடிவு எடுத்த உடனேயே, 12(3) அக்ரிமெண்ட்டை ஒத்துக்கொண்டவர்கள், இரண்டு மாத சம்பளத்தைப் பெறுவதற்கு ஒத்துக்கொண்டவர்கள், மறுநாள் வேலைக்கு வருவதற்கு மட்டும் கையெழுத்துப்போட மறுத்துவிட்டு, 'எதற்காகக் கையெழுத்து, நாங்களே வந்துவிடுகிறோம்' என்று சொல்லி, இத்தனையும் ஒரு காவலர் அலுவலகத்திலே திட்டமிட்டு, மிரட்டப்பட்டு, அந்த அதிகாரியே தொலைபேசியிலே தொடர்புகொண்டு, என்ன செய்வது என்று கேட்க, அவர்களை நம்பிக் கொடுக்கலாம். அவர்கள் வருகிற நேரத்திலே வரட்டும் என்று சொல்லி, அந்த இரண்டு மாதச் சம்பளம் கொடுக்கப்பட்டது. அங்கே நடைபெற்ற வன்முறைகளையும்,



1998 ஏப்ரல் 20] [திரு. என். கே. பெரியசாமி]

மற்றவைகளையும் கண்டு, அந்த அதிகாரிக்கு Partial stroke ஏற்பட்டு, அவர் எந்த விதத்திலேயும் இப்போது பணியாற்றக்கூடிய தகுதி இல்லாத ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது.

ராகவன் கமிட்டியினுடைய பரிந்துரையின் மீது இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இன்னொரு பக்கம், நெசவாளர்களுக்கு, கைத்தறித் துறையில் அமைக்கப்பட்ட குழுவினுடைய ஆய்வும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே, சற்றுப் பொறுத்துத்தான், நிதானமாகத்தான், எதிர்காலத்தில் மீண்டும் இந்த ஆலைகள் மூடப்படாத அளவுக்கு, ஆலைகள் திறக்கப்பட வேண்டுமென்ற அடிப்படையிலேதான் சற்றுக் காலம் தாழ்த்தினாலும், நிச்சயமாக, முறையாகச் செய்யப்படும். தக்க தகுதியுள்ள நபரை எதிர்காலத்திலே அங்கே நியமிப்பதற்குரிய வழிமுறைகளையும் ஆராய்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. கே.ஆர். இராமசாமி, பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

**திரு. கே.ஆர். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தொன்றாவது முதல் எண்பத்தைந்தாவது வரையிலான ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (ஆ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. சிடி தண்டபாணி, பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

[1998 ஏப்ரல் 20

**திரு. சிடி. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1997-98 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தாறாவது முதல் முப்பத்தெட்டாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

முற்பகல் 11-15

## 5. அறிவிப்பு

### பேரவை அலுவல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

அலுவல் ஆய்வுக் குழுவிலே எடுத்த முடிவின் அடிப்படையிலே, இன்று முதல், பேரவை, காலை மற்றும் மாலையில் கூடுவதால், பேரவையின் காலை நிகழ்ச்சிகள் பிற்பகல் 1-30 மணிக்கு முடிவடையும்.

மாண்புமிகு உறுப்பினர்கள் மாலைக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு வசதியாக, நாமக்கல் கவிஞர் மாளிகையில் குழுக் கூட்ட அறையின் அருகிலுள்ள உணவு அறையில் பிற்பகல் 1-30 மணி முதல் 2-30 மணி வரை உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. என்னுடைய துறை, மதிய உணவிற்காக, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு அனுமதிச் சீட்டு வழங்கலாம் என்று என்னை அறிவிக்கச் சொல்லியிருந்தார்கள். இதை நான் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தயவுசெய்து - அவர்களுக்கு மட்டும்தான் இந்த உணவு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது - முடிந்தவரை மற்றவர்களை அழைத்துச் செல்லக்கூடாது என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-30 மணிக்கு மீண்டும் பேரவை கூடும் என்பதையும் இந்த நேரத்தில் அறிவிக்கிறேன்.



1998 ஏப்ரல் 20]

## 6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 5 — முத்திரைத் தாள்கள் நிருவாகம்**
**(ஆ) கோரிக்கை எண் 6 — ஆவணப்பதிவு**
**(இ) கோரிக்கை எண் 47 — ஊரகத் தொழில்கள்.**
**(ஈ) கோரிக்கை எண் 59 — ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

### (அ) கோரிக்கை எண் 5 — முத்திரைத்தாள்கள்-நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும், மானியக் கோரிக்கை எண் 5— முத்திரைத் தாள்கள்-நிருவாகம், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.6,48,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1390, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் முத்திரைக் கட்டணத்தை 2% குறைக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.6,48,96,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1150, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,48,96,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3451, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,48,96,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 963, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,48,96,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1745, திரு. நா. பெரியசாமி.

• **திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் மற்றும் எழுத்தர்களின் கோரிக்கைகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,48,96,000ல் ரூ.100 குறைக்க வேண்டும்".



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1882, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம் தாரமங்கலம் தொகுதியில் முத்திரைத்தாள் விற்பனை செய்பவர்களைக் கூடுதலாக நியமித்து முத்திரைத் தாள் எளிதில் கிடைக்கச் செய்ய வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,48,96,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3221, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முத்திரைத்தாள் விற்பனையாளர்களுக்கு வழங்கப்படும் கழிவுத் தொகை அதிகப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,48,96,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2630 திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோட்டூர் ஒன்றியம் கோட்டூரில் முத்திரைத்தாள்கள் விற்பனை செய்ய அனுமதியளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,48,96,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1662, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முத்திரைத்தாள்களின் விலையைக் குறைக்க வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,48,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2192, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முத்திரைத்தாள்கள் போதுமான அளவு கிடைக்கச் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 6,48,96,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 6 — ஆவணப் பதிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 6—ஆவணப் பதிவு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 41,15,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1387, திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வழிகாட்டி விலையைவிட நிலத்தின் விலை பல இடங்களில் வீழ்ச்சியடைந்து விட்டதால் நிலத்தின் அப்பகுதி குறைவு விலை அளவை ஏற்றுப் பதிவு செய்ய வேண்டிய அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,15,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1144, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சொத்து பதிவான பிறகு, அது சம்பந்தப்பட்ட பெயர் மாற்றத்தைச் செய்ய சார் பதிவாளர் அலுவலகம் தாமதமின்றி, சம்பந்தப்பட்ட அலுவலகங்களுக்குத் தகவல் அனுப்பி ஒழுங்குபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,15,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1746, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,15,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3224, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

[திரு. அ.வ. அப்துல்நாசர்] [1998 ஏப்ரல் 20

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,15,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 964, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், அம்மாப்பேட்டை ஒன்றியம் ஒலகடத்தில் புதிதாக பதிவாளர் அலுவலகம் ஆரம்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,15,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1664, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல வருடங்களாகியும் நிலப்பட்டா மாறுதல் மனு கொடுக்கப்பட்டு நிலத்தின் உரிமையாளர் ஒருவராகவும் நிலத்தினுடைய பட்டா மற்றொருவர் பெயரிலும் உள்ள நிலையை மாற்றி, பெயர் மாற்றம் செய்யும் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,15,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1887, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, மேச்சேரியில் புதிதாக பத்திரப்பதிவு அலுவலகம் திறக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,15,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."



1998 ஏப்ரல் 20]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2191, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அருமனையில் புதிய பதிவு அலுவலகம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 41,15,71,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**(இ) கோரிக்கை எண் 47 — ஊரகத் தொழில்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 47—ஊரகத் தொழில்கள், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 104,48,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 3939, திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

*** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விவசாய வேலைகளில் ஈடுபடும் பெண்கள் விவசாய வேலை இல்லாத காலங்களில் ஆங்காங்கே கிடைக்கும் மூலப்பொருள்களை வைத்துக்கொண்டு தொழில் தொடங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,48,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2639, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் தொகுதி பெருமுகையில் தொழிற்பேட்டை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,48,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2102, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,48,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3083, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,48,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9, திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், ஓமலூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட காடையாம்பட்டியில் தக்காளிப்பழம் பதப்படுத்தும் தொழிற்சாலை ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,48,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 443, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் அதிக அளவில் தேங்காய் நார்க்கழிவுகள் கிடைப்பதால் அப்பகுதியில் தேங்காய் நாரை அடிப்படையாகக் கொண்டு தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,48,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 523, திரு. ந. கருப்பண்ண உடையார்.

***திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பாபநாசம் தொகுதியில் தென்னை மரங்கள் அதிக அளவில் உள்ளதால் தேங்காயிலிருந்து மூலப் பொருட்கள் தயாரிப்பது குறித்த தொழிற்சாலை ஒன்று அமைப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,48,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3315, திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், புவனகிரி தொகுதி கிள்ளைப் பகுதிகளில் மணிலா பயிர் மகசூல் அதிகம் உள்ளதால் அங்கு கடலை எண்ணெய்த் தொழிற்சாலை அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,48,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1082, திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பவானி தொகுதியில் ஊரகத் தொழில்கள் துவங்க போதுமான வசதிகளைச் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,48,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2581, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடி தொகுதியில் சிறு தொழில்கள் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 104,48,81,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**(ஈ) கோரிக்கை எண் 59—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 59 ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு, மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 52,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1725, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 52,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3546, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 52,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்.'

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள்-நிருவாகம், ஆவணப் பதிவு, ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ இந்தப் பேரவையில் நான் படித்ததாகக் கருதி அவற்றை நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களின் அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர் என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

---

@ 493 முதல் 582 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் 1, 2 மற்றும் 3 ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[1998 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் தொடங்குகின்றது. திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள இந்த மானியக் கோரிக்கைகளின்மீது ஒருசில கருத்துகளை நான் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

இன்றைக்குப் பத்திரப் பதிவுத் துறையானது உண்மையிலேயே அரசுக்கு ஒரு காமதேனுவைப் போன்று வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய துறைதான். இந்த வருமானத்தை ஈட்டக்கூடிய மிகப்பெரிய பொறுப்பினை எங்களுடைய அமைச்சர் அவர்கள் ஏற்று திறமையான முறையிலே அரசின் திட்டங்களை நிறைவேற்றிக்கொண்டு வருகிறார்கள். ஆகையினால், அவர்களுக்கு என்னுடைய நல்வாழ்த்துக்களை முதலிலேயே தெரிவித்துக்கொள்கின்றேன்.

1958-59 ஆம் ஆண்டு காங்கிரஸ் ஆட்சியின்போது இந்தத் துறையின் மூலம் வந்த வருமானம் வெறும் 40 கோடி ரூபாய்தான். ஆனால் இன்றைக்கு 1997-98 ஆம் நிதி ஆண்டில் ரூபாய் 748.58 கோடியில் கடந்த பிப்ரவரி மாதத்திற்குள் ரூபாய் 706.91 கோடி வருவாய் வந்து இருக்கின்றது. ஆகையினாலே, அரசுக்கு வருமானம் வருவதற்கு ஒரு சிறந்த இலாகாவாக இந்த இலாகா இருந்து கொண்டிருக்கிறது. அதேநேரத்திலே நான் இன்னொன்றையும் கூறிக்கொள்கின்றேன். இன்றைக்கு இருக்கின்ற சூழ்நிலையில் பத்திரப் பதிவுத் துறையின் அதிகாரிகள் எல்லா இடங்களிலும் சரியாகச் செயல்படவில்லை; குறிப்பாக எங்கள் தொகுதியில் சரியாகச் செயல்படவில்லை. போதுமான அளவு கட்டட வசதி இல்லை. பத்திரப் பதிவுக்கு வரக்கூடிய மக்களுக்கு தங்க நிழல்வசதி கூட இல்லை. 20 வருடத்திற்கு முன்பு நான் ஒரு பத்திரப் பதிவு அலுவலகத்திற்குப் போனேன். அங்கே அப்போது ரொம்ப வெயில் இருந்தது. எங்கெல்லாம் பத்திரப் பதிவுத் துறை ஆபீஸ் இருக்கின்றதோ, அங்கு கட்டாயம் அரசுக்குச் சொந்தமான கட்டடங்கள் தேவை. அதை அரசு கட்டியாக வேண்டும். அதன்மூலம் அரசுக்கு வருமானம் வருகிறதல்லவா, அப்படி வருமானம் வரக்கூடிய நிலையில் மாநிலம் முழுவதும் உள்ள அலுவலகங்களுக்குக் கட்டடங்கள்



1998 ஏப்ரல் 20] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

கட்டி ஆகவேண்டும். அதுமாத்திரமல்லாமல் பத்திரப் பதிவு அலுவலகங்களுக்கு வரக்கூடியவர்கள் தங்குவதற்கு, உட்காருவதற்கு, நிழல் தரும் மரங்களையும் உண்டாக்கவேண்டும். அப்படி நிழல் தரும் மரங்களை உண்டாக்கினால்தான் அவர்கள் வந்து தங்குவதற்கு அல்லது நின்றுகொண்டு இருப்பதற்கு, பேசுவதற்கு, பத்திரப் பதிவுகளை எழுதக்கூடியவர்களை அணுகுவதற்கு ஒரு நல்ல சூழ்நிலை இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 11-25

இன்றைக்கு ரூ. 1,000-க்குக் குறைவான மதிப்புள்ள வீட்டுமனை நிலங்களை வாங்குகிற ஏழை மக்களின் நிலங்களைப் பதிவு செய்யும்போது, பதிவுக் கூலி இல்லாமல் நாம் பதிவு செய்யலாம் என்று சொல்லியிருக்கிறோம். இவ்வளவு செய்தும்கூட நிலங்களின் விலை ஏறிக்கொண்டே இருக்கிறது. ஒரு ஏழை, வீட்டுமனைக்கு ஒரு இடம் வாங்க வேண்டுமானால் 1,000 ரூபாய்க்கு வாங்கமுடியாது. மாண்புமிகு அமைச்சருக்கு நன்றாகத் தெரியும். சின்ன இடமாக இருந்தாலும் நிலக்கோட்டையில் ஒரு சென்ட் ரூ. 50,000 என்ற விலையில் விற்கிறது.

அதற்கு உதாரணம் இருக்கிறது. ஏற்கெனவே தாலுகா ஆபீஸ் காம்பவுண்டில் கோர்ட் நடந்து கொண்டிருக்கிறது. அந்தக் கோர்ட் அருகிலேயே நத்தம் புறம்போக்கு நிலம் இல்லை. ரெவின்யூ புறம்போக்கு நிலம் இருந்தது. ரெவின்யூ புறம்போக்கில் இடம் இருக்கிறது என்பதைத் தெரிந்து, அதைப்பற்றி தாசில்தாரிடம் சொல்லி, அதற்கு ஒரு ஸ்கெட்ச் வாங்கினோம். அந்தப் படத்தை ரெவின்யூ அமைச்சரிடத்தில் சொல்லி, ஐயா, அந்த இடம் ரெவின்யூ புறம்போக்கு நிலம்; அந்த இடத்தை கோர்ட் கட்டடம் கட்டிக்கொள்ள நீங்கள் கொடுக்கவேண்டுமென்று அவரிடத்தில் மனு கொடுத்திருந்தேன். 1996-ல் மனு கொடுத்திருந்தேன். அதற்குள்ளாக அதே இடத்தை, தனிப்பட்ட ஒருவருக்கு பட்டா போட்டுக் கொடுத்து, அதைப் பட்டா நிலம் என்று கூறி, இப்போது ஒரு சென்ட் நிலம் ரூ. 40,000 என்று விற்கப்படுகிறது. இது என்ன கொடுமை? புறம்போக்கு நிலமாக இருந்ததை, பட்டா நிலமாக மாற்றியது எல்லாம் இந்த இலாகாவினர் செய்த கொடுமைதான். இனிமேல் அங்கே கோர்ட் கட்ட வேண்டுமானால் நமக்கு அங்கே தாசில்தார் ஆபீஸ் அருகில் இடம் இல்லை. இது அமைச்சருக்கும் நன்றாகத் தெரியும்.

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1998 ஏப்ரல் 20

ஆகவே, அந்த இடம் இப்போது யாரிடம் இருந்தாலும் சரி, அது பல்லாண்டு காலமாக ரெவின்யூ புறம்போக்கு இடமாக இருந்தது. அதைத் தனிப்பட்டவர்களுக்குப் பட்டா போட்டுக் கொடுத்து, இப்போது அதில் ஒரு சென்ட் ரூ. 40,000-க்கு விற்கிறார்கள் என்று சொன்னால், அதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சரை நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், பல இடங்களில் பல பேருக்குப் பட்டா நிலங்கள் இருக்கின்றன. எனக்குப் பட்டா நிலம் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள், நான் அனுபவித்து வருகிறேன். ஆனால் அதே பட்டா இடத்தை எப்படியோ இன்னொருவருக்கு பட்டாப் போட்டுப் பதிவு செய்துவிடுகிறார்கள். என்னுடைய அனுபோகத்தில் இருக்கிற இடத்தையே இப்படிப் போட்டுவிடுகிறார்கள். என்னுடைய அனுபோகத்தில் இருக்கிறது. எனக்குப் பட்டா இருக்கிறது. என்னுடைய பூர்வீக நிலம். இந்தப் பட்டாவை இன்னொருவருக்குப் பட்டா போட, எப்படியோ கணக்குப்பிள்ளையிடம் சொல்லி, ஏதோ எழுதிக் கொடுத்து அதைக்காட்டி பத்திரப் பதிவு ஆபீசில் பதிவு செய்து கொள்கிறார்கள். இப்படி 2, 3 கேஸ்கள் என்னிடத்தில் வந்திருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிற மாதிரி, ஒருவர் நிலத்தை இன்னொருவர் பெயரில் பதிவு செய்துவிட முடியாது. பல சட்ட திட்டங்கள் இருக்கின்றன. மேலும் அங்கே இருக்கிற ஆவண எழுத்தர்கள் இப்படி எழுதுவதற்குப் பெரும்பாலும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள்.

**திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்:** பொதுவாக எழுதமாட்டார்கள். சரி. என்னிடத்தில் 2, 3 பேர் இதுமாதிரி நடந்திருக்கிறது என்று அதுபோன்ற பத்திரங்களைக் கொண்டுவந்து காட்டினார்கள். அந்தப் பத்திரத்தை எல்லாம் நான் வாங்கி அமைச்சரிடத்திலேயே கொடுக்கிறேன். அப்படிப் பதிந்திருந்தால், ஒருவர் பெயரில் உள்ள இடத்தை இன்னொருவர் பெயரில் பதிந்திருந்தால், அமைச்சர் அவர்கள் கடுமையாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இல்லாவிட்டால் இப்படி ஏழை மக்கள், வாய் பேசாத மக்கள், நிலம் வைத்திருந்தால், பலசாலியாக இருப்பவர்கள் தங்கள் பெயரில் பலவிதங்களில் அந்த இடத்தைப் பதிவு செய்தது தெரிந்தால், அதற்குத் தண்டனை வழங்கவேண்டுமென்று நான் இந்த நேரத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 20] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

அடுத்ததாக, பத்திர விற்பனையாளர்களாக நிறைய ஆட்களை நியமிக்க வேண்டும். இப்போது கூட 1,343 பேர்களை பத்திர விற்பனைக்காக நியமித்திருக்கிறோம். வரக்கூடிய காலங்களில் இதுபோன்று பத்திர விற்பனைக்கு ஆட்களைத் தேர்ந்தெடுக்கும்போது, பெண்கள், விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள், அநாதையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, பத்திர விற்பனையாளர்களாக நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், நிலங்களை சர்வே செய்யும்போது, பல துறைகளும் சேர்ந்து கூட்டாக சர்வே செய்யவேண்டும். அதை உடனே அப்படியே பதியவேண்டும். ஒருவருடைய நிலத்தை அளந்து பட்டா போடும்போதே சரியான விவரங்களுடன் அதைப் பதிவு செய்ய வேண்டும். என்னுடைய நிலம் இங்கே இருக்கிறது. என்னுடைய நிலத்துக்குப் பக்கத்தில் ஞானசேகரன் நிலம் இருக்கிறது என்று வைத்துக்கொள்ளுங்கள். நான் கொஞ்சம் அப்பாவியாக இருந்தால், அளக்கும்போதே பக்கத்தில் உள்ள நிலத்தோடு என் நிலத்தைச் சேர்த்துவிடுவார்கள். அப்படிச் சேர்த்து கல்லை நட்டுவிடுகிறார்கள். அந்தக் கல் நட்டதைக் காட்டியே அந்த நிலத்தையே பெயர் மாற்றம் செய்துவிடக்கூடிய சூழ்நிலை இருப்பதை மாற்றியாக வேண்டும். இவ்வளவுதான் இந்த மானியத்தில் பேசவேண்டும்.

பிறகு சிறு தொழில் மானியம். சிறு தொழிலில் ஆறு மாதம்தான் பெண்களுக்கு வேலைவாய்ப்பு இருக்கிறது. பிறகு ஆறு மாதம் வேலைவாய்ப்பு இல்லை. அமைச்சருக்கும் அது நன்றாகத் தெரியும். அந்த வேலைவாய்ப்பு இல்லாதவர்களுக்கு, அந்தப் பகுதியில் கிடைக்கக்கூடிய மூலப் பொருட்களை வைத்தே ....... உதாரணமாக திண்டுக்கல் மாவட்டத்தில் நிலக்கோட்டை தொகுதியில், திராட்சைப் பழம், அன்னாசிப் பழம், தக்காளி, மாம்பழம் போன்ற பழ வகைகள் நிறைய விளைகின்றன. அதை மூலப் பொருளாக வைத்து,-- அங்கே தொழில் தொடங்க வேண்டுமென்று நான் முன்பே கேட்டிருந்தேன். இதுபோன்ற பழங்களுக்கான தொழிலை அங்கே ஆரம்பிக்க

[திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்] [1998 ஏப்ரல் 20

வேண்டுமென்று கேட்டிருந்தேன். ஆகையினாலே அந்த இடங்களிலெல்லாம் அந்தப் பழங்களை உற்பத்தி செய்யக்கூடியவர்களுக்கு நாம் பண உதவி செய்து அங்கே அவர்கள் தொழிற்சாலை ஆரம்பிக்கக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கினோமேயானால் அங்கே உற்பத்தி செய்யக்கூடிய பழங்களை ஜூஸ் செய்து அதை வெளியிலே அனுப்புவதற்கு சாலச் சிறந்ததாக இருக்குமென்று நான் கூறிக்கொள்கின்றேன்.

முற்பகல் 11-30

அதுமட்டுமல்ல, அங்கே நிறைய நெல் விளைகின்றது. அந்த நெல் விளையக்கூடிய இடத்திலே—நான் பெண்களுக்கான வேலைவாய்ப்புக் காகத்தான் சொல்கின்றேன்—அந்த நெல்லைப் பக்குவப்படுத்தி அதை அவலாகச் செய்து-- அவல் நிறைய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி ஆகின்றது,-- இதர மாநிலங்களுக்குக் கூட அனுப்பலாம். அதற்கான அளவில் அவல் உற்பத்தி செய்யக்கூடிய ஒரு தொழிற்சாலையை ஏற்படுத்திக் கொடுத்தால், அது இன்னும் சற்று நன்றாக இருக்கும்.

அடுத்து, நான் பல முறை இந்த மன்றத்திலே குறிப்பிட்டிருக்கின்றேன். 413 ஏக்கர் நிலம் வாங்கி பல ஆண்டுகளாகியும் அது அப்படியே கிடக்கிறது. அந்த நிலத்திலே நாம் ஏதாவது தொழிற்சாலை ஆரம்பிப்பதற்கு வகை செய்வோமேயானால் மக்கள் பயனடையக் கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதையும் கூறிக்கொள்கின்றேன்.

அடுத்து, நாம் நிறைய செங்கல் உற்பத்தி பண்ணுகின்றோம். எங்களுடைய ஏரியாவிலே நிறைய செங்கல் தொழிற்சாலைகள் இருக்கின்றன. அங்கே நிறைய நல்ல மண் இருக்கிறது. அந்த நல்ல மண்ணிலிருந்து நிறைய செங்கற்கள் செய்யலாம். நான் ஏற்கெனவே இதுபற்றி அறிவிப்பும் கொடுத்திருந்தேன். அதுவும் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்தத் தொழிற்சாலைகள் உற்பத்தி செய்கின்ற அந்தச் செங்கற்களைத்தான் அரசுக் கட்டடங்களுக்காக எடுக்க வேண்டுமென்று காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அது இடைக்காலத்திலே விடுபட்டுப்போய்விட்டது. அங்கே செங்கல் அறுக்கக்கூடியவர்கள், செங்கல் வேலை செய்யக்கூடியவர்கள் நிறையப் பேர் இருக்கின்றார்கள். அந்த ஏழைகளுக்கு வேலைவாய்ப்புக் கொடுப்பதற்காகவே, அரசாங்கம் செங்கல் தொழில்



1998 ஏப்ரல் 20] [திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்]

செய்பவர்களுக்குப் பணம் கொடுத்து ஊக்குவித்து, ஒரு கூட்டுறவு அமைப்பை ஏற்படுத்தி அதன்மூலம் எங்கெங்கே அரசுக் கட்டடங்கள் கட்டுகிறோமோ அந்தக் கட்டிடங்களுக்கெல்லாம் இந்தச் செங்கற்களைப் பணம் கொடுத்து வாங்குவதற்கான ஒரு வழிவகையினை உண்டாக்க வேண்டும் என்பதையும் இந்த நேரத்திலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இன்றைக்கு வத்தலக்குண்டிலே ஒரு தொழிற்பேட்டையைக் கட்டியிருக்கின்றோம். எங்கள் காலத்திலே கட்டியது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பள்ளிக்கூடம் போகிற காலத்திலே கட்டியது. ஆனால், அந்தத் தொழிற்பேட்டையிலே ஒரு சில கட்டடங்களிலேதான் ஏதோ தொழில் நடக்கிறது. மற்ற கட்டடங்கள் சும்மாவே இருக்கின்றன. ஆனால் அந்தக் கட்டடங்கள் விழாமல், அருமையாக, நல்ல கட்டடங்களாக இருக்கின்றன. அந்தக் கட்டடங்களைப் பயன்படுத்தி அங்கே ஏதாவது தொழிற்சாலையை ஆரம்பிப்பதற்கு நாம் வழிவகை செய்தால்தான் நல்லது என்று அங்குள்ள மக்கள் எல்லோரும் விரும்புகின்றார்கள். அங்குள்ள மக்களெல்லாம், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் பெரியசாமி அவர்கள் அமைச்சராக வந்துவிட்டார்கள், அதுவும் சிறுதொழில் துறை அமைச்சராக ஆகியிருக்கின்றார்கள். அவர்கள் வந்த பிறகும்கூட கடந்த இரண்டு ஆண்டுகாலமாக அந்தக் கட்டடங்களெல்லாம் சும்மாவே இருக்கின்றனவே என்று அவர்கள் பேசுகின்றார்கள். இது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் நன்றாகத் தெரியும். ஆகையினாலே நீங்கள் அந்தக் கட்டடங்களை எடுத்து அவற்றிலே ஏதாவது தொழில் நடத்துவதற்கு என்ன செய்யவேண்டும், என்ன தொழில் செய்தால் நன்றாக இருக்கும் என்பவற்றையெல்லாம் நன்றாக ஆராய்ந்து—எல்லா விஷயங்களும் உங்களுக்குத் தெரியும்—ஏதாவது தொழில் செய்வதற்கான வழிவகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்து, இன்றைக்கு உங்களுடைய இலாகாவிலே நீங்கள் உத்தியோகஸ்தர்களை நியமிக்கிறீர்கள். அதிலே பெண்களுக்கு 33 சதவீதம் கொடுத்துத்தான் தீரவேண்டும். எந்தத் துறையாக இருந்தாலும் சரி, எந்தத் தொழிலாக இருந்தாலும் சரி, ஊரகத் தொழில்களாக இருந்தாலும் சரி, அவர்களை உத்தியோகத்தில் அமர்த்துவதற்கும், அவர்கள் தொழில் தொடங்குவதற்கும் நீங்கள் வழிவகை செய்யவேண்டும்.

அடுத்து, பத்திரப் பதிவுத் துறை இருக்கின்றதே, அந்தத் துறையிலே வருகின்ற காலியிடங்களைப் பூர்த்தி செய்யும்போது, பெண்களுக்கே அந்தக் காலியிடங்களைக் கொடுத்து, பெண்களுக்கு ஒரு நல்ல சூழ்நிலையை உருவாக்குகிற அளவுக்கு நாம் செய்ய வேண்டும். நாட்டிலே இன்றைக்குப் பெண்கள் படுகின்ற கொடுமை, மிகப் பெரிய கொடுமையாக இருக்கின்றது. (மணியடிக்கப்பெற்றது) அதுமட்டும் அல்லாமல் இன்றைக்கு—

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உறுப்பினர் என்னைப் பார்த்துப் பேசவேண்டும்.

**திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குண்டுப்பட்டியிலே ஏழைகளுக்கு மலையிலே நிலம் கொடுத்திருக்கின்றோம். சிரிமாவோ பண்டார நாயகா மற்றும் லால்பகதூர் சாஸ்திரி அவர்களுடைய காலத்திலே ஒரு ஒப்பந்தம் ஏற்பட்டு, அந்த ஒப்பந்தத்தினுடைய அடிப்படையிலே இலங்கையிலேயிருந்து தாயகம் திரும்பிய ஏழை மக்கள் அங்கே அந்த குண்டுப்பட்டியிலே இருக்கிறார்கள். குண்டுப்பட்டிக் கலவரத்திற்கு நான் போகவில்லை. அந்தக் குண்டுப்பட்டியிலே இருக்கிற மக்கள் தங்களுக்கு அரசாங்கம் 1973-74-லேயே 2 ஏக்கர் நிலம் ஒவ்வொரு குடும்பத்திற்கும் கொடுத்திருக்கின்றது; அந்த நிலங்கள் எல்லாம் இன்னும் பதிவு செய்து தரப்படவில்லை; அந்த நிலத்தைக் கொஞ்சம் வசதி படைத்தவர்கள் அங்கே வந்து ஆக்கிரமிப்புச் செய்து, தங்களை விவசாயம் செய்யவிடாமல் தடுப்பதாக, நான் நேரிலே சென்றபோது தெரிவித்தார்கள். அந்த மக்களுக்கு ஏற்கெனவே அரசாங்கம் 1973-74 ஆம் ஆண்டு, நம்முடைய முதலமைச்சர் அப்போதும் முதலமைச்சராக இருந்தபோதுதான், அங்கே அந்த நிலம் அவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அந்த நிலங்களை அவர்களுக்குப் பத்திரப் பதிவு செலவில்லாமல்— ஏனென்றால், அவர்களால் பத்திரப்பதிவுச் செலவைக் கொடுத்துப் பதிவு செய்ய இயலாது— அந்த 84 குடும்பங்களுக்கும் நேரிலே சென்று பதிவு செய்து கொடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.



முற்பகல் 11-35

அதுமாத்திரமல்ல, பதிவு செய்யப் போகும்போது, இந்த அதிகாரிகள் எல்லாம் போவார்கள் இல்லையா? அதற்காவது, ரோட்டைப் போட்டுக் கொடுக்கலாம். அவர்கள் குடிநீர் இல்லாமல் இருக்கிறார்கள். இவர்களும் தண்ணீர் குடிக்க வேண்டும், உங்கள் பத்திரப் பதிவு அதிகாரிகளும் தண்ணீர் குடிக்க வேண்டும். ஆகையினால் குடிதண்ணீர் அவர்களுக்குக் கொடுக்க வேண்டும். இந்த நிலைமையில், இந்த வேலைகளைச் செய்து கொடுத்தால், அவர்கள் எந்தவிதமான சச்சரவுக்கும் வராமல் அமைதியாக இருப்பார்கள். இதை அரசாங்கம் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அடுத்து, ஹென்றி என்பவர்-அவர் ஒரு நிறுவனத்தைச் சேர்ந்தவர்-அவர்களுக்கு உதவி செய்யத்தான் சென்றிருக்கிறார். உதவி செய்யப் போன ஒருவரை, ஒரு பெரியவரை, ஒரு படிப்பாளியை இன்றைக்கு முதல்-accused என்று கேஸ் போட்டிருப்பது நியாயமாகப் படவில்லை. ஆனால் நான் கேஸுக்குள் நுழையவில்லை, இப்படிச் செய்யுங்கள் என்று சொல்லவில்லை. அதிகாரிகளும், அமைச்சர்களும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இதை நேரடியாக விசாரணை செய்ய வேண்டும். நேரடியாக விசாரணை செய்து அவர் ஏதாவது விவகாரத்தில் இருந்தால் அவருக்குத் தண்டனை கொடுங்கள். ஆனால் அவர்களுக்கு உதவி செய்யப் போனவரை, உதவி செய்யப்போன ஹென்றி அவர்களை இன்றைக்கு முதல் எதிரியாகச் சேர்த்திருப்பது நியாயம் இல்லை. அதை வாபஸ் பெற வேண்டும் என்று இந்த நேரத்திலே இந்தத் துறையின் மூலமாக முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய கோரிக்கையாக வைக்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. அ. அசோகன்.

***திரு. அ. அசோகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்திரைத்-தாள்கள்—நிருவாகம், ஆவணப்பதிவு, ஊரகத் தொழில்கள், ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்புத் தந்த தங்களுக்கும், நம்முடைய தமிழக முதல்வர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்றைக்குப் புதிதாகத் துவங்கப்பட்ட மாவட்டத்திலே விவசாயத்தைத் தவிர, வேறு எதுவும் இல்லாத மாவட்டம் திருவாரூர்

மாவட்டம் என்பதை அனைவரும் அறிவீர்கள். இந்தத் திருவாரூர் மாவட்டத்தில் புதிதாக ஒரு தொழில்பேட்டையைத் தொடங்க வேண்டும் என்பதை என்னுடைய முதல் கோரிக்கையாக வைக்க விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, இந்த சிறு தொழில்களைப் பொறுத்தவரையில் அனைத்து மாவட்டங்களிலும் தொழில் மையங்கள் இன்றைக்கு ஆரம்பிக்கப்பட்டு, அது இன்றைக்குப் பெயரளவில்தான் இருக்கிறது. ஆனால் அந்தத் தொழில் மையத்தினுடைய பணி– ஏதோ வங்கிக்கு சிபாரிசு செய்கின்ற பணியைத்தான் செய்து கொண்டிருக்கிறது. ஆனால் வங்கி மேலாளர்கள் மனது வைத்தால்தான் அவர்களுக்குக் கடன் கிடைக்கிற நிலைமை இன்றைக்கு உருவாகியிருக்கிறது. அதையெல்லாம் மாற்றி, மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் அரசாங்கமே முதலீடு செய்து, வருடத்திற்கு ஒரு கோடி ரூபாய் முதலீடு செய்து தொழில் செய்பவர்களுக்கு, தொழில் செய்ய முறையான பயிற்சி பெற்றவர்களுக்கு ஒரு இலட்சம் என்ற அளவில் வழங்கினால் ஒரு வருடத்திற்கு 100 சிறு தொழில் அதிபர்களை உருவாக்க முடியும் என்பதை என்னுடைய கருத்தாகக் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்றைக்கு Trysem மூலம் இன்றைக்கு அளிக்கிற பயிற்சி, ஒரு போலியான பயிற்சியாக இருக்கிறது, முறையான பயிற்சி அல்ல. அந்தப் பயிற்சி முடித்த பல்வேறு இளைஞர்கள் இன்றைக்குப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். காரணம், ஒரு அச்சுத் தொழில் என்று சொன்னால், அங்கே மூடிக்கிடக்கிற ஒரு அச்சுத் தொழில் நிறுவனத்தில்கூட அவர்கள் சான்றிதழ் பெற்று முறையாக உதவிப்பணம் பெற முடியாமல் இருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். என்னுடைய மாவட்டத்திற்கு அருகில் இருக்கிற, நாகை மாவட்டத்திலே, வேதாரண்யம் பகுதியில் 'சிலிகேட்' என்ற மணல் சோப்பு தயாரிக்கிற மூலப்பொருள் இன்றைக்குக் கிடைக்கிறது. என்னுடைய மாவட்டத்திலே அதை ஒரு மூலதனமாகக் கொண்டு தொழிற்சாலைகளை ஆரம்பிக்கலாம்; ஆனால் அதற்கு மாறாக, இன்றைக்கு அதனைப் பல்வேறு மாவட்டங்களுக்கு மட்டுமல்ல, பல்வேறு மாநிலங்களுக்கு, இன்னும் சொல்லப்போனால், வெளிநாடுகளுக்குக்கூட ஏற்றுமதி செய்யக்கூடிய நிலைமையிருக்கிறது.

மற்றுமொன்று. கூடுதலாக முத்திரைத்தாள் விற்பனையாளர்களை நியமிக்க வேண்டும். அப்போதுதான் தட்டுப்பாடு இல்லாமல் ஆங்காங்கே வேலைகள் நடைபெற முடியும். அதுமட்டுமல்ல, பதிவாளர்



அலுவலகத்தில் இன்றைக்கு நாம் உடனடியாக நகல்களைப் பெற வேண்டும் என்று சொன்னால், அவர்கள் காலதாமதம் செய்கிறார்கள். அதற்காக ஒவ்வொரு பதிவாளர் அலுவலகத்திற்கு Xerox machine வழங்க வேண்டும் என்பதை என்னுடைய வேண்டுகோளாக வைக்கிறேன்.

அதேபோல, கடந்த ஆண்டு நம்முடைய அமைச்சர் அவர்கள் வழிகாட்டி மதிப்புப் பற்றி அறிவித்தார்கள். ஆனால் அவை நடைமுறைப்படுத்தப்பட்டு இருக்கிறதா என்று கேட்டால், கிராமப்புறங்களிலும், நகர்ப்புறங்களிலும் நடைமுறையில் இல்லை. சென்னை போன்ற பகுதிகளில் நடைமுறையில் இருக்கலாம். இதை ஞாபகப்படுத்தி, திருவாரூர் தொகுதியைப் பொறுத்தவரையில், முக்கியமாக நான் கடந்த ஆண்டு இதே நிதிநிலை அறிக்கையில் பேசியபோது குறிப்பிட்டேன்; இன்றைக்கும் தொடர்ந்து மனுக்கள் மூலமாக நான் வலியுறுத்தி வருகிறேன். என்னுடைய தொகுதியான திருவாரூர் இரண்டு மாவட்டங்களில் அடங்கும். அதிலும் குறிப்பாக கீழ்வேளூர் ஒன்றியம் என்பது நாகை மாவட்டத்திலே அடங்குகிற பகுதி. அந்த கீழ்வேளூர் ஒன்றியத்திலேதான் கீழ்வெண்மணி கிராமம் இருக்கிறது. அந்த கீழ்வெண்மணி கிராமத்தைப் பற்றி நான் சொல்லித் தெரியவேண்டிய அவசியம் இல்லை. ஆதிக்க சக்திகளால் தீக்கிரையான 44 தாழ்த்தப்பட்டவர்களின் உயிரைப் பலிகொடுத்த அந்தக் கிராமம் கீழ்வெண்மணி கிராமம். அந்தக் கீழ்வெண்மணி கிராம தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, நம்முடைய முதல்வர் அவர்கள் 1971-லே ஆட்சிப் பொறுப்பிலே இருந்தபோதுதான், அங்கே தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டன. ஆனால், அந்தத் தொகுப்பு வீடுகள் எல்லாம் கடந்த கால ஆட்சியிலே பராமரிக்கப்படாமல் இன்றைக்குப் பழுது அடைந்து இருக்கின்றன. நேற்றைக்கு சுந்தரலிங்கனார் அவர்களுடைய பெயரிலே அவர்களுடைய வாரிசுதாரர்களுக்குத் தொகுப்பு வீடுகளைத் திறந்து வைக்கிறபோது, அதைப் பத்திரிகையிலே பார்க்கிறபோது, அக மகிழ்ச்சி அடைகிறோம். அதேபோன்று, இன்றைக்குக் கீழ்வெண்மணி கிராமத்திலே, அந்த ஆதிக்க சக்திகளால் உயிர்நீத்த தியாகிகள், அவர்களுடைய வாரிசுகளுக்குப் புதுமையான முறையிலே, அந்த வீடுகளை கீழ்வெண்மணி கிராமத்தைத் தத்து எடுத்து, ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழேயாவது, அங்கே தொகுப்பு வீடுகளைக் கட்டிக் கொடுக்கவேண்டும் என்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

[திரு. அ. அசோகன்] [1998 ஏப்ரல் 20

முற்பகல் 11-40

அதுமட்டுமல்ல. நான் முன்பே சொன்னதைப்போல, எங்கள் திருவாரூர் மாவட்டத்தில் விவசாயத்தைத் தவிர, எந்தத் தொழிலும் இல்லாத காரணத்தால், அங்கே கூடிய விரைவில், தொழிற்பேட்டை அமைக்கும் திட்டத்தை நீங்கள் ஆரம்பிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல. இன்றைக்கு ஒரு பிரச்சினையை இங்கே நினவூட்டுவது என்னுடைய கடமை என்று நான் கருதுகிறேன். நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள், 1996 ஆம் ஆண்டு—இந்த அமைச்சரவை—ஆளுநர் மாளிகையிலே பதவி ஏற்றபின்பு, அன்று மாலையே, சென்னைக் கடற்கரையிலே வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கின்ற பொதுக்கூட்டத்தில் அவர்கள் பேசிய பேச்சின் ஒரு பகுதியை நான் இந்த மன்றத்தில் நினைவூட்டுவது என்னுடைய கடமை என்ற காரணத்தால், அதை நான் இங்கே படித்துக்காட்ட விரும்புகிறேன். அங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சொன்னது: " என் உயிரைக் காத்துக்கொள்ள ஏ.கே. 47 துப்பாக்கி தாங்கிய வீரர்கள் எனக்குத் தேவையில்லை. என்னைக் காப்பாற்றிக்கொள்ள என் நெஞ்சுறுதியும், கொள்கைப் பிடிப்பும் போதுமானவை. பெரியார் தந்த துணிவும், அண்ணா தந்த கொள்கைகளும் போதுமானவை. இங்கே உள்ள தலைவர்களின் அன்பும், உடன்பிறப்புக்களின் ஒத்துழைப்பும், பாசமும் போதுமானது. நான் வாழ்வது உங்களுக்காக, வீழ்ந்தால் அதுவும் உங்களுக்காகத்தான். பதவி என்பது மக்களுக்கு உழைக்க எனக்குக் கிடைத்த வாய்ப்பு. அதைப் பயன்படுத்திக்கொண்டு, உங்களுக்காக உழைப்பேன். என் உயிர் உள்ளவரை என்றென்றைக்கும் உழைப்பேன். சிறு தவறு நேர்ந்தால்கூட நான் சகித்துக்கொள்ள மாட்டேன். எங்கேயாவது கோளாறு ஏற்பட்டால், உங்கள் தலைவனாக இருக்க மாட்டேன் என்று உறுதி கூறியிருக்கிறேன். அதைக் காப்பாற்ற நீங்கள் அனைவரும் தயாராக இருக்கவேண்டும், ஒத்துழைக்கவேண்டும்" என்று அன்றைக்கு இலட்சக்கணக்கான தமிழர்கள் கூடிய கூட்டத்திலே உறுதிமொழி கொடுத்தார்கள். அந்த உறுதிமொழிக்கு பாதகம் ஏற்பட கிஞ்சிற்றும் இடம் கொடுக்காமல், ஒரு நேர்மையான நிர்வாகத்தை, லஞ்ச லாவண்யம் இல்லாத நிர்வாகத்தை, ஊழல் இல்லாத நிர்வாகத்தை, இன்றைக்குத் தமிழக மக்களுக்கு வழங்கிக் கொண்டிருக்கிற அரசு இந்த அரசு என்பதை மனசாட்சி உள்ளவர்கள் யாரும் மறுக்க முடியாது.



1998 ஏப்ரல் 20] [திரு. அ. அசோகன்]

ஆனால் நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பு அரசியல் முகவரி இல்லாது இருந்தவர்கள், சந்தர்ப்பவாதக் கூட்டணி அமைத்துக் கொண்டு, இன்றைக்கு சில இலட்சம் வாக்குகளை அதிகம் பெற்றுக்கொண்டு, அதனால் பல இடங்களுக்கு நாடாளுமன்றத் தேர்தலிலே தேர்வு செய்யப்பட்டு இன்றைக்குத் தமிழகத்தைச் சேர்ந்த சில பேர்கள் மத்திய அமைச்சர்களாகப் பொறுப்பேற்ற பிறகு, தமிழகத்திற்கு வரும்போதெல்லாம், ஆட்சிக் கலைப்பு, ஆட்சிக் கலைப்பு என்று மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு தலைவர் சொல்கிறார், ஆட்சிக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்துவோம் என்கிறார். ஒரு கட்சியினுடைய மகளிர் அணி தீர்மானம் போடுகிறது, நாங்கள் தற்கொலைப் படையாக மாறுவோம் என்று. அதைப்பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. அவர்கள் எப்படித் தற்கொலைப் படையாக மாறினார்கள் என்பது, கடந்த காலங்களிலே நீதிமன்றங்களிலே சுப்பிரமணியசாமிகளுக்குத் தெரியும். ஆனால் ஒரு சரித்திர உண்மையைத் தெரிந்து கொள்ளவேண்டும். இன்றைக்கு உலக வரலாற்றை எடுத்துக் கொண்டால், தன்னுடைய மதத்திற்காகப் புத்தபிட்சுக்கள் தீக்குளித்த வரலாறு வியட்நாமிலே உண்டு. அதற்குப் பிறகு தாய் மொழிக்காக, தமிழ் மொழிக்காக இதே தமிழகத்திலேதான், தீக்குளித்த வரலாறு உண்டு. அதையும் தாண்டி, ஒரு இயக்கத்தினுடைய தலைவனுக்கு, அதுவும் எதிர்க்கட்சியாக இருந்தபோது, காராகிருகத்தில் அடைக்கப்பட்ட காரணத்தால், 8 தேக்குமரத் தேகங்களைத் தீக்கிரையாக்கிய வரலாறு திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு தமிழ்நாட்டிலே உண்டு என்பதை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். இவைகளை எல்லாம் மறந்துவிட்டு, இன்றைக்கு மத்தியிலே இருக்கிற, தமிழ்நாட்டைச் சேர்ந்த அமைச்சர்கள், சென்னைக்கு வரும்போது எல்லாம், தமிழகத்திற்கு வரும்போதெல்லாம், நாங்கள் ஆட்சியைக் கலைப்போம், ஆட்சியைக் கலைப்போம் என்று பூச்சாண்டி காட்டிக் கொண்டிருக்கிறார்கள். இன்றைக்கு ஆட்சியைக் கலைத்தால், யாருக்கு நஷ்டம்? திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு நஷ்டமா? தமிழ் மாநிலக் காங்கிரசுக்கு நஷ்டமா? இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சிக்கு நஷ்டமா? எங்களுடைய தோழமைக் கட்சிக்கு நஷ்டமா? இல்லவே இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நஷ்டம், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு நஷ்டம் ஒட்டுமொத்தத் தமிழ் இனத்திற்கு நஷ்டம். ஒன்றை நான் நினைவுபடுத்த விரும்புகிறேன். மீண்டும் இதுபோன்ற பூச்சாண்டிகளைக் காட்டிக் கொண்டு தமிழகத்தில் உலா வந்தால், தமிழ்நாட்டு மக்கள் அதை

அனுமதிக்க மாட்டார்கள் என்ற கருத்தைக் கூறி, விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கே. தங்கமணி.

**திரு. கே. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊரகத் தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில் மூலதனச் செலவு, பத்திரப் பதிவு சம்பந்தமான மானியக் கோரிக்கைகளின் மீது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் சில கருத்துக்களை முன்வைக்க விரும்புகிறேன். கொள்கைக் குறிப்பில், " ஊரக மற்றும் சிறுதொழில்களின் வளர்ச்சியின் மூலம்தான் தேவையான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும்; அதேசமயம் உள்ளூரில் உள்ள உபரித் தொழிலாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்குவதுடன், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் வறுமையைக் களைந்திடவும், வகை செய்யும்" என்று கூறப்பட்டுள்ளது.

முற்பகல் 11-45

எவற்றைக் கொள்கை என்று அங்கீகரித்து ஒப்புக்கொள்கிறோமோ, அவற்றை முறையாக, சீரான முறையிலே நிறைவேற்றுவதற்குத் தேவையான, பொருத்தமான வழிவகைகளையும் நாம் ஆராயவேண்டும். இன்றைக்கு நமது மாநிலம் விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய மாநிலம். மாநிலத்தில் இருக்கக்கூடிய பகுதிகளில் பெரும் பகுதி கிராமப்புறங்களாகவே இருக்கின்றன. ஆனால் இன்றைக்குக் கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய மக்கள் அனைவரும் வேலை தேடி நகரங்களைத் தேடிச் செல்லக்கூடிய ஒரு மோசமான நிலை இருக்கிறது. கிராமப்புறங்களில் வேலை கிடைக்கவில்லை. அப்போது வேலை எங்கே கிடைக்கிறது? நகரங்களுக்குச் சென்றால் கட்டடத் தொழில் அல்லது வேறு வகையான தொழிலையாவது செய்து தங்களுடைய வாழ்க்கையை நடத்தலாம் என்று இன்றைக்குக் கிராமப்புறங்களிலே இருக்கின்றவர்கள் நகரங்களை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறார்கள். கிராமப்புறங்கள் விவசாயத்தை நம்பியிருக்கக்கூடிய காரணத்தால் இன்றைக்குக் கிராமப்புறங்களில் எத்தகைய சிறு தொழில்களைத் துவக்கலாம், எந்தத் தொழில் அந்தப் பகுதி மக்களுக்கு அதிகப்படியான வேலைவாய்ப்புக்களை உருவாக்கமுடியும் என்ற வகையில் அத்தகைய தொழில்களை ஆராய்ந்து மாநில அரசும் தொழில் முனைவோரை ஊக்குவித்து, அந்தத் தொழில்களைத் திறமையாக, செம்மையாகச்



செய்வதற்கான நடைமுறைகளையும் அதற்கான முயற்சிகளையும் உருவாக்கிக் கொடுக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மத்திய அரசு சிறு தொழில் சேவை நிறுவனம், இந்தியாவில் ஏறத்தாழ நாட்டின் மொத்த உற்பத்தியில் 40 சதவீதம் குறுந்தொழில்களை நம்பியிருக்கிறது; குறுந்தொழில்கள் மூலமாகத் தான் உற்பத்தி கிடைக்கிறது என்ற புள்ளிவிவரங்களை நமக்குக் கொடுத்திருக்கிறது. அதுமட்டுமல்ல. அவற்றின் மூலமாக 84 சதவீத வேலைவாய்ப்புகள் இன்றைக்கு இந்தியாவில் இருக்கக்கூடிய மக்களுக்குக் கிடைத்துக் கொண்டிருக்கின்றன. எனவே குறுந்தொழில்களும், சிறு தொழில்களும் இன்றைக்கு வேலைவாய்ப்பிற்கு மட்டுமல்ல, இந்த நாட்டினுடைய வளர்ச்சியிலும் முதன்மைப்பெறக் கூடிய வகையில் இருக்கக்கூடிய காரணத்தால் இந்தத் தொழில்களை அதிக அளவிற்கு ஊக்குவிப்பதற்கு அரசு தேவையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல, குறுந்தொழில்களை உருவாக்குகின்ற முறையில் அரசு அதற்காக என்று தனியாக ஒரு வாரியம் உருவாக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு சிறு தொழில்களும் குறுந்தொழில்களும் சேர்ந்திருக்கக்கூடிய காரணத்தால் குறுந்தொழிலை அதிலிருந்து பிரிப்பது. அவர்கள் மூலமாகக் குறுந்தொழிலுக்கு ஊக்குவிப்பு செய்வது என்பது இன்றைக்கு இயலாத நிலையில் இருக்கக்கூடிய காரணத்தால் கிராமப்புறங்களில் அது நாம் எதிர்பார்க்கக் கூடிய பலனைத் தரவில்லை. எனவே குறுந்தொழிலுக்கு வாரியம் அமைக்க வேண்டும்.

குறுந்தொழிலுக்கு அதிகமான மூலதனம் இல்லாத காரணத்தால் அந்தத் தொழில் இன்றைக்கு நசுங்கிக் கொண்டே வருகிறது. மூலதனம் இல்லாமல் தொடங்கிய அந்தத் தொழில் முனைவோர்கள் பாதியிலேயே அந்தத் தொழிலை விட்டுச் செல்லக்கூடிய ஒரு மோசமான நிலை இருக்கிறது. எனவே, இதற்காகத் தனியாக வங்கிகளும் உருவாக்கப்பட வேண்டும். அந்த வங்கிகள் குறுந்தொழிலுக்கு கடன் அளிப்பதில் தாராளமாக நடந்துகொள்ளவேண்டும். இன்றைக்குத் தொழில் செய்வதற்கு வங்கிகளில் தங்களுக்குத் தேவையான கடன்களைப் பெறுவதிலுள்ள சிரமங்களினால் தொழில் முனைவோர்கள் பாதியிலே விட்டு விட்டுச் செல்லக்கூடிய ஒரு மோசமான நிலை இருக்கிறது.

[திரு. கே. தங்கமணி] [1998 ஏப்ரல் 20

எனவே, அப்பேர்ப்பட்ட இடங்களில் அரசும் அரசு அதிகாரிகளும், தீவிரமாகக் கவனம் செலுத்தி, குறுந்தொழில்களை ஊக்குவிக்கக்கூடிய தேவையான நடவடிக்கைகளைத் தாராளமாக எடுக்கவேண்டும். வங்கிகளோடு தொடர்புகொண்டு, வங்கிகளும் தாராளமாக உதவி செய்யக்கூடிய முறையிலே அதற்கான ஆலோசனைகளை அரசு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாகப் பத்திரப் பதிவு. பத்திரப் பதிவைப் பொறுத்தவரையில் தமிழகத்தில் இருக்கக்கூடிய எல்லா நிர்வாகங்களைக் காட்டிலும் பத்திரப் பதிவுதான் இன்றைக்குத் தவறான நடவடிக்கைக்கு ஒரு மையமான இடமாக இருக்கிறது. ஒரு உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் கடந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்திலே பல மாவட்டங்களில் இருந்த புறம்போக்கு அல்லாத தனியார் நிலங்களையெல்லாம் அடிமாட்டு விலைக்கு வாங்கிக் குவித்த காட்சிகள், அத்தகைய நபர்கள் மீது இன்னும் வழக்குகள் எல்லாம் இருக்கின்றன. எனவே இதற்கெல்லாம் காரணமாக இருப்பது யார்? காரணமாக இருப்பது அந்தப் பத்திரப் பதிவு அல்லது பதிவு நிலையங்கள். எனவே இவற்றை நாம் முழுமையாகக் கண்காணிக்க வேண்டும். இன்றைக்கு பத்திரப் பதிவு அலுவலகத்தில் வந்திருக்கக்கூடிய அந்த ரெஜிஸ்ட்ரார் அல்லது அங்கேயிருக்கக்கூடிய அதிகாரிகள் காலையிலே வந்து மாலையிலே திரும்பிச் செல்வதென்றால், தங்களுடைய பையில் எந்த அளவிற்குக் கூடுதலான பணம் கிடைக்கிறது என்ற அந்த நோக்கத்தையே மையமாக வைத்துத்தான் வருகிறார்கள். பத்திரத்தை நீட்டும்போது, அதற்குள்ளே என்ன கவர் இருக்கிறது என்பதைப் பார்க்கக்கூடிய ஒரு மோசமான நிலைமை இருக்கிறது. எனவே, அதில் கொஞ்சம் விஜிலென்டாக இருந்து தேவையான நடவடிக்கை எடுத்து அதை கறார்படுத்த வேண்டும். என்ன பத்திரப் பதிவாய் இருந்தாலும் சரி, மாநிலத்தில் இருக்கக்கூடிய அனைத்து சார்பதிவு அலுவலகங்களிலும் பணம் இல்லாது ஒரு காரியமும் நடக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது என்பதை அரசும், துறையும் கவனத்தில் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

முற்பகல் 11-50

அதேபோல, கூடுதலாகச் சொத்து சேர்த்து, பினாமியாகச் சொத்து சேர்த்து வைத்திருப்பவர்களிடமிருந்து, குறைந்த விலைக்கு வாங்கப்பட்ட



1998 ஏப்ரல் 20] [திரு. கே. தங்கமணி]

அந்த நிலங்களை மீண்டும் அரசு அவர்களிடமிருந்து எடுத்து, அந்த நிலங்களை ஏற்கெனவே தவறான முறையில் ஏமாந்து கொடுத்த அந்த நில உரிமையாளர்களிடம் திரும்ப ஒப்படைக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் என்னுடைய கருத்தை வலியுறுத்துகிறேன்.

அதேபோலக் கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய நிலம். ஏதாவது பொதுவான காரியங்களுக்கு நிலத்தை வாங்கினால் கூட சதுர அடிக் கணக்கிலே போடுகிறார்கள். சதுர அடி என்றால் அது பல ஆயிரக்கணக்கான, பல இலட்சக்கணக்கான ரூபாய்கூட போகிறது. இன்றைக்குக்கூட சென்னை போன்ற நகரங்களிலே வீட்டு மனைகள் 2 அல்லது 3 சென்ட் வாங்கினால்கூட 10, 15 இலட்ச ரூபாய்க்குக் குறையாமல் கொடுக்க வேண்டிய ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறது. எனவே, இவற்றையெல்லாம் ஒரு வரம்பிற்குள் கொண்டு வர வேண்டும். இவ்வளவு பெரிய ஒரு தொகையைக் கொடுத்து, குடியிருக்க ஒரு வீட்டு மனையை வாங்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. எனவே, இவற்றையெல்லாம் கவனத்தில் கொண்டு பொருத்தமான மதிப்பீடுகள் செய்ய வேண்டும். பொருத்தமான மதிப்பீடுகள் செய்யப்பட்டு, அது முறையாகப் பிணை செய்யப்படுகிறதா, அதற்குரிய விலை கொடுக்கப்படுகிறதா என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலப் பொதுவான காரியங்கள். இன்றைக்குப் பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. ஆதிதிராவிடர் குடியிருப்புகள் இருக்கின்றன. ரேஷன் கடைகள், கூட்டுறவு நாணயச் சங்கங்கள், மருத்துவமனைகள், இப்பேர்ப்பட்ட இடங்களுக்கு நாம் இடங்கள் வாங்கலாம். இதற்குப் போய் சதுர அடிக் கணக்கிலே நாம் விலை கொடுத்து வாங்க முடியாது. எனவே, அதை முறையாகக் கண்காணிக்க வேண்டும். இன்னும்கூடச் சொல்லப்போனால் இப்படிப்பட்ட உபயோகங்களுக்குத் தனியாரிடம் நிலங்களை வாங்கினால் விலை கொடுப்பதைப்பற்றி பரவாயில்லை; பத்திரப் பதிவு அலுவலகத்திலே பதிவுக் கட்டணம் இதற்குச் செலுத்த வேண்டியதில்லை என்ற ஒரு நிலையை உருவாக்க வேண்டும். இந்த மாதிரி பொதுவான காரியங்களுக்குப் பதிவுக் கட்டணம் இல்லாத நிலையை ஏற்படுத்தினால், அதனுடைய விலை அல்லது கட்டுமான மதிப்பீடு குறைவதற்கு வாய்ப்பாக இருக்கும். எனவே, இப்பேர்ப்பட்ட காரியங்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனித்து, அதற்குத் தகுந்த நடவடிக்கை

எடுக்கவேண்டும். ஒரு நல்ல விளக்கம், நல்ல நடைமுறையைக் கொண்டுவர வேண்டும் என்று கேட்டு, வாய்ப்பிற்கு நன்றி கூறி முடிக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. குழந்தை தமிழரசன்.

**திரு. குழந்தை தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு தொழில்கள், பதிவுத் துறை மானியக் கோரிக்கையில் என்னுடைய கருத்துக்களை வழங்குவதற்கு அனுமதி கொடுத்த தங்களுக்கு நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்களுடைய தலைமையிலும் நம்முடைய பதிவுத் துறை, சிறு தொழில்கள் அமைச்சர் அவர்களுடைய மேற்பார்வையிலும் சிறப்பாகப் பதிவுத் துறையும், சிறு தொழில் துறையும், நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் ஆட்சியில் சிறப்பாக இயங்கி வருகிறது. அந்தச் சிறுதொழில் முதலீடு 3 கோடி என்ற உச்சவரம்பிலும், குறுந்தொழில்கள் 25 இலட்சம் என்ற உச்சவரம்பிலும் அமைக்கப்பட்டு, அதற்குரிய கடன்கள் வழங்கப்பட்டு சிறு தொழில்கள் முன்னேற்றம் அடைவதற்கு இந்த அரசு கொண்டுள்ள கருத்தினை நான் வரவேற்கிறேன். அதேபோல, பெருந்தொழில்கள், சிறு தொழில்களும் ஒன்றையொன்று சார்ந்து வளர்ந்தால்தான் கிராமப்புறத்திலும், நகரப்புறத்திலும் ஒரே சீராகத் தொழில்கள் வளர முடியும். அந்தக் குறிக்கோளை இந்த அரசு கைக்கொண்டு பெருந்தொழில்களும், சிறு தொழில்களும் ஒன்றையொன்று சார்ந்து, தொழில் வளர்ச்சியை நோக்கி தமிழ்நாடு வளர்ந்து வருவதை நான் பெருமையாகக் குறிப்பிட விரும்புகிறேன்.

ஐக்கிய முன்னணி அரசாங்கம் பொறுப்பேற்றிருந்த நேரத்தில், மாண்புமிகு தொழில்துறை அமைச்சராக இருந்த நம்முடைய முரசொலி மாறன் அவர்கள் இந்தியாவினுடைய தொழில் துறை மந்திரியாக பொறுப்பேற்றிருந்த அந்த காலக்கட்டத்தில்தான், தமிழ்நாட்டிற்கு ரூபாய் 5,000 கோடிக்கும் மேற்பட்ட தொகை, பல்வேறு தொழிற்கூடங்களை உள்ளடக்கி, தமிழ்நாட்டிற்கு முதலீடு செய்யப்பட்டன. அவரைப் பொறுத்தவரையில் இந்தியாவினுடைய நம்பர்-1 தொழில்துறை அமைச்சராக அவர்கள் வளர்ந்தார்கள். இந்தியாவினுடைய தொழில் துறையை உலக அரங்கிலே அவர்கள் மேம்படுத்திக் காட்டினார்கள். தாயுள்ளத்தோடு தமிழ்நாட்டிற்கு பல்வேறு சலுகைகளைக் கொடுத்து





ரூபாய் 5,000 கோடி பணத்தைக் கொடுத்தார்கள். பல தொழில்கள் வளர்ந்தன. சிறு தொழில்களும் வளர்ந்தன. தமிழ்நாட்டிலேயிருந்து சென்ற முந்தைய ஐக்கிய முன்னணி அரசிலே இடம்பெற்ற மத்திய அமைச்சர்கள் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்காகத் தங்களுடைய கவனத்தைச் செலுத்தினார்கள். முதலீட்டைக் கொண்டு வந்தார்கள். பல்வேறுபட்ட வளர்ச்சித் திட்டங்களை தமிழ்நாட்டிற்கு அளித்தார்கள். அந்த அளவுகோலை அவர்களை முன்னுதாரணமாகக் கொண்டு தற்போது மத்திய அமைச்சரவையிலே பொறுப்பேற்றிருக்கின்ற தமிழ்நாட்டினுடைய அமைச்சர்கள் செயல்பட வேண்டும். ஆக்கபூர்வமான முறையில் தமிழ்நாட்டினுடைய வளர்ச்சிக்கு அவர்கள் உதவ முன்வந்தால் தமிழ்நாட்டு மக்கள் அவர்களை மதிப்பார்கள்; அவர்களைப் போற்றுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு தேவையற்ற பிரச்சினைகளில் அவர்கள் கவனம் செலுத்துவதைவிட தமிழ்நாட்டினுடைய தொழில் வளர்ச்சிக்கோ, மக்களுடைய வளர்ச்சிக்கோ அவர்கள் பாடுபட முன்வரவேண்டும் என்ற வேண்டுகோளை நான் வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11-55

பொருளாதாரத்தினுடைய வளர்ச்சி அதாவது ஊரகத்தினுடைய பொருளாதார வளர்ச்சி என்பது சிறு தொழில்களை அடிப்படையாக வைத்துத்தான் இருக்கும். குறிப்பாக, படித்துவிட்டு நிறைய இளைஞர்கள் வேலைவாய்ப்பு இன்றி இருக்கின்ற இந்தக் காலகட்டத்தில், இளைஞர்கள் வேலைவாய்ப்பு வேண்டுமென்று அவர்கள் அரசை அணுகுகின்ற காலகட்டத்தில் அவர்களுக்கு உள்ள பிரச்சினைகளைக் குறைத்து அவர்கள் ஒரு கோரிக்கையோடு வந்தால் அதை நிறைவேற்றிக் கொடுக்கின்ற அளவுக்கு அதிகாரிகள் அதை வரவேற்கும்முகத்தான் அவர்களுடைய பணி இருந்தால்தான் தொழில்களை இளைஞர்கள் தொடங்க முன்வருவார்கள். அவர்களே வரவேற்று, விரும்பி, வருகின்ற அந்தக் கால கட்டத்தில் அவர்கள் மனம் நோகின்ற அளவுக்கு பல விதிகளோ அல்லது அரசு அதிகாரிகளுடைய நடவடிக்கைகளோ இருந்தால் அவர்கள் வெக்ஸ் ஆகிவிடுவார்கள். அந்த வேலைவாய்ப்பைத் தொடங்குகின்ற முயற்சியைக் கைவிட்டுவிடுவார்கள். எனவே அந்த நிலைகளை எல்லாம் மாற்றி விதிகளைத் தளர்த்தி, குறிப்பாக இளைஞர்கள், தமிழ்நாட்டினுடைய இளைஞர்கள் வேலைகளைத்

தொடங்குவதற்கு முன்வருகின்ற நேரத்தில் பல சலுகைகளை அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, நம்முடைய அரசாங்கம் பொறுப்பேற்றதற்குப் பின்னர் பல்வேறுபட்ட விதிகளை எல்லாம் தளர்த்தி மிக இலகுவாகத் தொழில்களைத் தொடங்குவதற்கு பல திட்டங்களை அறிவித்துள்ளது. அதை நடைமுறைப்படுத்துவதிலே விரைந்து செயலாற்ற வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோன்று தமிழ்நாடு முதலீட்டுக் கழகம் 10 ஆண்டுகளுக்கு முன்பாக, 15 ஆண்டுகளுக்கு முன்பாக பல்வேறு நபர்களுக்கு, தொழில்கள் தொடங்க கடன் வழங்கியிருக்கிறது. அவர்கள் எல்லாம் கடன்பட்டதன் காரணமாக தொழிலிலே நலிவடைந்து நசிந்துபோய் இருக்கிறார்கள். குறிப்பாக லாரித் தொழில் செய்யக்கூடியவர்கள் பல இடங்களிலே கடன் வாங்கியிருக்கிறார்கள். நான் ஓர் ஆலோசனையை வைக்க விரும்புகிறேன். அப்படி அந்த தமிழ்நாடு முதலீட்டுக் கழகத்தின் மூலமாக லோன் பெற்றவர்கள், கடனைப் பெற்றவர்கள் அதைத் திருப்பிச் செலுத்தாமல் இருந்தால் அவர்களிடமிருந்து அசலை மட்டும் நாம் பெற்றுக்கொள்ளலாம். வட்டியைத் தள்ளுபடி செய்துவிடலாம். மீண்டும் அந்தத் தொழிலைத் தொடங்குவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கலாம். குறிப்பாக லாரித் தொழில் மிகவும் முடங்கிக் கிடக்கிறது. அவர்களுக்கு அந்த வசதி செய்து கொடுக்க வேண்டும் என்று நான் வேண்டுகோளாக வைக்க விரும்புகிறேன்.

அதேபோன்று சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கைக் கோரிக்கையிலே விருத்தாசலத்திலே ஒரு மாவட்டப் பதிவாளர் அலுவலகம் திறக்க வேண்டும் என்று நான் கோரிக்கை வைத்தேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அரசு அதிகாரியை அழைத்து அதுசம்பந்தமாகப் பேசி அங்கே அமைக்கலாம் என்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனைக்கு வந்திருக்கிறது. எனவே, அதை ஏற்று இந்த வருடம் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்தை விருத்தாசலத்தில் தொடங்குவதற்கு அவர்கள் முன்வரவேண்டும். அதை இந்த மானியக் கோரிக்கையிலே அறிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விருத்தாசலத்திலே இருக்கின்ற டேசல் தொழிற்சாலையிலே இருக்கின்ற Kiln சீர் செய்யப்பட வேண்டுமென்று நான் கோரிக்கை வைத்தேன். அதை ஏற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 15



இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து அதைத் திறம்படச் சீர் செய்து கொடுத்துள்ளார்கள். இப்போது அங்கே உற்பத்தியாகக்கூடிய பொருள்களான அந்தப் பொம்மைகள் சுடுகின்ற நிலை உயர்ந்திருக்கிறது. அதற்காக நான் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பிலே பதிவுத் துறை நம்முடைய அரசாங்கத்தினுடைய வருவாயிலே மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கிறது என்று குறிப்பிடப்பட்டு உள்ளது. அது உண்மை. ஏறத்தாழ ஓர் ஆண்டுக்கு அரசுக்கு வருகின்ற அந்த வரியில் 706.91 கோடி ரூபாய் நம்முடைய பதிவுத் துறையின் மூலமாக அரசாங்கத்திற்கு வருமானம் வருகிறது. அதே நேரத்தில் வருவாயை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல் நம்முடைய அரசாங்கம் பொது நிறுவனங்களுக்கு, மக்களுடைய பொதுவான பணிகளுக்கு, கல்விப் பணிகளுக்கு இடங்கள் வாங்குகின்றபோது அவர்களுக்கு வரி விலக்குக் கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே பல நல்ல காரியங்களை நம்முடைய அரசு செய்து வருகிறது. அதையும் நான் தொடர்ந்து வரவேற்க கடமைப்பட்டிருக்கிறேன்.

சென்ற நிதிநிலைக் கோரிக்கையிலே பேசும்போது ஒவ்வொரு சார் பதிவாளர் அலுவலகத்திலும் புகார் பெட்டி வைத்தால் அந்தப் புகார் பெட்டியிலே, வருகின்றவர்கள் தங்களுடைய புகார்களை எழுதிப் போட்டால், அதைத் திறந்துப் பார்த்து சரியான முறையில் அதைச் சீர் செய்யலாம் என்கிற ஓர் ஆலோசனையை நான் வைத்தேன். அதைத் தொடர்ந்து, பல்வேறுபட்ட இடங்களிலே அந்தப் பெட்டிகள் வைக்கப்பட்டு உள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் வைக்கப்பட்டுள்ள அந்தப் பெட்டிகளில் புகார்கள் ஏதேனும் வந்திருக்கிறதா, அதன்மீது அரசு ஏதேனும் விசாரணை மேற்கொண்டிருக்கிறதா, எப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும். ஏனென்றால் தெரிவித்தால்தான் அதிகாரிகள் மட்டத்திலே இப்படிப்பட்ட புகார்கள் அரசுக்குப் போய்ச் சேர்கின்றன; அப்படிச் சேர்கின்ற காலத்தில் அரசு பல நடவடிக்கைகளை எடுக்கிறது; பொதுமக்கள் விழிப்புடன் இருக்கிறார்கள்; எனவே நாம் தவறு செய்வதைக் குறைத்துக்கொள்ள வேண்டும் அல்லது தவறு செய்யாமல் இருக்க வேண்டும் என்ற எண்ணம் அவர்களுக்கு வரும். எனவே, அந்தப் புகார்ப் பெட்டிகளில் புகார்கள் வந்திருக்கின்றனவா,

[திரு. குழந்தை தமிழரசன்] [1998 ஏப்ரல் 20

எப்படிப்பட்ட புகார்கள் வந்திருக்கின்றன, அதன் மீது அரசு எடுத்திருக்கின்ற நடவடிக்கை என்ன என்பதைத் தெரிவிக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நண்பகல் 12-00

அதேபோல் ஆவண எழுத்தர்கள், நகல் எழுத்தர்கள் 20 ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். நம்முடைய கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவர்கள் வேண்டி, விரும்பி அரசுக்கு மனு செய்தால் நாங்கள் அவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்புக் கொடுப்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் கேட்டுக்கொள்ளுவது இப்போது வில்லங்கம் எடுக்கச் சென்றாலும் சரி, ஒரு நகல் வேண்டும் என்று அரசு அலுவலகத்திற்குச் சென்றாலும் சரி, பல நாட்கள் காலதாமதம் ஏற்படுகிறது. ஏன் நீங்கள் தேர்வு செய்த அந்த ஆவண எழுத்தர்களுக்கு, நகல் எழுத்தர்களுக்கு நீங்களே வந்து பணி கொடுக்கக்கூடாது? அப்படி அவர்களுக்கு அந்தப் பணியைக் கொடுத்தால் பொதுமக்களுக்கு வேண்டிய நகல்கள் விரைந்து கிடைக்கும். அதற்கு வழிவகை செய்யவேண்டும். அதனால் பெருத்த செலவு ஒன்றும் அரசுக்கு ஏற்பட வாய்ப்பு இல்லை என்பதால் நகல் எடுக்க மற்றவைகளுக்கு விண்ணப்பம் கொடுக்கும் நேரத்தில் 1 ரூபாய் இப்போது நீங்கள் கட்டணம் வசூல் செய்கிறீர்கள், அதை 5 ரூபாய் என்று வைத்தால் கூட அப்படி வருகின்ற அந்தப் பணத்தில் கூட அந்த நகல் எழுத்தர்களுக்கு நீங்கள் சம்பளம் கொடுக்கலாம், பல இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைத்ததாக இருக்கும். எனவே, இதை அரசு ஆலோசிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

முத்திரைத் தாள் விற்பனையாளர்களுக்கு பல்வேறு கட்டங்களில் கழிவுத் தொகை, அதாவது Commission கொடுக்கப்படுகிறது. இப்போது ஆயிரம் ரூபாய் முத்திரைத் தாள் கட்டணம் என்றால் ஒரு சதவீதம்; 5 ஆயிரம் ரூபாய் முத்திரைத் தாள் கட்டணம் என்றால் ஒரு சதவீதம்; 10 ஆயிரம் ரூபாய் பத்திரம் என்றால் ஒரு சதவீதம் என்று இருக்கிறது. அதாவது பல்வேறுபட்ட விகிதங்களில் நீங்கள் அந்தக் கழிவுத்தொகை கொடுக்கிறீர்கள். நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்ளுவது, நீங்கள் ஆயிரம் ரூபாய், 5 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் என்று தனிப்பட்ட முறையில் ஒவ்வொன்றும் ஒரு சதவீதம் என்று கொடுப்பதை



1998 ஏப்ரல் 20] [திரு. குழந்தை தமிழரசன்]

விடுத்து, ஒட்டுமொத்தமாக ஒரு சதவீதத்தை நீங்கள் நிர்ணயித்து அறிவித்து விட்டால் அது பல இன்னல்களைக் குறைப்பதற்கு வாய்ப்பு உண்டு. என்ன காரணம் என்றால் இப்போது 5 ஆயிரம் ரூபாய் பத்திரம் வேண்டும் என்று ஒருவர் விற்பனையாளரிடம் சென்று கேட்டால் அவர் என்ன செய்கிறார் என்றால் 5 சதவீதம் என்றால் அதிலே உள்ள பத்திரங்களை அதிகமாகக் கொடுக்கிறார்கள். இப்போது 10 ஆயிரம் ரூபாய் பத்திரம் ஒருவர் வேண்டும் என்று போனால் அதற்கு 2 சதவீதம் என்று நீங்கள் கழிவுத் தொகை வைத்திருந்தால் அவர் என்ன செய்கிறார் என்றால் 10 ஆயிரம் ரூபாய் பத்திரம் தன் கையில் இருந்தால்கூட அதைக் கொடுப்பது இல்லை. அதற்கு மாறாக ஆயிரம் ரூபாய் பத்திரம், 5 ஆயிரம் ரூபாய் பத்திரம் 2 ஆயிரம் ரூபாய் பத்திரம் இவைகளை அதிகமாக— கழிவுத் தொகை அதிகமாகக் கிடைக்கிறது என்ற ஒரே காரணத்திற்காக— கொடுக்கிறார்கள். அதனால் நாம் அதிகமான பத்திரங்களைப் பிரின்ட் செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு செலவும் ஆகிறது. எனவே, இதைக் குறைப்பதற்கு நீங்கள் ஒட்டுமொத்தமாக ஒரு குறிப்பிட்ட சதவீதத்தை அதாவது ஆயிரம் ரூபாய் பத்திரமாக இருந்தாலும், 5 ஆயிரம் ரூபாய் பத்திரமாக இருந்தாலும், 10 ஆயிரம் ரூபாய் பத்திரமாக இருந்தாலும் அந்தக் கழிவுக் கட்டணத்தை ஒரே சீரான முறையில் நீங்கள் அமைத்துக் கொடுத்தால் அதனால் அரசுக்கும் பல இலட்சம் ரூபாய் வருமானம் வரும், பத்திரம் எழுதுவதற்கும் சிரமம் ஏற்படாது. பலவிதமான வேலைகளைக் குறைக்கும் அதையும் நீங்கள் பரிசீலனை செய்து அறிவிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஆயிரம் ரூபாய் அளவுக்கு பத்திரக் கட்டணம் இல்லை என்று இப்போது வைத்திருக்கிறோம். ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள ஒரு சொத்தை நாம் பத்திரத்தின் மூலமாக வாங்குவதாக அல்லது விற்பதாக இருந்தால் அதற்குப் பதிவுக் கட்டணம் இல்லை என்று நீங்கள் அறிவித்து இருக்கிறீர்கள். அதனால் யாருக்குமே இலாபம் இல்லை. ஏன் என்றால், ஒரு சொத்தினுடைய மதிப்பு இப்போது சாதாரணமாக 5 ஆயிரம் ரூபாய், 10 ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்கு உயர்ந்துதான் இருக்கிறது. எனவே, அதற்கு நீங்கள் கட்டணம் இல்லை என்று சொல்லி இருப்பதன் மூலமாக அதனால் எந்தவிதமான முன்னேற்றமோ, இலாபமோ கிடையாது. எனவே, இந்த ஆயிரம் ரூபாய் என்பதை 5 ஆயிரம் ரூபாய் என்று நீங்கள் உயர்த்தலாம் அல்லது 10 ஆயிரம் ரூபாய்

என்று நீங்கள் உயர்த்தலாம். கொள்கை விளக்கக் குறிப்பில் அதை உயர்த்தலாம் என்று அரசு பரிசிலித்துக் கொண்டிருப்பதாக நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். தயவு செய்து நீங்கள் அதை உயர்த்தி 5 ஆயிரம் ரூபாய் அல்லது 10 ஆயிரம் ரூபாய் என்ற அளவுக்கு சொத்து மதிப்பினுடைய இடத்தை யார் வாங்கினாலும், விற்றாலும் - 5 ஆயிரம் ரூபாய்க்கு, 10 ஆயிரம் ரூபாய்க்கு ஏழைகள்தான் வாங்கப் போகிறார்கள். எனவே, அப்படி இருக்கின்றபோது— அவர்களுக்கு அந்தக் கட்டணச் சலுகையை நீங்கள் கொடுப்பதற்காக அதை உயர்த்தித் தரவேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் பதிவுக் கட்டணத்தைச் செலுத்துவதற்குத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அலுவலகத்தினை நோக்கிப் போகின்றபோது அவர்களுக்கு உண்மையான அந்த 'Guide line value' என்பதை அதிகாரிகள் குறித்துக் கொடுக்கிறார்களா என்றால் பல இடங்களில் அவர்கள் குறித்துக் கொடுப்பதே இல்லை. சில அதிகாரிகள் செய்கிறார்கள். பல இடங்களில் குறித்துக் கொடுப்பதில்லை. அப்படிப்பட்ட நிலை இருக்கின்றபோது இடைத்தரகர்கள் உள்ளே புகுந்து நாங்கள் குறைத்துக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்கிறோம் என்று சொல்லி இடர்ப்பாடுகள் எழச் செய்கிறார்கள் என்ன செய்கிறார்கள் என்றால் ஏதோ குறைத்துப் போடுவதாகக் காட்டி, உண்மையான விலைக்கே பத்திரங்களை வாங்க வைக்கிறார்கள். மக்களும் அதன்படி எழுதிக் கொடுக்கிறார்கள். இந்த நிலையை நாம் மாற்றுவதற்கு என்ன செய்யவேண்டும்? நீங்கள் எல்லா இடங்களிலும் சொல்லியிருக்கிறீர்கள். 'Guide line value' அதாவது அந்தப் பத்திரத்தினுடைய மதிப்பு, இடத்தினுடைய மதிப்பு குறிப்பிட்ட பட்டியல் அங்கே இருக்கின்ற பொது நலச் சங்கத்திலும், வர்த்தக சங்க இடத்திலும் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதிலே சென்னையில் மட்டும்தான் கொடுத்து இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். நீங்கள் தமிழ்நாடு முழுவதும் இருக்கிற எல்லா கிராமங்களிலும் உள்ள, எல்லா நகரங்களிலும் உள்ள பொது நலச் சங்கங்களுக்கும், எல்லா வர்த்தகச் சங்கங்களுக்கும் பொது நல விரும்பிகளிடமும் நீங்கள் அந்தப் பட்டியலை ஒப்படைத்தால் நிலத்தை வாங்குகின்றவர்களும், விற்கின்றவர்களும் அதனுடைய உண்மையான நிலையைக் கண்டுபிடித்து, அந்தக் கட்டணத்தை கண்டுபிடித்து,



அதற்குரிய முத்திரைத்தாளை வாங்கி, உரிய கட்டணத்தை செலுத்திட தயாராக இருப்பார்கள். உரிய கட்டணத்தை அவர்கள் செலுத்தி விட்டாலே பல பிரச்சினைகள் அழிந்து போய்விடும், அடிபட்டுப் போய் விடும், மேல் முறையீடு என்பதோ அதிலே காலதாமதம் என்பதோ ஏற்படாது. பத்திரத்தைப் பதிவு செய்ததற்குப் பின்னர் அந்தப் பத்திரம் அரசாங்கத்தினுடைய கையில் இருக்கின்ற காரணத்தால், மக்கள் அந்தப் பத்திரத்தைப் பயன்படுத்திக் கடன் வாங்குவது, பல செலவினங்களுக்கு அதைப் பயன்படுத்துவது போன்றவைகளெல்லாம் தவிர்க்கப்படுகின்றன. எனவே, இவைகளையெல்லாம் நிவர்த்தி செய்ய வேண்டும், உண்மையான value-வைச் சரியாக மக்களுக்குச் சொல்லுகின்ற நிலையை நம் அரசு எடுத்திருக்கிறது. அதிலே உறுதியாக முனைப்பாக இருந்து அதைச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-05

பல சார் பதிவாளர் அலுவலகக் கட்டிடங்கள் தமிழ்நாட்டிலே வாடகைக் கட்டிடங்களிலே இயங்கி வருகின்றன. அதிகமாக வருமானம் உள்ள துறை இந்தத் துறை என்கிற காரணத்தினால், அங்கே இருக்கின்ற அந்த அரசு அலுவலர்களுக்கும், பல சார் பதிவாளர் அலுவலகக் கட்டடங்களுக்கும் உடனடியாக அரசின் சார்பில் கட்டடங்களைக் கட்டிக் கொடுப்பதற்கு நமது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வழிகாட்டி - 'Guide line value' - பின்பற்றப்படுகின்ற பொழுது, 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பாக வருவாய்த் துறை அதிகாரிகள் என்ன குறித்துக் கொடுத்தார்களோ அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டுக்கும் 18 சதவீதம் - கிராமப்புறமாக இருந்தால் குறைந்தது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை, நகர்ப்புறமாக இருந்தால் ஓராண்டுக்கு ஒருமுறை 18 சதவீதம்—என்று இந்த அடிப்படையிலே நீங்கள் 'Guide line value' வை அந்தச் சொத்தினுடைய மதிப்பை ஒவ்வோராண்டும் உயர்த்திச் செல்கின்ற காரணத்தினால் அரசுக்கு வேண்டிய வருமானம் வந்து விடுகிறது. ஆனால் பத்திரப் பரிவர்த்தனை மிகக் குறைவாக நடக்கிறது. எனவே, இந்தச் சூழ்நிலையை மாற்றுவதற்கு நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

47-(ஏ) செக்ஷன் பிரகாரம் நீங்கள் நடவடிக்கை எடுப்பதைப் பற்றி உங்களுடைய கொள்கை விளக்கத்திலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். அதிலே என்ன கூறப்பட்டிருக்கிறது என்றால், 1997-98-லே 72,607 ஆவணங்களை முடித்து, பிப்ரவரி 1998 முடிய ரூ.36.75 கோடி வசூல் ஆனதாக அதிலே குறிப்பிட்டிருக்கிறீர்கள். இதற்குப் பின்னாலே நீங்கள் குறிப்பிட்டிருக்கின்றபொழுது அதிலேயே என்ன குறிப்பிடப்பட்டு இருக்கிறது என்றால், பிப்ரவரி 1998 வரை சொத்து மதிப்பு நிர்ணயம் செய்ய அனுப்பப்பட்ட ஆவணங்களின் எண்ணிக்கை 70,454, இவைகளைப் பரிசீலனை செய்து முடிவெடுக்க முடியாமல் இருப்பதால் அரசுக்கு வர வேண்டிய சுமார் 224 கோடி ரூபாய் அளவிற்கு முடங்கி உள்ளது என்று குறிப்பிட்டுள்ளீர்கள். நான் கேட்க விரும்புவது, இவ்வளவு தொகை முடங்கிப் போய்க் கிடப்பதற்கு என்ன காரணம்? 47 (ஏ) விதியின்படி, கட்டணம் செலுத்துவதிலே பிரச்சினை இருக்குமானால் அல்லது வித்தியாசம், முரண்பாடு இருக்குமானால் அது அந்த மாவட்டப் பதிவாளர், கடலூர் அவர்களுக்கோ அல்லது ஒவ்வொரு மாவட்டப் பதிவாளருக்கோ அனுப்பி வைக்கப்படுகிறது. அந்த அதிகாரிகள் இதிலே விரைந்து முடிவு எடுப்பது இல்லை. அவர்கள் காலதாமதம் செய்கின்ற காரணத்தினால், பல்வேறுபட்ட யூகங்களுக்கும், பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் காரணமாகிறது அரசுக்கு, நம்முடைய மாண்புமிகு முதல்வரவர்கள் குறிப்பிட்டதைப் போல, மனக் குரங்கு ஊர் சுற்றப் புறப்படுகிறது என்ற வார்த்தை அந்த இடத்திற்கு வந்து நின்று விடுகிறது.

எனவே, தயவுசெய்து நான் கேட்டுக்கொள்வது, 47(ஏ) விதியின்படி ஒரு டாக்குமென்ட் அனுப்பி வைக்கப்படுமானால் அதிலே விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்: விரைந்து நடவடிக்கை எடுத்து முடிவெடுக்க வேண்டும். ஏறத்தாழ 70,000 டாக்குமென்டுகள் அதிலே முடங்கிக் கிடந்து அரசுக்கு வர வேண்டிய சுமார் 224 கோடி ரூபாய் பாக்கியிருக்கிறது என்றால் அதில் நீங்கள் கவனம் செலுத்தி, இப்படிப்பட்ட தேக்க நிலை இல்லாமல் நீங்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டிலே நடக்கின்ற அனைத்துத் திருமணங்களையும்—இந்துத் திருமணமாக இருந்தாலும், மற்றத் திருமணங்களாக இருந்தாலும்—பதிவு செய்ய வேண்டும். அப்படிப்பட்ட ஒரு கட்டாய நிலை இருந்தாலும்கூட யாரும் பதிவு செய்வது இல்லை. அதைப் பதிவு செய்தால்தான்



திருமணத்திலே சில நேரங்களிலே பிரச்சினைகள் ஏற்படுகின்றபொழுது நீதிமன்றங்களிலே அதை நிரூபிக்க இந்த ஆவணங்கள் தேவைப்படுகின்றன. பல இடங்களில் கட்டாயம் அதைச் செய்ய வேண்டுமென்று இருந்தாலும் மக்கள் பயன்படுத்துவது இல்லை. எனவே, மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி, எல்லாத் திருமணங்களையும் பதிவு செய்ய வேண்டும். அதற்கு சார் பதிவாளர் அலுவலகமே முன் ஏற்பாடு செய்து, முன் நின்று செயலாக்க வேண்டுமென்ற நிலையை உருவாக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

## 7. தகவல் கோரல்

### (அ) 'பாரத ரத்னா' விருதுபெற்ற திரு. சி. சுப்பிரமணியம் அவர்களை முதல்வர் பாராட்டவில்லை எனும் செய்தி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இன்று தினமணி பத்திரிகையிலே ஒரு செய்தியைப் பார்த்தேன். நம்முடைய முன்னாள் மத்திய அமைச்சரும், தமிழகத்தின் ஒரு சிறந்த தலைவருமான நம்முடைய சி. சுப்பிரமணியம் அவர்கள் மத்திய அரசாங்கத்தின் பாரத ரத்னா பட்டம் பெற்று, அவருக்கு நாடு முழுவதும் பாராட்டு தெரிவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

சென்னையில் நேற்று விஞ்ஞானிகளெல்லாம் சேர்ந்து அவருக்கு மிகப்பெரிய ஒரு பாராட்டு விழாவை நடத்தி இருக்கிறார்கள். அந்தப் பாராட்டு விழாவில் அவர் பேசுகின்றபொழுது, நம்முடைய முதலமைச்சரவர்கள் என்னைப் பாராட்டவில்லை என்று ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கிறார்கள்.

இது அத்தனை பேரும் மன வேதனைப்படக்கூடிய ஒரு செய்தியாக இருக்கிற காரணத்தால், முதலமைச்சரவர்கள் அவர்களைப் பாராட்டினார்களா? இதுவரை பாராட்டாவிட்டால் இனிமேலாவது அவர்களைப் பாராட்டுவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

[1998 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சரவர்கள்.

பிற்பகல் 12-10

* **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் இங்கே எழுப்பியிருக்கின்ற பிரச்சினை உள்ளபடியே முக்கியமான பிரச்சினைதான். ஆனால், ஒரு தவறான அடிப்படையில் வெளிவந்துள்ள செய்தி குறித்து எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையாகவே நான் இதைக் கருதுகிறேன். ஏனென்றால், திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கு 'பாரத ரத்னா' விருது அளிக்கப்பட்டதை ஆளுநர் உரையிலே குறிப்பிட்டுப் பாராட்டியிருக்கிறோம். ஆளுநர் உரை என்றால் அது முழுக்க, முழுக்க அரசாங்கத்தினுடைய உரைதான். அரசாங்கத்தினுடைய உரை முதலமைச்சரால்தான் தயாரிக்கப்படுகிறது என்பதை எல்லோரும் மிக நன்றாக அறிவார்கள். அந்த அறிக்கையிலேயே, திரு. சி. சுப்பிரமணியம் அவர்களுக்கும், திருமதி எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கும், விஞ்ஞானி திரு. அப்துல் கலாம் அவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள 'பாரத ரத்னா' விருதுகளுக்காக அரசின் சார்பில் நம்முடைய பாராட்டுக்களைத் தெரிவித்து, ஆளுநர் அந்த உரையைப் படிக்கும்பொழுதே அவையிலேயுள்ள உறுப்பினர்கள் அனைவரும் அவர்களுடைய கையொலி மூலமாக அவர்களுடைய வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்திருக்கிறார்கள்.

அதுமாத்திரமல்ல, முக்கியமாக ஒன்றை நான் சொல்ல விரும்புகின்றேன். தேர்தல் நேரத்திலேதான் சி.எஸ். அவர்களுக்கு அந்த 'பாரத ரத்னா' விருது அறிவிக்கப்பட்டது. நான் தேர்தல் பிரச்சாரத்திற்காக சங்கரன்கோவிலுக்குச் சென்று கொண்டிருந்தேன். செல்கின்ற வழியில் ஜனாதிபதியிடமிருந்து தொலைபேசிச் செய்தி வந்திருப்பதாகவும், உடனடியாக அவர்களை நான் தொடர்புகொள்ள வேண்டுமென்றும் எனக்கு அறிவிக்கப்பட்டது. சங்கரன்கோவில் செல்கின்ற வழியிலேயே ஓரிடத்திலே காரை நிறுத்தித் தங்கி, அங்கிருந்து தொலைபேசி மூலமாக ஜனாதிபதியிடத்திலே தொடர்புகொண்டு, என்ன என்று அறிந்துகொள்ள விரும்பியபொழுது, ஜனாதிபதியே என்னிடத்திலே



1998 ஏப்ரல் 20] [திரு. கலைஞர் மு. கருணாநிதி]

பேசினார். அப்போது அவர், முறைப்படி ஒரு மாநிலத்திலேயுள்ள ஒரு முக்கியஸ்தருக்கு இதுபோன்ற பெரிய விருது வழங்கும்போது முதலமைச்சருக்குத் தெரிவிக்க வேண்டுமென்கிற அந்தக் கடப்பாட்டுடன், என்னிடத்திலே தகவலைத் தெரிவித்தார். திரு. சி.எஸ். அவர்களுக்கு இந்த விருதினை வழங்கப்போகிறோம், அதை அறிவிக்க இருக்கிறோம் என்று என்னிடத்திலே தகவலைச் சொன்னார். நானும் பாராட்டி, மகிழ்ந்து, என்னுடைய உள்ளத்தை அவர்களுக்குப் புலப்படுத்தி, தமிழ்நாட்டு மக்களின் சார்பாக அந்தச் செய்தியை அவருக்குத் தெரிவித்து, என்னுடைய மகிழ்ச்சியைத் தெரிவித்துக்கொண்டேன்.

அதுமாத்திரமல்ல, சங்கரன்கோவில் சென்றேன். அங்கு நம்முடைய முன்னாள் அமைச்சர் திரு. அருணாசலம் அவர்கள் போட்டியிடுகின்றார்கள். தேர்தல் பிரச்சாரக் கூட்டம். அந்தக் கூட்டத்திலே திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும் கலந்துகொண்டார்கள். நானும், நம்முடைய அமைச்சர் திரு. ஆற்காடு வீராசாமி அவர்களும் அந்தக் கூட்டத்திற்குச் சென்றிருந்தோம். அந்தக் கூட்டத்திலேயே, நான் பேசத் தொடங்கியவுடனேயே, 'ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியை இங்கே குழுமி இருக்கின்ற மக்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்' என்று குறிப்பிட்டு, 'திரு. சி.எஸ். அவர்களுக்கு 'பாரத ரத்னா' விருது கிடைக்கிறது. அதை ஜனாதிபதி அறிவித்தார்கள், வருகின்ற வழியிலே அந்தச் செய்தி எனக்குக் கிடைத்தது' என்று சொல்லிவிட்டு, 'அவர்களை நான் வாழ்த்துகிறேன், பாராட்டுகிறேன்' என்று குறிப்பிட்டு, 'அவரை' பாராட்டும்முகத்தான் அங்கே அமர்ந்திருக்கின்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் கையொலி மூலமாக, அவர்களுடைய பாராட்டைத் தெரிவிக்க வேண்டும் என்று சொன்னேன். அவ்வாறே, குழுமியிருந்த பல்லாயிரக்கணக்கான மக்களும், மேடையில் இருந்தவர்களும் கையொலி எழுப்பி அன்றைக்கே பாராட்டுத் தெரிவித்திருக்கின்றோம்.

அதுமாத்திரமல்ல, ஆளுநர் உரையிலே குறிப்பிடப்பட்ட அந்த வாசகங்களைக் கோடிட்டுக்காட்டி, திரு. சி.எஸ். அவர்களுடைய வீட்டிற்கு

[திரு. கலைஞர் மு. கருணாநிதி] [1998 ஏப்ரல் 20

ஒரு ஆள் மூலமாகவே கவர்னர் உரையை அனுப்பி வைத்து, திரு. சி.எஸ். அவர்களுக்கும் மற்றும் இருவருக்கும், யார், யார் ஆளுநர் உரையிலே பாராட்டப்பட்டார்களோ, அவர்களுக்கெல்லாம் அதை அனுப்பி வைத்திருக்கின்றேன். இவ்வளவுக்கும் பிறகு நான் பாராட்டவில்லையென்று சொன்னால், எப்பொழுதுமே என்னுடைய ஜாதகம் அப்படிப்பட்டது என்பதை மாத்திரம் சொல்லி அமைகின்றேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும் - தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 5-முத்திரைத்தாள்கள்-நிருவாகம்**

**(ஆ) கோரிக்கை எண் 6-ஆவணப் பதிவு**

**(இ) கோரிக்கை எண் 47—ஊரகத் தொழில்கள்**

**(ஈ) கோரிக்கை எண் 59—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1998-99 ஆம் ஆண்டுக்கான ஊரகத் தொழில் மற்றும் முத்திரைத்தாள், பத்திரப் பதிவுமீதான மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துகளைக் கூற வாய்ப்பு அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பொதுவாக, இந்த அரசினுடைய தொழில் கொள்கையின் மூலம், இளைஞர்களை ஊக்கப்படுத்துவது; அவர்களுடைய வாழ்க்கைத்தரம், பொருளாதார மேம்பாடு போன்றவைகளை ஊக்குவிக்கின்ற அடிப்படையிலேதான் திட்டங்களை நடைமுறைப்படுத்தி செயல்படுத்திக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக, மாவட்டத் தொழில் மையங்களிலே வழிகாட்டும் சேவைப் பிரிவு என்று ஒன்று இருக்கிறது. அனைத்து லைசென்சுகளையும், அரசாங்க அனுமதிகளையும் ஒரே இடத்திலே பெறத்தக்க வகையிலே இந்த அரசாங்கம் ஒருமுனை இசைவுக் குழுவுக்கு ஏற்பாடு செய்திருப்பது பாராட்டுக்குரிய, போற்றுதலுக்குரிய விஷயமாகும்.



1998 ஏப்ரல் 20] [திரு. ஆர். ஆர். சேகரன்]

பிற்பகல் 12-15

அதேபோல் சிறு தொழில்கள் நிர்ணயித்த இலக்கைவிட கடந்த ஆண்டு குறைவான அளவிலேதான் பதிவாகியிருக்கின்றன. Temporary licence ஆக இருந்தாலும் சரி, Permanent certificate ஆக இருந்தாலும் சரி நிர்ணயித்த இலக்கைவிட குறைந்த அளவிலேதான் பதிவாகியிருக்கின்றன. இதற்கான காரணம் என்ன என்பதை நாம் கண்டறிய வேண்டும். புதிதாகத் தொழில்கள் தொடங்குவதற்குப் பல்வேறு தடைகள் இருக்கின்றன. குறிப்பாக இன்றையதினம் மாசுக்கட்டுப்பாடு லைசன்ஸ் என்பது தொழில் முனைவர்களுக்கு மிகப் பெரிய ஒரு முட்டுக்கல்லாக இருக்கின்றது. இதற்காக மாசுக்கட்டுப்பாட்டை நாம் நீக்கிவிட வேண்டும் என்று சொல்லவில்லை. அந்த நடைமுறைகளைச் செம்மைப்படுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பின்தங்கிய வட்டாரங்களாக 287 வட்டாரங்களைத் தமிழகம் முழுவதும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். என்னுடைய ஓமலூர் தொகுதியிலே காடையாம்பட்டி வட்டாரம் பின்தங்கிய பகுதியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. இருந்தபோதிலும், அங்கே இதுவரை ஒரு தொழிற்சாலைகூடத் தொடங்கப்படவில்லை. என்ன காரணம் என்று சொன்னால் அங்கே மின்சாரப் பற்றாக்குறை இருக்கிறது. பெரும்பாலான பகுதிகளில் இருமுனை மின்சாரம் மட்டுமே இருக்கின்ற காரணத்தால் அங்கே தொழில் அதிபர்கள் தொழில் துவங்க முன்வருவதில்லை. மின்சார வாரியத்திடம் கேட்டால் குறைந்தது 300 மின் இணைப்புகள் இருந்தால்தான் அந்தப் பகுதிக்கு Industrial feeder என்று சொல்லப்படுகின்ற மின்னிணைப்பு வழங்கப்படும் என்று குறிப்பிடுகின்றார்கள். ஆகவே, இப்படி இருசாராரும் ஒருவரை ஒருவர் குற்றஞ்சாட்டுகின்ற நிலை மாறி இந்தப் பின்தங்கிய பகுதியிலாவது தொழில்களைத் தொடங்குவதற்கு அரசாங்கம் ஆவன செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சேலம் மாவட்டத்திலே கிழங்கு உற்பத்தி அதிகமாக இருக்கின்ற காரணத்தால் வட இந்திய தொழில் அதிபர்கள், விவசாயிகளுடைய உற்பத்தியை அவர்கள் கொள்முதல் செய்கிற நிலை மாறி இன்றையதினம் Sagoserve என்று சொல்லப்படுகின்ற அந்த அமைப்பின் மூலமாக அந்தக் கிழங்குப் பொருட்களை எல்லாம் உற்பத்தி செய்து அவற்றிற்கு

[திரு. ஆர். ஆர். சேகரன்] [1998 ஏப்ரல் 20

ஒரு நல்ல விலை கிடைக்கும் சூழ்நிலை இருந்து வருகிறது. இருந்தாலும்கூட அந்த வடஇந்திய வியாபாரிகளுடைய ஆதிக்கம் இன்னும் முழுமையாக அழிந்தபாடில்லை. ஆகவே இந்த Sagoserve மூலமாக விற்பனை செய்யப்படும் பொருட்களுக்குத் தற்போதுள்ள விற்பனை வரி 2 சதவீதம் என்பதை முழுமையாக நீக்கினால் அந்தப் பகுதியிலுள்ள கிழங்குத் தொழிற்சாலைகளில் உற்பத்தி மேன்மேலும் பெருகும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே சேலம் மாவட்டத்திலே கயிறு உற்பத்தி மிகப் பெரிய அளவிலே இருந்து வருகிறது. கடந்த 50 ஆண்டுகாலமாக சுமார் 10,000-க்கும் மேற்பட்ட மக்கள் இந்தத் தொழிலிலே ஈடுபட்டு வருகின்றார்கள். அவர்கள் தங்களுடைய உடலுழைப்பைப் பயன்படுத்தி குறைந்த ஊதியத்தைப் பெற்று அந்தத் தொழிலை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இந்தத் தொழிலை நவீனப்படுத்துவதற்காக அங்கே ஓர் ஆராய்ச்சி மையத்தை ஏற்படுத்தி இந்தக் கயிறு திரிக்கும் தொழிலை ஒரு நவீனத் தொழிலாக மாற்ற வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

இளைஞர்களுக்கு வாழ்வளிக்க பாரதப் பிரதமர் அவர்களின் வேலைவாய்ப்புத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மாவட்டத் தொழில் மையங்களிலே பரிந்துரை செய்து வங்கிகளுக்கு அந்த பட்டியல் அனுப்பப்பட்டால் அந்த வங்கிகள் அவற்றை ஏற்றுக்கொள்வதில்லை. பல காரணங்களைக் கூறி அவற்றை நிராகரிக்கிறார்கள். ஆகவே, வங்கிகளுக்கு ஒரு தெளிவான உத்தரவைப் பிறப்பித்து இந்த இளைஞர்களுக்கு அந்தக் கடனுதவி கிடைக்கச் செய்ய வேண்டும். இங்கே பேசிய உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல மாவட்ட தொழில் மையங்களே அந்தக் கடனுதவிகளை வழங்கினால் இளைஞர்களுக்கு அது மிகவும் ஒரு பெரிய சிறப்பு அளிக்கும் திட்டமாக இருக்கும்.

அதைப்போலவே, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் தொழில் வளர்ச்சிக்காக இயங்கிக் கொண்டு வருகிறது. ஆனால் ஒரு வருடமாக அது சிறப்பாகச் செயல்படவில்லை என்ற குற்றச்சாட்டு பரவலாக இருந்து வருகிறது. ரூபாய் 20 இலட்சத்திற்கு மேல் கடன் வழங்கப்படும் விண்ணப்பங்கள் சென்னையிலே உள்ள தலைமை அலுவலகத்திற்குத்



1998 ஏப்ரல் 20] [திரு. ஆர்.ஆர். சேகரன்]

தான் வரவேண்டும் என்ற சூழ்நிலை இருந்து வருகிறது. இந்த விண்ணப்பங்களை 30, 40 நாட்களுக்குள் பரிசீலனை செய்ய வேண்டும் என்று விதி இருந்தாலும்கூட சுமார் 6, 7 மாதங்கள் தாமதப்படுத்தப் படுகின்றன. ஆகவே மாவட்ட அளவிலேயே விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து உடனுக்குடன் கடன் வழங்குவதற்கான முயற்சியிலே இந்த அரசாங்கம் ஈடுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திலே வட்டி விகிதம் மிகவும் அதிகமாக இருக்கின்றது. 17.83 சதவீதம் வட்டி, அதைத் தவிர up-front fees 1 சதவீதம், R.C.F. fees 0.75 சதவீதம் மற்றும் investigation fees என்று பலவிதமான வட்டிகள் வசூலிக்கப்படுகின்றன. இது தனியார் நிதி நிறுவனங்கள் வசூலிக்கும் வட்டிக்குச் சமமாக இருக்கின்றது. எனவே, இந்த வட்டி விகிதத்தைக் குறைத்து தொழில் வளர்ச்சி மேம்பட ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலவே அடமானத்திற்காக வழங்கப்படும் பத்திரங்கள். கட்டடச் சொத்தின் மதிப்பு தற்சமயம் guideline value அடிப்படையிலே நிர்ணயிக்கப்படுகின்றது. அது பல இடங்களிலே market value-வை விடக் குறைவாக இருக்கின்றது. ஆகவே மார்க்கெட் மதிப்பைக் கணக்கிலே எடுத்துக்கொண்டு அவர்களுக்கு அந்தக் கடன்களை வழங்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். TIIC மூலமாக வழங்கப்படும் working capital அதாவது நடப்பு மூலதனம், பெரும்பாலான இடங்களில் வழங்கப்படுவதில்லை. ஒரு term loan-ஐ அவர்களுக்குக் கொடுத்துவிட்டு working capital-லுக்காக வேறு வங்கிகளுக்குச் செல்வதால் அவர்கள் பல்வேறு சிரமங்களுக்கு ஆளாகின்றார்கள். ஆகவே நடப்பு மூலதனத்தையும் தொழில் மையத்தின் மூலமாகவே வழங்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

தற்சமயம் சேலம் மாவட்டத்திலே ஜவுளி தொழில் பலமாக வீழ்ச்சியடைந்து அது சம்பந்தப்பட்ட தொழிற்சாலைகள் நலிவுற்ற நிலையிலே இருக்கின்றன. தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் கடனுதவி பெற்ற யூனிட்டுகளுக்கு மீண்டும் rehabilitation scheme வைத்து, அந்த வட்டியைத் தள்ளுபடி செய்து, மீண்டும் resettle செய்து கொடுத்து, அவர்களுக்கு அந்தக் கடனுதவியை அளித்தால் மீண்டும் அந்தத் தொழிற்சாலைகள் இயங்குவதற்கான வாய்ப்பு ஏற்படும். ஆகவே,

அரசாங்கம் அதைப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-20

அதைப்போலவே, கடந்த இரண்டு ஆண்டுகளாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் சீரிய முயற்சியால் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் கார் தொழிற்சாலையை நம்முடைய மாநிலத்தில் அமைத்துள்ளனர். அந்தத் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய உதிரி பாகங்களை நம்முடைய மாநிலத்தில் உற்பத்தி செய்யும் சிறு தொழிற்சாலைகளிலேயே கொள்முதல் செய்யவேண்டுமென்று கோரியிருந்தோம். ஆனால், தற்பொழுது I.S.O. 9001, I.S.O 9002 என்ற தர நிர்ணயம் பெற்ற தொழிற்சாலைகளில் கொள்முதல் செய்வது என்று முடிவெடுத்திருக்கிறார்கள். இப்படிப்பட்ட தொழிற்சாலைகளில் தரச் சான்றிதழ் பெறுவதற்கு அவர்கள் ஆய்வுக்கூடம் அமைப்பதற்கு மட்டும் பல இலட்சக்கணக்கான ரூபாய் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. நம்முடைய வசதிகளைப் பெற்றுக்கொண்டு, நம்முடைய அரசாங்கத்தைப் பயன்படுத்தி நிலம், மின்சாரம், சாலை போன்ற வசதிகளையெல்லாம் பெற்றுள்ள நிலையில், அவர்களுக்குத் தேவைப்படும் உதிரி பாகங்களை நம்முடைய மாநிலத்திலே உள்ள சிறிய தொழிற்சாலைகளிலேயே கொள்முதல் செய்ய வேண்டுமென்று ஆணையிட வேண்டுகிறேன்.

எனனுடைய ஓமலூர் தொகுதி, சேலம் மாநகராட்சிக்கு அருகில் இருக்கிறது. மேற்கொண்டு இன்னும் அந்நிய தொழிற்சாலை தனியார் மூலமாகவோ அல்லது அரசு மூலமாகவோ அமைப்பதாக இருந்தால், ஓமலூர் தொகுதியில் அமைத்திட அரசு பரிசீலிக்கவேண்டும். மிகப் பெரிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டிய வசதிகள், தொழில் வசதிகள் உள்ளன. தேவையான நிலங்கள் உள்ளன. மேலும், ஓமலூர் தொகுதியானது தென்மாவட்டங்களையும், வடமாவட்டங்களையும் சேலம் மற்றும் பக்கத்து மாநிலமான பெங்களூரையும் இணைக்கும் பகுதியாக உள்ளது. தேசிய நெடுஞ்சாலையும், சிறிய மற்றும் நடுத்தர விமானங்கள் வந்து போகக்கூடிய விமான நிலையமும் இருப்பதால், பெரிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பத்திரப் பதிவுத் துறையை எடுத்துக்கொண்டால், பொதுமக்கள் நேரடியாகச் சம்பந்தப்படும் துறைகளில் இதுவும் ஒன்று. அன்றாட





வரவு-செலவுகளை அன்றையதினமே முடித்துக் கொள்ளக்கூடிய துறைகளில் இதுவும் ஒன்று. இங்கே பல உறுப்பினர்கள் குறிப்பிட்டதைப்போல, பத்திரப் பதிவு செய்வதற்கு அதிகமான தொகையை செலவு செய்யவேண்டிய சூழ்நிலையுள்ளது. அதிலும் குறிப்பாக, R.D.O. பத்திரம் என்றால், அதிகமாக செலவு செய்யவேண்டிய சூழ்நிலையிருக்கிறது. வழிகாட்டி மதிப்புக் குழு என்று பல இடங்களில் இருப்பதாகக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அந்தக் குழுவை கிராமப்புறங்களில் ஊராட்சி மன்றங்களில் வைக்கலாம். கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்தில் வைக்கலாம் அல்லது விவசாயக் கூட்டுறவு வங்கிகளில் அந்த மதிப்புக் குழுவை வைக்கலாம். இவைகளெல்லாம் அந்தத் தொகையை குறைப்பதற்கு வழி செய்யும்.

அதைப்போல பத்திரப் பதிவு அலுவலகத்தை நவீனமயமாக்கவேண்டும். கணினி மையம், ஜெராக்ஸ் வசதி என்று இவைகளை அந்த அலுவலகங்களில் வைத்து நவீனப்படுத்தி, பணிகளை விரைவுபடுத்தலாம். அதைப்போல, கட்டடங்களைக் கிரயம் செய்யும்போது களப்பணி ஆய்வு என்று ஒன்று இருக்கிறது. தற்சமயம் ரூ.25,000 மதிப்புள்ள கட்டடங்கள் குறித்து களப்பணி ஆய்வு நடத்தப்படுவதாக குறிப்பிடப்பட்டிருக்கிறது. அவற்றை ஒரு இலட்சம் என்று உயர்த்த ஆணையிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல Rental Value Certificate கேட்கிறார்கள். களப்பணி ஆய்வு இருக்கும்போது இந்த Rental Value Certificate தேவையில்லை என்று கருதுகிறேன். எனவே, அந்த முறையை நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, முத்திரைத்தாளுக்கு பல இடங்களில் செயற்கையாக டிமாண்ட் இருக்கிறது. சேலம் மாவட்டத்திலுள்ள ஒரு பத்திரத்தை திருச்சிக்கு எடுத்துச் சென்று, திருச்சியிலிருந்து மீண்டும் சேலத்திற்குக் கொண்டு வந்து, 'வெளியிலே இருந்து கொண்டு வந்து கொடுக்கிறோம், ஆகவே அதிகமாக விலை தாருங்கள்' என்று கேட்டு செயற்கையான டிமாண்டை ஏற்படுத்திவிடுகிறார்கள். ஆகவே, அந்தந்த சார்பதிவு கருவூல எல்லையிலுள்ள பத்திரங்களைத்தான் அந்தந்த மாவட்டத்திலுள்ள அலுவலர்கள் பதிவு செய்யவேண்டுமென்ற உத்தரவைப் போட்டால், இந்த செயற்கையான டிமாண்டைத் தவிர்க்கலாம். அதற்கு அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, பத்திரப் பதிவுக் கட்டணம் 12% பிளஸ் 1% Registration Fees என்று இருப்பது மிகவும் அதிகம். இது மற்ற மாநிலங்களைவிட அதிகமாகும். ஆகவே இந்த Registration Fees-ஐ குறைத்தால், பொதுமக்கள் நியாயமான, உண்மையான விலையில் பத்திரங்களைப் பதிவு செய்வார்கள். இதனால் அரசாங்கத்திற்கு வருமான இழப்பு ஏற்படப் போவதில்லை. எனவே, கட்டணத்தை 6% அல்லது 7% எனக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பாகப் பத்திரம், அடமானப் பத்திரம், விடுதலைப் பத்திரம் போன்றவற்றுக்கு 4% முத்திரைக் கட்டணம் இருக்கிறது. அதை 2% ஆகக் குறைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல பத்திர எழுத்தர்களுக்கு அவர்களுடைய உரிமத்தைப் புதுப்பிக்கும் காலம் ஆண்டுக்கு ஒரு முறை என்று இருப்பதை மாற்றி, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று உயர்த்திக் கொடுக்க வேண்டும். இன்னும் அவர்களுக்கு நல நிதியை ஏற்படுத்தி, ஓய்வூதியம் போன்ற வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல, சீட்டுக் கம்பெனிகளுக்கு இன்னும் சட்டங்கள் கடுமையாக்கப்படவேண்டும். நாட்டிலே பல்வேறு நிதி நிறுவனங்கள் பொதுமக்களுடைய பணத்தைச் சுரண்டி ஏமாற்றிக் கொண்டிருக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டும். அதைப்போல. பண்ணை வீடுகள் என்ற பெயரில் பல்வேறு நிறுவனங்கள் கவர்ச்சிகரமான விளம்பரங்கள் செய்து பொதுமக்களை ஏமாற்றி வருகின்றன. ஆகவே, அவற்றிற்கும் கடுமையான சட்டம் இயற்றி, பொதுமக்கள் பணத்துக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. அ.வ. அப்துல் நாசர்.

பிற்பகல் 12-25

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு முதலில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இன்றைக்குக் குடும்பச் சொத்துக்கள் உயில் மூலமாகப்



பிரிக்கப்படும்போது, இங்கே பேசிய நமது மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அதற்கு 4 சதவிகிதம் பதிவுக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. அதை இரண்டு சதவிகிதமாகக் குறைத்து வசூலிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோன்று, பாகப்பிரிவினை மற்றும் விடுதலைப் பத்திரங்கள் பதிவு செய்யப்படும்போது, அதற்கான கட்டணத்தை இரண்டு சதவிகிதமாக வசூலிக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

எனது தொகுதியிலே இருக்கின்ற புதுச்சேரி மற்றும் புவனகிரி ஆகிய இடங்களில் இருக்கின்ற பத்திரப் பதிவு அலுவலகக் கட்டடங்களில் காரைகள் எல்லாம் உதிர்ந்து, மிகவும் பழுதடைந்துள்ளன. அங்கே வைக்கப்பட்டுள்ள ஆவணங்களெல்லாம் மழைக்காலங்களில் சேதமடையக்கூடிய அபாய நிலையிலே இருக்கின்ற காரணத்தினால் அந்தப் பத்திரப் பதிவு அலுவலகங்களையெல்லாம் சீரமைத்துத் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், அந்தக் கட்டடங்களுக்குப் பதிலாக புதிய கட்டடங்களைக் கட்டித் தர ஆவன செய்ய வேண்டுமென்றும் நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோன்று, 'லே-அவுட்' ஊராட்சிகளாலும், ஊராட்சி ஒன்றியங்களாலும் அங்கீகரிக்கப்படுவதற்கு முன்பே விற்பனை பதிவு செய்யப்படுகிறது. இதனால், அங்கே குடியேறுகின்ற மக்கள் போதுமான வசதிகளைப் பெற முடிவதில்லை. எனவே, அங்கீகாரம் அளிக்கப்பட்ட பின்பே அந்த 'லே-அவுட்'கள் விற்பனை பதிவு செய்யப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். எனது பகுதியிலே தில்லை, விலங்குநாயன்பட்டு, மணிக்கொல்லை, புதுச்சத்திரம் மற்றும் கொத்தடி போன்ற பகுதிகளில் மணிலா அதிகமாகப் பயிரிடப்படுகின்றது. எனவே, அங்கே ஊரகத் தொழில் துறை மூலமாக கடலை எண்ணெய் தயாரிக்கும் தொழிற்சாலை ஒன்றை அமைக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோன்று, திண்டுக்கல் பூட்டு என்பது மிகவும் புகழ் பெற்றது. இன்றைக்கு அந்தத் தொழில் நசிந்து கொண்டு வருகிறது. ஏற்கெனவே இருந்த அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே, எம்.ஜி.ஆர். அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே திண்டுக்கல் பூட்டுத் தொழிலை ஊக்குவிக்கின்ற வகையிலே, அந்தப் பூட்டுகள் நேரடியாக அரசால்

வாங்கப்பட்டு அரசு அலுவலகங்களில் பயன்படுத்தப்பட்டு வந்தன. ஆனால், இன்றைக்கு அது நிறுத்தப்பட்டுள்ளது. அந்தத் தொழில் நசிந்து விடாமல் இருக்க, அத்தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களின் வாழ்வு நசிந்து விடாமல் இருக்க, அந்தத் தரமான திண்டுக்கல் பூட்டுகளை அரசே வாங்கி, அவற்றை அரசுக் கட்டிடங்களுக்குப் பயன்படுத்த வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, தஞ்சை மாவட்டம் நாச்சியார் கோவில் என்ற இடத்தில் நடைபெற்று வருகின்ற குத்துவிளக்குத் தொழில் என்பது மிகவும் புகழ்பெற்ற ஒரு தொழில். அந்தத் தொழில் மேலும் ஓங்கி வளருவதற்கு, இந்திய கலாச்சாரச் சின்னமாகக் குத்துவிளக்கு விளங்குவதால், அத்தொழில் மீண்டும் நல்லமுறையில் வளருவதற்கு, தொழில் பயிற்சி மையமொன்றை அந்தப் பகுதியிலே ஆரம்பிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், கிராமப் பெண்களின் முன்னேற்றத்தைக் கருத்தில் கொண்டு, அவர்களுக்கு சிறுதொழில் பயிற்சி அளிக்க வேண்டும். மேலும், அவர்களுக்கு அரசுத் துறையின் மூலமாக, அரசு வங்கிகளின் மூலமாகக் கடனுதவி வழங்கி, அவர்களது சுயதொழில் மூலமாக அவர்கள் தலைநிமிர்ந்து வாழ வழிவகை செய்ய வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

ஒரு நாட்டின் தொழில் முன்னேற்றத்தின் காரணமாகவே அந்த நாடு முன்னேற்றப் பாதையில் செல்லக் முடியும். அது தன்னிறைவு பெறக்கூடிய வகையிலே இருக்கிறது. எனவே, தொழில்களைத் தொடங்குவதிலும் தொழிற்சாலைகளை உருவாக்குவதிலும் அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டுமென்பது அனைவரும் அறிந்த ஒன்று. அதன்படி, ஐக்கிய முன்னணி அரசு ஆட்சியிலே இருந்தபோது, அதன் மிகச் சிறந்த, உலகின் தலைசிறந்த தொழில் அமைச்சர்களின் ஒருவரான திரு. முரசொலி மாறன் அவர்கள் தலைமையில் தொழில் துறை இருந்தபோது, தமிழகத்திலே ரூபாய் ஐயாயிரம் கோடிக்கு மேல் முதலீட்டுடன் தொழில் நிறுவனங்கள், தொழிற்சாலைகளெல்லாம் பன்னாட்டு நிறுவனங்கள் மூலமாக அதிக அளவிலே உருவாக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில், நாட்டின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்ட ஐக்கிய முன்னணி ஆட்சியைக்



கலைத்துவிட்டு, ஒரு தேர்தல் மூலமாக இன்றைக்கு பாரதிய ஜனதா கூட்டணி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. இந்த ஆட்சி, மக்களைப் பற்றியெல்லாம் கவலைப்படவில்லை, இதிலே அங்கம் வகிக்கின்ற கூட்டணிக் கட்சிகள் எல்லாம், மக்களின் நலனைப் பற்றி அக்கறை கொள்ளாமல், தங்கள் இஷ்டத்திற்கு, தாங்கள் யாரை விரும்புகிறார்களோ அவர்கள் அமைச்சராக வரவேண்டும்; தங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், அவர் அமைச்சராக இருக்கக்கூடாது; அவர்கள் எல்லாம் பதவி விலகவேண்டும் என்று கருதுகின்ற நிலையில், நித்ய கண்டம் பூரண ஆயுசு என்ற அடிப்படையில் தான் இந்த ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது என்பதைப் பத்திரிகையிலே செய்தியாகப் பார்க்கும்போது வேதனையாக இருக்கிறது. தங்களுக்கு வாக்களித்த மக்களையெல்லாம் மறந்துவிட்டு, தங்களின் ஆணவத்தை நிலைநிறுத்துவது எப்படி என்பதைப் பற்றி மட்டுமே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட தலைவர்களைப் பற்றியெல்லாம் மக்கள் நன்றாகச் சிந்தித்துப் பார்த்து, ஏனடா அவர்களுக்கு வாக்களித்தோம் என்று தலையிலே கைவைத்த வண்ணமாக ஒவ்வொரு நாளையும் கழித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தலைவர்கள் தம்முடைய போக்கை மாற்றிக் கொண்டு, இந்தியாவின் முன்னேற்றத்திலே அவர்கள் கவனத்தை திசை திருப்பிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் 'சிட்கோ' மூலமாகத் தொழில் மையம் அமைக்கவும், அதன் வாயிலாக வேலை இல்லாத நிலையைக் குறைக்கவும் முடியும். எனவே, தயவுசெய்து, அரசு அந்தந்த ஒன்றியத்திற்குத் தேவையான தொழில்களை, அந்தந்தப் பகுதிகளின் சூழ்நிலைகேற்ப தொடங்கி, அந்தந்தப் பகுதிகளின் வேலையில்லாத் திண்டாட்டத்தை ஒழிக்க முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, பட்டதாரிகள் சுயவேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் மாவட்டத் தொழில் மையத்தின் மூலமாகத், தொழில் கடன்கள் வழங்கப்படுகின்றன. ஆனால், அந்தத் தொழில் கடன்கள் உடனடியாகக் கொடுக்கப்படுவதில்லை. அதற்கு, அவர்கள் கூறக்கூடிய விதிமுறைகள் எல்லாம் மிகவும் கடுமையாக இருக்கிற காரணத்தினால், படித்த, பட்டதாரிகள் எல்லாம் வேலைவாய்ப்பு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். தொழில் தொடங்குவதற்குக் கடன் பெறும்போது, அதற்குண்டான

[திரு. அ.வ. அப்துல் நாசர்] [1998 ஏப்ரல் 20

விதிமுறைகளை அவர்களால் பின்பற்ற முடியாமல் போய்விடுகிறது. படித்து பட்டம் பெற்ற பிறகும், அவர்களுக்கு வேலை கிடைப்பதில்லை. ஏதேனும் தொழில் தொடங்க வேண்டுமென்று அவர்கள் நினைத்தாலும், அவர்களுக்குக் கடன் கிடைப்பதில்லை. கடன் கிடைப்பதிலே மிகவும் கடுமையான விதிமுறைகள் பின்பற்றப்படுகின்றன. எனவே, அரசு அதை எளிமையாக்கி, அவர்களுக்குக் கடன் கிடைக்க ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல், P.M.R. திட்டத்தின் வாயிலாக, 1 இலட்சம் ரூபாய் கடன் வழங்கப்படுகிறது. அதற்காக, பட்டதாரிகள், வங்கிகளுக்குச் சென்று, கடன்பெற முற்படும்போது, கடன்கள் அவர்களுக்குக் கொடுக்கப்படுவதில்லை. பட்டதாரிகளும், தொழில்முனைவோர்களும், அந்த ஒரு இலட்சம் ரூபாய் கடன் பெறும்போது, அது எளிமையான முறையிலே அவர்களுக்குக் கிடைக்க வழிவகை செய்தால், நிச்சயமாக அவர்கள் பெட்டிக்கடையோ, மருந்துக்கடையோ அல்லது ஒரு பீடா கடையோ வைத்துக் கொண்டு, நல்ல முறையிலே, அவர்களுடைய குடும்பத்தை நடத்திச் செல்வதற்கு முடியும். எனவே, அரசு அதற்குண்டான விதிமுறைகளை எளிமையான முறையிலே ஆக்கி, அவர்களுக்கு அந்தக் கடனைக் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு, என்னுடைய பகுதியிலே, 'சிப்காட்' மூலமாகத் தொழிற்சாலைகள் தொடங்கப்படுகின்றன. தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்படுகின்றன. ஆனால், ஆர்ஜிதம் செய்யப்படுகின்ற நிலங்கள் எல்லாம், விளைச்சல் நிலங்களாக, அதாவது இரண்டு போகங்கள் விளையக் கூடிய விளைச்சல் நிலங்களாக இருக்கிற காரணத்தினால், அந்தப் பகுதியிலே இருக்கக்கூடிய விவசாயிகள் எல்லாம் கடுமையாகப் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிறது.

அதேபோல், கடலூரிலே உள்ள, சிப்காட்டிலே இருக்கக்கூடிய இரசாயனத் தொழிற்சாலை மூலமாக வெளிவரக்கூடிய வாயுவினால், அங்கே துர்வாசனை வீசுகிறது. அந்தப் பகுதியை, பஸ்களிலே, கார்களிலே கடந்து செல்லும்போதுகூட, அந்த வாயுவை முகர்ந்தால், தலைவலி உண்டாகிறது. எனவே, மாசுக் கட்டுப்பாட்டு வாரியம், தகுந்த முறையில் அந்த ஆலையைப் பரிசோதித்து, அம்மாதிரியான உடற்கேடுகளை விளைவிக்கக்கூடிய தொழிற்சாலைகள் எதுவாக



1998 ஏப்ரல் 20] [திரு. அ.வ. அப்துல் நாசர்]

இருந்தாலும், அதன்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பளித்த, பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள் நிருவாகம் எண் 5 பத்திரப் பதிவு எண் 6, ஊரகத் தொழில்கள் எண் 47, ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு எண் 59 ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில், 1996-ஆம் ஆண்டு முதல் இந்த அரசு, முத்திரைத் தாள்களை, சார் பதிவாளர் அலுவலர்கள் மூலமாக விற்பனை செய்ய வேண்டும் . என்று அனுமதி அளித்த, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு பதிவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-35

தமிழக மக்கள் வாங்கும் சொத்துக்களை முத்திரைத்தாள்களில் எழுதிப் பதிவு செய்தால்தான் வாங்குபவர்களுக்குச் சொத்துரிமை கிடைக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மக்கள், பதிவுத் துறையில் சொத்துக்களைப் பதிவு செய்தால்தான் அவர்களுடைய ஆவணங்கள் காணாமல் போய்விட்டால்கூட சார் பதிவாளர் அலுவலகத்திலே அதனுடைய நகலை வாங்கிக் கொள்வதற்கு உதவியாக இருக்கும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒவ்வொரு சார் பதிவாளர் அலுவலகத்திலும், எல்லா வகையான முத்திரைத்தாள்களும் தங்குதடையின்றிக் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள மதிப்பீட்டிற்கும், விவசாயிகள் நிலம், வீடு போன்றவற்றை விற்பனை செய்யும்போது அவர்கள் குறிப்பிடுகின்ற மதிப்பீட்டிற்கும் அதிக வித்தியாசம் இருக்கிற காரணத்தினால் அந்தப்

[திரு. ந. கருப்பண்ண உடையார்] [1998 ஏப்ரல் 20

பகுதியில் என்ன விலை, அதாவது அதற்கு முந்தைய ஆண்டு அல்லது அதற்கு ஓரிரு மாதங்களுக்கு முன்னால் அந்தப் பகுதியில் அந்த சர்வே எண்ணில் எந்த விலைக்கு விற்றிருக்கிறார்களோ அல்லது வாங்கி இருக்கிறார்களோ அந்த மதிப்பீட்டின் அடிப்படையில் மற்ற நிலங்களையும் மதிப்பீடு செய்யவும், அதன் மூலம் விவசாயிகளாக இருந்தாலும், இதர வியாபாரிகளாக இருந்தாலும் அவர்கள் வாங்குகின்ற சொத்துக்களுக்கு உண்மையான முத்திரைத் தாள்களை வாங்கிப் பதிவு செய்வதற்கு வழிவகை செய்யவும் ஏற்ற வகையில் ஒரு குழுவை அமைத்து அதன் மூலம் அவர்களுக்கு நன்மை கிடைக்கச் செய்யவேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, ஒரு குடும்பத்திலே இருக்கிற தகப்பனார், புதல்வர்கள், சகோதரர்கள் எல்லாம் பாகப்பிரிவினை செய்து கொள்ளவேண்டுமென்ற நிலை வரும்போது அந்தச் சொத்துக்களை 4 சதவீதம் பெறுமானமுள்ள முத்திரைத் தாள்களில் பதிவு செய்ய வேண்டும் என்றிருந்ததை மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள், சென்ற ஆண்டே 2 சதவீதமாகக் குறைப்பதாகச் சொன்னார்கள். ஆனால் சார் பதிவாளர் அலுவலகங்களில் அந்தச் சொத்துக்களை 4 சதவீதம் பெறுமானமுள்ள முத்திரைத் தாள்களில் தான் பதிவு செய்ய வேண்டும் என்று கூறிவருகிறார்கள். இந்த ஆண்டு அதை 2 சதவீதமாகக் குறைத்திருப்பதாக அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த 2 சதவீதத்தையும் 1 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒருவர் தன்னுடைய நிலம், வீடு போன்றவற்றிற்கு வில்லங்கச் சான்று வேண்டுமென்று விண்ணப்பித்தால் அதை வழங்க சார் பதிவாளர் அலுவலகங்களில் 1 வாரம் அல்லது 15 தினங்கள் என்று காலம் நீட்டிக்கப்படுவதால் கடன் வாங்குபவர்களுக்கு அது இடையூறாக இருக்கிறது. எனவே, அதை மூன்று தினங்களுக்குள் கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கிராமப் பகுதிகளில் வீடுகள், மனைகள் வாங்கும்போது, நகரப் பகுதிகளில் ஒரு சதுர அடி என்ன விலையோ அந்த விலையையே கிராமப் பகுதிகளிலே இருக்கின்ற மனைகளுக்கும் அவர்கள் விதிக்கின்ற முறை இருக்கிறது. அதையும் மாற்றி அந்தந்தப் பகுதியில இருக்கின்ற விலையை ஒப்பிட்டு அதற்கு ஏற்றாற்போல் மதிப்பீடு செய்து கொடுக்க வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 20] [திரு. ந. கருப்பண்ண உடையார்]

தமிழ்நாட்டிலுள்ள மாவட்டப் பதிவு அலுவலகங்கள், சார் பதிவு அலுவலகங்களிலிருந்து வரும் புகார்களை உடனுக்குடன் நிவர்த்தி செய்தால்தான் சொத்து வாங்குபவர்களுக்கும், விற்பவர்களுக்கும் நலமாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பாபநாசம் தொகுதியைப் பொறுத்தவரையில் 4 சார் பதிவாளர் அலுவலகங்கள் உள்ளன. அதிலே சுவாமிமலை சார் பதிவாளர் அலுவலகத்திற்கு முன்புறம் இடவசதி இருக்கிறது. பொதுமக்கள் உட்காரவும், பத்திரப் பதிவுத் துறையைச் சேர்ந்த எழுத்தர்கள் உட்காரவும் வசதியாக அங்கே கட்டடம் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அய்யம்பேட்டையில் உள்ள சார் பதிவாளர் அலுவலகத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் இல்லாமல் வாடகைக் கட்டடத்தில் அலுவலகம் இயங்கி வருகிறது. அதற்கும் சொந்தக் கட்டடம் கட்ட இடம் இருக்கிறது. அதையும் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாபநாசம் சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ள சார் பதிவாளர் நீண்ட நாட்களாக விடுப்பிலே இருப்பதால் அங்கே வேறு ஒருவரை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கும்பகோணம் சார் பதிவாளர் அலுவலகத்தை மாவட்டப் பதிவாளர் அலுவலகமாக மாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அங்கு அதிகமான பத்திரங்கள் பதிவாகின்ற காரணத்தினாலும் அந்தப் பகுதியை ஒட்டியிருக்கின்ற பல கிராமங்கள் அதோடு இணைக்கப்பட்டிருக்கிற காரணத்தினாலும் அதை மாவட்டப் பதிவாளர் அலுவலகமாக மாற்றித் தருவதோடு அந்தப் பகுதியிலே இருக்கின்ற மேலக்காவிரி அல்லது காமராஜர் நகர் போன்ற இடங்களில் சார் பதிவாளர் அலுவலகங்களை அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒவ்வொரு சார் பதிவாளர் அலுவலகத்திலும் இருக்கின்ற சார் பதிவாளர் மற்றும் அலுவலர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

அடுத்து, சுவாமிமலையிலே உலோக விக்கிரக உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் மூலமாக உற்பத்தி செய்யப்படும் பொருட்களை

[திரு. ந. கருப்பண்ண உடையார்] [1998 ஏப்ரல் 20

பூம்புகார் நிறுவனம் கொள்முதல் செய்யாததால் அந்தச் சங்கத்திற்குப் பல இலட்சக்கணக்கான ரூபாய் நஷ்டம் ஏற்பட்டுள்ளது. 3 மாதத்திற்கு சுமார் 45 ஆயிரம் ரூபாய் வரை அந்தச் சங்கம் வட்டி கட்ட வேண்டிய நிலையில் இருந்து கொண்டிருக்கிறது. பூம்புகார் நிறுவனம் சுவாமிமலை உலோக விக்கிரக உற்பத்தியாளர் கூட்டுறவு குடிசைத் தொழில் சங்கத்திடமிருந்து உலோக விக்கிரகங்களைக் கொள்முதல் செய்ய வேண்டுமென்று அந்த சங்கத்திலிருந்து கோரிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்தச் சங்கம் 1958-ல் ஆரம்பிக்கப்பட்டு தற்போது 170 உறுப்பினர்களைக் கொண்டு செயல்பட்டு வருகிறது. அதற்கு தற்போது புதிய நிர்வாகிகள் பதவி ஏற்றுள்ளார்கள். சென்ற முறை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு சென்று பார்த்து அவர்களுக்கெல்லாம் போனஸ் வழங்கியிருக்கிறார்கள். அவர்கள் 10 இலட்சம் ரூபாய் வரை வங்கியில் கடன் பெற்று விக்கிரகங்கள் கொள்முதல் செய்து வைத்துள்ளார்கள். பூம்புகார் நிறுவனம் அவர்களுடைய பொருட்களை கொள்முதல் செய்யாமல், தனியார் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்வதன் காரணத்தால் அந்தச் சங்கத்திற்கு அதிகமான நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. அந்தச் சங்க உறுப்பினர்களுக்கெல்லாம் பல வகைகளில் நஷ்டம் ஏற்பட்டு அவர்களுக்கு இந்த ஆண்டு போனஸ் கிடைக்குமா என்ற நிலை இருந்துகொண்டிருக்கிறது. இதையெல்லாம் நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனத்தில் கொண்டு பூம்புகார் நிறுவனம் மூலமாக அவர்களுடைய பொருட்களை எல்லாம் கொள்முதல் செய்து அவர்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

குறிப்பாக இந்த Swamimalai Icon Manufacturers, Co-operative Cottage Industrial Society மூலமாக 1992-93-ல் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.34,18,000 ஆகும். அந்த ஆண்டு பூம்புகார் நிறுவனம் கொள்முதல் செய்தது ரூ.13,31,452-க்கான பொருட்களாகும். அதேபோல், 1993-94-ல் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் மதிப்பு ரூ.26,76,000 ஆகும். அந்த ஆண்டு பூம்புகார் நிறுவனம் கொள்முதல் செய்த பொருட்களின் மதிப்பு ரூ.17,89,173 ஆகும். அடுத்து, 1994-95-ல் அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களின் மதிப்பு ரூ.18,68,000 ஆகும். அந்த ஆண்டு பூம்புகார் நிறுவனம் கொள்முதல் செய்த பொருட்களின் மதிப்பு ரூ.14,580 ஆகும். 1995-96-ல் அவர்கள் உற்பத்தி செய்த



1998 ஏப்ரல் 20] [திரு. ந. கருப்பண்ண உடையார்]

பொருட்களின் மதிப்பு ரூ.23,28,000 ஆகும். அந்த ஆண்டு பூம்புகார் நிறுவனம் கொள்முதல் செய்த பொருட்களின் மதிப்பு ரூ.18,150 ஆகும். 1996-97-ல் அவர்கள் உற்பத்தி செய்த பொருட்களின் மதிப்பு ரூ.25,50,000 ஆகும். அந்த ஆண்டு பூம்புகார் நிறுவனம் கொள்முதல் செய்த பொருட்களின் மதிப்பு ரூ. 71,212 ஆகும். அவர்களிடத்தில் பொருட்கள் தேங்கியிருப்பதன் காரணமாக, உற்பத்தி செய்கின்றவர்கள் பொருட்களை உற்பத்தி செய்ய முடியாத சூழ்நிலை ஏற்பட்டு இருக்கிறது. மேலும், தேங்கிக்கிடக்கும் பொருட்களை பூம்புகார் நிறுவனம் கொள்முதல் செய்யாததன் காரணமாக அவர்களுக்கு வேலையில்லாத்திண்டாட்டம் ஏற்பட்டிருக்கின்றது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

சுவாமிமலையிலே உலோக நிறுவன பயிற்சி மையம் ஒன்று இருக்கிறது. அதிலே பல நண்பர்கள் பயிற்சி பெற்று வருகிறார்கள். அந்தப் பகுதியிலே வாழும் 500-க்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இந்த உலோக விக்கிரகத் தொழிலை நம்பி வாழ்ந்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த ஊரிலே தேவசேனாதிபதி என்பவர்கூட ஜனாதிபதியின் விருதைப் பெற்றிருக்கிறார். எனவே, இந்தத் தொழிலின் மீது முழுமையாகக் கவனம் செலுத்தி, அந்த ஏழைக் குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டிய அனைத்து உதவிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டுமென்று நான் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முத்திரைத் தாள்கள் அச்சிடும்போது, ரூபாய் நோட்டுகளில் எண்கள் போடுவதைப்போல, முத்திரைத் தாள்களிலும் எண்கள் போட்டால் தவறுகள் நடக்காமல் இருக்கும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் சில இடங்களில் மனைகள் போட்டு விற்கிறார்கள். அப்படி மனைகள் போட்டு விற்கும்போது, அரசின் அனுமதி பெற்ற மனைகளுக்குத்தான் பத்திரம் எழுதி பதிவு செய்யப்படும் என்ற ஓர் அறிவிப்பை அறிவிக்க வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 12-45

மேலும், பாபநாசம் தொகுதியிலே தேங்காய் அதிகமாக உற்பத்தியாகின்ற காரணத்தினால் தேங்காய் மட்டை மற்றும்

கொட்டாங்கச்சி ஆகியவற்றிலிருந்து பொருட்களைத் தயாரிப்பதற்கு ஒரு தொழிற்சாலை தொடங்க் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல அந்தப் பகுதியில் கரும்பு உற்பத்தி அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அந்தக் கரும்புச் சக்கையிலிருந்து பொருட்களைத் தயாரிக்கக்கூடிய ஒரு தொழிற்சாலை தொடங்கிட வேண்டுமென்றும் அதனால் பெண்களுக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என்பதையும் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும் அந்தப் பகுதியில் சோயா மொச்சை அதிகமாகக் கிடைக்கின்ற காரணத்தினால், சோயா மொச்சையிலிருந்து எண்ணெய் பிழியும் ஆலையொன்றை அமைக்க வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

• தஞ்சை மாவட்டத்திலே குறுவைப் பயிர் சாகுபடி நேரங்களிலே குறுவை வைக்கோல் வீணாகிவிடுகின்ற காரணத்தினால் அந்த வைக்கோலை வைத்து ஒரு தொழிற்சாலை தொடங்க வேண்டுமென்றும் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

பேராவூரணி சார் பதிவாளர் அலுவலகமானது ஆங்கிலேயர் காலத்திலே கட்டப்பட்ட கட்டடமாகும். தற்போது அது இடியும் தறுவாயில் உள்ளதால் புதிய கட்டடம் ஒன்றைக் கட்டித்தர ஆவன செய்ய வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தஞ்சை மாவட்டம் முழுவதும் விவசாயத்தையே நம்பி வாழுகின்ற பகுதியாக இருப்பதால், அந்தப் பகுதியிலே கிடைக்கின்ற விவசாயப் பொருட்களை வைத்து, அங்கே தொழிற்சாலைகள் தொடங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. ஊரகத் தொழில் மற்றும் பத்திரப் பதிவுத் துறைகளின் மானியத்திலே உரையாற்றுகின்ற வாய்ப்பினை நல்கிய எங்களது உயிரினும் மேலான தலைவர் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும் எங்களுக்கு, தோளோடு தோள் நின்று அவ்வப்போது



ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற அண்ணன் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து என்னுடைய உரையைத் துவங்குகிறேன்.

ஊரகத் தொழில் துறையைப் பொறுத்தவரையில், அவற்றிற்கு வழங்கப்பட்டு வந்த மானியத்தை 1988-ஆம் ஆண்டிலே மத்திய சர்க்கார் நிறுத்திய நேரத்திலே, மாநிலத்தின் சார்பாக அனைத்து சிறு தொழில்களுக்கும் மானியம் வழங்கப்படும் என்ற உத்தரவை வழங்கியவர் தமிழகத்தினுடைய இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன். இதை எடுத்துரைப்பதற்குக் காரணம், சிறு தொழில்கள் தமிழகத்திலே வளர்வதற்கு ஆரம்பக்காலம்தொட்டு அவர் ஆற்றிவந்திருக்கின்ற பணிகள் பல. சிறு தொழில்கள் மூலம் உற்பத்தி செய்கின்ற பொருட்களை அரசு கண்டிப்பாகக் கொள்முதல் செய்ய வேண்டுமென்ற உத்தரவையும் பிறப்பித்தவர்தான் இன்றைய முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

கடந்த 1996-ஆம் ஆண்டு. இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால், அரசுத் துறை நிறுவனங்களிலே சிறுதொழில் துறை மூலமாகக் கொள்முதல் செய்கின்ற வேளையிலே அரசுத் துறைகளுக்கு, பல்வேறு துறைகளுக்கு. குறிப்பாகச் சொல்லப்போனால், மின்சாரம், போக்குவரத்துத் துறை இன்னும் பல்வேறு அரசுத் துறை நிறுவனங்கள் அவர்கள் வாங்குகின்ற பொருட்களின் காரணமாக அரசுக்கு நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்க்கு இழப்பு ஏற்படுகிறது என்பதை அவர்கள் எடுத்து வைத்த வேளையிலே. ஓர் ஆண்டு காலத்திற்கு இதைப் பரீட்சார்த்தமாக பரிசோதித்துப் பார்க்கலாம் என்று முதல்வர் அவர்கள் அனுமதித்து, அதற்குப் பின்னால் இன்றையதினம் தமிழகத்திலே இருக்கின்ற மூன்று இலட்சம் சிறு தொழில் செய்யக்கூடியவர்களின் கோரிக்கையை ஏற்று, அரசுக்கு நஷ்டம் வந்தாலும் பரவாயில்லை, இலாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல், ஆனால் அதே சமயம் தமிழகத்திலே சிறு தொழில்கள் வளர வேண்டுமென்பதற்காக சிறு தொழில் உற்பத்தியாளர்களிடமிருந்து அத்தனையையும் அரசு கொள்முதல் செய்கின்ற, தேன் சிந்துகின்ற செய்தியை நம்முடைய சிறு தொழில் துறைக்கு வழங்கியிருக்கிறவர்தான்

நம்முடைய முதலமைச்சர் டாக்டர் கலைஞர் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் சிறு தொழில் துறையிலே தொழிற்பேட்டைகளை தமிழகம் முழுக்க—இந்த ஆட்சி பொறுப்பேற்று கிட்டத்தட்ட இரண்டு ஆண்டு காலம் முடிகின்ற இந்தத் தருவாயிலே அமைக்க வேண்டுமென்ற அவருடைய ஆசையை, இந்தத் துறை நிறைவேற்றுவதற்குத் தயாராக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-50

குறிப்பாக. இந்த அவையிலே பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதிக்கு ஒரு தொழிற்பேட்டை தரவேண்டும் என்று வலியுறுத்திக் கேட்டார்கள். தங்களது பகுதி, முழுக்க முழுக்க விவசாயத்தையே நம்பி இருக்கிற பகுதியாக இருக்கிற காரணத்தால் தொழிற்பேட்டை வரவேண்டுமென்று இரண்டு ஆண்டுக் காலமாகக் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் விடிவுகாலமாக இன்றையதினத்திலே. வருகின்ற ஜூன் மாதம் நம்முடைய முதல்வர் அவர்களுடைய பவள விழா ஆரம்பிக்கின்ற இந்தக் காலக்கட்டத்திலே தமிழ்நாட்டிலே 50 இடங்களிலே சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் மூலமாக — 1996 ஆம் ஆண்டிலே இந்த அரசு பொறுப்பேற்றபோது ஒன்றே முக்கால் கோடி ரூபாய் நஷ்டத்திலே இயங்கி வந்த சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் இன்றையதினத்திலே இலாபத்தை ஈட்டி. 50 இடங்களிலே தொழிற்பேட்டைகள் தொடங்குவதற்கு தன்னுடைய கையிருப்பாக 18 கோடிக்கு மேல் சேர்த்து மத்திய அரசினுடைய வங்கியான சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் மூலமாக — SIDBI மூலமாக— கடனாகப் பெற்று — 10 ஏக்கரிலிருந்து 100 ஏக்கர் வரை 50 இடங்களிலே தொழிற்பேட்டைகளை இந்த ஆண்டில் அமைக்க இருக்கின்றோம் என்ற நல்ல செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, அந்தத் தொழிற்பேட்டைகள் அமைப்பதற்கு வாய்ப்புள்ள இடங்களையும் நான் இந்த நேரத்திலே பட்டியலிட்டுச் சொல்லாமல் இருக்கமுடியாது. கிட்டத்திட்ட 17 இடங்கள் அதற்காக



எங்களால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அதிலே குறிப்பாக, காஞ்சிபுரம் மாவட்டத்திலே, ஆலத்தூரிலே, வருகின்ற ஆண்டிலே தொழிற்பேட்டை அமைக்கின்ற பணியினைத் துவங்க இருக்கின்றோம் என்ற செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வன்னிவேடு, மலுமிச்சம்பட்டி, திருமுடிவாக்கம், விச்சூர், இருங்காட்டுக்கோட்டை, திருப்பெரும்புதூர், போலுப்பள்ளி, ஆசனூர், ஓசூர், துவாக்குடி, செய்யார், பெருந்துறை, நிலக்கோட்டை, கங்கைகொண்டான், ஆவடி, கிழக்காரதுகுடி, (திருவாரூர் மாவட்டம்) ஆகிய இடங்களிலே ஒரு மாத காலத்திற்குள்ளாக அங்கேயிருக்கின்ற இடங்களை உடனுக்குடன் கையகப்படுத்திட அதற்குரிய பணமும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் தொழிற்பேட்டைகள் தொடங்குவதற்கான பணிகள் தொடங்கப்படும் என்ற செய்தியையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மற்ற உறுப்பினர்கள் தெரிவிக்கவில்லை என்று நினைக்கலாம். 50 இடங்களில், 17 இடங்களைத்தான் அறிவித்திருக்கின்றோம். மீதம் 33 இடங்களைப் பொறுத்தவரை, மாண்புமிகு உறுப்பினர்களுடைய கோரிக்கையை ஏற்று, அந்த இடங்களிலேயும் தொடங்குவதற்கு நாங்கள் ஆவன செய்வோம் என்பதையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இதுபோக, கடந்த மானியக் கோரிக்கையின்போது நான் உரையாற்றுகையில், படித்து, வேலையில்லாமல் இருக்கின்ற இளைஞர்கள் 20 ஆயிரம் பேருக்கு ஆவண எழுத்தர் பரிட்சை நடத்தி அவர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குவோம் என்று சொன்னேன். இன்றையதினத்திலே 20 ஆயிரம் பேர் ஆவண எழுத்தர்களாகத் தேர்வு செய்யப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மேலும், முத்திரைத் தாள் விற்பனையாளர்களைப் பொறுத்தவரையில், சுமார் 1500 இடங்களுக்கு ஆட்கள் நியமிக்கப்படாமல் இருக்கின்றார்கள். அந்த 1,500 இடங்களுக்கு மனுக்கள் வரவில்லை. ஆகவே, அதிகமாகத் தேவையிருக்கின்ற இடங்களில் இந்த முத்திரைத்தாள் விற்பன்னையாளர்கள் உரிமத்தை நாங்கள் வழங்கிய உடனேயே, தேவையிருக்கின்ற இடங்களுக்கு

அவர்கள் மாற்றிக் கொள்ளலாம் என்ற அனுமதியும் தரப்படும் என்று இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்த அரசைப் பொறுத்தவரை, கடந்த முறை, நம்முடைய முதல்வர் அவர்கள் கிராமப்புறங்களில் 1,000 ரூபாய் வரை பத்திரம் பதிவு செய்கின்ற ஏழை எளியவர்களுக்கு முத்திரை தீர்வையிலிருந்து விலக்களிக்கலாம் என்று அறிவித்தார்கள். இந்த ஆண்டு, கிட்டத்தட்ட 30 ஆயிரம் பேர்கள் பயனடையக்கூடிய அளவுக்கு, அரசுக்கு சுமார் 1 கோடி ரூபாய்க்கு மேல் இழப்பு வந்தாலும் பரவாயில்லை என்று முடிவு செய்து, 3 ஆயிரம் ரூபாய் வரை பத்திரம் பதிவு செய்யும் ஏழை எளியவர்களுக்கு முத்திரைத் தீர்வையிலிருந்து விலக்களிக்கலாம் என்ற உத்தரவை இன்றையதினம் முதல்வர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

அதுமட்டுமல்ல, இங்கே ஏழு மாண்புமிகு உறுப்பினர்கள் பேசியபோது அவர்கள் ஒன்றை எடுத்துச் சொன்னார்கள். அவர்கள் மிகவும் குறிப்பாக எடுத்துச் சொன்னது என்னவென்றால், வழிகாட்டி மதிப்பீடு கிராமப்புறங்களில் வைக்கப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். தமிழ்நாட்டில் உள்ள அனைத்து சார் பதிவாளர் அலுவலகங்களிலும் வைக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட்டு, அதற்காகப் பணம் ஒதுக்கீடும் செய்யப்பட்டிருக்கிறது. ஆங்காங்கே இருக்கக்கூடிய பொது இடங்களில் வைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. Chamber of Commerce இருந்தால் அங்கே வைக்கலாம்; அல்லது பொது இடங்களில், அதாவது விவசாயச் சங்கம் இருந்தால் அங்கே வைக்கலாம்; ஊராட்சி மன்றங்களில் கூட வைக்கலாம் என்பதற்கு அனுமதி வழங்கியிருக்கிறோம். அப்படி வைக்கப்படவில்லை என்று யாராவது சுட்டிக்காட்டினால், நிச்சயமாக இந்தத் துறை நடவடிக்கை எடுக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-55

ஒருவர் பத்திரப் பதிவு செய்யும்போது, ஒரு சென்ட்டுக்கு 1000 ரூபாய் வழிகாட்டி மதிப்பீடு என்றால், அதை அவர் 10,000 ரூபாய்க்குப் பதிவு செய்தால், உடனே அதன் மதிப்பீடு 10,000 ரூபாயாக ஆகிறது என்று சதுர அடியில் கணக்குப் போட்டுச்



சொன்னார்கள். நான் கடந்த முறை பேசும்போதுகூடச் சொன்னேன், கூடுதலாக இருந்தால், அது உடனடியாகத் தெரிவிக்கப்பட்டால், அதற்கென்று அமைக்கப்பட்டிருக்கின்ற குழு பார்வையிட்டு திருத்தம் செய்கிறது. திருமங்கலம், திருப்போரூர் போன்ற இடங்களில் சுட்டிக்காட்டப்பட்டு, திருத்தம் செய்யப்பட்டது. தமிழ்நாட்டில் எங்கெங்கே சுட்டிக்காட்டுகிறார்களோ, அந்த இடங்களில் வழிகாட்டி மதிப்பீட்டை அன்றையதினத்திலே திருத்த உடனடியாக ஆணையிட்டு, அதிகாரிகளால் பார்வையிடப்பெற்று, நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. இந்தத் துறையின் தலைவரேகூடப் பார்வையிட்டு, புகார்கள் நிவர்த்தி செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, எந்த உறுப்பினரும் அவருடைய தொகுதியில் எந்த ஒரு பகுதியிலாவது அந்தக் குறைபாடு இருக்குமானால், அதை எங்களுக்குச் சுட்டிக்காட்டினால் நடவடிக்கை எடுக்கத் தயாராக இருக்கிறோம். இருந்தபோதிலும், அந்தக் கஷ்டம் இனி வேண்டாம் என்று ஒரு புதிய முறையைக் கொண்டு வந்திருக்கிறோம். வழிகாட்டி மதிப்பீடு 1,000 ரூபாய் என்றால், அடுத்து எப்போது அரசு மறுநிர்ணயம் செய்கிறதோ அது வரையில்—ஒரு வருடத்திற்கு ஒரு முறை மறுநிர்ணயம் செய்யப்படுகிறது, பொதுவாக ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதியிலிருந்து மறுநிர்ணயம் செய்வார்கள்; நகராட்சியாக, மாநகராட்சியாக இருந்தால், வருடத்திற்கு ஒரு முறை revision செய்வது வழக்கம். அந்த அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும், எவ்வளவு கூடுதலாகப் பதிவு செய்திருந்தபோதிலும், அந்த—உயர்ந்த விலையில் பதிவு செய்ய வேண்டிய அவசியம் இல்லை என்று அரசு உத்தரவிட்டு இருக்கிறது என்ற நல்ல செய்தியை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அரசு மதிப்பீடு எவ்வளவு என்பதை, அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ள புத்தகத்தைப் பார்த்துத் தெரிந்துகொள்ளலாம். ஒரு பைசாகூடக் கூடுதலாகக் கொடுக்க வேண்டிய அவசியம் வராது. சார் பதிவாளரைப் பார்க்க வேண்டியதில்லை; அதற்கு அவசியமும் இல்லை. ஓராண்டு காலத்தில் அந்தப் புத்தகத்தில் என்ன வழிகாட்டி மதிப்பீடு இருக்கிறதோ, அதே மதிப்பில் பதிவு செய்தால் போதும். யாருடைய தயவும் பதிவு செய்பவர்களுக்குத் தேவையில்லை என்பதைக் கருதித்தான் இந்த அரசு அறிவித்திருக்கிறது.

பதிவுத் துறை அதிக வருவாய் கொடுத்த போதிலும், கட்டட வசதிகள் போதுமான அளவில் இல்லாதது ஒரு குறைபாடு; நீண்ட நாட்களாக இருக்கின்ற குறைபாடு. நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த ஆண்டு 10 சார் பதிவாளர் அலுவலகங்களில் 10 கட்டடங்கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். தமிழ்நாட்டில் மொத்தம் 576 சார் பதிவாளர் அலுவலகங்கள் இருக்கின்றன. புதியதாக 10 கட்டடங்கள் கட்டுவதற்கு, நம்முடைய முதல்வர் அவர்கள் அனுமதி வழங்கியிருக்கிறார்கள்.

அதைப்போல 5 புதிய சார் பதிவாளர் அலுவலகங்களைத் திறப்பதற்கும் ஆணையிட்டிருக்கிறோம். இங்கே பல்வேறு நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக மாவட்ட அளவில் இருக்கக்கூடிய பதிவகங்களை இரண்டாகப் பிரித்து, புதிய மாவட்டப் பதிவகங்கள் அமைக்க வேண்டுமென்று கேட்டார்கள். அதிலே தஞ்சை மாவட்டத்தில், நிர்வாகச் சீர்திருத்தம் கருதி, வருகின்ற ஆண்டிலே கும்பகோணத்திலே ஒரு புதிய மாவட்டப் பதிவாளர் அலுவலகம் செயல்படுத்தப்படும் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு உறுப்பினர் குழந்தை தமிழரசன் அவர்களின் வேண்டுகளுக்கிணங்க, கள்ளக்குறிச்சியிலுள்ள மாவட்டப் பதிவகத்தை இரண்டாகப் பிரித்து விருத்தாசலத்தில் ஒரு புதிய மாவட்ட பதிவாளர் அலுவலகம் செயல்படும் என்பதையும், சேலம் பதிவு மாவட்டத்தைப் பிரித்து சேலம் கிழக்கு மற்றும் சேலம் மேற்கு என இரண்டு பதிவு மாவட்டங்களாகச் செயல்படும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பல உறுப்பினர்கள் பேசினார்கள். அக்காள் பொன்னம்மாள் அவர்கள் பேசியபோது, வத்தலகுண்டில் இருக்கக்கூடிய சிட்கோ தொழிற்பேட்டை காலியாக இருக்கிறது என்று கூறினார்கள். அங்கே இருக்கின்ற தொழிற்பேட்டையில், நான்கு கட்டடங்கள் இருக்கின்றன. இரண்டு கட்டடங்கள் R.M.T.C. போக்குவரத்துக் கழகத்திற்கு வழங்கியிருக்கிறோம். மற்ற இரண்டு கட்டடங்களில் இயங்கி வந்த



ஃபர்னஸ் தொழிற்சாலை எடுக்கப்பட்டுவிட்டதால், அங்கே தற்சமயம் இலங்கை அகதிகள் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போல ஒருவருடைய சொத்தை இன்னொருவர் பதிவு செய்தால் அதற்கு என்ன பாதுகாப்பு என்று கேட்டார்கள். அதற்குச் சட்டத்திலே போதுமான பாதுகாப்பு இருக்கிறது. சட்டப்படி நடவடிக்கை எடுக்க ஏதுவாக சட்டத்தில் வழிவகைகள் இருக்கின்றன. விவசாயத்தை அடிப்படையாக வைத்து சிறு தொழில்கள் தொடங்கப்படும் என்று 1990-லே இன்றைய முதல்வர் அவர்கள் நிலக்கோட்டைக்கு வருகை தந்தபோது அறிவித்தார்கள். அதே அடிப்படையிலே 'டேசிட்' நிறுவனம் அங்கே எடுத்து இருக்கின்ற நிலத்திலே, சிட்கோவும் 30 ஏக்கர் நிலத்தை எடுத்து அங்கே தொழிற்பேட்டை அமைப்பதற்குத் தயாராக இருக்கின்ற செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-00

அதேபோல அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் அசோகன் அவர்கள் தெரிவித்தபோது, D.I.C. கடன் தருவதிலே பல்வேறு குறைபாடுகளை இங்கே சுட்டிக்காட்டினார்கள். தமிழகத்திலே, பிரதமர் சுய வேலைவாய்ப்புத் திட்டத்திலே சரியாகக் கடன்கள் வழங்கப்படவில்லை என்ற குறையை பெரும்பாலான உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்கள்கூட பிரதமருடைய சுய வேலைவாய்ப்புத் திட்டம் எந்த அளவிற்குச் செயல்படுகிறது என்று கடந்த ஆண்டு என்னிடத்திலே கேட்டார்கள். கடந்த ஆண்டு தமிழகத்திற்குக் குறியீடு 21,800. ஒப்பளிக்கப்பட்டவை 15,296, வழங்கப்பட்டவை 14,784. ஆக சாதனை 70 சதவீதம். 1997-98 ஆம் ஆண்டிலே தமிழகத்திற்கு குறியீடு 18,500. ஒப்பளிக்கப்பட்டவை 16,247. வழங்கப்பட்டவை 6,048. இன்றையதினம் சாதனை கிட்டத்தட்ட 87.82 சதவீதம். பிரதமருடைய சுய வேலைவாய்ப்புத் திட்டம் 1993 ஆம் ஆண்டிலே தொடங்கப்பட்டு 10 இலட்சம் படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க

[திரு. இ. பெரியசாமி] [1998 ஏப்ரல் 20

வேண்டும் என்ற வகையில் அந்தத் திட்டம் இந்தியா முழுவதும் எல்லா மாநிலங்களிலும் இருக்கின்றது. ஆனால், எல்லா மாநிலங்களையும் ஒப்பிட்டுப் பார்க்கின்ற வேளையிலே இந்தத் திட்டம் செயல்படுத்தப்படுகின்ற முறையிலே தமிழகம் இன்றையதினத்திலே முதல் நிலையைப் பெற்று இருக்கிறது என்ற செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதேபோல இங்கே பேசிய திரு. குழந்தை. தமிழரசன் அவர்கள். குறைந்த மதிப்பீட்டிலே பதியக்கூடிய 47-ஏ-ன்கீழ் வசூல் செய்வதிலே மிகக் குறைவாக, அரசு அலுவலர்கள்-பத்திரப் பதிவுத் துறை அலுவலர்களுடைய அக்கறையின்மை காரணமாக அரசுக்கு வருகின்ற வருவாய் குறைந்து இருப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள். நான் இங்கே ஒரு புள்ளி விவரத்தைத் தர விரும்புகிறேன். இந்த அரசு பொறுப்பேற்றதற்குப் பின்னால் கிட்டத்தட்ட 9 தனித் துணை ஆட்சியர்களை கூடுதலாக நியமித்து. அதேபோல் தாசில்தார்கள். அவர்களுக்குக் கீழ் பணியாற்றுகின்றவர்களை நியமித்து, ஓராண்டிலே 47-ஏ-ன்கீழ் உள்ள வழக்குகள் 1 இலட்சத்து 78 ஆயிரம் வழக்குகள். அவை—ஒரே ஆண்டிலே முடிக்கப்படவேண்டும்— வழக்குகள் 10 வருஷம், 15 வருஷம பெண்டிங்கிலே இருந்தன— அவை ஓராண்டிலே முடிக்கப்பட வேண்டும்—என்று ஒரு இலக்கு வைத்து, அதற்கு முதலமைச்சர் அவர்களின் அனுமதி வாங்கியிருக்கிறோம். இதற்கு முன்பு இருந்த ஆண்டுகளில் அதிகபட்சம் மொத்தம் 47-ஏ-ல் வரவேண்டிய வருவாயில் 100-க்கு 21 ரூபாய் 64 காசுகள் தான் வசூல் பண்ணினார்கள்: 100 ரூபாய் அரசுக்கு வரவேண்டிய வருவாய் என்றால், அதிலே வசூல் செய்த தொகை விழுக்காடு கணக்கிலே ரூ.21.64, 1996-97-ல் இந்த அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே எடுக்கப்பட்ட உரிய தகுதியான நடவடிக்கையின் காரணமாக, தீவிர நடவடிக்கையின் காரணமாக, 1996-97-ல் அந்த விழுக்காடு ரூ.21.24-ல் இருந்து ரூ.27.45 ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அந்தத் தொகை ரூ.33.26 கோடி. 1997-98 ஆம் ஆண்டிலே அந்த விழுக்காடு ரூ.37.50 ஆக உயர்த்தப்பட்டு இருக்கிறது: அந்தத் தொகை ரூ.39.48 கோடி. தேர்தலே நடக்காமல் இருந்திருந்தால் கிட்டத்தட்ட 100 கோடிக்கு



1998 ஏப்ரல் 20] [திரு. இ. பெரியசாமி]

50 கோடி வசூல் பண்ணி இருப்போம். விழுக்காடு ரூ.37.50 வந்து இருக்கிறது. ரூ.39.48 கோடி இந்த ஆண்டு வசூல் பண்ணி இருக்கிறோம். 1½ மாத கா்லம் தேர்தல் பணிக்குச் சென்ற காரணத்தால் அவர்கள் முழுமையாகச் சில வழக்குகளை முடிக்க முடியாத காரணத்தால் — நாங்கள் 50 விழுக்காடு எட்டிவிடுவோம் என்று எதிர்பார்த்தோம்: அது குறைவாக 100-க்கு ரூ.37.50 ஆக வந்திருக்கிறது. ஆனால் கடந்த கால ஆட்சியைவிட இன்றையதினம் 47-ஏ-ல் அரசுக்கு வராத வருவாயாக இருந்த வருமானத்தை இந்த அரசு இரண்டு மடங்கு உயர்த்தி இருக்கிறது என்ற செய்தியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சிறு தொழில்களைப் பொறுத்தவரையில், செயற்கை வைரம் தீட்டுகின்ற தொழிற்சாலை, தமிழக முதல்வர் அவர்களால் கடந்த முறை திருச்சியிலே ஆரம்பிக்கப்பட்ட ஜெம் பார்க், பின்பு நசிந்துவிட்டது. அக்காள் பொன்னம்மாள் பேசியதுபோல, அந்தத் தொழிலில் பெண்கள்தான் அதிகமாக ஈடுபட்டு இருக்கிறார்கள். அந்தத் தொழிலிலே ஈடுபட்டு இருந்தவர்களைப் பார்த்தால், அந்தத் தொழில் நசிந்துபோய், பல மாவட்டங்களில் அந்தத் தொழிலில் ஈடுபட்டவர்களுக்குப் பணி இல்லை. அதனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள் இதற்கென்று ஒரு கமிட்டியை அமைத்து அந்தக் கமிட்டியினுடைய அறிக்கையும் அரசுக்கு வரப்பெற்று, வெகு விரைவிலே திருச்சியில் மீண்டும் அந்த ஜெம் பார்க் முழு வடிவத்தோடு மிகச் சிறப்பான முறையில் செயல்படுவதற்கான நடவடிக்கைகள் தொடங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-05

இதுதவிர, தொழில் நுட்பக் குழுமம் ஒன்று அமைக்கப்பட்டு இருக்கிறது. நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மற்றும் முன்னாள் மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்கள் ஆகிய இரண்டு பேரும் எடுத்த நடவடிக்கையின் காரணமாக, Cad-Cam-Computer Aided Design And Manufacutre என்ற அமைப்பு சென்னையில் உருவாகியிருக்கிறது. இதற்கு முன் இதுபோன்ற குழுமம் மும்பையில்தான் இருந்தது. இப்போது

[திரு. இ. பெரியசாமி] [1998 ஏப்ரல் 20

நமது முதல்வர் அவர்களின் முயற்சியால், முன்னாள் மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்களின் முயற்சியால், தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையிலே உருவாகியிருக்கிறது. கார்கள் போன்ற வாகனங்களுக்குத் தேவையான பானட், சைடு கதவுகள், கிரில்கள் மற்றும் உள் அமைப்புகளான உலோகத்தால் உருவாகக்கூடிய அத்தகைய அமைப்புகளின் டிசைன்களை கம்ப்யூட்டர் மூலம் உருவாக்குவதற்கான இத்தகைய அமைப்பு மும்பையில்தான் இதுவரை இருந்தது. இன்றைக்கு அதுபோன்ற தொழில்நுட்பம் இங்கே அமைக்கப்பட்டு, ஹூண்டாய் கார் தொழிற்சாலை, ஃபோர்டு கார் தொழிற்சாலைகளுக்குப் பயன்படும் வகையில் இங்கே தமிழ்நாட்டில், சென்னையில் வந்திருக்கிறது. இன்னும் பல தொழிற்சாலைகள் வர இருக்கின்றன. ஆகவே இந்தத் தொழிற்சாலைகளுக்குத் தேவையான உபகரணங்களைத் தயாரிக்கும் Ancillary units - சிறு தொழிற் கூடங்களை -- பல இலட்சக்கணக்கான அளவில் உருவாக்குவதற்குப் போதிய வடிவமைப்புகளை உருவாக்குவதற்கு, அதற்குத் தகுந்த தொழில் நுட்பம் தமிழ்நாட்டில் இல்லை. ஆகவேதான், நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பெருமுயற்சியின் காரணமாக, முன்னாள் மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்களின் பெருமுயற்சியின் காரணமாக, தமிழ்நாட்டுக்கு இந்த Cad-Cam என்ற அமைப்பை 43 கோடி ரூபாயில் நிர்ணயித்திருக்கிறார்கள். இந்தத் தொழில்நுட்பத்தின் மூலம், இங்கேயே, தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையிலேயே இதுபோன்ற தொழில்களின் மேம்பாட்டைப் பெறுகின்ற வாய்ப்பை உருவாக்கியது இந்த அரசு என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி).

அதுமட்டுமல்ல, இன்றைக்கு Technology mission என்ற தொழில் நுட்பக் குழுமத்தை ஏற்படுத்தியிருக்கிறோம். அந்தத் தொழில் நுட்பக் குழுமத்தில், சிறு தொழில் செய்கின்றவர்கள், அவர்கள் செய்கின்ற தொழில்களுக்குரிய அறிவுரைகளையும் ஆலோசனைகளையும் பெறுவதற்காக, 'சிக்ரி' (CECRI), சென்னையிலே இருக்கக்கூடிய Indian Institute of Technology மற்றும் இத்தாலி, ஜெர்மனி போன்ற நாடுகளின் தொழில் நுட்ப உதவியோடு, இந்த டெக்னாலஜி மிஷனை ஏற்படுத்தி, அதன் மூலமாக பல்வேறு தொழில்நுட்பங்களைத் தமிழகத்தில் இருக்கக்கூடிய தொழில் செய்கின்றவர்களுக்கு வழங்குவதற்குரிய ஏற்பாடுகளை நாம் செய்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். உதாரணமாக நான் சொல்ல வேண்டுமானால்,



1998 ஏப்ரல் 20] [திரு. இ. பெரியசாமி]

இங்கே I.I.T.யில் இருக்கக்கூடிய பேராசிரியர் ஒருவர், வயர்லெஸ் டெலிபோனைத் தயாரித்தார். வயர்லெஸ் டெலிபோன் என்றால், வீட்டுக்குள்ளே கேபிள் வராது. தெருவில் போஸ்ட்டில் இருக்கும் கேபிளை வீட்டுக்குள் இழுக்காமல், வெறும் டெலிபோன் ரிசீவரை வைத்தே பேசலாம். இங்கே இருக்கக்கூடிய பேராசிரியர் ஒருவர் இந்தத் தொழில் நுட்பத்தைக் கண்டுபிடித்தார். தமிழ்நாட்டிலும் இந்தியத் திருநாட்டிலும் யாரும் இந்தத் தொழில்நுட்பத்தைப் பெற்றுகொள்ளவில்லை என்றாலும், சீனாவிலே கிட்டத்தட்ட 2 கோடி ரூபாய் கொடுத்து இதை வாங்கியிருக்கிறார்கள் என்றால், தமிழ்நாட்டில் சிறந்த தொழில்நுட்ப வல்லுநர்கள் இருக்கிறார்கள் என்பதற்கு இதுதான் சாட்சியம். ஆக அந்த அளவுக்கு தமிழ்நாட்டில் இதுபோன்ற டெக்னாலஜி மிஷன் நமக்குப் பெரும் பயனை அளிக்கிறது என்ற செய்தியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், படித்துப் பட்டம் பெற்ற இளைஞர்களுக்கு அப்பரன்டிஸ் பயிற்சி இந்த ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட இருக்கிறது. அதுபோக, நமது அரசுத் துறை நிறுவனங்களின் சார்பாகத் தயாரிக்கப்படும் மருந்துகளுக்குப் பகுப்பாய்வுக் கூடம் நிறுவப்பட்டு இருக்கிறது. இங்கே பேசிய திரு. அப்துல் நாசர் அவர்கள் சொன்னதைப்போல, பூட்டுத் தயாரிப்புக்கு தமிழகத்தில் சிறந்த இடம் திண்டுக்கல்தான். திண்டுக்கல்லில் உற்பத்தி செய்யப்படுகின்ற பூட்டுக்களை அரசாங்க நிறுவனங்கள் யாரும் வாங்குவதில்லை என்று சொன்னார்கள். அப்படி அல்ல. அது தவறு. இரயில்வே மற்றும் இருக்கக்கூடிய அத்தனை நிறுவனங்களும் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அந்தத் தொழில்நுட்பத்தை உயர்த்துவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது. அலிகாரில் தயாரிக்கப்படும் 'நவ்தால்' பூட்டுகளுக்கு நம்பர் போட்ட சாவி தயாரிக்கும் தலைசிறந்த தொழில்நுட்பம் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறதோ, அதுபோன்ற நல்ல தொழில்நுட்பத்தைத் திண்டுக்கல் பூட்டுக்கும் பயன்படுத்தும் வகையில், அதேபோல அலிகார் பூட்டுகள் எப்படி ஏற்றுமதித் தொழில் வணிகத்தில் ஈடுபடுத்தப்பட்டிருக்கிறதோ அதேபோல திண்டுக்கல் பூட்டுகளும் ஏற்றுமதித் தொழில் வணிகத்தில் உயர்ந்து வரும் வகையில், அந்தத் தொழில் நுட்பத்தை உயர்த்த வேண்டுமென்ற நல்ல எண்ணத்தோடு, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் இன்றையதினம் பூட்டுத் தொழிலைச் சீரமைப்பதற்கு, 10 இலட்சம் ரூபாய் வழங்கியிருக்கிறார்கள்

[திரு. இ. பெரியசாமி] [1998 ஏப்ரல் 20

என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-10

அதுபோக, மாவட்டத் தொழில் மையங்களிலே இருக்கக்கூடிய மாநில இயக்ககத்திற்குத் தேவையான தகவலை வழங்குவதற்கு தகவல் மேலாண்மை மையம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. அதுபோக, Integrated Infrastructure Development (IID) என்ற திட்டத்தில் கடந்த முறை நம்முடைய மத்திய தொழில் துறை அமைச்சர் அவர்களுடைய பெருமுயற்சியால் — இந்தத் திட்டத்திலே கடந்த 1991-96 ஆம் ஆண்டு வரை பெற்றது, ஒன்றேயொன்று, மதுரையிலே ஒரு மொத்த விற்பனை நிலையம் — சென்னைக்கு மட்டும் ரூ. 10 கோடி பெற்றுத் தந்தார்கள். அதிலே 4 கோடி ரூபாய் மாநில அரசு சிறு தொழில் கழகத்திற்கு மானியமாகக் கொடுத்திருக்கிறார்கள். மேலும், கோவையிலே இருக்கக்கூடிய அண்ணா தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு—தனியார் தொழில் கூட்டுறவுச் சங்கத்திற்கு —5 கோடி ரூபாய் ஒதுக்கியிருந்தார்கள். அந்த 5 கோடி ரூபாயில் 2 கோடி ரூபாய் மானியம், மீதி 3 கோடி ரூபாய் கடனுதவி. இதேபோல 3 இடங்களிலே அவர்கள் கடந்த முறை பெற்றுத் தந்த காரணத்தினால், இன்றையதினத்திலே சிறு தொழில் வளர்ச்சியானது தமிழகத்திலே ஓரளவிற்கு உயருகின்ற வாய்ப்பைப் பெற்றிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்.

அதேபோல, கிண்டி, அம்பத்தூர் ஆகிய இடங்களிலே நீண்ட நெடுங்காலமாக அங்கே உருவாக்கப்பட்ட தொழிற்பேட்டைகளுக்குரிய வசதிகள், சாலை வசதிகள் உட்பட, சீரமைக்கப்படாமல் இருந்தன. இப்போது அங்கே தொழில் செய்யக்கூடியவர்கள், அவர்களாகவே முன்வந்து அவற்றைத் தமிழ்நாட்டிலேயே அதை ஒரு Model Industrial Estate ஆக ஆக்க வேண்டும், யார் வந்து பார்த்தாலும், வெளி நாட்டவர்கள் வந்து பார்த்தாலும், பார்க்கின்ற அளவிற்கு உருவாக்கப்பட வேண்டும் என்ற ஒரு நல்ல எண்ணத்தோடு SIDCO தொழிற்பேட்டையோடு பேச்சுவார்த்தை நடத்தியிருக்கின்றார்கள். அதற்காக நாங்களும் ஒரு குறிப்பிட்ட அளவு பணத்தைத் தந்து கிண்டி, அம்பத்தூர் ஆகிய இடங்களிலே இருக்கின்ற தொழிற்பேட்டைகளை மேம்படுத்த வேண்டுமென்றும், சாலைகளை



1998 ஏப்ரல் 20] [திரு. இ. பெரியசாமி]

இரப்பர் சாலைகளாக மாற்ற வேண்டும் என்றும், இன்னும் பல பிற வசதிகளை ஏற்படுத்தித் தர வேண்டும் என்றும் அவர்கள் ஒப்பந்தம் செய்து, இப்போது அதைப் புனரமைக்கின்ற நிலை வந்திருக்கிறது. இன்னும் சொல்லப்போனால் புனரமைக்கப்பட்டு வெகு சீக்கிரத்திலேயே அது ஒரு Model Industrial Estate ஆக உருவாக்கப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

கடந்த முறை, நம்முடைய முதல்வர் அவர்கள் தொழில் நகர வளர்ச்சிப் பகுதிச் சட்டம் என்ற ஒரு சட்டத்தை அறிவித்தார்கள். அது ஒரு மிகச் சிறந்த சட்டம். அது Tamil Nadu Industrial Township Area Development Authority Act எனப்படும். அந்த வகையில் SIDCO கிண்டியையும் அம்பத்தூரையும் தொழில் துறை நகரங்களாக அறிவிக்க வேண்டுமென்ற கோரிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறது என்ற செய்தியையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, நமது தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தைப் பொறுத்த அளவில் பல்வேறு குறைபாடுகளை இங்கே சொன்னார்கள். அங்கே கடன் பெற்றவர்களுக்கு வட்டியைத் தள்ளுபடி செய்வதோடு, முதலைச் செலுத்தினால் அதைப் பெற்றுக்கொண்டு அந்தக் கடனிலிருந்து அவர்களுக்கு நிவாரணம் அளிக்க வேண்டும் என்றும் சொன்னார்கள். அதைப்போல Collateral Security 35-லிருந்து 50 சதவீதமாக இருப்பதாகச் சொன்னார்கள். மேலும் நடப்பு மூலதனம் தர வேண்டுமென்று சொன்னார்கள். இதுபோன்ற கோரிக்கைகளையெல்லாம், கடந்த 2 மாதத்திற்கு முன்னால் தொழில் துறையிலே இருக்கக் கூடிய பல்வேறு தரப்பினர் எங்களிடம் கேட்டுக் கொண்டதற்கிணங்க Collateral Security-யை 25 முதல் 30 சதவீதமாகக் குறைத்து இருக்கிறோம் என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள நான் விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). வட்டி வீதம் குறைக்கப்பட்டிருக்கின்றது. நடப்பு மூலதனமும் இன்றையதினத்திலே வழங்கப்பட்டிருக்கிறது. அதுபோக, ஏற்கெனவே ரூ. 1 இலட்சம் கடன் வாங்கியவர்கள் வட்டியோடு சேர்த்து ரூ. 2 இலட்சம் செலுத்த வேண்டியிருந்தால் — அதற்கு மேலும் கூடுதலாக ஒருசிலருக்கு வந்திருக்கின்றது. அதனால் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு இழப்பும் ஏற்பட்டிருக்கிறது — அவர்கள் அதைக் குறைக்க வேண்டுமென்று கோரினால் அப்படி

வருகின்ற கோரிக்கைகளை இந்த அரசு ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு, கிட்டத்தட்ட தனி வட்டியைத் தவிர, கூட்டு வட்டி, அபராத வட்டி ஆகியவற்றை இன்றைய தினத்திலே தள்ளுபடி செய்துகொண்டிருக்கிறோம் என்ற நல்ல செய்தியையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க அதிலும் குறிப்பாக இங்கே பேசிய நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்கள் சுவாமிமலையிலே இருக்கின்ற கைத்திறத் தொழிலுக்கு நல்ல வாய்ப்பை வழங்குவதோடு அந்தத் தொழிலை உயர்த்த வேண்டுமென்றும் சொன்னார்கள். அந்தக் கைத்திறத் தொழிலின் வளர்ச்சிக்காக இந்த ஆண்டு நமது அரசு கும்பகோணத்திலுள்ள சுவாமிமலை கிராமத்தில் ரூ. 60 இலட்சம் செலவிலே பஞ்சலோகச் சிலை உற்பத்தி விற்பனை மற்றும் வளர்ச்சி நிலையம் அமைக்க சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்ற செய்தியை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1-15

அதுபோக, தமிழ்நாடு கைத்தொழில் வளர்ச்சிக் கழகத்திற்காக விழுப்புரம் மாவட்டம் கள்ளக்குறிச்சியிலே உள்ள சந்தனமர சிற்ப உற்பத்திப் பயிற்சி நிலையத்திற்காக ரூ. 24 இலட்சம் செலவிலே சொந்தக் கட்டடம் இந்த ஆண்டு கட்டப்பட இருக்கிறது என்ற செய்தியை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கைத்திறத் தொழிலைப் பொறுத்தவரையில், இந்த ஆண்டு நல்ல இலாபத்திலே இயங்கி வருகிறது. அதேபோல 'TALCO. TALCO' வினுடைய நஷ்டத்தை வெகுவாகக் குறைத்திருக்கிறோம். அரசுத் துறை நிறுவனங்களிடமிருந்து சிறிதளவுகூட எங்களுக்கு வியாபாரம் கிடைக்கவில்லை என்றாலும், வெளி மார்க்கெட் விற்பனையின் மூலமாக இன்றையதினம் அதை உயர்த்தியிருக்கிறோம். அதேபோல TANSI யைப் பொறுத்தவரையில், இன்றையதினம் அதிலேயிருக்கிற நஷ்டத்தைக் குறைத்திருக்கிறோம். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம், தேனி மாவட்டத்திலே வெகு விரைவிலே ஒரு கிளையை ஆரம்பிக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன். இங்கே



பல்வேறு உறுப்பினர்கள் தாங்கள் பேசுகின்றபோதும், கொடுத்திருந்த வெட்டுத் தீர்மானங்களிலேயும் அவர்கள் சொல்லியிருக்கின்ற கருத்துகளுக்குப் பெரும்பாலும் நான் பதில் சொல்லி இருக்கின்றேன்.

உறுப்பினர்கள் இங்கே பேசியதிலே மிக முக்கியமான ஒன்றாக, இருப்பது வில்லங்க சர்டிபிகேட் வில்லங்க சட்டிபிகேட் வேண்டுமென்று கேட்டால், ஒரு நாளைக்குள் கிடைப்பதில்லை என்று சொன்னார்கள். இரண்டு மடங்கு தொகையைக் கொடுத்தால் ஒரே நாளில் கொடுக்க வேண்டுமென்று ஏற்கெனவே உத்தரவு போட்டிருக்கிறோம். ஏற்கெனவே இருக்கிற கட்டணத்திலே இரண்டு மடங்கு கொடுத்தால் ஒரே நாளில் கொடுத்துவிடுவார்கள். ஆனால் ஒரு மடங்கு கட்டணம் கொடுத்தால் 5 நாட்கள் ஆகும். வில்லங்க சர்டிபிகேட் பற்றி கடந்த முறை நான் இந்த அவையில் அறிவித்தபடி, 21 இடங்களிலே கணிப்பொறிகள் மூலமாக வில்லங்க சர்டிபிகேட் ½ மணி நேரத்தில் வாங்கி விடலாம்; சென்னை முழுவதும் இன்னும் ஒரு மாதத்திற்குள் இயங்கப் போகிறது. நாம் செய்யக்கூடிய கம்ப்யூட்டர் திட்டத்தின் மூலமாக இன்னும் ஒரு மாதத்தில் இங்கே வழங்கப்படவிருக்கிறது. தமிழ்நாட்டில் தஞ்சாவூர், மதுரை, திருச்சி, கோவை, சென்னை ஆகிய முக்கியமான இடங்களிலே ஒரு கோடி ரூபாய் கடந்த முறையே ஒதுக்கப்பட்டு, அந்தப் பணிகள் எல்லாம் முடிக்கப்பட்டு விட்டன. Data Entry மட்டும் இப்போது நடந்து கொண்டிருக்கிறது. 14 வருடத்துக்கான Data Entry இப்போது தயார் செய்யப்பட்டு வருகின்றது. அதன்மூலமாக 1/2 மணி நேரத்திலே வில்லங்கச் சான்றிதழ் பெறுவதற்கேற்ற வசதிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அக்காள் பொன்னம்மாள் அவர்கள்கூட பேசும்போது சொன்னார்கள், வருகின்றவர்கள் வெயிலிலே நிற்கிறார்கள், உட்காருவதற்கு இடம் இல்லையென்று. இப்போது கட்டப்படுகின்ற புதிய கட்டடங்களில் எல்லாம் யார் யார் வாடிக்கையாளர்களாக வருகின்றார்களோ - பத்திரம் எழுதுபவர்கள், கொடுப்பவர்கள் என்று - இப்படி வருகின்ற - - அவர்கள் எல்லாம் உள்ளேயே உட்கார்ந்து கொள்ளலாம். பத்திர அலுவலகத்திற்குள்ளேயே உட்காருகிற மாதிரி Sit-out போட்டுத்தான் கட்டடத்தினுடைய அமைப்பே இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், ஏற்கெனவே, City Improvement Trust என்ற பெயரில் பல்வேறு இடங்களில் சென்னையிலே வீடுகள் இருந்தன. அங்கிருந்தவர்களுக்கெல்லாம் அந்த வீடுகளை மாற்றிக்

[திரு. இரா. பெரியசாமி] [1998 ஏப்ரல் 20

கொடுத்திருக்கிறோம். இப்போது 20 வருடம், 15 வருடம் ஆயிற்று. அன்றைக்கு அதனுடைய மதிப்பீடு 3 ஆயிரம், 4 ஆயிரம் என்றால், இன்றைக்கு இலட்சக் கணக்கிலேகூட மதிப்பு இருக்கும். ஆனால் அன்றைக்கு என்ன மதிப்பு இருந்ததோ அந்த மதிப்பிலேயே அவர்களிடமிருந்து முத்திரைத் தீர்வையைப் பெற்றுக்கொண்டு, அவர்களுக்குப் பத்திரப் பதிவு செய்யலாம் என்ற உத்தரவையும், அரசு ஆணையையும் கடந்த வாரம் இந்த அரசு பிறப்பித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கோயம்புத்தூர் பற்றிச் சொன்னார்கள். கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியாற்றக்கூடிய ஊழியர்களுக்கு, ஏற்கெனவே அவர்களுக்கு கொடுத்திருக்கிற வீடுகளுக்கான விலையை அதிகமாக நிர்ணயித்திருப்பதை, கருணை உள்ளத்தோடு நமது தமிழக முதல்வர் அவர்கள் குறைத்து வழங்கலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். Sidco Industrial Estate-ல் இருக்கக்கூடிய குடியிருப்புகளுக்கும்கூட அதுபோல வழங்கலாம் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஆக, இந்த அரசைப் பொறுத்தவரையில், ஏழையெளிய மக்களுக்காக, அவர்கள் கேட்கின்ற அத்தனைச் சலுகைகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்து, இந்த மானியத்தின்மீது நமது உறுப்பினர்கள் கொடுத்திருக்கிற வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்று, இந்த மானியத்தை நிறைவேற்றித்தரக் கேட்டு அமைகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மணி இருந்தால் நீங்கள் பேசலாமா? சீக்கிரம் பேசுங்கள்.

பிற்பகல் 1-20

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மானியக் கோரிக்கையில் பேசும்போது பல உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டார்கள். அதாவது தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பாகச் சிறு தொழில்களுக்குக் கொடுக்கப்படும் கடன்கள்



1998 ஏப்ரல் 20]

20 இலட்சத்திற்கு மேல் இருந்தால், சென்னை வந்து, இங்கே தலைமையிடத்திலே அந்தக் கடனைப் பெறவேண்டும்; மாவட்ட அளவில் 20 இலட்சத்திற்குத்தான் அங்கே பெறவேண்டும் என்று இருக்கின்றது. சிறுதொழில்கள் வளர்ந்து வருகின்ற இந்தச் சூழ்நிலையில் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வர விரும்புவது - 20 இலட்சம் என்று இருப்பதை, 30 இலட்சம் வரையில் உயர்த்தி அதை மாவட்டத் தலைநகரங்களிலே பெற்றுக்கொள்ளலாம் என்பதாக உத்தரவிட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்-நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 5-முத்திரைத் தாள்கள்-நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"முத்திரைத் தாள்கள்-நிருவாகம் பற்றிய 5 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 6,48,96,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு வூரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 6 - ஆவணப் பதிவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 6-ஆவணப் பதிவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய. வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஆவணப் பதிவு பற்றிய 6 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.41,15,71,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



## (இ) கோரிக்கை எண் 47—ஊரகத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 47-ஊரகத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள்.

**திரு ஏ.எஸ். பொன்னம்மாள்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன், இருக்கையில் இல்லை.

திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஆர்.ஆர். சேகரன்.

**திரு. ஆர்.ஆர். சேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஆர்.ஆர். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ந. கருப்பண்ண உடையார்.

**திரு. ந. கருப்பண்ண உடையார்:** இல்லை.

[1998 ஏப்ரல் 20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. அ.வ. அப்துல் நாசர்.

**திரு. அ.வ. அப்துல் நாசர்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ.வ. அப்துல் நாசர் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்.

**திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.என். பாலசுப்பிரமணியன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஊரகத் தொழில்கள் பற்றிய 47 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.104,48,81,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



1998 ஏப்ரல் 20]

### (ச) கோரிக்கை எண் 59—ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 59-ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு பற்றிய 59 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 52,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் இன்று பிற்பகல் 2-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-23 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

[1998 ஏப்ரல் 20

பிற்பகல் 2-30

பிற்பகல் 2-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன்** அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

### (உ) கோரிக்கை எண் 26— கதர்-கிராமத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1998-99 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 26-கதர்-கிராமத் தொழில்கள். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.18,72,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 2677, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம் அறப்பாக்கம் கிராமத்தில் உள்ள கதர் கிராமத் தொழில் துறை காகித அட்டை ஆலை நலிந்துள்ளதை இலாபத்தில் நடத்த சிறப்பு நிதி ரூபாய் இரண்டு கோடி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,72,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3613, திரு. வி.கே. லட்சுமணன்.



1998 ஏப்ரல் 20]

***திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கதர்த் தொழிலில் ஆடம்பர நிர்வாகச் செலவுகளைக் குறைத்து நெசவாளர்கட்கு அதிக ஊதியம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,72,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1690, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26-ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,72,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3023, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி தொகுதி எடப்பாடி ஒன்றியப் பகுதியின் சித்தூரில் கதர்-கிராமத் தொழில் கூடம் தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,72,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1601, திரு. ஜி. கே. மணி. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3904, திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பதநீரைப் பாட்டில்களில் அடைத்து விற்பனை செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. பி.ஆர். சுந்தரம்] [1998 ஏப்ரல் 20

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,72,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1780, திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குன்னத்தூர் பகுதியில் பனைப் பொருட்களை அடிப்படையாகக் கொண்ட தொழில்களை அபிவிருத்தி செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,72,70,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1995, திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதிக்குட்பட்ட பஞ்சுகானிப்பட்டியில் கதர் வாரியத்தின் மூலம் பட்டுச் சேலை நெசவு மையம் ஆரம்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 18,72,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2240, திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேன் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்துக்கு, வருடா வருடம் சீசன் நேரத்தில், தேன் சேமித்து வைக்கும் வருடத்துக்கு ரூ. 50 இலட்சம் கடனாகக் கொடுக்க நிதி ஒதுக்காதது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



1998 ஏப்ரல் 20] [திரு. டி. மணி]

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.18,72,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய கொள்கைக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. அதில் தமிழில் உள்ள கொள்கைக் குறிப்புகளை @ இந்த அவையில் நான் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேடுகளில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, மாண்புமிகு உறுப்பினர்களுடைய அரிய கருத்துக்களுக்குப் பிறகு, என்னுடைய பதிலுரையை அளிக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன். எதிர்க்கட்சித் தலைவர் பேசவிருக்கிறார். ஆகையினால் நீங்கள் ஐந்து நிமிடத்தில் உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் ஆட்சிக் காலம் தொட்டு மிகச் சிறப்பாக கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக நடத்தப்பட்டு வந்த பல ஷோரூம்களில் இந்த வாரியத்தினுடைய ஆணை எண் 31, நாள் 21-3-1998-ன்படி 132 ஷோரூம்கள் மூடப்படுவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதற்கான காரணம் என்னவென்று தெரியவில்லை. இதை மாண்புமிகு அமைச்சரவர்கள் இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஏற்கெனவே உள்ள கிராமப்புறக் கைத்தொழில்களுக்கு எல்லாம் ஒரு வாய்ப்பு அளிக்க வேண்டும். குறைந்தபட்ச விலையிலே, தரமான பொருட்களை நாம் மக்களுக்கு வழங்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட இந்தக் கதர் கிராமத் தொழில்

@ 583 முதல் 598 வரையிலான பக்கங்களில் இணைப்பு-4ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

[திரு. சி. ஞானசேகரன்] [1998 ஏப்ரல் 20

வாரியத் தொழில்களுக்கு உட்பட்ட அத்துணைத் தொழில்களுக்கான ஷோரூம்கள் திடுதிப்பென்று மூடப்படுவதற்கு—244 ஷோரூம்களில் இப்போது 132 ஷோரூம்கள் மூடப்படுவதற்காக இந்த வாரியம் உத்தரவிட்டிருக்கிறது. உடனே எங்களுடைய வேலூர் மற்றும் மதுரை போன்ற இடங்களில் இருக்கக்கூடிய சில அங்காடிகளை எல்லாம் கொண்டுபோய் வேறு ஒரு அங்காடியோடு இணைப்பதற்கான ஆணையும் இது வழங்கப்பட்டிருக்கிறது. மிக இலாபகரமாக நடத்தப்பட்டு வந்த இந்தத் துறை திடீரென்று இந்த ஆண்டு இவ்வளவு நட்டத்திற்கு ஆளானதற்குக் காரணம் என்ன? ஏன் இந்த ஷோரூம்கள் எல்லாம் உடனடியாக மூடப்பட்டு, பிறகு, அது யாருக்குக் கொடுக்கப்பட இருக்கிறது? எதற்காக இதைக் காலி செய்தீர்கள் என்பதை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெளிவாக விளக்க வேண்டும். அதிலேகூட இந்தக் கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக இப்படிப் பல ஷோரூம்கள் மூடப்படுவதன்காரணமாக பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்களுடைய வேலைகளை எல்லாம் இழக்க வேண்டிய ஒரு நிலை ஏற்படும். கிராமத் தொழில்கள் எல்லாம் ஓரளவிற்கு நசிந்துபோகக்கூடிய நிலையும் ஏற்படும். இந்த அரசாங்கத்தின்மூலமாக இதுபோன்ற ஒரு வாரியத்தை அமைத்து நாம் அவர்களுக்கு ஆக்கமும், ஊக்கமும் அளிக்க வேண்டும். இன்னும் பல ஷோரூம்களைத் திறப்பதுதான் அரசாங்கத்தினுடைய நோக்கமாக இருக்கவேண்டுமேயொழிய, இருக்கக்கூடிய ஷோரூம்களை எல்லாம் மூடுவதற்கான மூடுவிழா செய்வதற்கு இந்த அரசு முன்வருமேயானால், இதுபோன்ற செயலால் துறைக்கு இருக்கக்கூடிய அந்தப் பெயரே கெட்டுவிடும். ஆகவே, இதுபோன்ற ஷோரூம்களை எல்லாம், நீங்கள் மூட ஏற்கெனவே இட்டிருக்கிற அந்த உத்தரவை வாபஸ் பெற்றுக் கொண்டு, அந்த ஷோரூம்களை எல்லாம் மீண்டும் இயக்கி வைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 2-35

அடுத்தபடியாக, இதே துறை, காவலர்களுக்கென்று ஏற்கெனவே ஷூ செய்து கொடுப்பதற்காக ஆர்டர் எல்லாம் எடுத்ததிலேகூட சில முறைகேடுகள் நடந்ததாகப் பத்திரிகையிலே பல செய்திகள் வந்தன. அதிலேகூட இதுபோன்ற காவலர்களுக்கு ஷூக்கள், பெல்ட்டுகள், கத்தி, துப்பாக்கி போன்றவற்றையெல்லாம் வைப்பதற்காகத் தயாரிக்கப்படுகின்ற உரைகள் இவற்றையெல்லாம் தயாரிப்பதிலேகூட



1998 ஏப்ரல் 20] [திரு. சி. ஞானசேகரன்]

அந்த "Grains" இருக்கக்கூடிய தோலுக்குப் பதிலாக 'ஸ்பில்ட்' தோலையெல்லாம் வாங்கி, அதிலே மிக மட்டமான ஷூக்களையெல்லாம் தயார் செய்ததன் விளைவாக, அந்த ஷீக்களைப் போடாமல் அதை அப்படியே யாராவது மூர்மார்கெட் கடைக்காரரைப் பார்த்து மிகக் குறைந்த விலைக்கு, 40 ரூபாய், 50 ரூபாய்க்கும் விற்று, பிறகு அவர்கள் தனியாகக் கடையிலே ஷூக்களை வாங்கிப் போடுகிறார்கள் என்ற ஒரு குறைபாடும் இருக்கிறது. தரமான ஷூக்களை கதர் வாரியம் அவர்களுக்கு வழங்கினால், அவர்கள் 2, 3 ஆண்டுகள் அதை உபயோகிப்பார்கள். அதை விட்டு, அவர்கள் தனியாகக் கடைகளில் சென்று வாங்கக்கூடிய நிலைமை இருக்கிறது. ஆகவே, இதுபோன்ற மிக மட்டமான ஷூக்களைத் துறை தயாரிக்கும் என்று சொன்னால், அது இந்த அரசிற்கும், அதேபோல் துறைக்கும் ஒரு கெட்ட பெயரைத்தான் கொண்டுவந்து சேர்க்குமேயொழிய ஒரு நல்ல பெயரை உருவாக்காது. இந்தத் துறை மேலும், மேலும் வளர வேண்டும் என்று சொன்னால், தரமான ஷூக்களை நீங்கள் உடனடியாகக் காவலர்களுக்கு வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, தனியாக டெண்டர் பெற்று, தோலை வாங்கி ஷூக்களைத் தயாரிப்பதற்குப் பதிலாக, இந்தத் துறை பெங்களூரிலே இருக்கக்கூடிய 'ரெடிமேட்' ஷூக்களை 160 ரூபாய்க்கு வாங்கி வந்து, இங்கே, அதையே 400 ரூபாய் என்று கணக்குக் காட்டி வந்ததாகவும் இங்கே புகார்கள் இருக்கின்றன. அந்தமாதிரி நடந்ததா என்பதை அவைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிக்க வேண்டும். இந்தத் துறை, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய காலகட்டத்தில் இன்னும் வளர்ச்சிபெற வேண்டுமேயொழிய அதை விடுத்து—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராக:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல கதர் வாரியத்தில் 298 கதர் அங்காடிகள் இருக்கின்றன. சில இடங்களில் அவை இலாபகரமாக இயங்குகின்றன. சில இடங்களில் நட்டத்திலே அவை இயங்குகின்றன. சில கடைகள், அங்காடிகள், வாடகைக் கட்டடத்திலே இயங்குகின்றன. இதில் விற்பனைக்கும், அதேநேரத்தில் அங்கே பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு வழங்குகின்ற சம்பளத்திற்கும் சம்பந்தமே இல்லாமல் இருக்கிறது. இதில் மும்பை காதி கமிஷன் ரூ.40,000-லிருந்து 75,000 வரைக்கும் நிதி வழங்கி, 71 அங்காடிகள் திறக்கப்பட்டன. அந்த 71 அங்காடிகளைச்

[திரு. அந்தியூர் ப. செல்வராசு] [1998 ஏப்ரல் 20

சேர்த்துத்தான் இந்த 298 அங்காடிகள் என்பது இன்றைக்கு 298 அங்காடிகளில் 33 அங்காடிகள் பெரும் நட்டத்தில் இயங்குவதாக புள்ளிவிவரக் கணக்கெடுத்து, அந்த அங்காடிகளை மூடுவதோடு, அந்த ஊழியர்களுக்குப் பணி நிரந்தரம் இல்லை என்ற நிலை இல்லை. பக்கத்தில் இருக்கின்ற அங்காடிகளில் அவர்கள் பணிபுரிவதற்கு, அவர்களுடைய வேலைக்கு உத்தரவாதம் அளிப்பதற்கு இந்த வாரியம் என்றைக்குமே கடமைப்பட்டிருக்கும். உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்றால், மதுரை மாநகரத்தில் இருக்கும் தமுக்கத்திலே ஒரு அங்காடி இருக்கிறது. மேல மாசி வீதியிலே ஒரு அங்காடி இருக்கிறது. தமுக்கத்தில் இருக்கிற அங்காடி பெரும் நட்டத்திலே இயங்கி வருகிறது. அந்த அங்காடியை மூடிவிட்டு, பக்கத்திலே இருக்கிற மேல மாசி வீதிக்கு மாற்றலாம் என்று முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. அப்படி முடிவு எடுக்கப்பட்டதன் விளைவாக, அங்கே பணிபுரிகின்ற ஊழியர்களுக்கு எந்தவித பணி நட்டமும் இல்லை. வாரியத்தில் வழங்குகின்ற ஊதியமும், எல்லாப் பணியும் வழங்குவதற்கு இந்த வாரியம் உத்தரவாதம் அளிக்கும் என்று இந்த மாமன்றத்திற்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் பேசுவதற்குக்கூட எழுதிக் கொடுக்கமாட்டேன் என்கிறீர்கள். அப்புறம் எதற்கு நீங்கள் இடையிலே எழுந்து நிற்கிறீர்கள். நீங்கள் உட்காருங்கள், பேசுவதற்கு நான் கூப்பிடுகிறேன். (குறுக்கீடு) இதிலே என்ன Point of Order?

**திரு. பி.என். வல்லரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை தமுக்கம் மைதானத்தில் அமைந்துள்ள கதர் விற்பனை நிலையம் உச்சபட்சமாக 30 இலட்சம் ரூபாய் அங்கே வருமானம் ஈட்ட வேண்டும். 28 இலட்ச ரூபாய்க்கு அங்கே வருமானம் ஈட்டப்பட்டிருக்கின்றது. எனவே, 30 இலட்சத்திற்கும் 28 இலட்சத்திற்கும் மிகப் பெரிய வேறுபாடு இல்லை என்று கருதுகிறேன். அப்படிப்பட்ட நிலையில், அந்தக் கதர் நிலையம் மூடப்பட வேண்டுமா என்பதுதான் என்னுடைய கேள்வி.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கடைசியாகப் பதில் சொல்லுங்கள்.



1998 ஏப்ரல் 20]

பிற்பகல் 2-40

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இந்த ஷோரூம் மூடப்பட்டாலும், வேறு இடத்திலே கொண்டுபோய் ஷோரூமைத் திறக்கிறோம்; அந்த இடத்திலே அவர்களுக்கு வேலைவாய்ப்பிருக்கிறது என்று தெரிவித்தார்கள். என்னுடைய கருத்து அந்தக் கோணத்தில் அல்ல. ஊழியர்களுக்கு மட்டுமல்ல, ஏற்கெனவே இதுபோன்று 132 ஷோரூம்களை நீங்கள் மூடுகிறீர்கள் என்று சொன்னால் அங்கு இருக்கக்கூடிய உற்பத்திப் பொருட்களை எல்லாம் விற்கக்கூடிய வாய்ப்பை இழந்துவிடப்போகிறீர்கள். அதனாலே பல்லாயிரக்கணக்கான கிராமத் தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடும். கிராமத் தொழில்கள் நசிந்து போகும். ஆகவே நீங்கள் இதுவரை நட்டத்திற்கான காரணத்தை ஆராய்ந்து பாருங்கள். முந்தைய ஆட்சியிலே ஷூக்களை வாங்குவதிலே ஏற்பட்ட ஊழலிலேகூட ஒரு பைல் இந்த ஆட்சியிலே குளோஸ் செய்யப்பட்டதாகச் சொல்கிறார்கள். ஏற்கெனவே அது ரெக்கவரி செய்திருக்க வேண்டும். வழக்கை நீங்கள் தொடர்ந்து நடத்தியிருக்க வேண்டும். ஏற்கெனவே போன ஆட்சியிலே நடந்த அந்த ஊழலுக்கு நீங்கள்—

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 132 அங்காடிகள் என்பது தவறு. 33 அங்காடிகள்தான் மூடப்படுவதாகப் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை என்று சொல்கிறார்கள். எங்களிடம் அந்த ஆர்டரே இருக்கிறது. வாரிய ஆணை எம்.எஸ்.எண். 31, நாள் 21-3-98. எந்தெந்த கடைகள் எல்லாம் குளோஸ் செய்யப்பட்டு— உதாரணத்திற்கு தியாகராயர் காலணி விற்பனை நிலையம் குளோஸ் செய்யப்பட்டு தியாகராயர் கதர் அங்காடியுடன் இணைக்கப்படுகிறது. அடுத்ததாக வேலூரிலே வேலூர் காலணி விற்பனை நிலையம் 6-வது எண். அது மூடப்பட்டு வேலூர் கதர் அங்காடியுடன் இணைக்கப்படுகிறது. காட்பாடி கிராம சில்ஃபா மூடப்பட்டு வேலூர் கதர் அங்காடியுடன் இணைக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் எண்ணிக்கையைத்தான் தவறு என்று கூறுகிறேன். 33 அங்காடிகளைத்தான் மூடுவதாக உத்தேசிக்கப்பட்டு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. 132 அல்ல.

[1998 ஏப்ரல் 20

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எண்ணிக்கை வேண்டுமானால் தவறாக இருக்கலாம். நீங்கள் மூடுவதற்காக ஏற்கெனவே ஆணையிட்டிருக்கிறீர்கள். அதைப் பரிசீலிக்க இருப்பதாக ஏன் மாற்றிச் சொல்கிறீர்கள்? ஏற்கெனவே ஆணை இருக்கிறது. 21-3-98-லே மூடுவதற்கே ஆணை போட்டாகிவிட்டது. அதுவும் என்னுடைய வேலூரில்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதனால் 33-ஐ 132 என்று நீங்கள் சொல்லுவதா? சீக்கிரம் பேசி முடியுங்கள், சார்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே 132 என்று சொன்னதால்தான் உண்மை ஏதோ கொஞ்சமாவது வெளியே வந்திருக்கிறது. அதற்காகவே நான் சிலவற்றை—

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏதோ உண்மையை அவர் மறைக்கிற மாதிரி நீங்கள் பேசிக்கொண்டிருக்கிறீர்கள். அது முறையல்ல. ஆணையிட்டதை அமைச்சர் எப்படி மறைக்க முடியும்?

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலனையில் இருப்பதாகக் கூறினார்கள். அதற்காகத்தான் சொன்னேன். அடுத்தபடியாக இந்தத் துறையில் ஏற்கெனவே சோப் தயாரிப்பதற்காகப் பல இலட்ச ரூபாய்களைக் கொண்டுபோய் முதலீடு செய்திருக்கிறார்கள். ஆனால் சோப் தயாரித்து அதை விற்காமலேயே விட்டுவிட்டிருக்கிறார்கள். அதேபோல காகிதத் துறைக்கு என்று ஏற்கெனவே இவர்கள் ரூபாயைச் செலவிட்டு அதை விற்காமல் விட்டிருக்கிறார்கள். இப்படித் தயாரித்த பொருள்கள் எல்லாம் ஏன் விற்காமல் போனது? அதற்கான காரணம் என்ன? காரணம், இவர்கள் நட்டம் நட்டம் என்று சொல்லி இந்தத் துறையை மூடுவதற்கான மூடுவிழாக்களை நடத்துவதற்கு இப்படித்தான் இவர்கள் தேக்க நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். இதற்காக அமைச்சர் அவர்கள் கூடிய விரைவிலே முயற்சிகள் எல்லாம் எடுத்து மூடுவதாகச் சொல்லப்பட்ட ஆணைகளை எல்லாம் வாபஸ் வாங்கி மீண்டும் அந்த ஷோரூம்கள் இயங்க வேண்டும். ஏதோ அரசாங்கத்திடம் மானியம் பெற்றாவது இந்த நட்டத்தை இப்போதைக்கு ஈடுகட்டி இந்த கிராம கைத்தொழில்கள் நசுங்காமல் இருக்க வேண்டும் என்று சொன்னால், பல்லாயிரக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பை இழக்காமல் இருக்க வேண்டும் என்று சொன்னால், இதை மூடுகின்ற பணியை தயவுசெய்து



1998 ஏப்ரல் 20] [திரு. சி. ஞானசேகரன்]

நிறுத்த வேண்டும். காங்கிரஸ் கட்சி காலத்தில் துவக்கப்பட்ட ஷோரூம்கள் இவையெல்லாம். இப்போது ஆரம்பித்தவையல்ல. அந்தக் காலத்தில் உருவாக்கப்பட்ட ஷோரூம்களை இந்த ஆட்சி வந்து மூடிவிட்டது என்று சொன்னால் இது ஆட்சிக்கே கெட்ட பெயரைக் கொண்டு வந்து சேர்க்கும். ஆகவே தயவுசெய்து அந்தப் பணியைச் செய்யாதீர்கள். ஆகவே மீண்டும் அந்த ஷோரூம்களை நீங்கள் திறந்து தரமான ஷாக்களைக் கொடுங்கள், தரமான பொருட்களை இந்த வாரியத்தின் மூலமாக மக்களுக்குத் தாருங்கள் என்று சொல்லி வாய்ப்புக்கு நன்றி சொல்லி அமர்கின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ம. சண்முகம்.

* **திரு. ம. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைத்தறி, துணி நூல் மற்றும் கதர்த் துறை மானியக் கோரிக்கை 26-ன் மீது எனது கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். கதர்த் தொழில் ஒரு பாரம்பரியமிக்க தொழில். இந்த கதர்த் துறையைப் பற்றி நினைக்கின்றபோது தேசப் பிதா அண்ணல் காந்தியடிகளை நாம் நினைவுகூராமல் இருக்க முடியாது. கை இராட்டைகள் மூலம் உற்பத்தி செய்யப்பட்ட நூலில் தயாரிக்கப்பட்ட அந்தத் துணிகளை விற்பதன் மூலமாக, தேசத்தினுடைய பெருமை உயரும். அந்நிய ஆதிக்கத்தை ஒழிப்பதற்கு, இந்தியாவிலிருந்து விரட்டுவதற்கு அன்றையதினம் அண்ணல் காந்தியடிகள் எடுத்துக்கொண்ட முயற்சிகளுக்கு உறுதுணையாக இருந்தது இந்தத் துறை என்று சொன்னால் அது மிகையாகாது. அப்படிப்பட்ட பாரம்பரியமிக்க அந்தத் துறையானது இன்றையதினம் பல்வேறு காரணங்களால் நலிந்துபோய் இருந்தாலும்கூட அதை நமது அரசு, கண்டிப்பாக, தலைவர் கலைஞர் அவர்கள் தலைமை வகிக்கின்ற இந்த அரசு, மீண்டும் அந்த கதர்த் துறைக்கு ஒரு புத்துயிர் கொடுக்கின்ற வகையிலே செயல் திட்டம் வகுக்கும் என்பதிலே எந்த ஐயப்பாடும் இருக்க முடியாது. தமிழ்நாடு கிராமத் தொழில் வாரியமானது கிராமங்களிலே கிடைக்கின்ற மூலப் பொருட்களை வைத்து கிராமப்புற மக்களின் சக்தியைத் திரட்டி அங்கே இருக்கின்ற ஏழை எளிய மக்களுக்கு வேலைவாய்ப்பை அளிக்கின்ற ஒரு நல்ல காரியத்தைச் செய்து வருகிறது.

[திரு. ம. சண்முகம்] [1998 ஏப்ரல் 20

பிற்பகல் 2-45

அந்த வகையில் சென்ற ஆண்டு 756 கிராமிய நூற்பு மையங்கள் மற்றும் 87 கதர் உற்பத்தி நிலையங்கள் மூலமாக சுமார் 48,430 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இது ஒரு பாராட்டத்தக்க அம்சம் ஆகும். அதிலே குறிப்பாக, 35,760 மகளிருக்கு வேலைவாய்ப்பு அளித்து இருப்பது வரவேற்கத்தக்க ஒன்று ஆகும். அந்த வகையில் வருகிற ஆண்டில் 10 கோடி ரூபாய் ஒதுக்கி கனத்த கதர் ரகங்களை உற்பத்தி செய்வதை விட நல்ல தரமுள்ள மெல்லிய மற்றும் பாலியஸ்டர் போன்ற விற்பனைக்கு உகந்த கதர் ரகங்களை உற்பத்தி செய்ய வாரியம் முடிவு செய்துள்ளது. இவற்றை எல்லாம் அமல் செய்கின்றபோது குறைந்த செலவிலும் அதே சமயம் நல்ல தரமான துணிகளை உற்பத்தி செய்கின்றபோது வெளி மார்க்கெட்டில் தமிழகத்திலும் மற்றும் வட மாநிலங்களிலும் இன்றையதினம் கதருக்குத் தனி மகிமை ஏற்படுகிறது. குறிப்பாக, கதர்ப் பட்டைப் பொறுத்தவரையில் தமிழகத்தைவிட வட மாநிலங்களில் அதிகமான தேவையிருக்கிறது. அந்தத் தேவைகளை எல்லாம் கருத்தில்கொண்டு, வருகின்ற காலத்தில் இன்னும் அதிகமான நிதியை ஒதுக்கி, அப்படிப்பட்ட பட்டு ரகங்களை உற்பத்தி செய்து இந்தத் துறையின் வளர்ச்சிக்கு நாம் வடிவமைக்க வேண்டும் என்பது என்னுடைய கருத்து ஆகும்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

அதுமட்டுமல்ல, வேலைவாய்ப்பு என்று சொல்லப்படுகின்ற போது, இன்றையதினம் பல்லாயிரக்கணக்கான ஐடிஐ. படித்த மாணவர்கள் வேலையின்றி இருக்கிறார்கள். நமது ஆட்சியில் ஒன்றியத்திற்கு ஒரு ஐடிஐ. தொடங்கப்படவேண்டும் என்ற திட்டம் செயலாக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பட்ட நிலையில் ஐடிஐ. படித்த மாணவர்களைப் பயன்படுத்தி இந்த துறையிலே வேலைவாய்ப்பையோ அல்லது சுய தொழில் தொடங்க வசதியையோ செய்து கொடுத்தால் கண்டிப்பாக ஐடிஐ. மாணவர்களுக்கும் அந்த மாணவர்களை வைத்து கிராமங்களில் தொடங்கப்படுகின்ற அந்தத் தொழிற்சாலைகள் மூலமாக கிராமப்புற மக்களுக்கும் வேலைவாய்ப்பு அதிகரிக்கும் என்பதிலே எவ்வித ஐயமுமில்லை. அதை நாம் முனைப்பாகச் செயற்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 20] [திரு. ம. சண்முகம்]

அதேபோல் விற்பனையை அதிகரிக்கும் முகத்தான் தள்ளுபடி எல்லாம் அறிவிக்கப்படுகிறது. விழாக்காலங்களில் 10 சதவீதம், குறித்த காலத்திற்கு மட்டும் நாம் அனுமதிக்கிறோம். எத்தனையோ துறைகளில் நாம் நஷ்டத்தை ஈடுகட்டுகிறோம். அதேபோல் இந்த வாரியம் மூலமாக விற்கப்படுகின்ற கதர்த் துணிகளுக்கு விழாக் கால மானியம் போல ஆண்டுதோறும் கொடுக்க வேண்டும். அதன்மூலம் உற்பத்தி பெருகும், நெசவாளர்களும், நூற்பாளர்களும் நல்ல பலன் பெறுவார்கள் என்பதில் மாறுபட்ட கருத்து இருக்க முடியாது.

சுதந்திரப் பொன் விழாவை முன்னிட்டு இந்த ஆண்டு அறிவித்து இருக்கின்ற 30 சதவீதம் மற்றும் 40 சதவீதம் தள்ளுபடியால் மிக அதிகமான அளவுக்கு விற்பனை ஆகியிருக்கிறது. இதையே இன்னும் குறிப்பிட்ட காலம் நீட்டித்துக் கொடுத்தால் நலிவுற்ற நெசவாளர் சமுதாயமும், நூற்பாளர்களும் பயனடைவார்கள் என்பதில் எந்தவிதமான ஐயப்பாடும் இல்லை. அந்தவகையில் நமது மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்வது எல்லாம் இந்த மானியங்களை இந்தத் துறைக்குத் தொடர்ந்து வழங்கவேண்டும். அப்படி வழங்குவதன் மூலமாக பாரம்பரியம் மிக்க இந்த கதர்த் துறையானது பாதுகாக்கப்படும் என்பதிலே ஐயப்பாடு இல்லை.

அதுமட்டுமல்லாமல், கிராமங்களிலே இருக்கின்ற ஏழைப் பெண்கள் கை இராட்டைகளை வைத்துதான் இன்றையதினம் குடும்பங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக்கூட போதுமான அளவுக்குப் பஞ்சு கிடைக்கவில்லை என்ற நிலை இருக்கிறது. அதையும் நாம் கருத்தில்கொண்டு அப்படிப்பட்ட அந்தத் தொழில் செய்பவர்களுக்குத் தாராளமாகப் பஞ்சு கிடைக்கின்ற நிலையை நாம் ஏற்படுத்தித் தரவேண்டும்.

அதேபோல் மண்பாண்டங்கள் செய்யும் தொழில் மிகவும் பழமையான தொழில். இந்தத் துறையின் மூலமாகச் செய்யப்படுகின்ற மண்பாண்டங்கள் கண்ணைக் கவருகின்ற வகையில் இருக்கின்றன. என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட மண்பாண்டங்கள் செய்யும் தொழில், தோல் தொழில் போன்ற தொழில்களை நாம் பெருக்க வேண்டும். அதன்மூலம் இந்தத் துறையின் வளர்ச்சிக்கும் ஏழை எளிய கிராமப்புற மக்களின் வாழ்க்கைக்கும் வழி செய்து கொடுத்தோம் என்ற திருப்தி உண்டாகும்.

[திரு. ம. சண்முகம்] [1998 ஏப்ரல் 20

அதேபோல் இந்தத் துறையில் கடந்த ஆட்சிக் காலத்திலே இருந்த அமைச்சருடைய கைங்கரியத்தால் இந்தத் துறைக்கு ஒதுக்கிய மானியத்தைவிட அதிகமான அளவுக்கு லஞ்சம் வாங்கிச் சேர்த்திருக்கிறார்கள். அதை நாம் ஒருகணம் எண்ணிப் பார்க்கவேண்டும். அந்தத் துறையினுடைய மானியக் கோரிக்கைக்கு ஒதுக்கப்பட்ட தொகையை விட எப்படி அவர்கள் சொத்து சேர்த்தார்கள் என்பதை எல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்கவேண்டும். அப்படிப்பட்ட நிலை இன்றையதினம் முழுமையாகக் களையப்பட்டு கதர்த் துறையும் வளர்ச்சி அடைந்திருக்கிறது; ஏழை எளிய மக்களும் நல்ல வசதியைப் பெற்றிருக்கிறார்கள் என்று சொன்னால், அது நமது ஆட்சியினுடைய திறமை என்றுதான் சொல்ல வேண்டும்.

பிற்பகல் 2-50

அதேபோன்று கூட்டுறவுச் சங்கங்கள். இந்தக் கதர் வாரியத்தின் மூலமாகப் பதிவு செய்யப்பட்ட தொழில் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அரசுத் துறை நிறுவனங்களெல்லாம் டெண்டர் இல்லாமலேயே நேரடியாக ஆர்டர் கொடுக்கலாம். அதன் மூலமாக அந்தச் சங்கங்கள் பயன் பெறுவதற்கு வாய்ப்பு இருக்கிறது.

ஆனால், கடந்த ஆட்சிக் காலத்திலே பெயரளவில் சங்கத்தைப் பதிவு செய்து கொண்டு, அந்தச் சங்கத்தின் மூலமாகப் பல கோடி ரூபாய்களை அன்றையதினம் கொள்ளை அடித்தார்கள். அதையெல்லாம் இந்த நாட்டு மக்கள் உணர்வார்கள். அப்படிப்பட்ட நிறுவனங்களின் மீது நாம் கண்டிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டும். நடவடிக்கையில் தப்பித்துக் கொண்டவர்களெல்லாம் மீண்டும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

திருவண்ணாமலை மாவட்டம் செங்கத்திலே உள்ள ஒரு கூட்டுறவுச் சங்கம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. அரசு மூலம் வாங்கப்படும் மரச்சாமான்கள், பீரோ போன்றவைகளை அந்த மாவட்டத்திலே உள்ள இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திலே செய்வதற்குக் கூட்டுறவுத் துறையோ அல்லது மாவட்ட நிர்வாகமோ அனுமதி வழங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 20] [திரு. ம. சண்முகம்]

இந்தக் கதர்த் துறையானது இன்னும் வளர வேண்டும்; கிராமத்தினுடைய பொருளாதாரத்தை வளர்க்கின்ற இந்தத் துறையானது நல்ல வளர்ச்சி அடைய வேண்டுமென்று இந்த நேரத்திலே பாராட்டவும், வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அது மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதி. இருபதாண்டு காலமாகப் புறக்கணிக்கப்பட்டு வந்து இருக்கிறது. எங்களுடைய தொகுதியிலே தீயணைப்பு நிலையம் கிடையாது. அங்கே நூற்றுக்கணக்கான தொழிற்சாலைகள் தென்னை நார் உற்பத்தி செய்து கொண்டிருக்கின்றன. அதன் கழிவுகள் சாலை ஓரங்களில் கொட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் கடுமையான வெய்யில் காலத்திலே எப்பொழுது வேண்டுமானாலும் தீப்பிடித்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, கிணத்துக்கடவிலே ஒரு தீயணைப்பு நிலையத்தை உருவாக்கித் தர வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள்கின்றேன்.

பி.ஏ.பி. பாசனத்தைப்பற்றி சொல்ல வேண்டுமென்றால், அங்கே 4 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு இன்றையதினம் தண்ணீர் முறைப்படுத்தி விடப்படுகிறது. ஆனால் ஒன்றரை இலட்சம் ஏக்கராவுக்கு வடிவமைக்கப்பட்டிருந்த வாய்க்கால் மூலம் இன்றையதினம் 4½ இலட்சம் ஏக்கராவிற்குத் தண்ணீர் பாய வேண்டியிருக்கிறது. தண்ணீர் இல்லாதபொழுது மிகவும் சிரமமாக இருக்கிறது. அதை முறைப்படுத்தி விடுவதற்கு அந்தத் துறையானது ஒரு திட்டம் தயாரித்து வைத்திருக்கின்றது. அந்தத் திட்டத்தை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரவர்கள் கேட்டுப் பெற்று அமல்படுத்த வேண்டும். அதன்மூலம் அனைத்து விவசாயிகளுக்கும் சீராகத் தண்ணீர் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்ற செய்தியைச் சொல்வதில் நான் பெருமை அடைகிறேன்.

இந்தத் துறையின் கோரிக்கை மீது எனக்கு உரையாற்ற வாய்ப்பளித்த பேரவைத் துணைத் தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன், நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வி. அய்யலுசாமி.

**திரு. லி. அய்யலுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, இந்தக் கதர் மானியக் கோரிக்கையின்மீது பேச அனுமதித்ததற்காக மிக்க நன்றி கூறிக்கொள்கிறேன். இந்தக் கதர்த்தொழில், சுதந்திரம் வாங்குவதற்கு முன்னாலேயே காந்திஜி அவர்கள் வெளிநாட்டுத் துணிகளைப் புறக்கணித்து உள்நாட்டிலேயே நம்முடைய கையினால், திறமையால் நம்முடைய மக்களே உற்பத்தி செய்யக்கூடிய துணிகளைத்தான் உடுத்த வேண்டும் என்று மிகப் பெரிய போராட்டத்தையெல்லாம் நடத்திய, அப்படிப்பட்ட ஒரு சிறந்த சரித்திரம் வாய்ந்தது. கதர் வாரியம், 1960-லே துவக்கப்பட்டு, அந்தக் கதர் வாரியத்தின் மூலமாகக் கதருக்கு ஒரு மவுசு ஏற்பட்டிருக்கிறது. யாரை எடுத்தாலும் பெரும்பாலும் கதராடைகளை உடுத்த வேண்டுமென்ற நோக்கத்தோடு இருக்கின்றார்கள். இப்பொழுது கதர் வாரியம் நவீன தொழில் முறையில் நல்ல கதர் பாலியஸ்டர்களையெல்லாம் உருவாக்கி மாற்றங்கள் அடைந்திருக்கிறது. அந்தக் கதர் வாரியத்தின் மூலமாக நம்முடைய . . . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சர்களிடம் மனு கொடுக்க வேண்டிய உறுப்பினர்கள், அமைச்சர்களை அலுவலகத்திலே சந்தித்துக் கொடுத்துக் கொள்ளலாம். தயவுசெய்து அவரவர் இருக்கைக்குத் திரும்புங்கள்.

பிற்பகல் 2-55

**திரு. லி. அய்யலுசாமி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட ஒரு சிறந்த கதர்த் தொழிலை, முந்தைய அரசு பல முறைகேடுகள் மூலமாக, கதர் வாரிய அங்காடிகளை, நஷ்டத்திற்குக் கொண்டு வந்துள்ளார்கள். இன்றைக்கு, இந்த அரசு அவற்றை மூடுவதற்கு உத்தரவிட்டால், இந்த அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படும். ஆகவே, அங்காடிகளை மூடக் கூடாது. அதை முறையாக இலாபத்தோடு நடத்துவதற்கு, திறமையாக அந்த நிருவாகத்தை நடத்த வேண்டும்.

அதேபோன்று, சாயப்பட்டறைகளை எங்கிருந்தாலும் மூடக் கூடாது. தரமான பஞ்சுகளைக் கொள்முதல் செய்து கொடுக்க வேண்டும். அதே நேரத்தில், இராட்டைகள் பழுதடைந்தால் உடனடியாக அதைச் செப்பனிட்டுத் தர வேண்டும். கதர் வாரியத்தில் பல சங்கங்கள் இருக்கின்றன. அந்தச் சங்க அங்காடியில் எல்லாம் இரண்டு பேர் வேலை செய்த இடத்தில் இன்று 15 பேர் வேலை செய்கிறார்கள்.



அவர்கள் பல பொருட்களை உற்பத்தி செய்கிறார்கள். கதர்த் துணி மட்டுமல்ல, மக்களுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் உற்பத்தி செய்கிறார்கள். சோப்பு, சென்ட், தேன், பேரிச்சம்பழம், சுத்தப்படுத்தப்பட்ட பேரிச்சம்பழம் மற்றும் சுத்தப்படுத்தப்பட்ட பல பொருட்கள், தரமான பொருட்களை விற்கக்கூடிய நிலையில் அந்த அங்காடி மேலும் மேலும் பெருகி சொந்தக் கட்டடம் எல்லாம் வாங்கியிருக்கிறார்கள். நாம் பல கோடி ரூபாய் மூலதனம் போட்டும் இந்தத் தொழில் அபிவிருத்தி ஆகவில்லையென்றால் அது முந்தைய அரசினுடைய கோளாறால்தான் ஆகியிருக்கும். மீண்டும் இந்த அரசு செம்மையாக அதை ஒழுங்குபடுத்தி, நல்லமுறையில் செயல்படுத்த வேண்டும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு அங்காடி சிறப்பாக இயங்க வேண்டும். ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் ஒரு தொழிலை-இந்தக் கதர் வாரியத்தின் மூலமாகச் சாதாரண மக்களுக்கு வேலை கொடுக்கக்கூடிய அத்தனை தொழில்களையும், அங்கே செய்யக்கூடிய வகையில் உருவாக்கித் தர வேண்டும்.

அதேபோன்று, கிராமத் தொழில். குறைந்த மூலதனம் இட்டுச் செய்யக்கூடிய தொழில். இதனால் சாதாரண கிராமப்பகுதி மக்கள் வாழ முடியும், விவசாயப் பகுதிகளில், நான்கு மாதங்கள் வேலையிருந்தால், மீதி 8 மாதங்கள் வேலையில்லாத நேரங்களில் இந்தத் தொழில் அழகாக நடக்கும். அங்கே கிராமப் பொருளாதாரம் வளரும். கதர் வாரியத்தில் முறையாக எல்லாத் தொழில்களிலும், அனைத்து மக்களும் உபயோகப்படுத்தக்கூடிய பொருள்களையும், சோப்பு, சீப்பு, கண்ணாடி எல்லாமே தயார் பண்ணலாம். பிளாஸ்டிக், மிளகு வடை, கடலை மிட்டாய் போன்ற மனிதன் உபயோகிக்கக்கூடிய பொருட்களையெல்லாம் தயார் பண்ணி நாம் அந்த அங்காடிகளில் விற்க வேண்டும். தரமான பொருள்களாக இருக்க வேண்டும். அப்படிப்பட்ட நிலையில் நம்முடைய கதர் வாரியம் மிகவும் அழகாக வளர்வது மட்டுமல்ல, கிராமத்தில் வேலைவாய்ப்பு தரக்கூடிய வாய்ப்பும் உருவாகும். அந்தக் கிராமத் தொழிலாளர்களின் பொருளாதாரம் வளர்ச்சி அடையும். அப்படிப்பட்ட நிலையை உருவாக்க வேண்டும்.

பனை வாரியத்திற்காக நிதி ஒதுக்கப்படவில்லையென்று தெரிகிறது. அதற்கு நிதி ஒதுக்கப்பட வேண்டும். அதற்கு ஒரு வாரியம், முன்னால் இருந்தது. அது கலைக்கப்பட்டுவிட்டது. மீண்டும் அந்த போர்டை அமைத்து, அந்த வாரியத்தின் மூலமாகப் பல தொழில்கள் செய்யலாம்.

நாரிலிருந்து கயிறு திரிக்கலாம். அதேபோன்று, பதநீரிலிருந்து கருப்பட்டி, பனங்கற்கண்டு, பனஞ்சீனி, சில்லு கருப்பட்டி இப்படிப்பட்ட பல பொருட்களையெல்லாம், மனிதன் நல்ல தரத்தோடு ருசியாகச் சாப்பிடக்கூடிய பொருட்களையெல்லாம் உற்பத்தி செய்யலாம். இந்தப் பனைத் தொழில் மேலும் சிறப்பாகச் செயல்பட அந்த வாரியத்தை அமைத்து, அதற்கு நிதி ஒதுக்கி, அந்த வாரியத்தைச் செம்மையாகச் செயல்படுத்த வேண்டும். கிராமத்தில் சாதாரணப் பனை ஏறும் தொழிலாளிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலை கிடைக்கக்கூடிய முறையிலே அந்தத் தொழிலைச் சிறப்பாக நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், நம்முடைய நெசவுத் தொழிலாளிகளுக்கு, புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி போன்ற அந்த மாவட்டங்களிலுள்ள பட்டு நெசவாளர்களுக்கு மட்டும் சம்பளத்தில் 15 சதவீத உயர்வு என்றும் மற்ற மாவட்டங்களில் 10 சதவீத உயர்வு என்றும் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கிறது. அனைத்து மாவட்டங்களில் உள்ளவர்களுக்கும் 15 சதவீத உயர்வு என்று உயர்த்தித்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-00

மேலும், இந்தத் தொழிலைப் பொறுத்தவரையில், கிராமப்பகுதிகளில், பெரிய கிராமமாக இருந்தாலும் சரி, நகரமாக இருந்தாலும் சரி, ஆங்காங்கு இருக்கின்ற மக்கள் வேலைவாய்ப்புப் பெறக்கூடிய வகையில் சிறிய மூலதனத்தைச் செலுத்தி பெரிய அளவில் நல்ல ஆரோக்கியமான பொருட்களை உற்பத்தி பண்ணுவதற்கு இந்தக் கதர் கிராமத் தொழில் வாரியத்தை நாம் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அத்துடன் நமது கிராமங்கள் விரிவடைவதற்கும், நம்முடைய நாடு செழிப்பதற்கும் ஏதுவாக, இந்தத் தொழிலைச் சிறப்பாக நடத்துவதற்கு அனைத்து வசதிகளையும் நவீன முறையில் அரசு செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டு வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. டி. மணி.

***திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குமரி மாவட்டத்திற்கு வருகை தந்து நீண்டநாள் கோரிக்கையான ஜீவா



மணி மண்டபத்தைத் திறந்து வைத்தும், அத்துடன் அந்த மாவட்டத்தினுடைய நலத் திட்டங்களை அங்கே பறைசாற்றியதற்காகவும் அவர்களுடன் அந்தப் பகுதிக்கு வந்திருந்த மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் குமரி மக்களின் சார்பிலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, கதர் கிராம வாரியம் சம்பந்தமாக சில கருத்துகளை இங்கே சொல்ல விழைகின்றேன். ஏற்கெனவே, இந்தக் கதர் அங்காடிகள் எல்லாம் மூடப்படுகின்றன என்றெல்லாம் தகவல்கள் சொல்லி வருகிறார்கள். நான் கடந்த முறையே இதே மானியக் கோரிக்கையின்மீது பேசும்போதே சொல்லியிருக்கிறேன். இப்போது உள்ள கதர்த் துணியினுடைய தரம் போதுமானதாக இல்லை. ஏனென்றால் 1947 ஆம் ஆண்டுக்கு முன்னாலே நம்முடைய நாடு விடுதலை பெறுவதற்கு முன்னாலே கதர் என்று சொன்னால் திருப்பூர் கதர்தான். அந்தத் தரம் என்பது இன்று மிகக் குறைந்து போய்விட்டது. அந்தத் திருப்பூர் வேஷ்டிகளைக் கட்டிக்கொண்டு போனால், மிகவும் நன்றாக இருக்கும்; அதனுடைய தரமானது மிகவும் உயர்ந்திருந்தது ஆனால் இப்போது உள்ள வேஷ்டிகள் தரத்தில் குறைந்துப் போய்விட்டன. ஆகவேதான் அதனுடைய தரத்தைச் சிறந்த முறையில் நாம் உருவாக்குவோமேயானால் அது நஷ்டத்திலே ஓடாது; அதிலிருந்து கிடைக்கும் வருமானமும் அதிகமாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுபோன்று அதிலே வேலை பார்க்கக்கூடிய ஊழியர்களுடைய சம்பளப் பிரச்சினையிலும் சற்றுக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அந்தக் கதர் கிராம வாரியத்தில் ஆயிரக்கணக்கில் ஊழியர்கள் இருக்கிறார்கள். பல்வேறு தொழில்கள் அங்கு செய்யப்படுகின்றன. அவர்களுக்கு ஊதியத்தைச் சற்று உயர்த்திய அளவிலே கொடுக்க வழிவகை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்முடைய கதர் வாரியத்தைப் பற்றிக் கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லியிருக்கிறீர்கள். அதாவது, இந்தியாவிலேயே நமது மாநிலத்தில் கன்னியாகுமரி மாவட்டத்தில்தான் தேன் அதிகமாக உற்பத்தி செய்கின்ற கூட்டுறவுச் சங்கம் இருக்கின்றது. நேற்றைய விவரப்படி, அவர்கள் கடந்த நான்கு மாதத்திற்குள்ளே 1½ இலட்சம் கிலோ தேனைக்

[திரு. டி. மணி] [1998 ஏப்ரல் 20

கொள்முதல் செய்திருக்கிறார்கள். இந்த நான்கு மாதங்கள் மட்டும்தான் சீசன். ஆனால் அப்படி வாங்கிய தேனை வைத்துக்கொள்வதற்கு, அதைப் பாதுகாப்பதற்குப் போதுமான சவுகரியங்கள், இட சவுகரியங்கள் இல்லை. அதற்கானக் கட்டட வசதியும் இல்லை. இவற்றையெல்லாம் தவிர்ப்பதற்கான வழிமுறைகளைச் சொல்லியிருந்தாலும்கூட அமலாக்கப்படவில்லை. சமீபத்திலே ஓர் ஆண்டுக்கு முன்னால் தேனீக்களுக்கு நோய் ஏற்பட்டபோது அதன் காரணமாக மிகப்பெரிய சிக்கல் ஏற்பட்டது. ஆனால் கேரள மாநிலத்திலே தேன் உற்பத்தி செய்கின்றவர்களுக்கு, அந்தத் தேனீக்களை வைத்திருக்கின்ற சொந்தக்காரர்களுக்கு மானிய உதவியுடன் மத்திய அரசு கடன் கொடுத்தது. நம்முடைய மாநிலத்தில் அதுபற்றி யாரும் கண்டுகொள்வதில்லை. என்னவென்றே தெரியவில்லை. அப்படிக் கொடுத்திருந்தால் மூன்று இலட்சம் கிலோ தேன் இந்தக் கால அளவிற்குள் பர்ச்சேஸ் செய்திருக்கலாம். மேலும் போதுமான இடம் இல்லாத காரணத்தாலும், போதுமான மெட்டீரியல்ஸ் இல்லாததாலும் அப்படிச் செய்ய முடியாமல் போனது. இதிலே என்னுடைய கோரிக்கை என்னவென்றால், 42 ரூபாய்க்கு பர்ச்சேஸ் பண்ணியதை விற்பனை செய்கிறபோது அது 62 ரூபாய்க்கு மேல் செல்கின்றது. இதில் இலாபம் நிறைய வந்தாலும்கூட, இதை வாங்குபவர்களுக்கு விலையைச் சற்றுக் குறைத்துக் கொடுக்கலாம். ஏனென்றால் ரூபாய் 42-க்கும் ரூபாய் 62-க்கும் ரொம்ப வித்தியாசம் இருக்கிறது. கொள்முதலை சற்று உயர்த்தினால் நலமாக இருக்கும், என்று கருதுகிறேன். எனவே, அந்தக் கூட்டுறவுச் சங்கத்திற்கு அதிகப்படியான நிதியாதாரத்தை ஒதுக்கி, கட்டடத்தைக் கட்டுவதற்கும், இயந்திரங்களை வாங்குவதற்கும் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோன்று, ஒரு மாவட்டத்தை மட்டும்தான் இந்த மலைவாழ் மக்கள் வாழும் மாவட்டமாக இங்கே கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், அதாவது நீலகிரி மாவட்டத்தை மட்டும்தான் குறிப்பிட்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலே பல்வேறு மாவட்டங்களில் மலைப்பாங்கான பகுதிகள் இருக்கின்றன. குமரி மாவட்டத்தில் மட்டும் 44 Settlements இருக்கின்றன. ஆதிவாசிகள், பழங்குடியினர் ஆகியோர் இருக்கின்றனர். இவர்களுக்குத் தேனீப் பெட்டிகள் வழங்கப்பட்டுள்ளன. அதன் காரணமாக அவர்களுடைய



1998 ஏப்ரல் 20] [திரு. டி. மணி]

வளர்ச்சி அல்லது பொருளாதாரம் என்பது எந்த அளவிற்கு மேம்பாடு அடைந்துள்ளது என்பதைக் கண்டறிவதில் நாம் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஏதோ அவர்களுக்கு நாம் தேனீப் பெட்டிகள் கொடுத்தோம் என்று கணக்கிட்டு விட்டு அதற்கான செலவை மட்டும் பார்த்தால் போதாது. அவர்களுடைய வாழ்க்கைத் தரம் இதனால் உயர்ந்திருக்கிறதா, வருவாய் பெருகியிருக்கிறதா என்பதற்கு மீண்டும் ஓர் ஆய்வுகூட நடத்துவது இந்தச் சந்தர்ப்பத்திலே தேவை என்று நான் கருதுகின்றேன். எனவே, மேற்குத் தொடர்ச்சி மலைத் திட்டம் என்று சொல்கின்ற திட்டம் வருகின்றபோது, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள ஆதிவாசி, பழங்குடியின மக்கள் உள்ள பகுதியும் அதிலே இடம் பெறவேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோளாகும்.

பிற்பகல் 3-05

அடுத்து பனந்தும்பு. நான் யாரையும் குறை சொல்வது சரியாக இருக்காது. இருந்தாலும்கூட, கன்னியாகுமரி மாவட்டத்தில் குளச்சல் என்ற இடத்தில் அரசாங்கத்தினுடைய தும்பு பேக்டரி எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னாலே இருந்தது. அதுபற்றி இந்தக் குறிப்பேட்டில் இடம் பெறவில்லை. ஏற்கெனவே சில மாதங்களுக்கு முன்பு என்னுடன் சேர்த்து நம்முடைய குழு ஒன்று அங்கு சென்று பார்த்தபோது, குளச்சலில் அரசுக்குச் சொந்தமான இடம் ஆக்கிரமிக்கப்பட்டு, கட்டடங்கள் இடிக்கப்பட்டு இன்று யாரும் கவனிக்காத நிலையில் இருக்கிறது என்று பார்த்துவிட்டு வந்து சொன்னோம். வெளிநாடுகளுக்கு தும்பு ஏற்றுமதி செய்யப்படும் ஒரு கேந்திரமாக அது இருந்தது. மணவாளக்குறிச்சியில் மணல் ஏற்றுமதி ஆகின்றது. அது வேறு விஷயம். இருந்தாலும்கூட, தும்பு பேக்டரியினுடைய குறைபாடுகளையெல்லாம் நீக்கி, அதனை நவீனப்படுத்தக்கூடிய ஒருநிலையை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பனைப்பொருள். கன்னியாகுமரி மாவட்டத்தில் அது சிறப்பான இடத்தைப் பெற்றிருந்தது. கதர் கிராம வாரியம் என்று ஏற்கெனவே இருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் பனை பொருள் உற்பத்தி வாரியம் அமைத்திருக்கிறார்கள். ஆனால், சமீபகாலத்திலே நான்கைந்து ஆண்டுகளாகப் பனைமரம் ஏறுகின்றவர்கள் இன்று அதற்குத் தயாராக இல்லை. ஏனென்றால், அதில் ஈடுபாடு இல்லை. காரணம் அதிலே வேலை செய்கின்றவர்களுக்கு, இன்றைக்கு ஒரு

நாளைக்கு வேலை செய்தால், 50 ரூபாய்கூட கிடைக்காது. கட்டுமானத் தொழில் செய்தால் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு 100 ரூபாய் கிடைக்கும். எனவே, அந்தத் தொழிலைச் செய்வதற்குச் சாத்தியம் இல்லை என்ற ஒரு நிலையிருக்கிறது. அதில் பணியாற்றிய ஆயிரக்கணக்கான ஊழியர்களுடைய குடும்பத்தினர் இன்றைக்கு ஆதரவற்றவர்களாக இருக்கிறார்கள் என்று சொல்கின்றபோது, அவர்கள் வீடு இல்லாமல் இருக்கிறார்கள். ஓலைக் குடிசைகளில் இன்று தங்கி வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே, இந்தத் துறையின் மூலமாக பல்வேறு திட்டங்கள் வந்தாலும், அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டத்தை மேற்கொள்வதன் மூலம் அந்தப் பனைமரம் ஏறுகின்ற தொழிலாளர்களின் குடும்பங்களை அரசு வாழ வைக்க வேண்டும். அடுத்து பனைமரம் ஏறுகின்றவர்களுக்கு ஆபத்து வருகின்றபோது, அதாவது உடல் ஊனமுற்று, இறப்புக்கு ஆளாகின்ற போது அரசு வழங்குகின்ற பணம் என்பது குறைவு; போதுமானதாக இல்லை. அதைச் சற்று உயர்த்தித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோன்று பனைவெல்லக் கூட்டுறவு சம்மேளனம் என்று இருக்கிறது. அதிலே ஆயிரக்கணக்கான ரூபாய் அவர்களுக்கு வந்திருக்கிறது. அதைக் கடனாகக் கொடுத்திருக்கிறார்கள். அதிலே வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு ஆறு மாதங்களாகச் சம்பளம் இல்லை. அதற்கு அமைச்சர் பெருமான்கூட இப்பொழுது 'அவர்கள் பணத்தைத் திரும்ப வசூல் செய்வதிலே சுணக்கம் காட்டுகிறாகள' என்ற விவரத்தைச் சொன்னார்கள். அதற்கு வேறுவிதமான நடவடிக்கையை மேற்கொள்ளலாம். அவர்களுக்குச் சம்பளம் கொடுக்காமல் இருப்பது சரியல்ல. இருந்தாலும்கூட, வாரியம் தனியாகச் செயல்படவேண்டும். கதர் கிராம வாரியம், பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனம் ஆகிய இரண்டையும் இணைத்துக்கொள்ளக் கூடாது. ஏனென்றால், மத்திய அரசு இந்த வாரியத்திற்கென்று தனியாக இத்தனை கோடி ரூபாய் என்று வழங்கியிருக்கிறார்கள். அந்தப் பணம் வாரியத்திற்குச் சென்று சேரவில்லை என்ற பொதுவான ஒரு புகார் வந்துள்ளது. ஆக, அந்த அடிப்படையிலேகூட, இந்த நிலையிலே நின்றுகொண்டு அந்தப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்திற்குத் தனி வாரியம் என்று சொன்னாலும், அதனுடைய செயல்பாடுகள் எந்த அளவுக்கு நடைபெறுகின்றது என்று யாருக்கும் தெரியாது. ஏனென்றால் அதனுடைய ஈடுபாடுகள், செயல்பாடுகள் போதுமானதாக இல்லை. ஆக அந்தப் பனைவெல்லக் கூட்டுறவுச் சம்மேளனத்தில்



பணியாற்றுகின்ற ஊழியர்களுக்குச் சேரவேண்டிய சம்பளத்தைக் குறுகிய காலத்தில் கொடுத்து உதவவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதற்குத் தனியாக வாரியம் அமைத்து, ஏற்கெனவே இந்தப் பனை பொருள் வளர்ச்சிக் கழகத்தின் உள்ளே இருக்கின்ற குறைபாடுகளைக் களைய வேண்டும். யாரெல்லாமோ இருக்கிறார்கள். சம்பந்தப்படாதவர்களெல்லாம் இருக்கிறார்கள். குறிப்பாக நான் வலியுறுத்த விரும்புவது, கதர்த் துறையைப் பொறுத்தவரையில், தரமான கதரை உற்பத்தி செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை மேற்கொள்வதன் மூலம், நம்முடைய மாநிலத்தில் கதர் கிராமத் தொழிலை வளர்ச்சியடையச் செய்யவும், விற்பனையை அதிகரிக்கவும் முடியும். அவற்றுக்குக் கொடுத்து வருகின்ற தள்ளுபடித் தொகையை, விழாக் காலங்களில் முக்கியமாக நம்முடைய மகாத்மா காந்தியடிகள் பிறந்த நாளையொட்டித் தருகின்ற தள்ளுபடியை— மேலும் சில மாதங்கள் கொடுத்து அதன் மூலம் இந்தத் தொழிலைப் பாதுகாக்க வேண்டும். அத்துடன் இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களையும் பாதுகாக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

பிற்பகல் 3-10

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.பி. வெங்கிடு.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு Clarification. கதர்த் துறையின் மீது விவாதித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் ஒரு தகவலைப் பெற விரும்புகிறேன். சென்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் பல கோடி ரூபாய்க்கு, கதர் வாரியத்திற்காகப் பல பொருட்கள் வாங்கப்பட்டதாகவும், பத்து ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் சுமார் நாற்பது ரூபாய், ஐம்பது ரூபாய்க்கு வாங்கப்பட்டு, விற்கப்படாமல் தேங்கிக் கிடப்பதாகவும் சொல்லப்படுகிறதே; அதைப்பற்றிய தகவல்களை அமைச்சர் அவர்கள் இந்த அவைக்குத் தருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் கதர் வாரியத்திற்கான கைவினைப் பொருட்களை வெளி மாநிலங்களிலிருந்து கொள்முதல் செய்த வகையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, பத்து ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் நாற்பது ரூபாய்க்கு வாங்கப்பட்டதன் விளைவாக, இன்று இந்த

[திரு. அந்தியூர் ப. செல்வராசு] [1998 ஏப்ரல் 20

வாரியத்தில் சுமார் 3¼ கோடி ரூபாய் பெறுமானமுள்ள பொருட்கள் விற்கப்படாமல், பொருள் தேக்கம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.பி. வெங்கிடு.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு Clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அமைச்சருடைய பதிலுரைக்குப்பின் கேட்கலாமே. இப்படி ஒவ்வொருவராகக் கேட்டுக் கொண்டே போனால், விவாதம் விரைவில் முடியாது. (குறுக்கீடு) சரி, கேளுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே முந்தைய ஆட்சிக் காலத்தில், காலணி வாங்குவதற்காக, மின்னணுப் பொருட்கள் வாங்குவதற்காக இரண்டு சொசைட்டிகள் சென்னையிலே இருப்பதாகச் சொல்லி, அதற்காகப் போடப்பட்ட 'ஃபைல்'-ஐக் 'குளோஸ்' செய்துவிட்டதாகச் சொல்கிறார்கள். அது உண்மையா, இல்லையா என்பதை அமைச்சர் அவர்கள் விளக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சிக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாக அரசுத் துறைகளுக்கான ஆர்டர் வாங்கப்பட்டு, அப்படித் தவறான முறையில் வாங்கிய ஆர்டர்களுக்கு சப்ளை செய்ய முடியாமல், 90 சதவிகித அட்வான்ஸ் வாங்கிக் கொண்ட பின்னரும், அந்தக் குறிப்பிட்ட துறைகளுக்குப் பொருட்களை சப்ளை செய்ய முடியவில்லை. குறிப்பாக, சேலம் மாவட்டத்தில் 10-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 5-க்கும் மேற்பட்ட கூட்டுறவுச் சங்கங்களும், இன்னும் பல்வேறு மாவட்டங்களில் இதுமாதிரி தவறான கூட்டுறவுச் சங்கங்கள், அரசுத் துறைகளுக்கு வழங்க வேண்டிய பொருட்களைச் சரியான முறையில் சப்ளை செய்யாமல் இருந்ததன் விளைவாக, மொத்தம் 116 கூட்டுறவுச் சங்கங்கள் கலைக்கப்பட்டு, அதிலே ஈடுபட்ட, அந்த ஊழலுக்கு உடந்தையாக இருந்த நாற்பதுக்கும் மேற்பட்ட அதிகாரிகள் மீது புலனாய்வுத் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 20]

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.பி. வெங்கிடு.

**திரு. ஜி.பி. வெங்கிடு:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கை இராட்டையே ஆயுதம்; கதர் ஆடையே சோபிதம்" என்றும், கை இராட்டையால் நூற்ற நூலின் மூலமாகவே தான் தன்னுடைய ஆடை வரவேண்டும் என்று கூறிய உத்தமர் காந்தியடிகளின் உணர்விற்கிணங்க மக்கள் எல்லோரும் அந்த ஆடையைப் பயன்படுத்துகின்ற வகையில், அதனை நம் நாட்டிற்கு அளிக்க வேண்டும் என்ற வகையில், 1960-லே உருவாக்கப்பட்ட இந்தக் கதர் வாரியத்தின் மானியக் கோரிக்கையிலே பேசுவதற்கு வாய்ப்பளித்தமைக்கு என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தை முதலிலே தெரியப்படுத்திக் கொள்கிறேன்.

இந்த வாரியத்தின்கீழ் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற 756 நூற்பு மையங்களிலே, 87 கதர் உற்பத்தி நிலையங்களிலே வேலைவாய்ப்புப் பெற்றவர்கள், கைவினைஞர்கள் 48,430 என்றும், அதிலே 35,760 பேர் பெண்கள் என்றும் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி, கிட்டத்தட்ட 48,000 பேரிலே சுமார் 35,000 பேர் பெண்கள் பயனடைகிறார்கள் என்று சொன்னால், உண்மையிலே கிராமப் பொருளாதாரத்தை உணர்ந்து செயல்படுத்துகின்ற நல்ல வாய்ப்பாக, நல்ல திட்டமாக இதை நான் கருதி வாழ்த்துகிறேன். அதேநேரத்தில், கிராமப்புறங்களிலே இருக்கின்ற ஆதரவற்ற விதவைகள், ஊனமுற்ற பெண்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் போன்றவர்களுக்கு முன்னுரிமைக் கொடுத்து, இந்த வாரியத்திலே அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளித்து, அவர்களுடைய வாழ்க்கையின் மேம்பாட்டிற்காக, அவர்களுக்கு முன்னுரிமை அளிக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதேபோல, இன்று மாறிவருகின்ற ஆடைத் தேவைகளுக்கு ஏற்ப, கனரக ஆடைகளை அதிகமாகத் தயாரிப்பதை விடுத்து, மெல்லிய ஆடைகளையும், பாலியஸ்டர் ஆடைகளையும் தயாரிப்பதற்கு முன்னுரிமை தந்து, வருங்காலத்திலே இந்த வாரியத்தினுடைய வளர்ச்சிக்கு ஒரு நல்ல வழிவகை கண்ட மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரியப்படுத்திக்கொள்கிறேன். என்றாலும், பாலியஸ்டரும், மெல்லிய ஆடைகளும், வளர்ந்து வருகின்ற இந்த சமுதாயத்திற்குத் தேவை என்றாலும்கூட, கனத்த ஆடைகளை நெய்கின்ற அந்த நெசவாளர் குடும்பங்கள், அதை மட்டுமே நம்பி வாழ்ந்து கொண்டிருக்கின்ற அந்தக் குடும்பங்கள் எல்லாம் நலிந்து போகாமல்,

[திரு. ஜி.பி. வெங்கிடு] [1998 ஏப்ரல் 20

அவர்களுக்கும் வாய்ப்பு அளிக்கின்ற வகையில், படுக்கை விரிப்புகளாகவும், அல்லது கதவு, சன்னல்களுக்குப் போடுகின்ற திரைச்சீலைகளாகவும், இன்னும் பலவகைகளிலும், அந்தக் கனத்த ஆடைகளைப் பயன்படுத்துகின்ற விதத்தில், அவர்களைக் கைவிட்டு விடாமல், அவர்களுக்கு வேலைவாய்ப்புத் தந்து, மீண்டும் அதைச் செயல்முறைப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதிலே ஒரு சிக்கல். சென்ற காலத்திலே இருந்த அரசு, கணக்கு வழக்கின்றி அதைக் கொள்முதல் செய்து போட்டு, இப்போது அந்த கனத்த ரக ஆடை இரகங்கள், ஏறத்தாழ 3½ கோடி ரூபாய்க்குத் தேங்கிக் கிடப்பதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தத் தேக்கத்தை நீங்கள் வெளிப்படுத்துவதோடு, அதாவது அதை விற்பனை செய்வதோடு, மீண்டும் அந்த நெசவாளர் குடும்பங்கள் வாழ்வதற்கு, அந்த இரகத் துணி வகைகளை நெய்வதற்கு, உரிமை தரவேண்டும் என்று நான் உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-15

அதேபோல், கிராமப்புறங்களிலே இருக்கின்ற நூற்பாளர்களை, கதர் வாரியம் தேர்வு செய்து, அவர்களுக்குப் பணியமர்வு செய்து கொண்டிருந்தது. அந்தவகையில, ஏற்கெனவே முதல்நிலை நூற்பாளர்கள் என்ற வகையில், 200 பேருக்கு மேல் அதிலே நிரந்தரமாக்கப் பட்டிருக்கிறார்கள். அவர்கள் இல்லாமல்—இன்னும் 120 பேர் நூற்பாளர்களாகப் பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் வயது முதிர்ந்தவர்கள், முதல்நிலை நூற்பாளர்கள் என்ற வகையில், அவர்களுக்கும் பணி நிரந்தரம் தந்து உதவ வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பனைப் பொருள் உற்பத்தி. பொதுவாக எங்கள் மாவட்டங்களைக் காட்டிலும், தென் மாவட்டங்களிலேதான் பனை மரங்கள் அதிகம்; பனைப் பொருட்களின் உற்பத்தியும் அதிகம். அந்தவகையில், அவர்கள் சீனி, கருப்பட்டி போன்ற பொருட்களைத் தவிர, பனை ஓலைகளைக் கொண்டு ஏராளமான மற்ற பொருட்களையும் தயாரிக்கிறார்கள் விசிறி, கைப்பை, பொம்மைகள் போன்ற இதுமாதிரியான பொருட்களை நிறையத் தயார் செய்து, தென்மாவட்டங்களிலே விற்கிறார்கள்.



1998 ஏப்ரல் 20] [திரு. ஜி.பி. வெங்கிடு]

ஆனால், இதே பொருள்கள், மற்ற மாவட்டங்களில் இருக்கின்ற கதர் அங்காடிகளில் கிடைப்பதில்லை. அப்படி, எல்லா அங்காடிகளிலும் கிடைப்பதற்கு உரிய ஏற்பாட்டைச் செய்வீர்களானால், நிச்சயமாக பனைப் பொருட்கள் உற்பத்தி செய்கின்ற தொழிலாளர்களுடைய வாழ்வு மேம்படும். அதேசமயத்தில், இந்த வாரியத்திற்கும் நல்ல இலாபம் கிடைக்கும்; வளர்ச்சி தெரியும் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மேலும் ஒன்று; 1987-ல் கள்ளுக் கடைகளை மூடிய நேரத்தில், பனை ஏறும் தொழிலாளர்கள் எல்லாம் வேலைவாய்ப்பை இழந்து நின்றார்கள். அப்படி வேலைவாய்ப்பை இழந்து நின்ற தொழிலாளர்களுக்கு, அதாவது 30 ஆயிரம் பனைத் தொழிலாளர்களுக்கு, மாற்றுத் தொழில் நடத்துவதற்காக, மானியமாக ஆயிரம் ரூபாயும், அதேநேரத்தில் வட்டி இல்லாத கடனாக ஆயிரம் ரூபாயும் அரசாங்கத்தால் தரப்பட்டது. இன்றைக்கு ஏறத்தாழ 11 ஆண்டுகள் கடந்தும், அந்த மானியம் போக, கொடுத்த கடன் தொகையில் ஏதாவது வசூல் ஆகியிருக்கிறதா என்றால், 1¼ இலட்சம் ரூபாய்தான வசூல் ஆகியிருப்பதாகத் தகவல் சொன்னார்கள். அவர்கள், அந்த வட்டி இல்லாத கடனைக்கூட, ஆயிரம் ரூபாய் கடனைக்கூட கட்ட முடியாத அளவுக்கு, அந்தப் பனை ஏறும் தொழிலாளர்கள் இன்றைக்கும் அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஒரு தொழிலாளி, காலையிலும், மாலையிலும் பனை ஏறுகிறான் என்று சொன்னால், இரவு 10 மணி வரையில் அவன் பனை ஏறுகிறான். அவன் பனை ஏறிக் கொண்டுவந்த அந்தப் பதநீரின் தெளிவை, கருப்பட்டியாக மாற்றுவதற்கு, அவன் வருவதற்கு முன்னரே, அவனுடைய மனைவி, அதைக் காய்ச்சுவதற்குத் தயாராக இருக்கிறாள். இப்படி, கணவனும், மனைவியுமாக, குடும்பமே பாடுபட்டும்கூட, தங்களுடைய சராசரி வாழ்வைக்கூட நடத்த முடியாத ஏழ்மை நிலையிலே அந்தப் பனை ஏறும் தொழிலாளர்கள் இன்றையதினம் வதை பட்டுக் கொண்டிருக்கிறார்கள். அப்படி வதைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதற்குச் சான்றுதான், வாங்கிய ஆயிரம் ரூபாய் கடனை 11 ஆண்டுகள் ஆகியும் கட்ட முடியாமல் இருக்கிறார்கள் என்பது. அப்படிப்பட்ட அந்தப் பனை ஏறும் தொழிலாளர்களுக்கு நம்முடைய அரசு உத்தரவாதம் தரவேண்டும். வாங்கி இருக்கின்ற தொகை, ஏறத்தாழ 3 கோடி ரூபாய் பெறும் என்று கேள்விப்பட்டேன்;

தமிழ்நாட்டிலே இருக்கும் 30,000 பனையேறும் தொழிலாளர் குடும்பங்கள் பெற்றிருக்கின்ற அந்த 3 கோடி ரூபாய்க் கடனை இரத்து செய்வது நமது அரசுக்குப் பெரிதல்ல என்று கருதுகிறேன். ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்களும், கருணையே வடிவான நமது முதல்வர் அவர்களும் இதைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு அந்த 30,000 குடும்பங்களும் பெற்றிருக்கின்ற அந்தக் கடன் தொகையை, அதாவது அந்த 3 கோடி ரூபாய்க் கடன் தொகையைத் தள்ளுபடி செய்து பனையேறும் தொழிலாளர்களுக்கு உதவ வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அப்படித் தள்ளுபடி செய்வதால் 30,000 தொழிலாளர்கள் மட்டும்தான் பயன்பெறுகிறார்கள் என்று இல்லை. 30,000 குடும்பங்கள் அதிலே பயன்பெறுகின்றன. அந்தக் குடும்பங்கள் நம்மை வாழ்த்தும், வணங்கும் என்று தெரிவித்து அந்தக் கடன் தொகையை இரத்து செய்ய வேண்டும் என்று நான் தங்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 3-20

எலுமிச்சை எண்ணெய் எடுக்கும் சில கருவிகளை வைத்து பல பகுதிகளிலே மையங்களைத் தொடங்கவிருக்கிறோம் என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த எண்ணெய் அது ஒரு வகையான புல்லிலிருந்து எடுக்கப்படுகிறது. லெமன் கிராஸ் என்ற புல்லிலிருந்து அது எடுக்கப்படுகிறது. அந்த 'லெமன் கிராஸ்' கோவை மாவட்டத்திலே இருக்கிற வால்பாறையிலே ஏராளமாக விளைகிறது. அந்தப் புல்லை கேரளாவிலே இருக்கிற தனியார் வியாபாரிகள் அங்கே வந்து கொள்முதல் செய்து கேரளாவுக்குக் கொண்டு போய் எண்ணெய் எடுக்கிறார்கள். இப்போது பெரிய பெரிய சோப்புக் கம்பெனிகள் மும்பையிலிருந்தும் மற்ற இடங்களிலிருந்தும் எலுமிச்சை நறுமணமுள்ள சோப்புகளைத் தயாரித்து வருகிறார்களே, அதுபோல கேரளாவிலே எலுமிச்சைச் சாற்றை, எண்ணெய்யை அந்த சோப்புக்குப் பயன்படுத்தி அந்த வாசனையை கொண்ட சோப்பை உற்பத்தி செய்து அதன்மூலம் பயன்பெற்று வருகிறார்கள்.

தமிழக அரசு நம்முடைய கதர் வாரியத்தின் சார்பிலே சோப்பு தயாரிக்கிறது. ஆடைகளுக்குப் போடுகிற சோப்பையும் நாம் தயாரிக்கிறோம். மனித உடலுக்குப் போடுகிற சோப்பையும் நாம் தயாரிக்கிறோம். அதிலே சந்தன சோப்பைக்கூட நாம் தயாரிக்கிறோம்.



அப்படித் தயாரிக்கிற அந்த சோப்புகளோடு நாம் இந்த எலுமிச்சை எண்ணெய்யைப் பயன்படுத்தி அந்த மணத்தோடு கூடிய சோப்பையும் தயாரித்தால் விற்பனையைப் பெருக்க அது வாய்ப்பாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு நம்முடைய அமைச்சர் அவர்களுக்கு நான் ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். ஈரோடு மாவட்டத்தில் குறிப்பாக அமைச்சர் அவர்களுடைய தொகுதியான அந்தியூர் தொகுதியிலே தட்டக்கரை, தாமரைக்கரை, பர்கூர் என்று ஆரம்பித்து, வேலாம்பட்டி வரையிலே மலைப்பகுதி வருகிறது. அங்கேயிருந்து தொடங்கி மார்க்கம்பாளையம், குன்றி, கடம்பூர், ஆசனூர், தாளவாடி என்று சத்தியமங்கலம் தொகுதியிலே ஒரு நீளமான மலைப்பகுதி இருக்கிறது. அந்தப் பகுதியிலே இந்த 'லெமன் கிராஸ்' புல் ஒரு சில இடங்களிலே ஆங்காங்கே காணப்படுகிறது. அப்படி விளைவுக்குத் தோதான அந்தப் பகுதியிலே இந்த 'லெமன் கிராஸ்' புல்லை நிறையக் கொண்டு வந்து விளையவைத்தால் அங்கே இருக்கின்ற மலைவாழ் மக்களுக்கும் அது ஒரு நல்ல தொழிலாகவும், வருமானம் தருவதற்கு ஒரு வாய்ப்பாகவும் அமையும். அதேநேரத்தில் அங்கே ஒரு எலுமிச்சை எண்ணெய் எடுக்கின்ற ஆலையை நிறுவினால் அங்கேயிருக்கிற மலைவாழ் மக்களுக்கு அதன்மூலம் தொழிலும், வேலைவாய்ப்பும் கிடைக்கும். ஆகவே அதனை அருள்கூர்ந்து செய்து தரவேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டத்தில்தான் 17 இலட்ச ரூபாய் செலவில் தேனைப் பதப்படுத்துகின்ற ஒரு ஆலையை நிறுவ இருக்கிறோம் என்று இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் தேனைப் பதப்படுத்துகின்ற அதேநேரத்தில் ஈரோடு மாவட்டத்திலே இருக்கிற அந்த நெடிய மலைப் பகுதியிலே எல்லாம் ஏராளமாக அந்த மலைவாழ் மக்களுக்குப் பெட்டிகள் தந்து தேனீயை வளர்ப்பதற்கும், தேன் எடுப்பதற்கும் அங்கே நாம் வாய்ப்புகளை உருவாக்கித் தந்திருக்கிறோம். அந்த மலைப் பகுதியில், தாளவாடி பகுதியில், குன்றிப் பகுதியில், கடம்பூர் பகுதியிலே, பெட்டிகளை வைத்து அந்த மலைவாழ் மக்கள் தேன் எடுக்கின்றார்கள். அவர்கள் எடுக்கின்ற தேனையெல்லாம் பாட்டில்களிலே நிரப்பி, கீழேயிருந்து போகின்ற மக்களுக்கு 1 லிட்டர், ½ லிட்டர் என்று ஏதோ ஒரு விலைக்கு விற்று அவர்கள் சம்பாதித்துக்

[திரு. ஜி.பி. வெங்கிடு] [1998 ஏப்ரல் 20

கொண்டிருக்கிறார்கள். அதைக் காட்டிலும் தேனைப் பதப்படுத்துகின்ற ஒரு மையத்தை அந்த மலைப்பகுதியிலே உருவாக்குவீர்களேயானால் அது அந்த மக்களுக்கு மிகுந்த இலாபத்தைத் தருகின்ற தொழிலாகவும், வேலைவாய்ப்பைத் தருகிற ஒரு வாய்ப்பாகவும் அமையும் என்று நான் சொல்லிக்கொண்டு இதை அமைச்சர் அவர்கள் கருத்தில் கொண்டு அதற்கு ஏற்பாடு செய்து தரவேண்டுமென்று மன்றாடிக் கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல, கதர் வாரியம் சோப்புத் தயாரிக்கிற பகுதியில் பல இடங்களிலே பல யூனிட்டுகள் மூடப்பட வேண்டிய நிலையிலே இருப்பதாக அறிகிறேன். அதிலே வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் — உடலுக்குப் போடுகின்ற சோப்பாக இருந்தாலும், துணிக்குப் போடுகின்ற சோப்பாக இருந்தாலும், எந்த சோப்பாக இருந்தாலும் — அந்த சோப்பு தயாரிக்கின்ற அலகுகளில் வேலை செய்து கொண்டிருந்த தொழிலாளர்கள் நிரந்தரம் அற்றவர்களாக இருந்தார்கள். அப்படி இருந்தவர்களில் பலபேர் இன்றைக்கு வேலை இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு கொடுக்கின்ற ஓர் உத்தரவாதம் இல்லாமல் இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இதனை அருள்கூர்ந்து உள்ளத்திலே கொண்டு இந்த வாரியத்திலே பணியாற்றுகின்ற தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் மிக்க பணிவோடு கேட்டுக்கொண்டு, இந்தக் கதர் மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*பிற்பகல் 3-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர்.

**திரு. சோ. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர்த் துறை மானியக் கோரிக்கையில் பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நம்முடைய தலைவர் காமராஜர் அவர்கள் இந்த நாட்டின் முதலமைச்சராக இருந்தபோது கதர் வாரியத்தை எப்படி அமைக்க வேண்டும் என்பது குறித்து ஆராய்வதற்காக டெல்லியிலிருந்து ஜே.சி.



1998 ஏப்ரல் 20] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

குமரப்பா அவர்களை இங்கே வரவழைத்தார்கள். ஜே.சி. குமரப்பா அவர்கள் இங்கே வந்தபோது, நம்முடைய தலைமைச் செயலாளராக அப்போது வர்கீஸ் அவர்கள் இருந்தார்கள். தலைவர் காமராஜர் அவர்கள், தலைமைச் செயலாளர் வர்கீஸ் அவர்களிடம் தெரிவித்தபோது, ஜே.சி. குமரப்பா அவர்களுக்கு அரசு அங்கீகாரத்தோடு ஒரு மத்திய அமைச்சருக்கு நாம் எவ்வளவு மரியாதை கொடுப்போமோ அந்த அளவுக்கு மரியாதை கொடுக்க வேண்டுமென்று உத்தரவிட்டார்கள். அப்போது வர்கீஸ் அவர்கள் என்ன சொன்னார்கள் என்றால், 'அவர் எந்தப் பதவியிலும் இல்லையே, எம்.பி.-யாகக்கூட இல்லாத அவருக்கு எப்படி அரசு மரியாதை கொடுக்க முடியும்' என்றும் எங்காவது ஒரு நல்ல ஓட்டலில் வேண்டுமானால் அவருக்கு ஒரு அறை போட்டு கார் வசதி செய்து கொடுக்கலாம் என்றும் சொன்னார்கள். அப்போது தலைவர் காமராஜர் அவர்கள் மகாத்மா காந்தியை நேரடியாக இன்று உயிரோடு பார்ப்பதுபோல் ஒரு மாமனிதராக ஜே.சி. குமரப்பா அவர்களை நான் பார்க்கிறேன், எனவே தனி ஜி.ஓ. போடுங்கள், நான் கையெழுத்திடுகிறேன் என்று சொல்லி, ஜே.சி. குமரப்பா அவர்களை இங்கு வரவழைத்து அரசு மரியாதை கொடுத்து கதர் வாரியத்தை எப்படி அமைக்க வேண்டும், கிராமப்புற மக்களை எப்படி முன்னேற்ற வேண்டும் என்பதற்காக அவரை இங்கே ஒரு வார காலம் அரசு மரியாதையோடு அமரச் செய்து அவரிடம் விவாதங்கள் நடத்தியதாக நம்முடைய தமிழக வரலாறு கூறுகிறது.

அப்போது ஜே.சி. குமரப்பா அவர்கள் ஒரு கூட்டத்திலே சொன்னது என்னவென்றால், இந்த நாட்டிலே இருக்கின்ற செருப்புத் தைக்கின்ற தொழிலாளி முன்னேற வேண்டுமானால் அவன் தைக்கின்ற செருப்புக்கு இன்று இருக்கின்ற விலையைவிட 50 மடங்கு கூட கொடுக்க வேண்டுமென்று பேசியதாக நான் ஒரு பத்திரிகையில் பார்த்தேன். இப்படி நாட்டில் ஏழை எளிய மக்கள் தயாரிக்கின்ற பொருட்களுக்கெல்லாம் விலை கூட வேண்டுமென்று சொன்னவர் ஜே.சி. குமரப்பா அவர்கள். அதன் அடிப்படையில், இந்த நாட்டில் உள்ள ஏழை எளியவர்கள், அருந்ததியர்கள், பனைத் தொழில் செய்கின்ற தொழிலாளர்கள், பனை மரங்களில் ஏறி வேலை செய்கின்றவர்கள் எல்லோரும் முன்னேற வேண்டுமானால் இந்தக் கதர்த் துறை மூலமாகத்தான் அவர்கள் வேலை பெற முடியும் என்பதற்காக அன்றைக்கு ஏராளமான திட்டங்களைப் போட்டார்கள். கிராமங்கள்தோறும் சிறுசிறு தொழிற்சாலைகள் ஏற்படுத்தப்பட்டன.

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1998 ஏப்ரல் 20

ஆனால் அவைகள் எல்லாம் படிப்படியாக சிறுகச் சிறுக நசிந்து இன்று மிகப்பெரிய தொழில் அதிபர்களைக் கொண்ட நாடாக வளர்ந்து, ஏழைகள் மறுபடியும் ஏழைகளாகவே செல்லுகின்ற ஒரு சூழ்நிலை ஏற்பட்டிருப்பதைப் பார்க்கும்போது காந்தியடிகள் கண்ட கனவு இந்த நாட்டில் நனவாகவில்லை என்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்று கதர்த் துறையைப் பொறுத்தவரையில் மாவட்ட வாரியாக அதிகாரிகள் இருக்கிறார்கள். அங்கெல்லாம் பணம் ஒதுக்கப்படுகிறது. ஆனால் அந்தப் பணம் சரியாக கிராமப்புற மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு ஒழுங்காகப் போய் சேரவில்லை என்பதை நான் இங்கே வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன். பல இடங்களில் சில காரியங்களைச் செய்திருக்கிறார்கள். உதாரணத்திற்கு என்னுடைய தொகுதியில், கமுதி ஒன்றியத்தில் தோப்படப்பட்டி என்ற கிராமத்தில் மிக நீண்ட கட்டடத்தைக் கட்டியிருக்கிறார்கள். கதர்த் துறையால் கட்டப்பட்டது என்று அதில் எழுதப்பட்டுள்ளது. நான் அதைப் பார்க்கும்போதெல்லாம் மிகுந்த வேதனையடைகிறேன். காரணம் அது நகரத்தில் இருக்குமானால் பல ஆயிரக்கணக்கான ரூபாய் வருமானம் கிடைக்கும். ஆனால் அது ஒரு குக்கிராமத்தில் முழுமையாக தாழ்த்தப்பட்ட, அரிஜனங்கள் வாழ்கின்ற பகுதியில் கட்டப்பட்டு இருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு கோடி ரூபாய் செலவழித்தால்கூட அப்படி ஒரு நீண்ட கட்டடத்தை இப்போது கட்ட முடியாது. அது கட்டப்பட்டு 10 அல்லது 15 ஆண்டுகள் இருக்கும் என்று நான் கருதுகிறேன். கட்டப்பட்ட கட்டடம் பயன்படுத்தப்படாமல் இருக்கிறது. இப்படிப் பல இடங்களில் இந்தத் துறை என்ன செய்து இருக்கிறது என்ற கணக்குக்கூட இல்லாத அளவுக்கு நிலைமைகள் மிக மோசமாகப் போய்க் கொண்டிருக்கின்றன. நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே கூடப் படித்துப் பார்த்தேன். நிதிநிலை அறிக்கையில் ஒரு வரிகூடக் கதரைப் பற்றிச் சொல்லப்படவே இல்லை. கைத்தறியைப் பற்றித்தான் பேசியிருக்கிறோம். மற்ற எல்லா துறைகளைப் பற்றியும் பேசிக் கொண்டிருக்கின்ற நம்முடைய நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கதரைப் பற்றி ஒரு வார்த்தைகூடப் பயன்படுத்தவில்லை என்பதை நான் வருத்தத்தோடு இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 20] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

18,000 கோடி ரூபாய் என்ற நம்முடைய வரவு செலவுத் திட்டத்தில் வெறும் 18 கோடி ரூபாயைத்தான் நாம் இதற்காக ஒதுக்கியிருக்கிறோம். அப்படி என்றால் மொத்தத்தில் ஒரே ஒரு சதவிகிதத்தைத்தான் இந்தத் துறைக்கு ஒதுக்கியிருக்கிறோம் என்று சொல்வதிலிருந்தே இந்தத் துறை எவ்வளவு புறக்கணிக்கப்பட்டிருக்கின்றது என்பதை நாம் மறந்துவிடக்கூடாது.

பிற்பகல் 3-30

இதோடு, பனை வாரியம் என்று இந்தத் துறையிலிருந்து பிரிக்க பல்வேறு முயற்சிகள் செய்து, நாங்கள் எல்லாம் கடுமையாகப் போராடியதால் கடந்த ஆட்சிக் காலத்தில் 1995 ஆம் ஆண்டு பனை வாரியம் என்று ஒரு வாரியத்தை ஏற்படுத்தினார்கள். அதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் தலைவராக இருக்க வேண்டும். ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி அந்தஸ்தில் ஒரு முதன்மைச் செயல் அலுவலர் இருக்க வேண்டும். எட்டு மாவட்டங்களிலே இந்தப் பனை மரங்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் எட்டு மாவட்டங்களிலிருந்து ஒரு இயக்குநர் இருக்க வேண்டும் என்றெல்லாம் சட்டம் விதித்து, அந்தப் பனை வாரியம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறையாவது கூடவேண்டும் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. அதன் அடிப்படையில் அவர்கள் என்ன வேலைகள் செய்ய வேண்டும் என்றெல்லாம் மிக, மிக விரிவாக விளக்கமாக அன்றிருந்த முதன்மைச் செயல் அலுவலர் திருமதி. சோசம்மா என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி மிகத் தெளிவாக அந்தச் சட்டங்களையெல்லாம் வகுத்திருக்கிறார்கள். நம்முடைய அமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். அந்தப் பனை வாரியம் என்பது செயல்படுகிறதா? அதில் கூட்டங்கள் எல்லாம் நடக்கிறதா? அதற்கு ஒரு முதன்மை செயல் அலுவலர் செயல்படுகிறாரா? ஏற்கெனவே போடப்பட்ட அந்தக் குழு கலைக்கப்பட்டுவிட்டதா? அல்லது வேறு குழு போட்டு இருக்கிறீர்களா என்பதையெல்லாம் நீங்கள் இந்த இடத்தில் சொல்லாவிட்டாலும்கூட இந்தச் சட்டமன்றம் முடிவடைவதற்குள்ளாவது பனை வாரியத்தைப் பற்றி ஒரு வெள்ளை அறிக்கையை இந்த அவையில் வைக்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பனை வாரியம் என்பது மிக மிக முக்கியம். காரணம், இந்திய நாட்டிலுள்ள பனை மரங்களில் 50 சதவிகிதத்திற்கு மேற்பட்ட பனை

[திரு. சோ. பாலகிருஷ்ணன்] [1998 ஏப்ரல் 20

மரங்கள் நம்முடைய தமிழ்நாட்டிலேதான் இருக்கின்றன. அது மட்டுமல்லாமல் ஆறு இலட்சம் குடும்பங்கள், 10 இலட்சம் என்று கூட அவர்கள் கணக்கு எடுத்திருக்கிறார்கள். ஆனால் நம்முடைய அரசு புள்ளிவிவரங்களின்படி — 6 இலட்சம் குடும்பங்கள்–இந்த பனை மரத் தொழிலை நம்பி இருக்கின்றார்கள். மிக அருமையான பதநீர், சீனி மற்றும் பனஞ்சீனி போன்ற பொருட்களையெல்லாம் தயாரிக்கின்ற மிகச் சிறந்த தொழிலாளர்கள் அவர்கள். ஆனால் அவர்களுடைய வாழ்க்கையை நேரில் பார்ப்பீர்களேயானால்;

"கல்மன மானிடரும் கண்ணிரங்கி நீர் வடிப்பர்"

என்று ஒரு கவிஞன் சொன்னது நம்முடைய நினைவுக்கு வருகிறது. அவர்கள் ஓலைக் குடிசைகளில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பனைமரத் தொழிலாளர்கள் பாம்புகளோடு வாழுகின்ற மிகக் கொடுமையான சூழ்நிலையை நாம் நேரில் பார்க்க முடியும். அந்தப் பனைமரத் தொழில்கூட அவர்களுக்கு 6 மாதங்களுக்குத்தான். ஆறு மாதங்கள் முடிந்துவிட்டால் வேலையில்லாமல் இருக்கிறார்கள். யாராவது விவசாயிகள் களை எடுப்பதற்கு, கதிர் அறுப்பதற்கு அவர்களைக் கூப்பிடுவார்களா என்று ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். விவசாயிகளோ இவர்களுக்குக் களை எடுக்கவும் தெரியாது, கதிர் அறுக்கவும் தெரியாது என்று வேலை அளிக்க மறுக்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு மோசமான சூழ்நிலையில் பனைமரத் தொழிலாளர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, பனைமர வாரியத்தை ஒரு செம்மையான வாரியமாக ஒரு நல்ல தெளிவான ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரியின் தலைமையின்கீழ் செயல்படுத்திட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்ற நம்முடைய தாய்மார்கள்பற்றி இங்கேகூட ஓர் உறுப்பினர் மிக அழகாக, மிகத் தெளிவாகப் பேசினார். 40 ஆயிரத்துக்கு மேற்பட்ட பெண்கள் இந்தத் தொழிலில் ஈடுபட்டிருக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் அவர்களுக்கு வருமானம் என்பது ரூ. 20, ரூ. 25 கூடக் கிடைப்பது அரிதாக இருக்கிறது. அந்த நெசவுத் தொழிலாளர்களுடைய, அந்தப் பெண்களுடைய உடம்பைப் பார்க்கின்றபோதே அவர்கள் வறுமையிலே வாடுகின்றார்கள் என்பது மிகத் தெளிவாகத் தெரியும். அந்த அளவிற்கு அவர்கள் மோசமான சூழ்நிலையில் வேறு வழியில்லாமல் அந்தத்



1998 ஏப்ரல் 20] [திரு. சோ. பாலகிருஷ்ணன்]

தொழிலில் ஈடுபட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் உரிய சம்பளம் கொடுத்து இந்தத் துறையை வளர்க்க வேண்டும். கதர் ஆடை என்பது இந்த நாட்டில் கட்சி வித்தியாசம் இல்லாமல் அத்தனை பேரும் அணிகின்ற ஓர் உடை. கதர் ஆடை அணிந்தவர்கள் வேறு எந்த உடையையும் அணியமாட்டார்கள். ஆகவே, இங்கே உள்ள சட்டமன்ற உறுப்பினர்களை எல்லாம் நான் கேட்டுக்கொள்வது, நாளையிலிருந்து நீங்கள் அத்தனை பேர்களும் கதர்த் துணியை வாங்குங்கள். கதர் ஆடை என்பது ஓர் இனிமையான, உடம்புக்கு நல்ல அருமையான துணி என்பதை நீங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பிற்பகல் 3-35

கைத்தறித் துணியையும் அணியலாம் என்றாலும்கூட, கைத்தறித் துணி என்பது இன்று நாடு முழுவதும் ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருளாக இருக்கின்ற சூழ்நிலையில், கதர்த் துறையை வளர்க்க வேண்டியது நம் ஒவ்வொருவருடைய கடமையாகும். உலகம் முழுவதும் இன்று பலவிதமான சோப்புகளைத் தயாரிக்கின்ற இந்தக் கால கட்டத்தில், வேம்பின் கொட்டையிலிருந்து தயாரிக்கின்ற சோப் இன்று உலகப் புகழ் பெற்ற சோப்பாக விளங்குகின்றது. அதனைக் கதர் வாரியம் சிறந்த முறையிலே தயாரித்து, ஏழைத் தொழிலாளர்களுடைய வாழ்க்கையில் ஒளியேற்றிட அரசு முயற்சியை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கர்நாடக மாநிலத்தில் எப்படி சந்தன சோப்பை உலகப் புகழ்பெற்ற சோப்பாக மாற்றியிருக்கிறார்களோ, அதுபோல, கதர் வாரியம் வேம்பிலிருந்து தயாரிக்கின்ற சோப்பினையும் உலகப் புகழ்பெற்ற சோப்பாக மாற்ற வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

அதுமாத்திரமல்ல, கதர்த் துணியின் விலை அதிகமாக இருப்பதால், அதை மக்கள் வாங்க அஞ்சுகிறார்கள். ஏனென்றால், கதர்த் துணி நல்ல துணியே தவிர, நிரந்தரமாகப் பல ஆண்டுகள் அணிந்து கொள்ள முடியாது என்கிற காரணத்தினால், இதனுடைய விலையை ஓரளவு குறைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு, அதற்கு அரசு மானியம் அளிப்பதில் கொஞ்சம்கூடக் கஞ்சத்தனம் செய்யக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து, பனை வாரியம். அதில் வேலை செய்கிறவர்கள் சம்பளம் பற்றிக் கேட்டால் என்ன சொல்கிறார்கள் என்றால், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னதைப்போல,— கன்னியாகுமரி மாவட்டத்தில் 10 மாத காலமாகச் சம்பளமே இல்லை என்று சொல்கிறார்கள். சம்பளத்தைக் கேட்டால் வாரியத்தின் கடனை வசூல் செய்து பெற்றுக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்களாம். இப்போது இருக்கிற சூழ்நிலையில், வங்கிகள் கொடுத்த கடனையே திருப்பி வாங்க முடியாத இந்தக் காலத்தில், பனை வாரியத்திலிருந்து கொடுத்த கடனை எப்படி வசூல் பண்ண முடியும் என்பதை நாம் சிந்திக்க வேண்டும். ஆகவே, அந்தக் கடன் தொகை வசூலாகும்போது வசூலாகட்டும், அதைக் காரணங்காட்டி, அங்கே வேலை செய்பவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கு நாம் தயங்கக்கூடாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, பனங்கருப்பட்டி, இது மிகவும் அருமையான, உடல் நலத்திற்கு உகந்த பொருள் என்கிற முறையில், நம்முடைய சத்துணவு, ஊட்டச் சத்துணவு போன்ற துறைகளில் அவர்கள் வாங்குகின்ற வெல்லத்திற்குப் பதிலாக இந்தப் பனங்கருப்பட்டியை வாங்குவதற்கு அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பனை வாரியம் பல சிறப்பான முறைகளில் காரியங்களைச் செய்கிறது என்பதால், மேலும் நல்ல காரியங்களைச் செய்யக்கூடிய வாரியமாக அதை ஆக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசிலிருந்து பனை வாரியத்திற்கு என்று வருகிற பணத்தைக் கதர் வாரியத்தில் எடுத்துக்கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு இருந்து வருகிறது. ஆகவே, பனை வாரியமும், கதர் வாரியமும், தனித்தனியாக, நல்லமுறையில் சிறப்பாகச் செயல்படுவதற்கு அரசு உதவ வேண்டுமென்று கேட்டு, உரையை முடித்துக் கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கதர் கிராமத் தொழில்கள் மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்திற்குப் பதில் அளிக்கின்ற நல்லதொரு வாய்ப்பினைக் கொடுத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. சி. ஞானசேகரன், திரு. ம. சண்முகம், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர், விளவங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. டி. மணி, கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. லி. அய்யலுசாமி மற்றும் கோபிச்செட்டிப்பாளையம் சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி.பி. வெங்கிடு ஆகியோர் பல அரிய கருத்துக்களைக் கூறியிருக்கிறார்கள்.

பிற்பகல் 3-40

கதர் கிராமத் தொழில் வாரியத்தைப் பொறுத்தவரையில், கிராமத் தொழில்கள், தச்சுத் தொழில்கள், சோப்பு அலகுகள், காலணி செய்கின்ற அலகுகள் இதுமாதிரி கிராமங்களில் கிடைக்கின்ற பொருட்களை, அந்தப் பகுதிகளிலே வைத்து, அந்தப் பகுதி மக்கள் இப்போது எளிய முறையில் உற்பத்தி செய்கின்ற அதே நேரத்தில் கிராமங்களில் இருக்கின்றவர்களுக்கு வேலை வாய்ப்புத் தருகின்ற ஓர் உன்னதமான துறை, கதர் கிராமத் தொழில் வாரியமாகும்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் பேசும்போது, கதர் வாரியத்தின் மூலம் செய்யப்படுகின்ற காலணிகள், காவல் துறைக்கு சப்ளை செய்யப்பட்டதில் சில முறைகேடுகள் நடந்திருக்கின்றன என்று சொன்னார்கள். உண்மையிலேயே, காவல் துறைக்கு சப்ளை செய்யப்பட்ட அந்தப் பொருட்கள் தரமானதுதான் என்று இந்திய தோல்பொருள் விஞ்ஞானக் கழகத்தின் சார்பாகச் சான்று வழங்கப்பட்டதற்குப் பிறகுதான் அந்தப் பொருள்கள் எல்லாம் சப்ளை செய்யப்பட்டன. அதோடு மட்டுமல்லாமல் வாரியத்தின் மூலமாகச் செய்யப்படுகின்ற பூட்ஸ்கள், காலணிகள், நூற்றுக்கணக்கான தொழிலாளர்களைக் கொண்டு, சென்னை, அம்பத்தூரில் உள்ள தொழில் வளாகத்தில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த பூட்ஸ்கள், காலணிகள் செய்யப்படுவதைக் காவல் துறையின் உயர் அதிகாரிகள் பார்வையிட்டு, ஆய்வு செய்த பிறகுதான் ஆர்டர் வழங்கப்பட்டது. காவல் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகள் ஆய்வு செய்த பிறகுதான், அதாவது சப்ளை செய்யப்பட்ட பொருட்கள் தரமானதுதான் என்று ஆய்வு செய்த பிறகுதான், கதர் வாரியத்திற்கே வந்து சேர வேண்டிய தொகை வந்து சேர்ந்திருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. அந்தியூர் ப. செல்வராசு] [1998 ஏப்ரல் 20

அதே நேரத்தில் கிணத்துக்கடவு சண்முகம் அவர்கள் பேசும்போது கதர் வாரியத்தில் மோட்டா ரகங்களைத் தவிர்த்து, சன்ன இரகங்களை உற்பத்தி செய்ய வேண்டுமென்று கூறினார்கள். அதேமாதிரி, இந்த ஆண்டு மோட்டா ரகங்களைத் தவிர்த்து, மக்கள் விருப்பத்திற்கேற்ப சன்ன இரகங்கள் உற்பத்தி செய்யப்படும். அதேநேரத்தில் மோட்டா இரகங்களை உற்பத்தி செய்யும் நெசவாளர்களை, அவர்களுடைய தொழில் பாதிக்காத வகையில், இந்த வாரியம் பயன்படுத்திக்கொள்ளும் என்று அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து விளவங்கோடு மணி அவர்கள் பேசும்போது, சிறந்த முறையில் கதர்த் துணிகள் தயாரிக்கப்பட வேண்டுமென்று சொன்னார்கள். கதர் வாரியத்தால் கொள்முதல் செய்யப்படுகின்ற பச்சைத் தேனுக்கு இப்போது ஒரு கிலோவுக்கு 44 ரூபாய் தரப்படுகிறது. 3 ரூபாய் சேர்த்து 47 ரூபாயாக இந்த ஆண்டு முதல் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குழித்துறையில் இருக்கின்ற பனைப்பொருள் வாரிய சம்மேளனத்திற்கு அதன் தொழிலாளர்களுக்குச் சம்பளம் கொடுக்கக்கூட நிதி இல்லை என்று சொன்னார்கள். சென்ற மாதம்கூட 3 இலட்சம் ரூபாய் அந்தச் சங்கத்திற்கு வழங்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கதர் வாரியம், கிராமப் பொருட்களைப் பொறுத்தவரையில் இந்த ஆண்டு 348 இலட்ச ரூபாய்க்குத் தயார் செய்யப்பட்டு, 240 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது; கைமுறைக் காகித அலகைப் பொறுத்தவரையில், ரூ. 34.42 இலட்சத்திற்குத் தயாரிக்கப்பட்டு, ரூ. 32.48 இலட்சத்திற்கு விற்கப்பட்டிருக்கிறது; தச்சு மரச்சாமான்கள் ரூ. 96.67 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, முழுவதுமாக விற்பனை செய்யப்பட்டிருக்கிறது; மண்பாண்டத்தைப் பொறுத்தவரையில், ரூ. 13.06 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு, ரூ. 10.46 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டைவிட இந்தக் கதர் வாரியத்தில் இருக்கின்ற தொழில்கள் இலாபகரமான நிலையில் இயங்குவதற்கு, செயல்படுவதற்கு எல்லாவிதமான முயற்சிகளும் எடுக்கப்பட்டு, இந்தப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



1998 ஏப்ரல் 20] [திரு. அந்தியூர் ப. செல்வராசு]

அதைப்போல, சுதந்திரப் பொன் விழா ஆண்டையொட்டி, மத்திய அரசு 15 சதவிகிதம் தள்ளுபடி வழங்கியிருக்கிறது. மாநில அரசும் அதன் பங்காக 15 சதவிகிதம் வழங்க வேண்டுமென்று—மாண்புமிகு உறுப்பினர் எதிர்க்கட்சித் துணைத் தலைவர் திரு. வி.கே. இலட்சுமணன் அவர்கள், கதர் ஆடையை விரும்பி அணிகின்ற இராணிப்பேட்டை காந்தி அவர்கள், மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பராயன் அவர்கள், பெருந்துறை பெரியசாமி போன்றவர்கள் எல்லாம் மாநில அரசும் 15 சதவிகிதம் தள்ளுபடி வழங்க வேண்டுமென்று,— மாண்புமிகு முதல்வர் அவர்களை அணுகி கோரிக்கை வைத்தார்கள். மைய அரசு 15 சதவிகிதம் வழங்கியிருக்கிறது என்றும் மாநில அரசும் குறைந்தது 10 சதவிகிதமாவது வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை வைத்த நேரத்தில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் மத்திய அரசு எவ்வளவு வழங்கியிருக்கிறது என்று என்னிடத்தில் கேட்டார்கள்; 15 சதவிகிதம் தள்ளுபடி வழங்கியிருக்கிறது என்று சொன்னேன். அதே 15 சதவிகிதத்தை, மாநில அரசின் சார்பாக கதருக்குத் தள்ளுபடியாக நாமும் தருகிறோம் என்று கூறி ஆணையிட்டார்கள். ஆக, மாநில அரசு 15 சதவிகிதம், மைய அரசு 15 சதவீதம், தமிழகத்திலே பெருந்தலைவர், தன்னலமற்ற சேவை செய்த தலைவர்களின் பிறந்த நாட்கள், பண்டிகைக்காலங்களில் ஒரு 10 சதவீதம் ஆக மொத்தம் 40 சதவீதம் கதருக்குத் தள்ளுபடி மானியம் ஆண்டு முழுவதும் அளிக்கப்பட்டு, சென்ற ஆண்டைவிட இந்த ஆண்டு 12 கோடி ரூபாய்க்குக் கூடுதலாக விற்பனை செய்யப்பட்டது என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 3-45

அதோடு மட்டுமல்ல, இன்றைக்கு கதரைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பான முறையில் ஓர் அலகு இயங்குகிறது என்றால், அது தோல் பொருள் அலகு ஆகும். அந்தத் தோல் பொருள் அலகில் நூற்றுக்கு மேற்பட்ட தொழிலாளர்கள், பெண்கள் வேலை செய்கிறார்கள். இன்றைக்குத் தமிழகத்தில் பல்வேறு துறைகளில், காவல் துறை, தியணைப்புத் துறை போன்ற துறைகளில் எல்லாம் கதர் வாரியத்தில் செய்கின்ற தோல் பொருட்களை, காலணிகளை, பூட்சுகளை விரும்பி வாங்குகின்ற ஒரு நிலைமை இருக்கின்றது. ஆகவே, அந்த வகையிலே

அந்த அலகு சிறப்பான முறையில் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைப் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் கடந்த ஆண்டில் இந்த மாமன்றத்தில் அறிவிக்கப்பட்ட 12 திட்டங்கள் நூற்றுக்கு நூறு சதவீதம் தன்னிறைவு பெற்று முழுமையாக இயங்குகின்றன என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் மாண்புமிகு உறுப்பினர் விளவங்கோடு மணி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் கோபி சட்டமன்ற உறுப்பினர் வெங்கிடு அவர்களும் பனைத் தொழில் நசிந்து கிடக்கிறது; அவர்களுக்கு ஏதாவது ஒரு விதத்தில் வாழ்வு அளிக்க வேண்டும் என்று கூறினார்கள். பனை வாரியத்தைப் பொறுத்தவரையில் அது 1995 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட வாரியமாகும். வாரியமாக உருவாக்கப்பட்ட அதற்கு என்று விதிமுறைகள் உருவாக்கப்பட்டு கடைப்பிடிக்கப்பட்டதா என்றால், இல்லை; அதற்கு என்று ஓர் அலுவலர் நியமிக்கப்பட்டாரா என்றால், இல்லை. மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதைப் போல, சோசம்மா என்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி அவர்களை மட்டும்—அந்த அலுவலர் வேறு துறையைச் சார்ந்தவர்;—இந்தத் துறையையும் கவனிக்க வேண்டும் என்று நியமித்தார்களேயொழிய, அது சரியான முறையில் இயங்குகிறதா, உறுப்பினர்கள் இருக்கின்றார்களா, மத்திய அரசு வழங்குகின்ற நிதி ஆதாரங்கள் எல்லாம் அந்த வாரியத்திற்குப் பயன்படுத்தப்பட்டதா என்றால், இல்லை. மும்பையைத் தலைமையிடமாகக் கொண்டுள்ள கதர் கமிஷன் - கதர் ஆணைக்குழு—வழங்கிய நிதி ஆதாரங்கள் முழுவதையும் கடந்த காலத்தில், கதர் வாரியத்திற்கே செலவு செய்துவிட்டார்கள். கழக அரசு வந்ததற்குப் பிறகுதான், அந்த வாரியத்திற்கு என்று ஒரு தனி அலுவலர், வாரியத்திற்கு நிதி ஆதாரங்கள், இருபது ஆண்டு காலம் செயல்படாத பனை சர்க்கரை ஆலைகளுக்கு கோவை மாவட்டம் களிக்கநாயக்கன்பாளையம், கடப்பாக்கம், மாதவரம், மாத்தூர் ஆகிய இடங்களிலே இருக்கின்ற பனை சர்க்கரை ஆலைகளுக்கு நிதி ஆதாரங்களை எல்லாம் ஒதுக்கீடு செய்து இந்த ஆண்டு அந்தப் பனை சர்க்கரை ஆலைகள் தொடங்கப்பட இருக்கின்றன. அந்த 4 ஆலைகளில் 2,000 பேர்கள் பயன்படக்கூடிய அளவிற்கு இப்போது பணிகள் வழங்க இருக்கின்றோம்.





அதோடு மட்டுமல்ல இந்த பனைத் தொழிலாளர்களுக்கு இலவசமாக கருவிகள் வழங்குகின்ற திட்டத்தையும் இந்த அரசு வந்ததற்குப் பிறகுதான் முறையாக செயல்படுத்தி இருக்கின்றது.

சென்ற ஆண்டு இந்த பனை வாரியத்திற்கு பதனீர் குளிரூட்டும் நிலையம் ஈரோடு மாவட்டத்தில் குன்னத்தூரில் பிரஷ் உற்பத்தி செய்கின்ற ஆலை, அதேமாதிரி பனை சர்க்கரை ஆலைகள் நிறுவுதல் போன்ற திட்டங்களை எல்லாம் கொண்டு வந்திருக்கின்றோம். இந்த ஆண்டை பொறுத்தவரையில் இப்போது கதர் வாரியத்திற்கும் பனை வாரியத்திற்கும் பல்வேறு நிதி ஒதுக்கீடுகள் செய்யப்பட்டு இருக்கின்றன. தமிழகத்தில் கதர் வாரியத்தினுடைய பல்வேறு பணிகள் சம்பந்தமாக சென்ற வாரத்தில் மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சரும், மாண்புமிகு புவனகிரி சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் வந்து சொன்னார்கள். புவனகிரி, முட்டம், சேத்தியாத்தோப்பு போன்ற பகுதிகளில் விலைகின்ற கோரைகளை தைத்து பாய்களை உற்பத்தி செய்கின்ற ஓர் அலகு ஏற்பாடு செய்து தரவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை வைத்தார்கள். அந்தக் கோரிக்கையும் பரிசீலிக்கப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேமாதிரி மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள், தன்னுடைய தொகுதியான மருங்காபுரி தொகுதி வானம் பார்த்த பூமியாக இருக்கிறது; பக்கத்திலே இருக்கின்ற குளித்தலை, சிறுகமணி, பெருகமணி, கிருஷ்ணராயபுரம், கரூர் போன்ற பகுதிகளில் விளைகின்ற கோரைகளைக் கொண்டு தன்னுடைய தொகுதியிலும் ஓர் ஆலை உருவாக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையையும் ஏற்று பரிசிலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

தென்னை மரம் அதிகமாக உள்ள கோவை மாவட்டம், பொள்ளாச்சியில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜு அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஒரு தூரிகை செய்கின்ற அலகு (Brush Manufacturing Unit) அமைக்கப்படும். தஞ்சை மாவட்டம், பட்டுக்கோட்டையில், மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதியில் பனை மரங்கள் ஏராளமாக இருப்பதால், அந்தப் பனை ஈர்க்குகளையும் நார்களையும் கொண்ட தூரிகை உற்பத்தி செய்யப்பட்டு, அரசின் துறைகளான

[திரு. அந்தியூர் ப. செல்வராசு] [1998 ஏப்ரல் 20

போக்குவரத்துத் துறை, நகராட்சிகள், மாநகராட்சிகள் ஆகியவற்றிற்கு விநியோகம் செய்ய இருக்கிறோம். அதன்மூலம் 500 பேர் வேலைவாய்ப்புப் பெறுகின்ற ஓர் உன்னதமான நிலை ஏற்படும்.

பிற்பகல் 3-50

அதோடு மட்டுமல்ல, கதர் வாரியத்தைப் பொறுத்தவரையில் கடந்த ஆண்டு 100-க்கு 100 பணிகள் முடிந்திருக்கின்றன. கதர் வாரியத்திற்கு கடந்த ஆண்டு 5 கோடி ரூபாய் மானியமாக இருந்ததை மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள், இந்த ஆண்டு இரண்டு மடங்காக உயர்த்தி ரூ. 10 கோடியாக ஒதுக்கித் தந்துள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

தஞ்சை மாவட்டம்-நாஞ்சிக்கோட்டை, திருச்சி மாவட்டம்—காந்தாளூர் ஆகிய இரண்டு பகுதிகளில், சோப்பு அலகுகளை உருவாக்குவதற்கு இந்த ஆண்டு 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் தேன் உற்பத்தி செய்கிற வாரிய அலகுக்குக் கட்டடம் கட்டவும் மற்றும் உபகரணங்கள் வாங்குவதற்கும் இந்த ஆண்டு 12 இலட்சம் ரூபாயும், சென்ற ஆண்டு இதே பணிகளுக்காக ரூ. 5 இலட்சம் ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தற்போது கதர் வாரியத்தில் 34 உதவி இயக்குநர்கள் இருக்கிறார்கள். அவர்களில் 19 பேருக்குத்தான் வாகனங்கள் இருக்கின்றன. மீதிப் பேருக்கு வாகனங்கள் இல்லை. நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு இந்த ஆண்டு 3 உதவி இயக்குநர்களுக்கு வாகனங்கள் வாங்க 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. தலைமை அலுவலகமான குறளகத்தில் கணிப்பொறி அமைப்பதற்கு இந்த ஆண்டு 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

கதர் நெசவுத் தொழில் செய்கிற கதர் நெசவாளர்களுக்கு மானியமாக இந்த ஆண்டு தறிகளுக்கு, நவீனக் கருவிகள் வாங்க 700 நெசவாளர்களுக்கு ரூ. 5.25 இலட்சம் வழங்கப்பட்டிருக்கிறது. கதர்ப் பட்டு விற்பனை செய்கிற 34 பட்டு அங்காடிகளில் தஞ்சை மாவட்டம் கபிஸ்தலத்தில், பட்டு நூலை நவீனப்படுத்துகிற வகையில், அங்கே உள்ள சாயத் தொழிற்சாலைக்கு இந்த ஆண்டு 14 இலட்சம் ரூபாய்



1998 ஏப்ரல் 20] [திரு. அந்தியூர் ப. செல்வராசு]

ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. ஈரிழைப் பட்டு உபகிளைகளுக்கு பட்டு நூல்களை முறுக்கேற்றுவதற்குத் தேவைப்படுகிற கருவிகளை வாங்க 2 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. 6 கதிர் இராட்டைகளை அகற்றிவிட்டு, நெசவாளர்கள் எளிதாக நெய்கிற 8 கதிர் இராட்டைகளை வாங்குவதற்கு இந்த ஆண்டு 9 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. நேபாளி தறி என்ற தறி தனி மகத்துவமானது. அந்தத் தறிகளை மேலும் நவீனமாக்குவதற்கான பொருட்கள் வாங்குவதற்கு இந்த ஆண்டு 400 தறிகளுக்கு 3 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

சென்னை குறளகத்தில் பட்டு அங்காடியை நவீனப்படுத்துவதற்கு, அந்த அங்காடியைச் சிறந்த முறையில் சிறந்த வசதிகளோடு செம்மைப்படுத்துவதற்கு இந்த ஆண்டு 15 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

கதர், கைத்தறித் துறையினுடைய எதிர்கால வளர்ச்சிக்காக இந்தக் கதர் இரகங்களை எப்படிச் செம்மைப்படுத்துவது, சீர்படுத்துவது, விஞ்ஞான யுகத்திற்கு ஏற்ப கதரை எப்படி உற்பத்தி செய்வது என்பதைக் கருத்தில் கொண்டு, விஞ்ஞான முறையில் ஆராய்ச்சி செய்வதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்கள் 10 இலட்சம் ரூபாயை இந்த ஆண்டு ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள்.

அதேபோல, கிராமங்களில் கிராமக் கைவினைத் தொழில்களை மேன்மைப்படுத்துவதற்காக 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்திருக்கிறார்கள். கோவை மாவட்டம் களிக்கநாயக்கன்பாளையத்தில் துவங்க இருக்கிற பனஞ்சர்க்கரை ஆலைக்கு நிதி ஆதாரங்கள் போதவில்லை என்று கோரிக்கை வைத்த நேரத்தில், அங்கே துவங்க இருக்கிற பனஞ்சர்க்கரை ஆலைக்கு ரூ. 3 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

பிற்பகல் 3-55

மாண்புமிகு உறுப்பினர்கள், நம்முடைய கோபி சட்டமன்ற உறுப்பினர் திரு. ஜி. பி. வெங்கிடு அவர்கள், திரு. இரா. ஆவுடையப்பன் அவர்கள், தூத்துக்குடி திரு. என். பெரியசாமி அவர்கள், பெருந்துறை திரு. நா. பெரியசாமி அவர்கள், திரு. மு. அப்பாவு அவர்கள், திருப்பூர் திரு. கே. சுப்பராயன் அவர்கள், திரு. எஸ்.எஸ். மணி நாடார் அவர்கள், டாக்டர் தே. குமாரதாஸ் அவர்கள், திரு. ந. கருப்பண்ண உடையார் அவர்கள், திரு. சுப. தங்கவேலன் அவர்கள், குளச்சல் சட்டமன்ற

[திரு. அந்தியூர் ப. செல்வராசு] [1998 ஏப்ரல் 20

உறுப்பினர் திரு. இரா. பொன்னார்டு அவர்கள் மற்றும் மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் மற்றும் இந்த மாமன்றத்தைச் சேர்ந்த பல்வேறு உறுப்பினர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க— 1987 ஆம் ஆண்டு பனைத் தொழிலாளர்களுக்குக் கடனாக வழங்கப்பட்ட அந்தக் கடனுதவியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க— மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் இந்தக் கடனுதவியைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று கோரிக்கை வைத்த நேரத்தில் தாயுள்ளம் கொண்ட முதல்வர் அவர்கள் இப்போது அந்த 30,000 தொழிலாளர்கள் பயன்படக்கூடிய வகையில், அந்தக் கடனைத் தள்ளுபடி செய்கின்ற வகையில் ரூ. 2 கோடியே 95 இலட்சத்து 53 ஆயிரத்து 577-ஐத் தள்ளுபடி செய்து அந்த 30,000 குடும்பங்களுக்கும் வாழ்வு அளித்திருக்கின்றார்கள் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த மாமன்றத்திலே மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்ல, கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் திரு. லி. அய்யலுசாமி அவர்கள் குறிப்பிட்டதைப்போல, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் பட்டு நெசவாளர்களுக்குக் கூடுதலாக 15 சதவீதமும், அதே நேரத்தில் மற்ற மாவட்டங்களில் கதர் நெசவுத் தொழில் செய்கின்றவர்களுக்கு 10 சதவீதமும் இந்த ஆண்டு மானியம் வழங்கப்படும். அடுத்த ஆண்டும் இதை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று, சென்ற ஆண்டு 34 பட்டு நூற்பு நிலையங்கள் துவக்கப்பட்ட நேரத்தில் மதுரை மாவட்டம் உசிலம்பட்டியில் ஒரு பட்டு உபகிளை துவங்குவதற்கான வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. காரணம் அங்கு பட்டு நெசவு செய்கின்ற தொழிலாளர்கள் இல்லை. சாதாரண நெசவு செய்கின்ற தொழிலாளர்கள்தான் அதிகமாக இருக்கின்றார்கள். அதை வைத்து அங்கு துவங்கவிருந்த பட்டு நூற்பு நிலையத்தை, நெசவாளர்கள் இல்லாத காரணத்தால், அருப்புக்கோட்டைக்கு மாற்றிவிட்டோம். ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. என். வல்லரசு அவர்கள் பட்டு நெசவு செய்கின்ற தொழிலாளர்களை நான் தருகின்றேன், கண்டிப்பாக இந்த ஆண்டு உசிலம்பட்டியில் அந்த உபகிளையைத் துவக்கிட வேண்டுமென்று கோரிக்கை வைத்தார்கள். அவர்களுடைய கோரிக்கையை ஏற்று இந்த



1998 ஏப்ரல் 20] [திரு. அந்தியூர் ப. செல்வராசு]

ஆண்டு உசிலம்பட்டியில் பட்டு நூற்பாலை தொடங்கப்படும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

அடுத்ததாக, 1991 ஆம் ஆண்டு முதல் இந்த ஆண்டு வரை கதர் உற்பத்தி மையங்களுக்கும் சர்வோதயச் சங்கங்களுக்கும் ரூ. 9.79 கோடி மானியம் வழங்கப்படாமல் இருந்தது. இந்த மானியம் வழங்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் சேலம் தொகுதியைச் சேர்ந்த திரு. குர.கோ. தனபாலன் அவர்களும், திருச்செங்கோடு தொகுதியைச் சேர்ந்த திரு. தி.ப. ஆறுமுகம் அவர்களும், திரு. ராஜ்குமார் மன்றாடியார் அவர்களும், திரு. கே. சுப்பராயன் அவர்களும் மற்றும் பல்வேறு மாண்புமிகு உறுப்பினர்களும் கேட்டுக் கொண்டதற்கிணங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தோடு, சர்வோதயச் சங்கங்களுக்கு மானியமாக இந்த ஆண்டு துணை மானியக் கோரிக்கையின்போது ரூ. 9.79 கோடியை அளித்திருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி). அதன்மூலமாக இப்போது கதர் உற்பத்தி மிக வளர்ச்சி அடையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பனை வாரியத்தைப் பொறுத்தவரையில், மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய ஆலோசனையின்பேரில் வருங்காலத்தில் தனி அலுவலர்கள் மற்றும் வாரியத்திற்குண்டான அத்தனை உறுப்பினர்களும் நியமிக்கப்படுவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நான் பொறுப்பு வகிக்கின்ற பல்வேறு துறைகளில் இன்றைக்கு மக்களுக்கும் வெளியுலகத்திற்கும் தெரியாத ஒரு வாரியம் இருக்கிறது. பூமிதான வாரியம் என்ற ஒரு மகத்தான வாரியம் ஆகும் அது. அண்ணல் மகாத்மா காந்தியடிகளினுடைய பிரதான சீடரான ஆச்சார்ய வினோபா பாவே அவர்கள் நாடு முழுவதும் காலால் நடந்து, கையால் ஆயிரக்கணக்கான ஏக் நிலங்களைத் தொட்டார்கள். அந்த வாரியத்தின் கீழ் 17 மாவட்டங்களைச் சேர்ந்த 77 பேர்களுக்கு 116 ஏக்கர் விவசாய நிலம் இந்த ஆண்டு வழங்கப்படும். அதோடு மட்டுமல்ல, ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், கும்பிடுபாளையத்தில் இருக்கின்ற சுமார் 256 ஏக்கர் நிலத்தில் சுமார் 77 குடும்பங்கள் 30 ஆண்டுகளாக விவசாயம் செய்து வருகின்றார்கள். அந்த 256 ஏக்கர் நிலத்திற்கும் விவசாயப் பட்டா வழங்க வேண்டுமென்று அவர்கள் கோரிக்கை வைத்த நேரத்தில், அந்த நிலங்களெல்லாம், சர்வே செய்யப்பட்டு, இந்த

[திரு. அந்தியூர் ப. செல்வராசு] [1998 ஏப்ரல் 20

நிதியாண்டில் அந்த 77 குடும்பங்களுக்கும், 256 ஏக்கர் நிலத்திற்குப்பட்டா வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 4-00

சென்ற நிதியாண்டில், இந்த மாமன்றத்தில், அண்ணல் மகாத்மா காந்தியடிகள் அவர்களுடைய பிரதான சீடரான ஆச்சார்ய வினோபா பாவே அவர்களுடைய சிலை இந்த ஆண்டு நிறுவப்படும் என்று சொன்னேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் அந்தச் சிலையை நிறுவுவதற்குண்டான எல்லா நிதி உதவிகளையும் அளித்து, இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிவதற்குள்ளாக அந்தச் சிலை நிறுவப்படும். பல்வேறு சர்வோதய இயக்கத் தலைவர்கள், பல்வேறு அறிஞர்களை அழைத்து அந்தச் சிறப்பான நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்யப்படும். மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய திருக்கரத்தால், சென்னை மாநகரத்தில் இருக்கின்ற குறளகத்திற்கு முன்பாகச் சிலை திறக்கப்படும் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி).

இங்கே 13 பேர் இந்தக் கதர் கிராமத் தொழில் மானியக் கோரிக்கைக்கு, வெட்டுத் தீர்மானங்களை அளித்திருக்கிறார்கள். இந்த 13 மாண்புமிகு உறுப்பினர்களும் தங்களுடைய தொகுதியில் கதர் வாரியத்தின் மூலம் பல்வேறு தொழில்கள் தொடங்கப்பட வேண்டும், பல்வேறு அலகுகள் திறக்கப்பட வேண்டும், பல்வேறு கிராமத் தொழில்கள் மூலம் உற்பத்தி செய்வதற்கு ஒரு வழிவகை செய்ய வேண்டுமென்று கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். வாரியத்தினுடைய நிதிநிலையைக் கருத்திற்கொண்டு, எதிர்காலத்தில் மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர்களுடைய கோரிக்கைகளும் ஏற்கப்படும் என்று கூறி மாண்புமிகு உறுப்பினர்கள் 13 பேர்களும், தாம் கொடுத்த வெட்டுத் தீர்மானங்களைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, அரசுக்கு வழங்கப்பட வேண்டிய தொகையினை வழங்கிடுமாறு அன்போடு கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறுகின்றேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி).

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, I am on a Point of Order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சொல்லுங்கள்.



1998 ஏப்ரல் 20]

**திரு. ப. மோகன் கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பனைத் தொழிலைப் பற்றி நம்முடைய அமைச்சரவர்கள் மிக அற்புதமாக சொன்னார்கள். சித்த வைத்தியத்திலே பனை வெல்லம், பனைச் சர்க்கரை இவை எல்லாம் மிகச் சிறப்பாகப் பேசப்படுகின்றன. எனவே சித்த வைத்தியத்திலே நம்பிக்கை கொண்ட நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கலந்து, நம்முடைய அரசு மூலமாக அதற்கு நிறைய விளம்பரங்கள் கொடுத்து, நம்முடைய கதர் வாரியம் அதை விற்பதற்கு ஏற்பாடு செய்யுமா என்பதைத் தங்கள் மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. அந்தியூர் ப. செல்வராசு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல, இந்தப் பனைச் சர்க்கரை ஆலையிலிருந்து தயார் செய்யப்படுகின்ற பனைச் சர்க்கரை, கற்கண்டு, சீனி போன்ற ரகங்கள் சித்த வைத்தியத்திற்குப் பெரிதும் பயன்படுகின்றன. எங்களுடைய பனைச் சர்க்கரை ஆலையிலிருந்து, ஒரு கிலோ 40 ரூபாய்க்கு சித்த வைத்தியம் செய்கின்றவர்கள் அதை வாங்கிக் கொள்கிறார்கள். எதிர்காலத்திலும் நல்லமுறையில் சித்த வைத்தியத்திற்குத் தேவையான உபபொருள்கள் இந்தப் பனைச் சர்க்கரையிலிருந்து தயார் செய்யப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 7. தகவல் கோரல்—தொடர்ச்சி

### (ஆ) பேரவைக் கூட்டம் -மாலை நேரங்களில் தவிர்த்தல்

**திரு. ஆர். சொக்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, I am on a Point of Privilege. ஏற்கெனவே அலுவல் ஆய்வுக்குழுக் கூட்டத்திலே எடுத்த முடிவுப்படி, காலை, மாலை இரண்டு வேளைகளிலும் சட்டமன்றக் கூட்டத் தொடர் இருக்கலாம் என்ற முடிவுக்கேற்ப இன்று மாலையும் வைத்திருக்கிறோம். ஆனால் பல சட்டமன்ற உறுப்பினர்கள் என்ன கருதுகிறார்கள் என்றால், அவர்களுடைய தொகுதியிலிருந்து, பல்வேறு கோரிக்கைகளுக்காக, மக்கள் வருகிறார்கள். அவர்களை அழைத்துக் கொண்டு மதிய நேரத்தில்தான் பல அலுவலகங்களுக்குச் சென்று, அதிகாரிகளைப் பார்க்க வேண்டியிருக்கிறது. தொகுதி வேலைகளுக்காகவும்

அவர்களுடைய தனிப்பட்ட வேலைகளுக்காகவும் செல்ல வேண்டியிருக்கிறது. ஆகவே மாலை நேரத்தில் இதுபோன்ற சட்டமன்றக் கூட்டத் தொடர் இல்லாமல், தேவையென்றால் இன்னும் 4 நாளோ, 5 நாளோ கூடுதலாகக் கூட வேண்டுமென்றால் வைத்து கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி) என்ற வகையில் மாலையில் கூட்டத் தொடர் இருப்பதற்குப் பதிலாக, காலையில் மட்டுமே இருக்கும்படியாக, தேவைப்பட்டால், ஒரு நாள், இரண்டு நாள் வேண்டுமானால் மாலையில் வைத்துக்கொள்ளலாம். இப்போது 10 நாட்கள் போடுகிற மாதிரி இருக்கிறது. ஆகவே மறுபடியும், அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்திலே கலந்து பேசி, நீங்கள் ஒரு நல்ல முடிவை அறிவிக்க வேண்டுமென்று அனைவரின் சார்பாகவும் கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் காலையில் வைத்தாலும் சரி, மாலையில் வைத்தாலும் சரி, எங்களுக்குச் சம்மதம். ஆனால் கொடுக்கின்ற சாப்பாட்டை நல்லமுறையில் கொடுங்கள். (சிரிப்பு).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அலுவல் ஆய்வுக் குழுக் கூட்டத்தில் எடுத்த முடிவு, எதிர்க்கட்சித் தலைவர், துணைத் தலைவர், கொறடா, எல்லோருமே சேர்ந்து எடுத்த முடிவுதான். அப்போது அந்தப் பிரச்சினையை எழுப்பியிருக்கலாம், அப்போது எழுப்பவில்லை. ஆனால் இப்போது சொல்கின்றார்கள். ஆகவே, தனிப்பட்ட முறையிலே என்னால் ஒன்றும் செய்ய முடியாது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து ஆலோசித்து, மீண்டும் அலுவல் ஆய்வுக் குழுவைக் கூட்டி, இதை மறுபரிசீலனை செய்யலாம் என்று இருக்கின்றேன். ஏதோ மகிழ்ச்சியான சூழ்நிலையிலே இதைச் செய்யலாம் என்று நினைத்தால் நம்முடைய சுந்தரம், உணவு சரியாக இல்லை என்கின்றார்கள். ஆகவே, அந்தக் குற்றச்சாட்டிற்கு ஆளாகாமல் இதை மறுபரிசீலனை செய்வேன் என்பதை அறிவித்துக்கொள்கிறேன். அது எப்படி இருந்தபோதிலும், இங்கே வாக்கெடுப்பு முடிந்தவுடன் காபி தயாராக இருக்கிறது. அதையாவது குடித்துவிட்டுப் போங்கள். அதற்கும் ஒரு புகார் சொல்லக்கூடாது என்று நான் மன்றாடிக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 4-05

**திரு. பி.ஆர். சுந்தரம்:** தலைவர் அவர்களுக்கு நன்றி.



## 6. மானியக் கோரிக்கைகள், 1998-99, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (உ) கோரிக்கை எண் 26 - கதர்-கிராமத் தொழில்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

மானியக் கோரிக்கை எண் 26-கதர்-கிராமத் தொழில்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப் படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி, இருக்கையில் இல்லை.

திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. பி.ஆர். சுந்தரம்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.ஆர். சுந்தரம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. நா. பெரியசாமி.

**திரு. நா. பெரியசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நா. பெரியசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ப. கோவிந்தன்.

**திரு. ப. கோவிந்தன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ப. கோவிந்தன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. டி. மணி.

**திரு. டி. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டி. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"கதர்-கிராமத் தொழில்கள் பற்றிய 26ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ. 18,72,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (21-4-1998) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 4-06 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.



## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ.) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

(ஏதுமில்லை)

### (ஆ.) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

79. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தொன்றாவது அறிக்கை, 1997-98.

80. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்திரெண்டாவது அறிக்கை, 1997-98.

81. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்திமூன்றாவது அறிக்கை, 1997-98.

82. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்திநான்காவது அறிக்கை, 1997-98.

83. பொதுக் கணக்குக் குழுவின் எண்பத்தைந்தாவது அறிக்கை, 1997-98.

84. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை, 1997-98.

85. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தேழாவது அறிக்கை, 1997-98.

86. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தெட்டாவது அறிக்கை, 1997-98.

## இணைப்பு-1

*(373 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

**வணிக வரி மற்றும் அறநிலையத் துறை**

**மானியக் கோரிக்கை எண் 5**

**முத்திரைத் தாள்கள் நிர்வாகம்**

**மற்றும்**

**மானியக் கோரிக்கை எண் 6**

**ஆவணப் பதிவு**

**கொள்கை விளக்கக் குறிப்பு 1998-99**

பதிவுத் துறை 1864 முதல் இயங்கி வருகின்ற தொன்மையான துறைகளுள் ஒன்றாகும். மாநிலத்திற்கு வருவாயினை ஈட்டித்தருவதில் முக்கியப் பங்கு இத்துறை வகிக்கிறது. வணிக வரி மற்றும் கலால் துறைகளுக்கு அடுத்து மாநிலத்திற்கு அதிக வருவாயினை ஈட்டித்தருகின்ற மூன்றாவது துறையாகும். பதிவுத் துறை, மக்களுக்கு சேவை செய்வதோடு முத்திரைச் சட்டத்தின்கீழ் முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுச் சட்டத்தின் கீழ் பதிவுக் கட்டணம் ஆகியவற்றின் மூலம் அரசுக்கு வருவாயினை ஈட்டித்தருகின்ற துறையாகும்.

### 02. நிர்வாக அமைப்பு

*அ. தலைமை நிர்வாகம்*

பத்திரப் பதிவுத் துறைத் தலைவராக இந்திய ஆட்சிப் பணித்தரத்தில் உள்ள அலுவலர் நியமிக்கப்படுகிறார். பிறப்பு, இறப்பு, திருமணத் தலைமைப் பதிவாளராகவும், 1982 ஆம் ஆண்டு மத்திய சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் (மத்திய சட்டம் 40/1982) சீட்டு நிதிகள் பதிவாளராகவும். 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவாளராகவும் இவர் செயல்படுகிறார். இவருக்கு உதவியாகப் பின்வரும் அலுவலர்கள் தலைமையிடத்தில் பணியாற்றி வருகின்றனர்:—

1. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (புலனாய்வு)
2. கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் (வழிகாட்டி)

[1998 ஏப்ரல் 20

3. கூடுதல் சீட்டு மற்றும் சங்கங்களின் பதிவாளர்

4. சட்ட அலுவலர் (கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)

5. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) (துணைப் பதிவுத் துறைத் தலைவர் நிலையில்)

6. பதிவுத் துறைத் தலைவர் அவர்களின் நேர்முக உதவியாளர் (சீட்டு நிதிகள்)

7. மாவட்டப் பதிவாளர் (வழிகாட்டி)

8. மாவட்டப் பதிவாளர் (ஆய்வு)

9. கணக்கு அலுவலர்

10. காவல் துறைத் துணை கண்காணிப்பாளர் தலைமையின்கீழ் இயங்கும் இரு காவல் துறை ஆய்வாளர்கள் அடங்கிய விழிப்புப் பணிக்குழு

ஆ. மண்டல அலுவலகங்கள்

சென்னை, வேலூர், கடலூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களைத் தலைமையகமாகக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் ஒன்பது பதிவு மண்டலங்கள் உள்ளன. இந்த மண்டலங்கள் ஒவ்வொன்றும் பதிவுத் துறைத் துணைத்தலைவர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மண்டலம் முழுவதையும் நிர்வகித்தல், ஆய்வு செய்தல், அவருடைய மண்டலத்திற்குள் உள்ள வட்டார பதிவுத் துறை அலுவலகங்கள், மாவட்டப் பதிவகங்கள் மற்றும் சார் பதிவாளர் அலுவலகங்களின் பணிகளை மேற்பார்வையிடுதல், ஆய்வு செய்தல் ஆகிய பணிகள் மண்டலத் தலைவரின் பணிகளாகும். மண்டலத்தின் மாதாந்திர வருவாய் இலக்கை எட்டுதல் அவரின் தலையாயப் பொறுப்பாகும். அவர் 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டத்தின்கீழ் இணைப் பதிவாளராகவும் உள்ளார்.

இ. வட்டார அலுவலகங்கள்

சென்னை, வேலூர், திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஆறு உதவிப் பதிவுத் துறைத் தலைவர்கள் செயல்படுகின்றனர். சார் பதிவாளர்



1998 ஏப்ரல் 20]

அலுவலகங்களை ஆய்வு செய்தல், புகார்கள் தொடர்பாக விசாரணை செய்தல், தணிக்கைக் குழுவின் பணிகளை ஆய்வு செய்தல் ஆகியவை பதிவுத் துறை வட்டாரத் தலைவர்களின் முக்கிய கடமைகளாகும். அவர்கள் சங்கங்களையும் சீட்டு நிதி நிறுவனங்களையும் ஆய்வு செய்கின்றனர்.

ஈ. மாவட்ட அலுவலகங்கள்

மாநிலம், 47 பதிவு மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டமும் மாவட்டப் பதிவாளர் ஒருவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. அவர் சங்கங்களின் பதிவாளராகவும், திருமணங்கள், கூட்டு வணிக நிறுவனங்கள் ஆகியவற்றின் பதிவாளராகவும் இருக்கிறார். சார் பதிவாளர் அலுவலகங்களை ஆய்வு செய்தல், பதிவுச் சட்டத்தின்கீழ் செய்யப்படும் மேல் முறையீடுகளை விசாரித்தல், பத்திரங்களின் தன்மைத்தொடர்பாக சார் பதிவாளர்கள் எழுப்பும் ஐயங்களுக்கு விளக்கம் அளித்தல், புகார்கள் ஏதேனும் வரப்பெற்றால் அவற்றை விசாரித்தல், சொத்துக்களின் மதிப்பைக் குறைவாகக் குறிப்பிட்டுள்ள பத்திரங்கள் அடங்கிய சொத்துக்களை கள ஆய்வு செய்து சரியான மதிப்பை நிர்ணயித்தல் ஆகியவை அவருடைய முக்கியமான பணிகளாகும். நிர்வாகத்தில் திறமையை மேம்படுத்தும்பொருட்டு சென்னை (வடக்கு), மத்திய சென்னை, சென்னை (தெற்கு), வேலூர், திருச்சிராப்பள்ளி, சேலம், ஈரோடு, திருப்பூர், கோயம்புத்தூர், மதுரை (வடக்கு) மதுரை (தெற்கு) மற்றும் திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் உதவிப் பதிவுத் துறைத் தலைவர்கள் மாவட்டப் பதிவாளர்களாக உள்ளனர். மேம்பட்ட மற்றும் விரைவான நிர்வாகத்திற்கு அனைத்து நிர்வாக மாவட்டப் பதிவாளர்கட்கும் வாகன வசதி அளித்திட அரசு பரிசீலித்து வருகிறது.

உ. தணிக்கைக் குழுக்கள்

மாநிலத்திலுள்ள எல்லா சார்பதிவாளர் அலுவலகங்களையும், நூறு சதவீதம் உள் தணிக்கை செய்ய 38 தணிக்கைக் குழுக்கள் செயல்படுகின்றன. ஒவ்வொன்றும் ஒரு மாவட்டப் பதிவாளர் தலைமையில் இயங்குகின்றன. ஆவணங்களில் குறிப்பிடப்படும் கட்டடங்கள் போன்ற அசையாச் சொத்துக்கள், முத்திரைத் தீர்வை ஏய்ப்பு செய்யும் நோக்குடன் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளனவா எனக் கள ஆய்வு செய்யும் பணியையும் தணிக்கைக் குழு கவனிக்கிறது.

[1998 ஏப்ரல் 20

ஒவ்வொரு பதிவு மாவட்டத்திற்கும் ஒரு தணிக்கைக் குழு ஏற்படுத்த அரசு பரிசீலித்து வருகிறது.

**ஊ. சார் பதிவகங்கள்**

மாநிலம் முழுவதும் 592 சார் பதிவகங்கள் சார் பதிவாளர் தலைமையில் செயல்படுகின்றன. விற்பனை, தானம், விடுதலை, குத்தகை, அடமானம் போன்ற பல்வேறுவகை ஆவணங்களைப் பதிவு செய்தல், வில்லங்கச் சான்றிதழ்கள், ஆவணங்களின் சான்றிட்ட நகல்கள் வழங்குதல் ஆகியவை சார் பதிவாளரின் பணிகளாகும். இந்து திருமணச் சட்டம் மற்றும் சிறப்புத் திருமணச் சட்டம் ஆகிய சட்டங்களின்கீழ் திருமண பதிவாளராகவும் செயல்படுகிறார்.

(1) மத்திய சென்னை, சென்னை (வடக்கு), சென்னை (தெற்கு), கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, மதுரை (வடக்கு), மதுரை (தெற்கு) போன்ற பெருநகர்களைப் பொறுத்தவரையில் பதிவுக்கு வரும் சிக்கலானதும், மதிப்பு அதிகமானதுமான ஆவணங்களை விரைவாகவும், சரியாகவும் பதிவுச் செய்ய, அப்பெருநகர்களிலுள்ள சார் பதிவகங்கள் மாவட்டப் பதிவாளர் தலைமையில் இயங்குகின்றன. மேலேகண்ட இடங்களிலும், காஞ்சிபுரம், வேலூர், கடலூர், விழுப்புரம், மயிலாடுதுறை, புதுக்கோட்டை, தஞ்சாவூர், கரூர், நாமக்கல், சேலம், ஈரோடு, திருப்பூர், பழனி, உதகமண்டலம், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி 1-நிர் இணைச் சார் பதிவகங்களும் மாவட்டப் பதிவாளர் தலைமையில் இயங்குகின்றன.

(2) 24-11-1997 முதல் அரியலூர், பதிவு மாவட்டம் இரும்புலிக்குறிச்சியில் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் திறக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது. சிதம்பரம் பதிவு மாவட்டத்தில் தொழுதூரில் ஒரு சார் பதிவாளர் அலுவலகம் விரைவில் திறக்கப்பட உள்ளது.

(3) மாநிலத்தில் இரண்டாயிரம் ஆவணங்கள் பதிவு செய்வதற்கு வாய்ப்புகள் உள்ள இடங்களில் புதிய சார் பதிவகங்கள் திறப்பதென்பது அரசின் கொள்கையாகும். மேலும், புதிதாகத் திறப்பதற்கு உத்தேசிக்கப்படும் இடங்களில் பொது மக்களின் நலன்கருதி போக்குவரத்து வசதிகள் மற்றும் ஏனைய அரசு அலுவலகங்கள் அமைந்துள்ள இடங்களில் புதிய சார் பதிவகங்கள் திறக்கப்படுகின்றன. தற்போதைய சூழ்நிலையில், அரசின் கொள்கைப்படி, தேவையான இடங்களில் சார் பதிவகங்கள் திறக்கப்பட்டுள்ளன. மாநிலத்தில் பல்வேறு



1998 ஏப்ரல் 20]

பகுதிகளில் புதிய சார் பதிவகங்கள் திறக்கப்பட வேண்டும் என்று சட்டப் பேரவை உறுப்பினர்களிடமிருந்தும், பொது மக்களிடமிருந்தும் கோரிக்கைகள் பெறப்பட்டுள்ள நிலையிலும், பதிவுக்கு வரும் ஆவணங்கள் மிக அதிகமாக உள்ள இடங்களிலும் புதிதாகச் சார் பதிவகங்கள் திறக்க வேண்டிய அவசியம் குறித்து அரசு ஆய்வு செய்து முடிவெடுக்கின்றது.

(4) ஒவ்வொரு சார் பதிவகத்திலும், பொது மக்கள் தங்கள் ஆவணங்களைப் பதிவு செய்வதில் உள்ள இடர்பாடுகளையும், அவர்களுடைய ஆலோசனைகளையும் எழுதிக்கொடுக்கும் புகார் மனுக்களைப் பெற வசதியாக ஆலோசனை/புகார் பெட்டி ஒன்று வைக்கப்பட வேண்டும் என்று அரசு அறிவுறுத்தி அது நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

**எ. புலனாய்வுக் குழு**

இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 27-ன்படி கைமாறும் சொத்தின் உண்மை விவரங்கள் முழுமையாகக் கொடுக்கப்பட வேண்டும். அசையா சொத்துக்கள் சம்பந்தப்பட்ட ஆவணங்களின் கட்டட அளவுகளை மறைத்து மதிப்புக்குறைவு செய்து, அதனால் அரசுக்கு வரக்கூடிய முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண வருவாயை ஏமாற்ற (ஆவணதாரர்கள்) முயற்சிக்கின்றனர். அதனைத் தடுக்கும் வகையில் 'புலனாய்வுக் குழு' என்ற பிரிவு ஒன்று, கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின் தலைமையின்கீழ் 8 மாவட்டப் பதிவாளர்களையும், 2 உதவிச் செயற்பொறியாளர்களையும் கொண்டு 1989 ஆம் ஆண்டுமுதல் பதிவுத்துறையில் செயல்பட்டு வருகிறது. இவர்களுடன் நிர்வாக மாவட்டப் பதிவாளர்களும், தணிக்கை மாவட்டப் பதிவாளர்களும், கட்டட கள ஆய்வுகள் செய்து வருவாய் இழப்பைத் தடுக்க நடவடிக்கைகள் மேற்கொள்கின்றனர். புலனாய்வு மாவட்டப் பதிவாளர்கள் சென்னை, கோயம்புத்தூர், மதுரை, சேலம், திருநெல்வேலி, தஞ்சாவூர், திருச்சி மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ளனர்.

கடந்த ஆண்டில் கட்டடங்கள் கள ஆய்வில் 44,847 வழக்குகளில் முத்திரைத் தீர்வை ஏய்ப்பு கண்டுபிடிக்கப்பட்டு, 28-2-98 முடிய 26,834 ஆவணங்களில் ரூ. 14.85 கோடி வசூலிக்கப்பட்டுள்ளது. இதில் கடந்த வருடங்களின் தொகையும் அடங்கும்.

[1998 ஏப்ரல் 20

28-2-1998-ல் உள்ளபடி 7,719 ஆவணங்களில் ரூ.5.07 கோடி வருவாய் நிலுவையில் உள்ளது. இதில் கணிசமான தொகை அடுக்குமாடிக் குடியிருப்பு விற்பனைகள் தீர்வை விதிக்கப்பட்ட வழக்கில் சென்னை உயர்நீதிமன்றத் தீர்ப்புக்கு எதிராக அரசு உச்ச நீதிமன்றத்தில் வழக்கு கோர்வை செய்ததின் மீது முடிவான தீர்ப்பாணையை எதிர்நோக்கி வசூலிக்க முடியாத நிலையில் உள்ளது.

### ஏ. வழிகாட்டி மதிப்புக் குழு

சொத்துரிமை மாற்றம், சொத்துப் பரிமாற்றம், தானம், விடுதலை, செட்டில்மெண்ட், நிலையான குத்தகை, உடைமை உரிமையிலுள்ள அடமானம் போன்ற அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் பரிமாற்ற ஆவணங்கள்மூலம் கிடைக்கும் வருவாய் முத்திரைத் தீர்வை வருமானத்தில் கணிசமான அளவாகும். சொத்து விற்பனை, பரிமாற்றம், தானம், குடும்ப உறுப்பினர் அல்லாத நபர்கள் சம்பந்தப்பட்ட செட்டில்மெண்ட் குறித்த பரிவர்த்தனைகளில் சம்பந்தப்பட்ட சொத்தில் சந்தை மதிப்பு அடிப்படையில் முத்திரைத் தீர்வை விதிக்கப்பட்டு வருகிறது. பத்திரத்தில் சந்தை மதிப்பு சரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்துகொள்ள வசதியாக பத்திரப் பதிவு அலுவலர்களுக்கு அவர்களது அதிகார எல்லைக்குள் அமைந்துள்ள சொத்தின் தோராய மதிப்புகள் குறிக்கப்பட்டுள்ள வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகள் பராமரிக்கப்படுகின்றன.

(1) வளர்ச்சி சதவிகிதம், விற்பனைப் புள்ளி விவரங்கள், நிலத்தின் உபயோகம், பூகோள அமைப்பு, சுற்றுப்புறச்சூழல், தெருக்களின் அகலம் மற்றும் விசாரணையின்மூலம் அறியப்படும் மதிப்பு ஆகிய விவரங்களைக் கொண்டு சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகள் திருத்தி அமைக்கப்படுவதற்குக் கூடுதல் பதிவுத் துறைத் தலைவர் ஒருவரின்கீழ் வழிகாட்டி மதிப்புக் குழு இயங்கி வருகிறது. இக்குழு வழிகாட்டிப் பதிவேடுகளில் உள்ள சொத்துக்கள் மதிப்பு விவரங்களில் உள்ள முரண்பாடுகள் தொடர்பாக பொது மக்களிடமிருந்து பெறப்படும் முறையீடுகளின் அடிப்படையில் கள ஆய்வும் விசாரணையும் மேற்கொண்டு முரண்பாடுகளைச் சரி செய்கிறது.

(2) நகரங்களுக்கு அருகாமையிலுள்ள நிலங்களும், தஞ்சை நிலங்களும், விவசாய புறம்போக்கு நிலங்களும், தரிசு நிலங்களும், வீட்டு மனைகளாக மாற்றப்பட்டு வருகின்றன. இவ்வழிகாட்டிக் குழு துறையிலுள்ள



1998 ஏப்ரல் 20]

களப்பணி அலுவலர்களுடன் சேர்த்து மனைப்பிரிவுகளையும், மனையிடங்களையும் ஆய்வு செய்தும், விசாரணையின்மூலமும், பதிவுப் புள்ளி விவரங்கள் அடிப்படையிலும், சொத்துக்களின் சரியான மதிப்பை நிர்ணயம் செய்கிறது.

(3) மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளுக்கும், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாநகராட்சி மற்றும் இதர நகராட்சிகளின் 1971 ஆம் ஆண்டு கிராம மற்றும் நகர்ப்புற திட்ட சட்டத்தின் பிரிவு 10(1)ன்கீழ் உள்ளாட்சி திட்டப்பகுதி என அறிவிக்கப்பட்ட பகுதிகளிலும் உள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு ஆண்டுதோறும் திருத்தியமைக்கப்படவும், இதர கிராமப்புறங்களிலுள்ள சொத்துக்களின் மதிப்பு இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை திருத்தியமைக்கப்படவும் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்கண்ட ஆணைகளின்படி தமிழ்நாட்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள், நகர பஞ்சாயத்து பகுதிகளில் உள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகள் திருத்தியமைக்கப்பட்டு வருகின்றன. இந்த மதிப்புகள் திருத்தியமைக்கும் பணி விரைவில் முடிக்கப்பட்டு, 1-4-1998 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்படும். இதனால், அரசுக்கு சுமார் ரூ.50 கோடி கூடுதல் வருவாய் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(4) சொத்துக்களின் வழிகாட்டி மதிப்பு குறிப்பிட்ட பதிவேட்டின் நகல் ஒன்று அந்தந்தப் பகுதிகளில் உள்ள வர்த்தகர் சங்கம் அல்லது விவசாயிகள் சங்கத்திற்கு வழங்கப்பட்டு பொது மக்களின் தகவலுக்காக வைக்கப்பட வேண்டும் என்று அரசு பதிவுத் துறைத் தலைவருக்கு அறிவுரைகள் வழங்கியுள்ளது. சென்னையில் பல்வேறு பகுதிகளில் உள்ள வர்த்தகர் சங்கங்களின் பிரதிநிதிகளிடம் சமீபத்தில் வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகளின் நகல் பொது மக்களின் தகவலுக்காக வழங்கப்பட்டுள்ளது.

### ஐ. பதிவுத் துறை பயிற்சி நிலையம்.

பதிவுத் துறையால் நிர்வகிக்கப்படும் முத்திரைச் சட்டம், பதிவுச் சட்டம் மற்றும் பல்வேறு சட்டங்கள் குறித்து துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்க பயிற்சி நிலையம் ஒன்றைப் பதிவுத் துறைத் தலைமை அலுவலகத்தில் அரசு நிறுவியுள்ளது. இப்பயிற்சி நிலையம் கடந்த

டிசம்பர் 1996 முதல் தொடங்கி சுமார் 458 பணியாளர்களுக்கு பயிற்சி அளித்துள்ளது.

## 03. பதிவுத் துறை நிர்வகிக்கும் பல்வேறு சட்டங்கள்

1. 1908 ஆம் ஆண்டு பதிவுச் சட்டம். (மத்திய சட்டம் 16/1908)
2. 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம். (மத்தியச் சட்டம் 2/1899)
3. 1982 ஆம் ஆண்டு சீட்டு நிதிகள் சட்டம் (மத்திய சட்டம் 40/1982)
4. 1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம்.
5. 1932 ஆம் ஆண்டு இந்தியக் கூட்டுப் பங்காண்மைச் சட்டம்.
6. 1972 ஆம் ஆண்டு வர்த்தகம் அல்லாத கம்பெனிகள் சட்டம்.
7. 1886 ஆம் ஆண்டுப் பிறப்பு இறப்புத் திருமணங்கள் சட்டம்.
8. (அ) 1938 ஆம் ஆண்டு பார்சி திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம்.

   (ஆ) 1869 ஆம் ஆண்டு பிறப்பு இறப்புச் சட்டம்.

   (இ) 1954 ஆம் ஆண்டு சிறப்புத் திருமணச் சட்டம்.

   (ஈ) 1955 ஆம் ஆண்டு இந்து திருமணச் சட்டம்.

   (உ) 1872 ஆம் ஆண்டு இந்திய கிறிஸ்துவத் திருமணச் சட்டம்.

   (ஊ) 1961 ஆம் ஆண்டு வரதட்சினை தடுப்புச் சட்டம்.

## 04. இந்திய முத்திரைச் சட்டம் - நிர்வாகம்

சொத்து விற்பனை, பரிவர்த்தனை, அடமானம், நன்கொடை, உடைமை, உரிமை, நிலவர ஏற்பாடு முதலியவை குறித்த பத்திரங்கள் மீது முத்திரைத் தீர்வை விதிப்பதற்கு 1899-ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் (மத்திய சட்டம் 2/1899) மாநில அரசுக்கு அதிகாரமளிக்கிறது. வருவாய் வாரியம் கலைக்கப்பட்ட பின்பு, பதிவுத்



D N211,3:1N98 N99.45



துறை தலைவர் 1-12-1980-லிருந்து வருவாய் கட்டுப்பாட்டுத் தலைமை அதிகாரியாக (முத்திரைத் தாள் வருவாய்) செயல்பட்டு வருகிறார். அவர் இந்திய முத்திரைச் சட்டத்தின்மூலம் வருவாய் வசூலிக்கும் பொறுப்பிலும் இருந்து வருகிறார். அசையும் மற்றும் அசையா சொத்துக்களை மாற்றம் செய்வது குறித்து ஆவணங்களின் பேரில் முத்திரைத் தீர்வை விதிப்பதன்மூலம் கணிசமான வருவாய் கிடைக்கிறது.

### (i) பதிவுத் துறை வருவாய்

ஆவணங்கள்மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை, பத்திரப் பதிவுக் கட்டணம் மற்றும் சீட்டுகள், சங்கங்கள், கூட்டு வணிக நிறுவனங்கள், திருமணங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வதற்காக விதிக்கப்படும் கட்டணங்கள் ஆகியவை இத்துறைக்கு வருவாய் தரும் முக்கிய இனங்களாகும். ஆவணத்தில் குறிப்பிடப்படும் சொத்தின் விலைமதிப்பின்மீது முத்திரைத் தீர்வை விதிப்பதை மாற்றி ஆவணச் சொத்தின் சந்தை மதிப்பின்மீது தீர்வை விதிக்க வகை செய்து 1968 ஆம் ஆண்டு இந்திய முத்திரைச் சட்டம் திருத்தப்பட்டது. அதன் அடிப்படையில் சொத்துக்களின் தோராயமான சந்தை மதிப்பைக் குறிக்கும், வழிகாட்டி மதிப்புப் பதிவேடுகளில் குறிக்கப்பட்டுள்ள சொத்துக்களின் வழிகாட்டி மதிப்புகள் காலமுறையாக அவ்வப்போது திருத்தியமைக்கப்படுகின்றன. இதனால், தீர்வை ஏய்ப்பு செய்யும் நோக்குடன் ஆவணங்களில் சொத்து மதிப்பு குறைத்து எழுதப்படுவது தடுக்கப்படுவதுடன் அரசின் முத்திரைத் தீர்வை வருவாய் இழப்பும் தடுக்கப்படுகிறது. பத்திரப் பதிவுக் கட்டணம், முத்திரைத் தீர்வை ஆகியவற்றின் மூலம் 1968-69-ல் ரூ.40 கோடியாக இருந்த வருவாயானது அத்துறையின் தீவிரமான மேற்பார்வையினாலும், விழிப்புணர்வினாலும் 1996-97 ஆம் நிதியாண்டில் ரூ.748.58 கோடி அளவு வசூலிக்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில், 28-2-1998 முடிய இத்துறையின் வருவாய் ரூ.706.91 கோடியை எட்டியுள்ளது. அதே காலத்தில் 11,83,118 ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலாப நோக்கின்றி கட்டணம் வசூலிக்காமல் ஏழை மக்களுக்கு இலவச சேவை செய்யும் கல்வி, சமூக மற்றும் அற நிறுவனங்கள் வாங்கிய சொத்துக்களின்மீதும், பெரும் தொழிற்சாலைகள் தொடங்கவும்

28456.

தொழிற்பேட்டைகள் அமைக்கவும் நிலங்கள் வாங்கும்போதும் ஏற்கனவே உள்ள சலுகைகளின்படி நடப்பு நிதியாண்டில் 31-1-1998 முடிய ரூ.4.66 கோடி அளவிற்கு முத்திரைத் தீர்வை சலுகை அரசால் வழங்கப்பட்டுள்ளது.

முத்திரை வருவாய்

| வருடம் | பத்திரப்பதிவு அதிகாரிகள் மூலம் (ஆவணப் பதிவின் மூலம்) | முத்திரைத்தாள்களின் கண்காணிப்பாளர் மூலம் விற்பனை (நீதிசாரா முத்திரைத்தாள்கள் அல்லாததின் மூலம்) |
|---|---|---|
| | | (ரூபாய் கோடியில்) |
| 1992-93 | 367.81 | 31.75 |
| 1993-94 | 411.98 | 29.90 |
| 1994-95 | 586.34 | 29.11 |
| 1995-96 | 748.50 | 30.93 |
| 1996-97 | 748.58 | 35.22 |
| 1997-98 | 706.91 | 25.55 |
| | (பிப்ரவரி '98 முடிய) | (டிசம்பர் '97 முடிய) |

**(2) இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47 (ஏ)-இன்கீழ் வரும் இனங்கள்**

முத்திரைச் சட்டத்தின்படி பத்திரங்களைப் பதிய வருபவர்கள் பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் உண்மையான சந்தை மதிப்பைக் குறிப்பிடவேண்டும். சொத்தின் சரியான சந்தை மதிப்பு பத்திரத்தில் உண்மையில் குறிக்கப்பட்டுள்ளதா என்பதைத் தெரிந்துக் கொள்ள வழிகாட்டி மதிப்புப் பதிவேட்டை வைத்து சரி பார்க்கப்படுகிறது. பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் வழிகாட்டிப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்பிற்கும் இடையே வேறுபாடு ஏதுமிருந்து, பத்திரம் பதிய வருபவர் கூடுதல் முத்திரைத் தீர்வையைச் செலுத்த மறுத்தால், இந்திய முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)இன்கீழ் அச்சொத்தின் உண்மையான சந்தை மதிப்பை





தீர்மானிப்பதற்குப் பத்திரப் பதிவு அதிகாரி, அந்தப் பத்திரத்தைத் தனித் துணை ஆட்சியர் (முத்திரை)க்கு அனுப்பி வைப்பார். பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்தின் சந்தை மதிப்பை நிர்ணயம் செய்து அதன்மீது செலுத்தப்பட வேண்டிய முத்திரைத் தீர்வையைத் தனித் துணை ஆட்சியர் நிர்ணயிக்கிறார். அவ்வாறு சட்டப் பிரிவு 47(ஏ)-இன் கீழ் தனித் துணை ஆட்சியர் (முத்திரை) மதிப்பு நிர்ணயம் செய்து வெளியிடும் ஆணையால் பாதிக்கப்பட்டவர்கள் துணை நீதிமன்றங்களில் முறையீடு செய்யலாம்.

**(3) தன்னிச்சைச் சீராய்வு**

இந்த மேல் முறையீடுகளைத் துணைப் பதிவுத் துறைத் தலைவருக்குச் செய்துகொள்ளவும் பதிவுத் துறைத் தலைவருக்குத் தன்னிச்சைச் சீராய்வு செய்யவும், வகை செய்யும் முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)-க்கான சட்டத் திருத்தம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(4) கீழ்க்கண்ட இடங்களில் 11 தனித் துணை ஆட்சியர்கள் (முத்திரை) செயல்படுகின்றனர்:**

1. சென்னை
2. வேலூர்
3. கடலூர்
4. தஞ்சாவூர்
5. திருச்சிராப்பள்ளி
6. சேலம்
7. கோயம்புத்தூர்
8. மதுரை
9. தூத்துக்குடி
10. விருதுநகர்
11. திருநெல்வேலி

மேற்கண்ட சிறப்பு அலுவலர்கள் தங்கள் ஆளுகைக்குட்பட்ட மாவட்டங்கள்தோறும் சுற்றுப்பயணம் செய்து சொத்துக்களைப் பார்வையிட்டு செலுத்தப்பட்ட முத்திரைத் தீர்வை போதுமானதா அல்லது குறைவானதா என்பதைக் கண்டறிய சொத்துக்களின் மதிப்பை நிர்ணயம் செய்கின்றனர். இந்தச் சிறப்பு அலுவலர்கள் 1997-98 ஆம் ஆண்டில் முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)இன்கீழ் 72,607 ஆவணங்களை முடித்து பிப்ரவரி 1998 முடிய ரூ.36.75 கோடி வசூல் செய்துள்ளனர். முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)இன்கீழ் பிப்ரவரி 1998 வரை சொத்து மதிப்பு நிர்ணயம் செய்ய அனுப்பப்பட்ட 70,454 ஆவணங்களில் சுமார் ரூ.224.92 கோடி வருவாய் முடங்கியுள்ளது

[1998 ஏப்ரல் 20

என்று பதவித் துறை தலைவர் தெரிவித்துள்ளார். இரண்டு அல்லது மூன்று மாவட்டங்களில் பல்வேறு பகுதிகளில் உள்ள சொத்துக்களை விரைந்து கள ஆய்வு செய்து முடங்கிக் கிடக்கும் அரசு வருவாயை விரைந்து வசூலிப்பதற்கும், ஆவணங்களை விரைவில் திரும்ப வழங்குவதற்கும் வசதியாக, தனித் துணை ஆட்சியர் (முத்திரை) களுக்கு வாகனங்கள் வழங்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும் முத்திரைச் சட்டம் பிரிவு 47(ஏ)இன்கீழ் அதிக அளவில் ஆவணங்கள் தேங்கிக் கிடக்கும் பகுதிகளில் தற்போதுள்ள தனித் துணை ஆட்சியர்களுடன் கூடுதலாக ஒரு தனித் துணை ஆட்சியர் என்ற வகையில் 9 தனித் துணை ஆட்சியர் (முத்திரை) அலகுகளை அரசு ஏற்படுத்தி உள்ளது.

### (5) முத்திரைத் தீர்வை மீதான மிகுவரி

விற்பனை, பரிவர்த்தனை, நன்கொடை, உடைமை, உரிமையுடன் கூடிய அடமானம், அதன் மாற்றம், நிலையான குத்தகை தொடர்பாக ஆவணங்களைப் பொறுத்தவரையில் முத்திரைத் தீர்வையுடன் 5 சதவிகிதம் மிகுவரி கூடுதலாக வசூலிக்கப்படுகிறது. மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளைப் பொறுத்தவரை மிகுவரியாக வசூலிக்கப்படும் தொகை 10% தொகையை வசூல் கட்டணமாக பதிவுத் துறை எடுத்துக் கொண்டு எஞ்சியுள்ள 90% தொகை மாநகராட்சிகளுக்கும், நகராட்சிகளுக்கும் வழங்கப்படுகிறது.

அதேபோல், நகர பஞ்சாயத்துக்கள், உள்ளாட்சி மன்றங்களுக்கு சம்பந்தப்பட்ட மிகுவரி வசூலில் 3% இத்துறை வசூல் கட்டணமாக எடுத்துக்கொள்கிறது. மீதமுள்ள 97% மிகுவரி சம்பந்தப்பட்ட நகரப் பஞ்சாயத்துக்களுக்கும், உள்ளாட்சி மன்றங்களுக்கும் வழங்கப்படுகிறது.

### (6) ஏழை மக்கள் வீட்டுமனைகள் வாங்கிப் பதிவதற்கு முத்திரைத் தீர்வை முழு விலக்கு

ஏழை மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.1000/-க்கும் குறைவான மதிப்புள்ள சொத்தில் வாங்கும் ஆவணப் பதிவிற்கு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டணத்தை அரசு முழு விலக்கு அளித்துள்ளது. இந்தச் சலுகையை இன்னும் உயர்த்தலாமா என்பது குறித்து முத்திரைத் தீர்வை சீரமைப்புக் குழு பரிசீலித்து வருகிறது.



1998 ஏப்ரல் 20]

### (7) ஒத்தி மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு இடையேயான பாக ஆவணங்கள் மீது முத்திரைத் தீர்வை குறைவு

1. குடும்ப உறுப்பினர்களிடையேயான பாக ஆவணங்கட்கு முத்திரைத் தீர்வை 2% ஆக குறைக்கப்பட்டுள்ளது.

2. ஒத்தி ஆவணங்கட்கான முத்திரைத் தீர்வை 4% ஆகக் குறைக்கப்பட்டுள்ளது.

### (8) தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் ஒதுக்கீடு செய்யும் குடியிருப்பு/மனைகளுக்கு முத்திரைத் தீர்வை விலக்கு/ சலுகை அளித்தல்

அ. தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் பொருளாதாரரீதியில் நலிவடைந்த பிரிவினருக்கென குடியிருப்பு/மனைகளை ஒதுக்கீடு செய்து அதன்தொடர்பாக எழுதிக் கொடுக்கும் கிரைய ஆவணங்களுக்கு முத்திரைத் தீர்வை முழு விலக்களித்து 8-1-1998-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

ஆ. மேற்படி அரசாணையின்படி, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் அதன் ஒதுக்கீடுதாரர்களுக்குக் குடியிருப்பு/மனையை குறைந்த வருவாய் பிரிவு, மத்திய வருவாய் பிரிவு மற்றும் உயர்ந்த வருவாய் பிரிவு ஆகிய திட்டங்களின்கீழ் ஒதுக்கீடு செய்து எழுதிக்கொடுக்கும் கிரைய ஆவணங்களுக்கு சம்பந்தப்பட்ட சொத்தின் சந்தை மதிப்பினை விடுத்து, மேற்படி வாரியம் நிர்ணயம் செய்த கிரைய தொகைக்கே முத்திரைத் தீர்வை செலுத்தினால் போதுமானது என்ற வகையில் முத்திரைத் தீர்வை சலுகையினை அளித்து ஆணை பிறப்பித்துள்ளது.

### (9) மற்ற மாநிலப் பதிவகங்களில் தமிழகச் சொத்து ஆவணங்கள் பதிவு செய்வதைத் தடுக்கப் பதிவுச் சட்டத் திருத்தம்

(அ) பதிவுச் சட்டம் பிரிவு 28-இல் உள்ள உரிமையைப் பயன்படுத்திக்கொண்டு அதிக அளவு முத்திரைத் தீர்வை செலுத்துவதிலிருந்து தப்பிக்க தமிழகச் சொத்துக்கள் குறித்து விற்பனை ஆவணங்கள் பெருமளவு அண்டை மாநிலமான கேரள சார் பதிவகங்களில் பதிவு செய்யப்படுகின்றன. இதைத்தடுக்க, தமிழ்நாடு சொத்துக்கள் குறித்த விற்பனை/பரிவர்த்தனை ஆவணங்கள் தமிழ்நாட்டில் சொத்து அமைந்துள்ள பகுதியின் எல்லை உரிமை உடைய சார்

[1998 ஏப்ரல் 20

பதிவகத்தில் மட்டுமே பதியப்பட வேண்டும் என்றும், அதை மீறி வேறு மாநில சார் பதிவகத்தில் பதிவு செய்தால் அது செல்லாது என்றும், சட்டத் திருத்தம் கடந்த, 31-1-1997 அன்று சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு 29-3-1997 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது.

(ஆ) மேலும், பொதுக் கொள்கைக்கு எதிரான ஆவணங்களைப் பதிவு மறுக்க அதிகாரமளிக்கும் வகையில் பதிவுச் சட்டம் பிரிவு 22-க்கு திருத்தம் ஒன்று தமிழ்நாடு சட்டப் பேரவையில் நிறைவேற்றப்பட்டு 22-8-1997 முதல் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்த அதிகாரத்தின்கீழ் பொதுக் கொள்கைக்கு மாறான நிகழ்வுகளை அரசு விரைவில் அறிவிக்கை செய்திடும்.

(இ) பதிவு செய்யும் நடைமுறைகளை முடித்திட வழிவகுக்கும் வரையறை இருப்பதைப் பயன்படுத்தி அரசுக்குச் செலுத்த வேண்டிய முத்திரைத் தீர்வையைத் தாமதப்படுத்தும்போக்கு உள்ளதால், ஆவணங்களில் குறிப்பிடப்படும் மதிப்புக்கு முத்திரைத் தீர்வை செலுத்தாத ஆவணங்களில் தீர்வை செலுத்திய பின்னரே பதிவு நடைமுறை மேற்கொள்ள ஏதுவாக விதித் திருத்தம் செய்திட அரசு முடிவு செய்துள்ளது.

**(10) இந்திய முத்திரைச் சட்டத்திற்கு சட்டத் திருத்தங்கள்**

தமிழகப் பதிவுத் துறை அமைச்சரை ஒரு உறுப்பினராகக் கொண்ட முத்திரைச் சட்ட சீர்திருத்தம் குறித்த மாநில நிதியமைச்சர்களின் குழு இந்திய முத்திரைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளையும், பல்வேறு வகை ஆவணங்கள்மீது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை விகிதங்களையும் ஆய்வு செய்து, பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையைக் கொடுத்துள்ளது. அதன்படி, 'முத்திரைத் தீர்வை சீர்திருத்தம் குழு', முத்திரைத் தீர்வை ஏய்ப்பைத் தடுக்கவும், தீர்வை விகிதங்களைத் திருத்தியமைப்பது குறித்தும், ஆவணப் பதிவின்போது மக்கள் பயனடையும் வகையில் சேவையில் நவீனப்படுத்துவது குறித்தும் ஆய்வு செய்து முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டத்திற்குத் தேவையான சட்டத் திருத்தங்கள் செய்வது குறித்து பரிந்துரைக்கக் கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட குழு இந்திய முத்திரைச் சட்டத்திற்குத் திருத்தங்கள் செய்வது குறித்து பல பரிந்துரைகளைச் செய்துள்ளது. தத்து ஆவணம்,



1998 ஏப்ரல் 20]

ஆணை உறுதி ஆவணம், ஒப்பந்த ஆவணம், சீட்டு ஒப்பந்த ஆவணம், நகல் ஆவணம், படி ஆவணம், பங்கு நிறுவன ஆவணம், பங்கு நிறுவனக் கலைப்பு ஆவணம், கடனீட்டு ஆவணம், டிரஸ்ட் ஆவணம், டிரஸ்ட் முறிவு ஆவணம், உரிமை ஆவண ஒப்படைப்பு, அடகு அல்லது ஈட்டுறுதி ஆவணம் ஆகிய ஆவணங்கள்மீது தற்போது விதிக்கப்படும் முத்திரைத் தீர்வை மிகக்குறைந்த அளவு உள்ளதாலும், சொத்துக்களின் மதிப்பு ஆண்டுதோறும் பெருமளவு உயர்ந்து வருவதாலும், பதிவுத் துறையின் செலவை ஈடுகட்ட வேண்டியும், இந்தக் கட்டணங்களை நியாயமான அளவு உயர்த்தி நிர்ணயம் செய்ய பரிந்துரைத்துள்ளது. இந்தப் பரிந்துரைகளை ஆய்வு செய்து, மேற்கண்ட ஆவணங்களின் மீதான தீர்வை விகிதங்களை மாற்றியமைக்கத் தேவையான முத்திரைச் சட்டத் திருத்தங்கள் செய்ய அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. நடப்பாண்டிற்கு அரசு முத்திரைத் தீர்வை மற்றும் பதிவுக் கட்டண சீரமைப்புக் குழு ஒன்றைப் பதிவுத் துறைத் தலைவர் தலைமையில் நியமித்துள்ளது. அது தனது அறிக்கையை 17-3-1998-ல் அரசுக்கு அளித்துள்ளது. அது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**(11) பத்திரப் பதிவுத் துறையை நவீனமாக்குதல்.**

(அ) பத்திரங்கள் பதிவு செய்வதில் பதிவுத் துறையில் நெடுங்காலமாகக் கையால் எழுதப்பட்டு பதிவு செய்யும் நடைமுறைகள் இருப்பதால், பதிவு செய்வதிலும், பத்திரங்களைத் திரும்ப அளிப்பதிலும் நீண்டகால தாமதம் ஏற்பட்டு பொது மக்கள் இன்னல்களுக்கு உள்ளாகின்றனர். பத்திரப் பதிவு முறை நவீனமயமாக்கப்படாததாலும், தானியங்கி முறை புகுத்தப்படாததாலும், தமிழ்நாட்டிலுள்ள 592 சார் பதிவகங்களில் ஆண்டொன்றுக்கு சுமார் 13 இலட்சம் ஆவணங்கள் பதிவு செய்யும் வேலைப் பளுவைப் பதிவுத் துறை சமாளிக்க இயலாத நிலையில் உள்ளது.

பத்திரப் பதிவு அலுவலகங்களின் அமைப்பு மற்றும் நடைமுறைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்து அறிக்கை அளிக்குமாறு ஆய்வு நிறுவனம் ஒன்றை அரசு நியமனம் செய்தது. பத்திரப் பதிவு அலுவலகங்களுக்குக் கட்டட வசதி, பயன்பாடுடைய அறைகலன்கள், கணினிமயமாக்குதல், பதிவு செய்யப்பட்ட ஆவணங்களைப் பாதுகாத்தல், பாதுகாக்கப்பட்ட ஆவணங்களில் இருந்த தகவல்களை எளிதில் பெறுதல், ஆவணங்களின் நகல்கள், வில்லங்கச் சான்றுகள் ஆகியவற்றைக்

[1998 ஏப்ரல் 20

காலதாமதமின்றி வழங்குதல், முத்திரைச்சட்டம், பதிவுச் சட்டம் போன்ற சட்டங்கள் குறித்து பதிவுத் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளித்தல், பல்வேறு வகை ஆவணங்களுக்கான படிவங்களை நிர்ணயித்தல் ஆகியவை குறித்து ஆய்வு செய்து பல்வேறு பரிந்துரைகள் கொண்ட ஆய்வு அறிக்கையை மேற்கண்ட நிறுவனம் அரசுக்கு அளித்துள்ளது. இந்த அறிக்கை அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

(ஆ) பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் 27-6-1994 அன்று 3 முனைகளுடன் கூடிய ஒரு கணிப் பொறி நிறுவப்பட்டது. மைலாப்பூர் சார் பதிவகத்திலும், சென்னை, பெரியமேடு மற்றும் மத்திய சென்னை இணைச் சார் பதிவகங்களிலும், 1983 ஆம் ஆண்டிலிருந்து 1998 ஆம் ஆண்டு வரையிலான 16 ஆண்டு காலத்தில் பதிவு செய்யப்பட்ட அனைத்து ஆவணங்கள் குறித்த விவரங்கள் இந்தக் கணிப் பொறியில் பதிவு செய்யப்பட்டு, வில்லங்கச் சான்றுகள் உடனுக்குடன் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பதிவகங்களில் பதிவு செய்யப்பட்ட ஆவணங்களின் அட்டவணைகள் குறித்த விவரங்களைப் பதிவு செய்ய ஒவ்வொன்றும் 5 முனைகளுடைய 2 கணிப் பொறிகள் நிறுவப்பட்டுள்ளன.

(இ) மாநிலத்தில் உள்ள அனைத்து சார் பதிவகங்களையும் நவீனப்படுத்தும் பதிவுத் துறைத் தலைவரின் செயற்குறிப்பை அரசு பரிசீலித்து எல்லா பதிவகங்களையும் கணிப் பொறி மூலம் இணைக்கும் திட்டம் ஒன்றை படிப்படியாக நிறைவேற்றுவது என்று அரசு முடிவு செய்துள்ளது. அதன் அடிப்படையில், 1997-98 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின்கீழ் முதற்கட்டமாக 20 சார் பதிவகங்களைக் கணிப் பொறி மூலம் ரூ.1 கோடி செலவில் இணைக்கும் திட்டத்திற்கு அரசு ஏற்பளித்துள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் மேலும் சார் பதிவகங்களில் கணிப் பொறிகள் அமைக்க அரசு உத்தேசித்துள்ளது. இதன்மூலம் பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள் குறித்த அட்டவணை தயாரிப்பதும், நகல் எடுப்பதும், வில்லங்கச் சான்றுகள் வழங்குவதும், ஆவணப் பதிவு குறித்த விவரங்களைப் பொது மக்களுக்கு எளிதாகவும் விரைவாகவும் அளிப்பதும் சாத்தியமாகும்.

1997-98 ஆம் ஆண்டில் மேலும் 15 ஜெராக்ஸ் இயந்திரங்கள் வாங்க அரசு ஏற்பளித்துள்ளது. அவைகள் அமைக்கப்பட்டுவிட்டன.



1998 ஏப்ரல் 20]

**(12) முத்திரைத் தாள்களின் தேவையைக் கணித்தலும், முத்திரைத் தாள்களை வழங்கலும்**

தமிழ்நாடு முழுவதற்கும் அஞ்சல் சாரா முத்திரைத் தாள்களான நீதித் துறை முத்திரைத் தாள்கள், நீதித் துறை சாரா முத்திரைத் தாள்களின் தேவையை முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் மதிப்பீடு செய்து, அதனை நாசிக்கிலுள்ள இந்தியப் பாதுகாப்பு அச்சக முத்திரைத் தாள் கட்டுப்பாட்டு அதிகாரிக்கு அனுப்பி வைக்கிறார். சென்னையிலுள்ள கருவூல கணக்குகள் துறை மண்டல துணை இயக்குநர், முத்திரைத் தாள் உதவி கண்காணிப்பாளர் ஒருவரின் உதவியுடன் அலுவல் முறையில் முத்திரைத்தாள் கண்காணிப்பாளராக செயல்படுகிறார். ஒவ்வொரு ஆண்டிற்கு மற்றும் காலாண்டிற்கான முத்திரைத் தாள்கள் தேவைப்பட்டியலை மாவட்ட கருவூல அதிகாரிகளும், முத்திரைத் தாள் உதவிக் கண்காணிப்பாளரும் தயாரிக்கின்றனர். அவற்றை முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைக்கிறார். வெவ்வேறு கருவூலங்களில் முத்திரைத் தாள்களின் இருப்பு நிலவரப்படியும் பொது மக்களுக்குத் தேவைப்படும் அனைத்துவிதமான முக மதிப்புகளைக் கொண்ட முத்திரைத் தாள்களை வழங்கும் நோக்குடனும், பொது மக்களின் தேவை திடீரென அதிகரிக்கும்போது அத்தேவையை நிறைவுசெய்யும் வகையிலும் சென்னை முத்திரைத் தாள் கண்காணிப்பாளர் ஒருங்கிணைந்த முத்திரைத் தாள்கள் தேவைப்பட்டியலை தயாரிக்கிறார். குறிப்பிட்ட முக மதிப்புடைய முத்திரைத் தாள்கள் அவசரமாகத் தேவைப்படும் போதும், பற்றாக்குறை ஏற்படும்போதும், முத்திரைத்தாள்கள் இருப்பு வைத்துள்ள ஒரு மாவட்டத்திலிருந்து இருப்பு இல்லாத மற்ற மாவட்டங்களுக்குத் தேவையான முத்திரைத் தாள்களை அனுப்ப ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. தற்போது ரூ.25,000/-ரூ.20,000/- ரூ.10,000/- ரூ.5,000/- மற்றும் ரூ.20/- முக மதிப்புக்கொண்ட நீதி சாரா முத்திரைத் தாள்கள் வெளியிடப்பட்டுள்ளன.

**(13) ஃபிராங்கிங் கருவி (Franking Machine) மூலம் ஆவணங்களை முத்திரையிடுதல்**

ஆவணங்களின் மீதான முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதற்கு முத்திரைத் தாள்களைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக, வெற்றுத் தாளில் எழுதிப் பதிவுக்குக் கொடுக்கப்படும் ஆவணங்களின்மீது ஃபிராங்கிங் கருவி (Franking Machine) மூலம் தீர்வைத் தொகை வசூல் குறித்து

[1998 ஏப்ரல் 20

முத்திரையிடும் முறையை அறிமுகப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. இதற்காக ரூ.15 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இந்த இயந்திரம் வழி முத்திரைத் தீர்வை செலுத்துதலை அரசு ஏற்று ஆணையிட்டுள்ளது. நடப்பாண்டில் 15 பதிவகங்களில் இந்தக் கருவி அமைக்கப்படும் மற்ற அலுவலகங்களுக்குப் படிப்படியாக அறிமுகப்படுத்தப்படும்.

**(14) உரிமம் பெற்ற முத்திரைத் தாள் விற்பனையாளர்கள்**

உரிமம் பெற்ற முத்திரை த்தாள் விற்பனையாளர்கள் மூலமும் கருவூலங்கள், சார் பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றின் வாயிலாகவும், பொது மக்களுக்குத் தேவையான நீதிமன்ற மற்றும் நீதி சாரா முத்திரைத் தாள்கள் விற்பனை செய்யப்படுகின்றன. தமிழ்நாட்டில் தற்போது 3,519 உரிமம் பெற்ற முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் உள்ளனர். கூடுதலாக 2,472 முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் நியமனம் செய்யப்பட முத்திரை விதிகள் திருத்தப்பட்டுள்ளது. இதுவரை 1,343 முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். மீதமுள்ள நியமனங்களும் விரைவில் செய்யப்படும். மொத்த முத்திரைத் தாள்கள் விற்பனையில் முத்திரை விதிகளில் குறிப்பிட்ட கழிவுத் தொகை விகிதம் விற்பனையாளர்களுக்கு அனுமதிக்கப்படுகிறது. தங்களின் சேவைக்கு ஈடுகட்டும்வகையிலும், முத்திரைத் தாள்கள் விற்பனையில் முறைகேடுகள் செய்வதைத் தடுக்கும் வகையிலும், முத்திரைத் தாள் விற்பனைக்கு நியாயமான விகிதம் கழிவுத் தொகை அளிக்க வேண்டும் எனத் தமிழ்நாடு முத்திரைத் தாள் விற்பனையாளர்கள் சங்கம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளது. அரசு இந்தக் கோரிக்கையினைப் பரிசீலித்து வருகிறது. முத்திரைத் தாள் விற்பனையாளர்களின் செயல்பாட்டினை மாவட்டப் பதிவாளர்களும், பதிவுத் துறை உயர் அதிகாரிகளும் மேற்பார்வை செய்து முறைப்படுத்துகின்றனர்.

**(15) சார் பதிவகங்களில் முத்திரைத் தாள் விற்பனை**

முத்திரைத் தாள்கள் மற்றும் சிறப்பு ஒட்டு வில்லைகள் விற்கும் முத்திரைத் தாள் விற்பனையாளர்களாக சார் பதிவாளர்கள் செயல்பட்டு வருகின்றனர். சிறப்பு ஒட்டு முத்திரை வில்லைகளில் ஒப்பமிடும் அதிகாரியாகவும், முத்திரைத் தாள்களுக்குப் பதிலாக இந்திய முத்திரைச்



1998 ஏப்ரல் 20]

சட்டம் பிரிவு 41-ன்கீழ் முத்திரைத் தீர்வையினை ரூ. 10,000 வரை ரொக்கமாகப் பெற்றிடவும், சார் பதிவாளர்கள் அதிகாரம் பெற்றுள்ளனர். மேலும், மாவட்டப் பதிவாளர் சார் பதிவாளராகச் செயல்படும் இடங்களில் உச்சவரம்பு இல்லாத வகையில், முத்திரை தாள்களுக்குப் பதிலாக ரொக்கம் பெற்று ஆவணத்தில் தீர்வை செலுத்தியதற்கான சான்று சேர்க்க அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முத்திரைத் தாள்கள் தாராளமாகக் கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில், மாநிலம் முழுவதும் உள்ள அனைத்து பதிவு அலுவலகங்களிலும் முத்திரைத் தாள் விற்பனைக்கு அரசு ஏற்பாடு செய்துள்ளது. பொது மக்கள் அவர்களுடைய பத்திரங்களில் முத்திரை வில்லைகள் ஒட்ட உதவும் வகையில், அனைத்து சார்பதிவகங்களிலும் சிறப்பு ஒட்டு வில்லைகள் எப்போதும் கிடைக்கின்றன.

**(16) சென்னையில் முத்திரைத் தாள் விற்பனை மையம் திறத்தல்**

(அ) நீதிமன்ற முத்திரைத் தாள்கள், பத்திரப் பதிவிற்கான நீதி சாரா முத்திரைத் தாள்கள் மற்றும் முத்திரை வில்லைகள் ஆகியவை எளிதாகவும், தேவையான அளவும், இடர்பாடின்றியும் பொது மக்களுக்குக் கிடைக்கச்செய்யும் நோக்குடன், சென்னைத் துணைப் பதிவுத் துறைத் தலைவர் அலுவலகத்தில் முத்திரைத் தாள் விற்பனை மையம் ஒன்றைத் திறக்க அரசு முடிவு செய்துள்ளது. இதற்கென ரூ.25 இலட்சம் அனுமதிக்கப்பட்டு பாதுகாப்பு அறை கட்டும் பணி நடந்து வருகிறது.

(ஆ) பதிவகங்களில் உள்ள பதிவுறுக்கள் பாதுகாப்பு கருதி அனைத்து சார் பதிவகங்களிலும் இரவு காப்பாளர்களை நியமித்திட அரசு பரிசீலித்து வருகிறது.

(இ) பதிவகங்களில் வளர்ந்து வரும் வேலைப் பளுவிற்கு ஏற்ப தற்காலிகப் பிரிவு எழுத்தர்களை நியமித்திட அரசு பரிசீலித்து வருகிறது.

(ஈ) கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்தவாறு பொது மக்களின் பயன்பாட்டுக்கான 'கையேடு' அச்சிடப்படுகின்றது. இது ரூ.5 விலைக்கு விரைவில் வெளியிடப்படும். இது பதிவுத் துறைப் பணிகள் குறித்து பொது மக்கள் அறிந்திட வழிவகுக்கும்.

[1998 ஏப்ரல் 20

(உ) மைய அரசின் இசைவு பெற்றபின் பதிவுச் சட்டம் மற்றும் இந்திய முத்திரைச் சட்டம் ஆகியவை தமிழில் வெளியிடப்படும்.

(ஊ) தகவல்களை விரைவாக அனுப்பிட ஏதுவாக அனைத்து மண்டல அலுவலகங்களிலும் தலைமை அலுவலகத்திலும் பேக்ஸ் கருவி நிறுவப்பட உள்ளது.

**(17) சென்னை உதவி முத்திரைத் தாள் கண்காணிப்பாளரால் முத்திரைத்தாள்கள் விற்பனை :**

1996-97 மற்றும் 1997-98-ல் முத்திரைத் தாள்கள் வரவு செலவு விவரம் பின்வருமாறு:-

| கணக்குத் தலைப்பு | 1996-97 | 1997-98 (31-12-1997 வரை) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | |
| வரவு | | |
| 1. நீதித்துறை சாரா முத்திரைத் தாள்கள் | 51,094.93 | 42,983.65 |
| 2. நீதித்துறை சார்ந்த முத்திரைத் தாள்கள் | 3,521.92 | 2,555.30 |
| 3. உண்டியல் முத்திரைத் தாள்கள் | 8.14 | 3.31 |
| 4. ஒட்டு முத்திரை வில்லைகள் | 4,359.68 | 973.03 |
| 5. பல்வகை வரவு | 14,382.75 | 10,299.47 |
| பெரு மொத்த வரவுகள் | **73,367.42** | **56,814.76** |
| கழிப்பு-திருப்பிச் செலுத்தியவை | | |
| 1. உள்ளாட்சி மன்றங்களுக்கு கொடுக்கப்படும் தொகை | 23,406.27 | 14,535.75 |
| 2. நீதித்துறை சார்ந்தவை | 363.91 | 206.56 |
| மொத்தம் | **23,770.18** | **14,742.31** |



1998 ஏப்ரல் 20]

| | (ரூபாய் இலட்சத்தில்) | |
|---|---|---|
| கட்டணங்கள் | | |
| 1. முத்திரைத் தாள் விற்பனையில் தள்ளுபடி | 157.77 | 112.37 |
| 2. பணியாளர் செலவு | 143.85 | 113.78 |
| 3. நாசிக் மற்றும் ஹைதராபாத்திலுள்ள முத்திரைத் தாள் அச்சகங்களுக்கு செலுத்தப்பட்ட கட்டணம் | 284.57 | 132.03 |
| 4. ஏற்ற இறக்கக் கூலி | 6.83 | 5.23 |
| மொத்த செலவுகள் | 593.02 | 363.41 |
| மொத்த வரவுகள் | 73,367.42 | 56,814.76 |
| மொத்த செலவுகளும் திருப்பி கொடுக்கப்பட்ட தொகையும் | 24,363.20 | 15,105.72 |
| நிகர வரவுகள் | **49,004.22** | **41,709.04** |

## 05. ஆவண எழுத்தர் மற்றும் நகல் எழுத்தர் உரிமங்கள்

**(1) நகல் எழுத்தர் உரிமம் :**

இந்தியப் பதிவு (உண்மை நகல் கோர்வை) விதிகள் 1967-ன்படி பதிவுக்குத் தாக்கல் செய்யப்படும் ஆவணத்துடன் அந்த ஆவணத்தின் நகலையும் தாக்கல் செய்ய வேண்டும். இந்த நகல் அழகாகவும், தெளிவாகவும், சரியாகவும், தயாரிக்கப்பட வேண்டும் என்பதால் ‘தமிழ்நாடு நகல் எழுத்தர்கள் உரிமை விதிகள் 1971, 2-4-1971-ல் அமலுக்குக் கொண்டு வரப்பட்டன. ஆவணங்களுக்குத் தட்டச்சு நகல் எடுக்கவும் தட்டச்சர்களுக்கு உரிமங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. தற்போது 19,830 நபர்கள் தட்டச்சு நகல் எழுத்தர் உரிமமும் பெற்றுள்ளனர்.

**(2) ஆவண எழுத்தர் உரிமம் :**

ஆவணங்கள் எழுதுபவர் உரிமம் பெற்றிருக்க வேண்டும் என்பதால், 1982 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஆவண எழுத்தர் உரிமை விதிகள், 14-4-1982-ல் அமல்படுத்தப்பட்டன. இந்த விதிகளின்படி அரசு நடத்தும்

[1998 ஏப்ரல் 20

முத்திரைச் சட்டம் மற்றும் பதிவுச் சட்டம், அவற்றின்கீழ் வகுக்கப்பட்ட விதிகள் குறித்த அறிவுத்திறன் தேர்வில் தேர்ச்சி பெற்றவர் மட்டுமே உரிமம் பெறத் தகுதியுடையவர் அவர். மாநில அளவிலான உரிமம், பதிவு மாவட்ட அளவிலான உரிமம் சார் பதிவு மாவட்ட அளவிலான உரிமம் என மூன்று வகை உரிமங்கள் வழங்கப்படுகின்றன. தற்போது 22,291 நபர்கள் ஆவணம் எழுத உரிமம் பெற்றுள்ளனர். 31-12-1997 அன்று உள்ளவாறு ஒவ்வொரு இனத்தின்கீழ் உரிமம் பெற்றவர்களின் பின்வருமாறு.

| | உரிமத்தின் தன்மை | ஆவண எடுத்தர் உரிமம் | நகல் எழுத்தர் உரிமம் | நகல் தட்டச்சர் உரிமம் |
|---|---|---|---|---|
| 1. | மாநில உரிமம் (ஏ உரிமம்) | 6,793 | 6,653 | 3,287 |
| 2. | மாவட்ட உரிமம் (பி உரிமம்) | 8,437 | 6,152 | 942 |
| 3. | உப மாவட்ட உரிமம் (சி உரிமம்) | 7,061 | 7,025 | 710 |
| | மொத்தம் | **22,291** | **19,830** | **4,939** |

இதுவரை பல்வேறு வகை ஆவணங்கள் எழுதக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படாமல் இருந்தது. இதனால் ஆவணம் எழுத அதிகமான கட்டணம் வசூலிக்கப்படுவதாக எழும் புகார்களுக்குத் தீர்வு காணும் வகையில் பல்வேறு வகை ஆவணங்கள் எழுத கட்டணம் வரையறை செய்யப்பட்டுள்ளது. ஆவண எழுத்தர், நகல் எழுத்தர் உரிமங்கள் வழங்குவதற்கான அல்லது புதுப்பிப்பதற்கான கட்டண விகிதங்களை மாற்றியமைக்கவும், உரிமங்களை ஐந்து ஆண்டுகளுக்குச் செல்லத்தக்கவாறு வழங்கிடவும் அரசு பரிசீலித்து வருகின்றது. படித்து வேலையின்றி இருக்கும் நபர்களுக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்தும் நோக்குடன் ஆவண எழுத்தர்/நகல் எழுத்தர் உரிமத் தேர்வு 19-7-1997 மற்றும் 20-7-1997 ஆகிய தேதிகளில் நடத்தப்பட்டு 9,306/13,018 நபர்கள் ஆவண



1998 ஏப்ரல் 20]

எழுத்தர்கள்/நகல் எழுத்தர் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளனர். அவர்கள் மனு செய்தால் உரிமம் வழங்கப்படும்.

## 06. தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975

1975 ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் அமலுக்கு வருவதற்கு முன்பாக சங்கப் பதிவுச் சட்டம் 1860 (மத்திய சட்டம் 21/1860) தமிழ்நாட்டில் அமலில் இருந்து வந்தது. இந்தச் சட்டத்தில் உறுப்பினர் பட்டியல்கள் பராமரிக்கவும், துணை விதித் திருத்தங்கள் குறித்தும், இது போன்ற முக்கியமான வேறு பல இனங்கள் குறித்தும் சட்ட விதிமுறைகள் ஏதும் இல்லாததால் அந்தச்சட்டத்தை அமல்படுத்துவதில் குறைபாடுகள் தென்பட்டன. இந்தக் குறைகளைப் போக்கும் விதமாக, 'தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் 1975' என்ற சட்டம் கொண்டு வரப்பட்டது. கலை, இலக்கியம், அறிவியல், சமயம், மற்றும் தமிழக அரசால் சட்டம் இயற்றத்தக்க வேறெந்தப் பொருள் பற்றியும் சங்கம் அமைத்துப் பதிவு செய்து கொள்ள இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

பதிவுத் துறைத் தலைவர் மற்றும் அனைத்து நிர்வாக மாவட்டப் பதிவாளர்கள் இந்தச் சட்டத்தின் கீழ்'சங்கங்களின் பதிவாளர்' ஆவார். பதிவுத் துறைத் தலைவருக்கு இச்சட்டத்தின் கீழான பணிகளைக் கண்காணிக்கும் அதிகாரமும், மேல்முறையீடுகளைத் தீர்வு செய்யும் அதிகாரமும் உள்ளன.

இச்சட்டத்தை நடைமுறைப்படுத்தும் முக்கியமான அதிகாரங்கள், அதாவது சங்கம் பதிவு செய்யப்படுதல், ஆவணங்கள் கோர்வைக்கு ஏற்கப்படுதல், ஆய்வு செய்யப்படுதல், கலைப்பு நடவடிக்கை எடுக்கப்படுதல் போன்ற அதிகாரங்கள் மாவட்டப் பதிவாளருக்கு உள்ளன. இச்சட்டப்பிரிவுகள் மற்றும் விதிகளிலிருந்து முழுமையாகவோ, அல்லது குறிப்பிட்ட சில இனங்களுக்கோ விலக்களிக்க அரசுக்கு அதிகாரம் உள்ளது.

தற்போது காலதாமதமாக சங்கத்தின் ஆவணங்களைக் கோர்வைக்குத் தாக்கல் செய்வதை அறிவிக்கையின் மூலம் விலக்களிப்பதைத் தவிர்த்து, இத்தகைய காலதாமதங்களை மாவட்டப் பதிவாளர்களே ஏற்று ஆணையிடப் பிரிவு 49-க்கு திருத்தம் செய்திட பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

[1998 ஏப்ரல் 20

சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் 31-01-1998 முடிய 61,952 சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன.

### 07. சீட்டு நிதிகள் சட்டம், 1982 (மைய சட்டம் 40/1982)

(1) 1992 ஆம் ஆண்டு மையச்சீட்டு நிதிச் சட்டம் 13-4-1984 அன்று முதல் நடைமுறைக்கு வந்தது. அச்சட்டத்தின்கீழ் 1984 ஆம் ஆண்டு தமிழ்நாடு சீட்டுநிதி விதிகள் வரையறுக்கப்பட்டன. பதிவுத் துறை தலைவர், சீட்டுப்பதிவாளராக நியமிக்கப்பட்டுள்ளனர். கூடுதல் பதிவுத்துறைத் தலைவர் நிலையில் ஒரு கூடுதல் சீட்டுப்பதிவாளரும், மாவட்டப்பதிவாளரும், மாவட்டப் பதிவாளர் நிலையில் ஒரு நேர்முக உதவியாளரும் (சீட்டுகள்) சீட்டு நிதி பணிகளில் உதவி புரிகின்றனர்.

துணைத்தலைவர், மாவட்டப் பதிவாளர், சார்பதிவாளர், சீட்டு நிதிச்சட்டத்தின்கீழ் முறையே இணைச்சீட்டுப் பதிவாளர், துணைச் சீட்டுப்பதிவாளர் மற்றும் உதவிச்சீட்டுப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். பதிவு மாவட்டங்களிலும் அவரவர் எல்லைக்குட்பட்டு 47 சீட்டு ஆய்வாளர்கள் பணிபுரிகின்றார்கள். சீட்டுகள் துவங்க அல்லது நடக்கத்தேவையான முன் அனுமதியை துணைச்சீட்டுப் பதிவாளர்கள் வழங்குகின்றனர். சீட்டுத்தொழில் சம்பந்தப்பட்ட தகராறுகளைத் தீர்த்திட மாவட்டப் பதிவாளர்கள் நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். கோயம்புத்தூர் மற்றும் சென்னையில் சீட்டுநிதிச் சட்டத்தின் கீழான வழக்குகள் அதிகமிருப்பதால், அரசு இவ்விடங்களில் மாவட்டப்பதிவாளர் நிலையில் இரு நடுவர்களை நியமித்துள்ளது. 31-12-1997 முடிய நடுவர் வழக்குகள் 2,287 முடிக்கப்பட்டுள்ளன.

31-12-1997 அன்று 4,370 நிறுவனங்கள் சீட்டுத்தொழில் புரிகின்றன. இவைகள் 35,811 சீட்டுக்ள் நடத்துகின்றன. சீட்டு நிறுவனங்களால் செலுத்தப்பட்டு பதிவாளர்கள் வைத்திருக்கும் வைப்பீட்டுத்தொகை 31-12-1997 முடிய ரூ.316.26 கோடி ஆகும்.

### (2) சீட்டு விழிப்புக் குழு

பதிவு செய்யாமல் சீட்டு நடத்துதல் மற்றும் அதன் தொடர்பான முறைகேடுகளைக் கண்டுபிடிக்கக் கூடுதல் சீட்டு பதிவாளர் தலைமையில் ஒரு சீட்டு விழிப்புக் குழு செயல்படுகிறது. 31-1-1998 வரை 33



1998 ஏப்ரல் 20]

பதிவுறா சீட்டுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அவைகளின் மதிப்பு ரூ.9.15 இலட்சம். இவைகள் பதிவுறாமையால் அரசுக்கு ரூ.7,400/- வருவாய் இழப்பு நேர்ந்துள்ளது. பொது மக்களிடமிருந்து அவ்வப்போது பெறப்படும் புகார்கள் மீது உடனுக்குடன் நடவடிக்கை எடுக்கப்படுகின்றன.

### 08. தமிழ்நாடு சீட்டுக் கழகம்

அரசின் கொள்கை முடிவின்படி தமிழ்நாடு சீட்டுக் கழகம் கலைக்கப்பட ஆணையிடப்பட்டது. கழகத்திற்கு வரவேண்டிய ரூ.2.79 கோடியில், 31-1-1998 வரை ரூ.2.57 கோடி வசூலிக்கப்பட்டு விட்டது. மீதமுள்ள ரூ.22.15 இலட்சத்தை வசூலிக்க சீட்டு நடுவர் நீதிமன்றத்தில் 1,046 வழக்குகள் கோர்வை செய்யப்பட்டு சீட்டு நடுவர்களிடம் நிலுவையில் உள்ளன. 25 வழக்குகள் சென்னை நகர உரிமையியல் நீதிமன்றத்தில் நிறைவேற்றலுக்காக நிலுவையில் இருந்து வருகின்றன.

### 09. இந்தியக் கூட்டுப் பங்காண்மைச் சட்டம், 1932

இந்தியக் கூட்டு வணிகச் சட்டத்தின் மாவட்டப் பதிவாளர்கள் அனைவரும் பதிவாளர்கள் ஆவர். இச்சட்டத்தின்கீழ் படிவம் 1-ல் அறிக்கை தாக்கல் செய்து கூட்டு வணிக நிறுவனம் பதிவு செய்யப்படலாம். நிறுவனத்தில் நிகழும் எவ்வித மாற்றமும் பதிவாளருக்குத் தெரிவிக்கப்பட வேண்டும். இந்தச்சட்டத்தின் கீழ்பதியப்படும் நிறுவனங்கள் பதிவு செய்த பிறகு தொடர்ந்து செயல்பட்டு வருவது குறித்து எவ்வித விவரங்களையும் அரசுக்குத் தெரிவிப்பதில்லை. இந்நிலையினைத் தவிர்க்கும் பொருட்டும், எத்தனை கூட்டு நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன என அறியவும், அவைகளுக்கு அளிக்கப்படும் சலுகைகள் சரிதானா என்பதைக் கண்காணிக்கவும், உதவி புரியும் வகையில் 1932 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டு வணிக நிறுவனம் (கூட்டு வணிக நிறுவனங்கள் பதிவு) விதிகளுக்குத் திருத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 31-12-1997 முடிய தமிழகத்தில் 3,12,600 பதிவு செய்யப்பட்ட கூட்டு வணிக நிறுவனங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு நிறுவனமும், ஒவ்வொரு ஆண்டும் ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்யவும், அவ்வாறு ஆண்டறிக்கைகள் தாக்கல் செய்யாத நிறுவனங்களின் பெயர்களைப் பதிவேட்டில் இருந்து நீக்கவும் இச்சட்டத்துக்குத் திருத்தம் செய்வது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

[1998 ஏப்ரல் 20

## இணைப்பு-2

*(373 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

### கொள்கை விளக்கக் குறிப்பு — 1998-99

### ஊரக மற்றும் சிறு தொழில்கள்

**முன்னுரை:**

1991ஆம் ஆண்டில் மைய அரசு கொண்டு வந்த பொருளாதாரச் சீரமைப்பு மற்றும் தாராளமயமாக்கப்பட்ட தொழில் கொள்கை ஆகியவற்றினால் தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. உலகின் மற்ற பகுதிகளுடன் இந்தியப் பொருளாதார ஆற்றலையும் உற்பத்தித் திறனையும் அதிகரிப்பதற்குப் போட்டியிடும் ஆற்றல்கள் அனுமதிப்பது, சந்தை நடவடிக்கைகள் திறம்படச் செயல்படுவதற்குள்ள பல்வேறு கட்டமைப்பு இடையூறுகளைக் களைவது ஆகியவையே இந்தப் பொருளாதாரச் சீரமைப்புத் திட்டத்தின் முக்கிய குறிக்கோள்களாகும். இக்குறிக்கோள்களை எய்திடுவதற்கு, சிறு தொழில்களின் பங்கு மிக முக்கியமானது என்று கருத்திற்கொள்ளப்பட வேண்டும். இவை ஏற்கெனவே, உற்பத்தித் துறையில் நாட்டின் உற்பத்தி மற்றும் ஏற்றுமதியில் 40 விழுக்காட்டிற்கு மேல் பங்களித்துள்ளனர்.

அதிக முதலீட்டினை ஊக்குவிக்கும் வகையில், இந்திய அரசு, சிறு தொழில்கள் மற்றும் குறுந்தொழில்களின் முதலீட்டு வரம்பினை முறையே, ரூ.3 கோடியாகவும், மற்றும் ரூ.25.00 இலட்சமாகவும் அதிகரித்துள்ளது. இதற்கிணையாக சிறுதொழில் நிறுவனங்கள் மிக விரைந்து வளர்ச்சியைக் கொண்டுவரக்கூடிய பகுதிகளுக்குப் பெரிதும் முக்கியத்துவம் தர வேண்டும் என்பதே மாநில அரசின் கொள்கையாகும்.

பெருந்தொழில் மற்றும் சிறு தொழில் துறைகள், ஒன்றின் வளர்ச்சி மற்றொன்றுக்கு உதவும் வகையில் அவற்றை ஒரு சேர வளர்ச்சி பெறச் செய்திடுவதற்குத் தமிழக அரசு பெரிதும், பொறுப்பேற்றுக் கொண்டுள்ளது. அரசின் தொழில் கொள்கையில், சிறு தொழில் துறை அதிக முக்கியத்துவம் உடைய வளர்ச்சிப் பகுதிகளில் ஒன்றாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஊரக மற்றும் பின் தங்கிய பகுதிகளில் அதிக அளவில் பயன் தரக்கூடிய விரைந்த தொழில் வளர்ச்சி, மற்றும்



1998 ஏப்ரல் 20]

கூடுதல் வேலை வாய்ப்பினை ஏற்படுத்துதல் ஆகிய இரட்டைக் குறிக்கோள்களை எய்திடுவதற்கு சிறு தொழில்துறை திறம்படச் செயல்படும் கருவியாகும் எனக் கருதப்பட்டுள்ளது. ஊரக மற்றும் சிறு தொழில்களின் வளர்ச்சியின் மூலம்தான் தேவையான பொருளாதார வளர்ச்சியை அடைய முடியும் என்பதை அரசு நன்கு உணர்ந்துள்ளது. ஊரகத் தொழில்மயமாக்கமே தொழில்கள் மாநிலம் முழுவதும் பரவலாக அமைத்தலுக்கு வழியாகும். இவ்வாறு அமைவதன் மூலம், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளுக்கிடையே தொழில் வளர்ச்சியில் காணும் ஏற்றத்தாழ்வுகளை இது குறைக்கிறது. மேலும் ஊரகத் தொழில்மயமாக்கம், தொழிலாளர்களும் மூலதனமும் ஊரகப் பகுதியிலிருந்து நகர்ப் பகுதிக்குச் செல்வதைத் தடுக்கவும் பயன்படுகிறது.

இளைஞர்களிடம் உள்ள தொழில் முனைவோர் திறன் வெளிப்படும் வகையில் அவர்களை ஊக்குவித்து மாதச் சம்பள வேலையினை நம்பியிராமல் சிறு தொழில்கள் மற்றும் வர்த்தகங்களைத் தொடங்கி வருவாய் ஈட்டி வாழ்ந்திட வகை செய்ய வேண்டுமென்பதே, தொழில் கொள்கையில் பெரும் முக்கியத்துவம் அளிக்கப்படும் மற்றொரு அங்கமாகும். சிறு தொழில் மற்றும் குறுந்தொழில் பிரிவுகளில் குறிப்பாக ஊரக மற்றும் பின் தங்கிய பகுதிகளுக்குப் பல்வேறு சலுகைகளும் உதவிகளும் வழங்கும் வகையில் இந்த அரசின் கொள்கை அமைந்துள்ளது. இத்துறையின் வளர்ச்சியானது ஊரக மற்றும் சிறு நகரத் தொழில் முனைவோர்களின் சேமிப்பு நிதியையும் மற்றும் மூலதன நிதியையும் பயன்படுத்திக் கொள்ளும் அதேசமயம் உள்ளூரில் உள்ள உபரித் தொழிலாளர்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பை உருவாக்குவதுடன், வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ளவர்களின் வறுமையைக் களைந்திடவும் வகை செய்யும். இவ்வாறு இது, ஒரே சமயத்தில் தேவையான, தொழில் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கமளிப்பதுடன், சீரான வருவாய்ப் பங்கீட்டிற்கும் வழி வகுக்கிறது.

சிறு தொழில்களில் செய்யப்பட்டுள்ள மூலதனத்தோடு ஒப்பிடுகையில், அதனால் ஏற்படுத்தப்படும் வேலை வாய்ப்புகள் அதிகம் என்பதனைக் கருத்தில் கொண்டு, சிறு தொழில்கள் தொடங்க முன் வருகின்ற தொழில் முனைவோர்களுக்குப் பயிற்சியளிப்பதற்கு அரசு தலையாய முன்னுரிமை அளித்துள்ளது. இந்த சுய உதவி அணுகுமுறைக்கு அரசு மிகப்பெரும் முக்கியத்துவம் அளிக்கிறது. இதன் விளைவாக, கிண்டியில்

[1998 ஏப்ரல் 20

முழு வசதிகளுடன் கூடிய தொழில் முனைவோர் வளர்ச்சி நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

சிறு நடுத்தர மற்றும் குடிசைத் தொழில்கள் மூலம் ஊரகத் தொழில் மையமாக்கத்தினை ஊக்குவிப்பதற்கு, பின்வருகின்ற அரசுத் துறைகள் குறிப்பிடத்தக்க பங்கினை ஆற்றுகின்றன.

* தொழில் வணிக இயக்ககம்
* தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்
* தமிழ்நாடு சிறு தொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ)
* தமிழ்நாடு சிறு தொழில் நிறுவனம் (டான்சி)
* தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ)

இவற்றின் பணிகள் கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

**2.0 தொழில் வணிக இயக்ககம்**

தொழில் வணிக இயக்ககம், பொதுவாக, தொழில்களின் மேம்பாட்டிற்காகவும், குறிப்பாக சிறு தொழில்களின் வளர்ச்சிக்காகவும், பல்வேறு திட்டங்களை வகுத்து, செயல்படுத்தி வரும் முதன்மைக்கள் அமைப்பாகத் திகழ்கிறது. சட்டப்படிக்கான, முறைப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்த இந்த இயக்ககம், அந்நிலையிலிருந்து மாறி, தற்போது வளர்ச்சி நோக்கிலான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அமைப்பாக செயல்படுகின்றது. மாநிலத்தில் தொழில் வளர்ச்சிக் குறித்துப் பெருமை கொள்ளத் தக்க வகையில், பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன, புதிய ஊக்க உதவிகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

அனைத்து நடைமுறைச் சிக்கல்களும் களையப்பட்டுள்ளன. மாவட்டத் தொழில் மையங்களின் பொது மேலாளர்களுக்கு பெரும்பாலான நடைமுறை அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. சிறு தொழில் நிறுவனம் அமைப்போருக்கு உறுதுணை அளிக்கும் வகையில், மாவட்டத் தொழில் மையங்களின் செயல்பாடுகள் மாற்றியமைக்கப்பட்டு, ஒவ்வொரு மாவட்டத் தொழில் மையத்திலும் வழிகாட்டும் சேவைப் பிரிவு 1996-97ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்தப்பட்டுள்ளது.



1998 ஏப்ரல் 20]

சிறுதொழில் தொடங்குவதற்குத் தேவையான சட்டப்படிக்கான அனுமதிகளை சிறுதொழில் நிலையங்கள் விரைந்து பெறுவதற்கு உதவியளிப்பதற்கு ஒருமுனை இசைவுக் குழு செயல்பட்டு வருகின்றது.

**2.1. செயல் மற்றும் நடவடிக்கைகள்**

மாநிலத்தின் துரிதமான தொழில் வளர்ச்சி மேம்பாட்டில், தொழில் வணிக இயக்ககம் மேலிருந்து கண்காணித்து வழி நடத்தும் பங்கைச் செவ்வனே ஆற்றி வருகின்றது. அன்றியும், இந்த இயக்ககம், சீரான தொழில் வளர்ச்சிக்கு வழிவகுக்கும் வகையில் பின்வருகின்ற பணிகளை அளிக்கிறது.

* சிறு தொழில்கள், குடிசை மற்றும் கைவினைத் தொழில்கள் மற்றும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றைப் பதிவு செய்வது மற்றும் மேம்படுத்துவது.

* தகவல் வங்கி, தகவல் மையம் மற்றும் மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் தொழில் நுட்பத் தகவல் பிரிவுகள் மூலமாகத் தொழில் முனைவோருக்கு வழிகாட்டுவது.

* தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டங்களை நடத்துவது

* இரசாயனம் உலோகம், உலோகப் பொருட்கள், மின் சாதனம், மின்னணுப் பொருட்கள் போன்ற பல்வேறு பொருட்களுக்கும் பரிசோதனை வசதிகளை அளிப்பது.

* வீட்டு உபயோக மின் சாதனங்களுக்குரிய தரக்கட்டுப்பாட்டுச் சட்டத்தினை நடைமுறைப்படுத்துவது.

* கருவி மற்றும் அச்சு வடிவமைப்பு போன்ற எளிய பொறியியல் தொழில்களின் பயிற்சி வசதிகள் அளிப்பது.

* தேவையான அடிப்படை வசதிகளுடன் கூடிய தொழிற்பேட்டைகளை அமைப்பது.

* மாநில மூலதன உதவி மின் உற்பத்திப் பொறி (ஜெனரேட்டர்) உதவித் தொகை, மின் கட்டணச் சலுகை, வட்டியில்லா விற்பனை வரி தள்ளிவைப்பு/தள்ளுபடி, நலிவுற்ற தொழில் நிலையங்களுக்கு தொடக்க உதவித் தொகை போன்ற பல்வேறு உதவித் தொகைகள் வழங்கி ஒப்புதல் அளித்தல் மற்றும் வழங்குதல்.

[1998 ஏப்ரல் 20

* மூலதனப் பொருட்கள், இயந்திரங்கள் மற்றும் கிடைத்ததற்கரிய மூலப் பொருட்களை இறக்குமதி செய்து கொள்ள உதவி செய்வது.

* பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம் என்ற மைய அரசின் திட்டத்தின் கீழ் படித்து வேலையற்ற இளைஞர்களுக்கான சுயவேலைவாய்ப்புத் திட்டத்தை செயலாக்குவது.

* கருத்தரங்குகள் மற்றும் தகவல் கூட்டங்கள் நடத்துவதன் மூலம் அரசின் பல்வேறு கொள்கைகள், திட்டங்கள், சலுகைகள் ஆகியவற்றை மக்களிடையே பரப்பி தொழில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது.

* ஏற்றுமதி மேம்பாடு

* தொழில் நுட்ப பொருளாதார பணிகள் மாதிரி மற்றும் கணக்கெடுப்புப் பணிகளை மேற்கொள்வது.

1998-99 ஆம் ஆண்டுக்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டங்கள் பிற்சேர்க்கை 1-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

**2.2 மாவட்டத் தொழில் மையங்கள்**

தமிழ்நாட்டில் சென்னை மாவட்டம் நீங்கலாக, 28 மாவட்டத் தொழில் மையங்கள், தொழில் முனைவோர்கள் சொந்தமாக சிறு தொழில்களை அமைப்பதற்கு அனைத்து உதவிகளையும் அளிப்பதற்காகச் செயல்படுகின்றன. சென்னை மாவட்டத்தின் பணிகள் மண்டல இணை இயக்குநரால் கவனிக்கப்படுகிறது. மாவட்டத் தொழில் மையங்கள், மூலதன மானியம், நிதி உதவி, மூலப் பொருள் ஒதுக்கீடு, மின்சார மானியம் போன்ற பல்வேறு ஊக்க / உதவித் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. மாவட்டத் தொழில் மையங்கள், பல்வேறு வழிகளிலிருந்த உள்ளூர் தொழில் நிறுவனங்களுக்குத் தேவையான தகவல் தரும் முக்கிய கருவியாகச் செயல்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நடைமுறைச் சிக்கல்களைக் குறைத்து, எளிய முறையில் சிறு தொழில் நிலையங்கள் அமைப்பதற்கு வழிவகுக்கும் பொருட்டு, ஒரு முனை இசைவுத் திட்டம் அரசினால் அமைக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி அமைப்புகள், நகர்ப்புறத் திட்டத்துறை, மக்கள் நல்வாழ்வுத் துறை, மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், தொழிற்சாலைத்துறை, மற்றும் இதர



1998 ஏப்ரல் 20]

துறைகளிடமிருந்து அனுமதிகள் பெறுவதற்கும் மின் இணைப்பு பெறுவதற்கும் ஒருமுனை இசைவுக் குழுவின் மூலம் தொழில் முனைவோர்களுக்கு உதவியளிக்கப்படுகிறது. 1997-98 ஆம் ஆண்டில் பெறப்பட்ட 1644 விண்ணப்பங்களின் (முந்தைய நிலுவை உட்பட) 1-4-97 முதல் 31-1-98 வரை நடத்தப்பட்ட 134 கூட்டங்களின் மூலம் 1493 விண்ணப்பங்களுக்கு இசைவு வழங்கப்பட்டுள்ளது. இதன் சில சிறப்பம்சங்கள் பின்வரும் பத்திகளில் அளிக்கப்பட்டுள்ளன.

**2.3 சிறு தொழில்கள், குடிசைத் தொழில்கள் மற்றும் கைவினைத் தொழில்கள் பதிவு**

1997-98 ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப்பட்ட இலக்குகளும், சாதனைகளும் (31-01-98 தேதியில்) வருமாறு.

இலக்குகளும் சாதனைகளும்

| நிரந்தரச் சிறுதொழில் பதிவு | | சிறுதொழில் தற்காலிகப் பதிவு | | கைவினைத் தொழில்கள் | | குடிசைத் தொழில் | |
|---|---|---|---|---|---|---|---|
| இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை | இலக்கு | சாதனை |
| 30000 | 25260 | 50000 | 40624 | 5000 | 5303 | 8000 | 8492 |

**2.4 தொழில் தொடர்பு மற்றும் தகவல் உதவி**

**(i) மின் மற்றும் மின்னணுத் தகவல் வங்கி**

இத்தகவல் வங்கி, மின்சாரம், மின்னணுத் தொழில்களைத் தொடங்க விரும்பும் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்குத் தேவையான முக்கியமான அடிப்படைத் தகவல்கள் மற்றும் வழி முறைகளை வழங்குகிறது. இந்த வங்கி தகவல் வசதிக்கென சுமார் 1400 புத்தகங்கள் மற்றும் 100 இந்திய மற்றும் அயல்நாட்டு சஞ்சிகைகளைக் கொண்டுள்ளது. இந்த மையம் வாங்குவோர் மற்றும் விற்போரைக் கண்டறிவதற்குரிய தகவல்களையும் அளிக்கிறது.

**ii. இரசாயனத் தொழில்களுக்கான தகவல் வங்கி**

இத்தகவல் வங்கி, தமிழ்நாட்டிலுள்ள இரசாயனத் தொழில்கள் பற்றிய புள்ளி விவரங்களைச் சேகரிப்பது, நாளது வரையில் பராமரிப்பது,

[1998 ஏப்ரல் 20

புள்ளி விவரங்கள் குறித்து ஆலோசனை வழங்குவது போன்றவற்றில் ஈடுபட்டுள்ளது. மேலும் தேர்வு செய்யப்பட்ட இரசாயனம் மற்றும் அது சார்ந்த தொழில்களின் திட்டத் தொகுப்புகள் தயாரிக்கப்பட்டு, நாளது வரையில் பராமரிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. சிறு தொழில் துறையில் இரசாயனம் மற்றும் சார்புத் தொழில்களை அமைப்பதற்கு ஆர்வமாக உள்ள தொழில் முனைவோர்களுக்குத் தேவையான தொழில் நுட்பத் தகவல் வசதிகளையும் அளிக்கிறது.

### iii தொழில் தொடர்பு பிரிவு

அரசுத் திட்டங்களை நிறைவேற்றவும் சிறு தொழில் நிலையங்களைப் பதிவு செய்வதற்காக மைய அரசின் நிதி விநியோகம் மற்றும் வழங்கல் விற்பனை தலைமை இயக்குநருடன் தொடர்பு கொண்டு ஒருங்கிணைந்து பணியாற்றவும் இப்பிரிவு துவங்கப்பட்டது. இப்பிரிவினால், சிறு தொழில் நிலையங்கள் அரசு ஒப்பந்தங்களில் கலந்து கொள்ளும் பொழுது காப்பு வைப்புத் தொகை மற்றும் பிணை வைப்புத் தொகை செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. மேலும், அரசுத் துறைகளில் தொடர்ச்சியான தேவைகளை அறிந்து, அதுபற்றி குறித்த காலத்துக்கு ஒரு முறை தகவல்கள் பெறவும் இதன் மூலம் இயலும்.

### iv. தொழிலியல் சேவைப் பிரிவு

மாநிலத்தில், நடுத்தர மற்றும் பெரு நகரத் தொழில்களில் புதிய தொழில்களை அமைப்பதற்கு தொழில் முனைவோர்களுக்கு பல்வேறு நிலைகளில் உதவிடும் பொருட்டு தொழிலியல் சேவைப் பிரிவினை தொழில் வணிக இயக்ககத்தில் அரசு அமைத்துள்ளது. இதன் மூலம் விரைந்து செயல்பாட்டிற்கு வழி வகுக்கிறது.

இத்தொழிலியல் சேவைப் பிரிவு பெரிய மற்றும் நடுத்தரத் தொழில்களுக்குரிய தொழில் உரிமங்களை வழங்குவதற்காகத் தொழில் முனைவோர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்கிறது. மேலும், மாநிலத்தில் 100 விழுக்காடு ஏற்றுமதி செய்யும் தொழில் நிலையங்கள் அமைப்பதற்கும் அனுமதி அளிக்கிறது.

### 2.5 தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்

படித்து வேலையற்ற மகளிர்/ஆடவர்கள் மற்றும் ஏனையோர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டத்தில் கலந்து கொண்டு ஊக்குவிக்கும்



1998 ஏப்ரல் 20]

வகையில் கிண்டியில் தொழில் முனைவோர் வளர்ச்சி நிலையம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

### மகளிர் தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்

மகளிர் தொழில் முனைவோர்கள், குறிப்பாக, முதல் தலைமுறை மகளிர் தொழில் முனைவோர்கள், நிதி நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெறுவதில், குறிப்பாக, தங்களது தொழில் நிலையங்களைத் துவக்குவதற்கு ஈட்டுத் தொகை செலுத்த மிகுந்த சிரமத்திற்குள்ளாகின்றனர். இத்தொழில் முனைவோர்களுக்கு உள்ள இடர்பாடுகளைக் களையும்பொருட்டு முதல் தலைமுறை மகளிர் தொழில் முனைவோர்களுக்கு, திட்ட மதிப்பில் 10 விழுக்காடு / அதிகபட்சமாக ரூ.50,000/- ஈட்டுத் தொகையை மானியமாக வழங்குவதற்கு அரசு உத்தேசித்துள்ளது. தொடக்கச் செலவு உதவித் தொகை, நிதி நிறுவனங்கள் மூலம் குறித்த காலக் கடன் வழங்கும் பொழுது அளிக்கப்படும்.

### 2.6 தொழிற்பேட்டைகள்

பின் தங்கிய மற்றும் மிகவும் பின் தங்கிய வட்டங்களில் (Taluks) தொழிற்பேட்டைகள் அமைப்பதன் மூலம் சிறு தொழில்களின் பரவலான வளர்ச்சிக்கு வழிவகுக்கப்படும். இது வேளாண்மை சாரா தொழிலாளர்கள் மற்றும் வேலையற்ற கிராமப்புற இளைஞர்கள் ஆகியோருக்கு, குறிப்பாக வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ளவர்களுக்கு அதிக அளவில் வேலை வாய்ப்பளிப்பதன் மூலம் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு உதவி புரியும்.

### (அ) மின் மற்றும் மின்னணுத் தொழிற்பேட்டைகள்

மின்னணுவியல் அதிக முன்னுரிமை வாய்ந்த பகுதியாகும். நுகர்வோர் மின்னணுப் பொருட்கள், மின் நுன் கருவிகள், கணினி மற்றும் கணினி நுட்ப சாதனங்கள், தொலைத் தொடர்பு ஆகிய பகுதிகளில் மின்னணுவியலின் வளவாய்ப்பினைக் கருத்தில் கொண்டு மின் மற்றும் மின்னணுத் தொழில்களுக்கென்றே அரசு கீழ் குறிப்பிட்ட எட்டு இடங்களில் அடிப்படை வசதிகளுடன் கூடிய தொழிற் பேட்டைகளை அமைத்துள்ளது.

1. டாக்டர் விக்ரம் சாராபாய் மின்னணுத் தொழிற்பேட்டை, சென்னை-41.

[1998 ஏப்ரல் 20

2. செப்பனிட்ட மனைத் தொழிற் பேட்டை, பெருங்குடி
3. மின் மற்றும் மின்னணுத் தொழிற் பேட்டை, சேலம்
4. மின்சாரத் தொழிற் பேட்டை, காக்கலூர்.
5. மின் மற்றும் மின்னணுத் தொழிற் பேட்டை, கோயம்புத்தூர்
6. மின் மற்றும் மின்னணுத் தொழிற் பேட்டை, மதுரை
7. மின் மற்றும் மின்னணுத் தொழிற் பேட்டை, ஓசூர்.
8. மின் மற்றும் மின்னணுத் தொழிற் பேட்டை, திருச்சி.

(ஆ) பீங்கான் தொழிற்பேட்டை, விருத்தாசலம்

இந்தியாவில் உள்ள பீங்கான் தொழிற்பேட்டைகளில் விருத்தாசலத்தில் உள்ளதும் ஒன்றாகும். இத்தொழிற்பேட்டையில் வாடகை அடிப்படையில் 64 தொழிற் கூடங்கள் உள்ளன. தண்ணீர், மின்சாரம் மற்றும் இதர அத்தியாவசிய வசதிகள் நியாயமான கட்டணத்தில் தொழிற் கூடங்களுக்கு அளிக்கப்படுகிறது.

(இ) கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள்

சொந்தமாகத் தொழில் நிலையங்களை அமைக்க முன் வருகின்ற தொழில் முனைவோர்களின் நலனுக்கென கூட்டுறவுத் துறையின் கீழ் தொழிற் பேட்டை அமைக்கப்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவுத் தொழிற் பேட்டைகள், சிறு தொழிலகங்களுக்கு நியாயமான விலையில் தவணைக் கொள்முதல் அடிப்படையில் செப்பனிட்ட மனைகள்/ தொழிற்கூடங்களை வழங்குகின்றன. மின்சாரம், தண்ணீர், வடிகால் சாலை வசதி, தெரு விளக்குகள், மருத்துவமனை, அஞ்சலகம், வங்கி வசதி போன்ற அத்தியாவசிய வசதிகளை, உறுப்பினர் நிலையங்களுக்கு இத்தொழிற்பேட்டைகள் செய்து தருகின்றன. அவர்களிடமிருந்து நியாயமான பராமரிப்புக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. பதிவு செய்யப்பட்ட கூட்டுறவுத் தொழிற்பேட்டைகள் 12-ல், 8 தற்பொழுது செயல்படுகின்றன. ஏனையவை செயலாக்கத்தில் பல்வேறு நிலைகளில் உள்ளன. இது வரை இத்தொழிற்பேட்டைகள் 584.76 ஏக்கர் நிலத்தைத் கையகப்படுத்தியுள்ளன. தொழில் முனைவோர்களுக்கு 592 செப்பனிட்ட மனைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. 156 தொழிற் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன.



1998 ஏப்ரல் 20]

**2.7 சலுகைகள் மற்றும் மானியங்கள்**

(i) சலுகைகள் மற்றும் மானியங்களின் அளவு

அரசு ஆணை எண் 41 தொழில்கள், நாள் 18-3-1996-ல் குறுந்தொழில்கள் மற்றும் ஊரகத் தொழில்களை ஊக்குவிக்கும் பொருட்டு, மாநிலத்தில் தொழிலில் பின் தங்கிய/ மிகவும் பின்தங்கிய பகுதிகளாக 287 வட்டாரங்களை அரசு அறிவித்துள்ளது. இப்பகுதிகளில் அமைந்துள்ள சிறு தொழில்கள் மாநில மூலதனச் சலுகை, குறைந்தழுத்த மின் கட்டணச் சலுகை, வட்டியில்லா விற்பனை வரி தள்ளி வைப்பு மற்றும் இதர சலுகைகள் பெறத் தகுதியுடையனவாகும். இச்சலுகைகளும், மானியங்களும், அரசு/அரசு நிறுவனங்களால் அமைக்கப்படும் தொழில் வளாகங்கள் மற்றும் தொழிற்பேட்டைகளுக்கும் கிடைக்கின்றன. பல்வேறு சலுகைகளும், மானியங்களும் கீழ்வருமாறு:

(அ) பின் தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் நிலையங்கள், அவற்றின் முதலீட்டில் 15 விழுக்காடு அதிக பட்சமாக ரூ.15 இலட்சம் மூலதன மானியம் பெறத் தகுதியுடையனவாகும்.

(ஆ) மிகவும் பின் தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் நிலையங்கள், அவற்றின் முதலீட்டில் 20 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.20 இலட்சம், மூலதன மானியம் பெறத் தகுதியுடையனவாகும்.

(இ) முக்கிய வளர்ச்சிப் பகுதிகளாக மின்னணு மற்றும் தோல் தொழில்களில் ஈடுபட்டுள்ள சிறு தொழில் நிலையங்கள், அவற்றின் முதலீட்டில் 20 விழுக்காடு, அதிக பட்சமாக ரூ.20 இலட்சம் சிறப்பு மூலதன மானியம் பெறத் தகுதியுடையனவாகும்.

(ஈ) உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள குறிப்பிட்ட ஒன்பது தொழில்களுக்கு தமிழ்நாட்டில் எங்கு அமைத்தாலும், அவற்றின் மொத்த மூலதனத்தில் 20 விழுக்காடு, அதிகபட்சமாக ரூ.15 இலட்சம் அளிக்கப்படுகிறது.

(உ) மிகவும் பின் தங்கிய/பின் தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் நிலையங்களுக்கு, அவற்றின் மொத்தப் பணியாளர்களில் குறைந்தது 30 விழுக்காடு மகளிர் பணியமர்த்தப்பட்டிருப்பின் அதிகபட்சமாக ரூ.5. இலட்சம் கூடுதல் மூலதன மானியம் அளிக்கப்படுகிறது.

[1998 ஏப்ரல் 20

(ஊ) மாசு சுத்திகரிப்பு இயந்திரங்களை அமைந்துள்ள சிறு தொழில் நிலையங்கள், அவற்றின் முதலீட்டில் 10 விழுக்காடு, அதிக பட்சமாக ரூ.2 இலட்சம் மானியம் பெறத் தகுதியுடையனவாகும்.

(எ) சிறுதொழில் நிலையங்கள், சுய மின் தேவைக்கு ஜெனரேட்டர் பொருத்தியிருப்பின், அதன் விலையில் 15 விழுக்காடு அதிகபட்சமாக ரூ.5 இலட்சம் மானியமாக அளிக்கப்படுகிறது.

(ஏ) சிறுதொழில் நிலையங்கள், அவற்றின் அமைவிடங்களைப் பொருத்து, குறைந்தழுத்த மின் இணைப்புகளுக்குப் பயன்படுத்திய மின் கட்டணத்தில் முதல் மூன்று ஆண்டுகளுக்கு முறையே 40% 30% 20% என்ற வீதத்தில் மின் கட்டணச் சலுகை அளிக்கப்படுகிறது.

(ஐ) பின்தங்கிய வட்டாரங்களில் அமைந்துள்ள சிறு தொழில் நிலையங்களுக்கு, நிலையான சொத்துக்களின் மதிப்பில் 100 விழுக்காடு விற்பனை வரித் தள்ளுபடி 5 ஆண்டுகளுக்கும் அல்லது பின் தங்கிய பகுதிகளில் அமைந்துள்ள தொழில்களுக்கு 9 ஆண்டு விற்பனை வரித் தள்ளிவைப்பும் அளிக்கப்படுகிறது. ஏனைய பகுதிகளில் அமைந்துள்ள தொழில்களுக்கு நிலையான சொத்துக்களில் 60 விழுக்காடு, 5 ஆண்டுகளுக்கு விற்பனை தள்ளிவைப்பு அளிக்கப்படும். இந்த மானியத் திட்டங்கள், அரசினால் நிதி வழங்கப்பட்ட பிறகு செயல்படுகிறது. பின் வருகின்ற அட்டவணை பல்வேறு மானியங்களில் ஏற்பட்டுள்ள சாதனைகளை விளக்குகிறது.

பல்வேறு மானியத் தலைப்புகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம்

| திட்டத்தின் பெயர் | ஒதுக்கப்பட்ட தொகை (ரூ. இலட்சத்தில்) | வழங்கப் பட்டவை (ரூ. இலட்சத்தில்) | பயனடைந்த சிறுதொழில்கள் (எண்ணிக்கை) |
|---|---|---|---|
| மூலதன முதலீட்டு மானியம் | 2303.74 | 2303.74 | 1208 |
| குறைந்தழுத்த மின் கட்டண மானியம் | 750.00 | 750.00 | 3573 |
| ஜெனரேட்டர் மானியம் | 70.00 | 70.00 | 156 |



1998 ஏப்ரல் 20]

(ii) மானியம் மற்றும் விற்பனை வரிச் சலுகைகள்

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகமானது அக்கழகத்தால் உதவியளிக்கப்படும் தொழில் நிலையங்களுக்கு மூலதன மானியம் மற்றும் தகுதிச் சான்றிதழ் வழங்குவதன் மூலம் வட்டியில்லா விற்பனை வரித் தள்ளுபடி/தள்ளுபடி திட்டத்தையும் ஒப்புதலளிக்கிறது.

(iii) தொழில்களுக்குப் பரிசுகள்

தமிழ்நாடு அரசு ஒவ்வொரு ஆண்டும் நன்கு செயல்படுகின்ற சிறு தொழில்கள், நடுத்தர மற்றும் பெருந்தொழில்களுக்கு பரிசுகள் வழங்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

அ. சிறு தொழில்களுக்கு மாநில மற்றும் மாவட்ட அளவிலான பரிசுகள்.

சான்றிதழுடன் கூடிய ரூ. 10,000 ரொக்கப் பரிசும் ரூ.3,000 மதிப்புள்ள நினைவுப் பரிசும் மாநில அளவிலான பரிசுதாரர்களுக்கு அளிக்கப்படும். மாவட்ட அளவிலான பரிசுதாரர்களுக்கு நற்சான்றிதழுடன் கூடிய ரூ. 3,000/- மதிப்புள்ள நினைவுப் பரிசு வழங்கப்படும்.

ஆ. மகளிர் தொழில் முனைவோருக்கு மாநில அளவிலான பரிசு

நற்சான்றிதழ் மற்றும் ரூ.3,000/- மதிப்புள்ள நினைவுப் பரிசுடன், முதலாவது பரிசுக்கு ரூ.25,000/-, இரண்டாவது பரிசுக்கு ரூ.15,000/-, மூன்றாவது பரிசுக்கு ரூ.10,000/- ஆகிய ரொக்கப் பரிசும் வழங்கப்படும்.

இ. தரமிக்க பொருள்களுக்குரிய பரிசுகள்

சிறு தொழில்கள், நடுத்தர மற்றும் பெரிய தொழில்களில் தரமிக்க பொருட்களை வெற்றிகரமாகத் தயாரிக்கும் தொழிலதிபர்களுக்கு, நற்சான்றிதழ் மற்றும் ரூ.3,000/- மதிப்புள்ள நினைவுப் பரிசுடன் கூடிய முதல் பரிசுக்கு ரூ.25,000/- ரொக்கமும், இரண்டாவது பரிசுக்கு ரூ.15,000/ ரொக்கமும், மூன்றாவது பரிசுக்கு ரூ.10,000/- ரொக்கமும் அளிக்கப்படும்.

[1998 ஏப்ரல் 20

ஈ. பின்வருகின்ற மூன்று வகைகளின் கீழுள்ள தேர்ந்த தொழில் முனைவோர்களுக்குரிய ஏற்றுமதி பரிசு

1. 100 விழுக்காடு ஏற்றுமதியில் ஈடுபட்டுள்ள தொழில்கள்

2. புதிய உற்பத்திப் பொருட்களைப் புதிய சந்தைகளில் விற்பனை செய்யும் ஏற்றுமதியில் கணிசமான முன்னேற்றம் காணும் தொழில் நிலையங்கள்.

முந்தைய இரண்டாண்டுகளில் ஏற்றுமதியைத் தொடங்கியிருக்கும் தொழில் நிலையங்கள், சிறு, நடுத்தர மற்றும் பெரிய தொழில்களின் கீழ் தேர்வு செய்யப்பட்ட ஏற்றுமதியாளர்களுக்கு நற்சான்றிதழுடன் கூடிய ரூ.3,000/- மதிப்புள்ள நினைவுப் பரிசு வழங்கப்படும்.

**2.8 நிதி உதவி**

*தமிழ்நாடு தொழிற் கூட்டுறவு வங்கி*

1961 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இந்த (தாய்கோ) வங்கி, ரூ.413.89 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் கூடிய 448 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ளது. இதில் தமிழக அரசின் பங்குத் தொகை ரூ.268.30 இலட்சமாகும். மாநில அரசு ரூ.500 இலட்சம் நிலைவைப்புத் தொகையினைத் திரும்பிச் செலுத்துவதற்கு உத்திரவாதம் அளித்துள்ளது. அரசு வழங்கியுள்ள இத்தகைய தாராள உதவியால் இவ்வங்கி பல்வேறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு, 31-1-98 வரை ரூ. 1298.43 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

இவ்வங்கி தேயிலை, தீப்பெட்டி, கயிறு, தோல், உலோகப் பொருள், கைவினைத் தொழில்கள், போக்குவரத்து வாகனங்கள் முதலிய பல்வேறு வகைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், குறுந்தொழில்கள் மற்றும் சிறு தொழில்களுக்கும் நிதியுதவி அளிக்கிறது.

இவ்வங்கியை, சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி திருச்சிராப்பள்ளி, சிவகங்கை, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் நீலகிரி ஆகிய 8 மாவட்டங்களிலுள்ள தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் நீண்ட காலக் கடன்களுக்கு தேசிய வேளாண்மை, ஊரக வளர்ச்சி வங்கியில் மறு நிதியுதவி பெறுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி அக்டோபர்



1998 ஏப்ரல் 20]

1987-ல் அங்கீகரித்துள்ளது. தற்பொழுது இந்த வங்கி, தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் குறைந்த வட்டி வீதத்தில் நிதியுதவி அளிக்கும் நிலையில் இயங்கி வருகிறது.

இதன் கிளைகள் அந்தந்தப் பகுதிகளிலுள்ள உறுப்பினர்களுக்கும் சங்கங்களுக்கும் சிறுதொழில் மற்றும் குறுந்தொழில்களுக்கும் கடனுதவி அளித்து வருகிறது.

**2.9 தொழி நுட்ப உதவி**

**I. கணினி உதவியுடன் வடிவமைப்பு மற்றும் உலோகப் பொருள் உற்பத்தி மையம் (CAD - CAM) சென்னை.**

இந்த மையம், கிண்டி தொழில் நுட்பப் பயிற்சி வளாகத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 19-10-97 அன்று தொடங்கப்பட்டது. இதன் குறிக்கோள்கள் பின்வருமாறு:

அ. ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிப் பணி நடத்துவது, ஊக்குவிப்பு ஆலோசனை, உதவி வழங்குவது, சிறு மற்றும் நடுத்தர உலோகப் பொருள் வடிவமைப்புத் தொழில்களுக்குப் பயிற்சி வசதிகள் அளித்து ஊக்குவிப்பது.

ஆ. கணினி உதவி வடிவமைப்பு மற்றும் உற்பத்தி உதவியுடன் கருவிகள் தயாரிப்பதற்குரிய வடிவமைப்பு, பொது வசதிகளை அளிப்பது.

இ. கணினி உதவி வடிவமைப்பு/உலோகப் பொருள் தயாரிப்பு உதவியுடன் ஏற்கெனவே உள்ள தொழில்களுக்கு தொழில்நுட்ப மேம்பாடு மற்றும் ஆலோசனைப் பணிகள் வழங்குவது.

ஈ. கருவிப் பொறியியல் மற்றும் கணினி உதவியுடன் வடிவமைப்பு மற்றும் கணினி உதவியுடன் கருவிகள் அமைப்பதில் குறுகிய காலப் பயிற்சிகள் நடத்துவது.

இம்மையம் வெப்பம் மற்றும் குளிர் உலோக உலைத் தொழில்கள் அச்சு வார்ப்படத் தொழில்கள் உலோக வடிவமைப்புத் தொழில்கள் மற்றும் இதர சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களுக்குப் பயனளிக்கும்.

இத்திட்டத்தின் மொத்த மதிப்பு ரூ.48.00 கோடி ஆகும். ரூ.13.67 கோடி மதிப்புள்ள நிலம் மற்றும் கட்டடம் மாநில அரசின் பங்காகும்.

[1998 ஏப்ரல் 20

**II. பம்புகள் மற்றும் மோட்டார் இயந்திரங்களுக்குரிய செயல்முறை மற்றும் பொருள் உற்பத்தி வளர்ச்சி நிலையம், கோயம்புத்தூர்.**

கோயம்புத்தூரில் ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்துடன் இணைந்து தொழில்நுட்பவியலில் மிக உயர்ந்த வடிவமைப்பு மேம்படுத்தப்பட்ட தரம் ஆகியவற்றை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பம்புகள் மோட்டார் இயந்திரங்களுக்குரிய செயல்முறை மற்றும் பொருள் உற்பத்தி மையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பீட்டுத் தொகை ரூ.13.84 கோடியாகும். ரூ. 6.17 கோடிக்கு ஐக்கிய நாட்டு வளர்ச்சித் திட்டத்தின் உதவி கேட்கப்பட்டுள்ளது. இந்திய அரசின் பங்கு ரூ. 4.97 கோடியாகும். தமிழ்நாடு அரசின் பங்கு ரூ.1.20 கோடியாகும். இத்தொகை சிறு தொழில் பரிசோதனை மற்றும் ஆராய்ச்சி மையத்திடம் (SITARC) ஒப்படைக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு ஏற்கெனவே தேவையான நிலம் மற்றும் கட்டடத்தை வழங்கியுள்ளது.

**III.** சிறு கருவிகள் பட்டறை மற்றும் பயிற்சி மையம்

இந்திய அரசு உதவியுடன் சிறுதொழில் முனைவோர்களுக்குத் தேவையான நவீன வடிவமைப்புடன்கூடிய கருவிகள் ஆகியவற்றை வழங்கும் பொருட்டு கோயம்புத்தூரில் சிறு கருவிகள் பட்டறை மற்றும் பயிற்சி மையம் அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மதிப்பு ரூ.810.00 இலட்சமாகும். இதில் இந்திய அரசின் பங்குத் தொகை தொடராச் செலவினமான ரூ.760.00 இலட்சமாகும். எஞ்சியவை மாநில அரசின் பங்காகும்.

**2.10 மூலப்பொருள் கொள்முதல்.**

*பீங்கான் தொழில் சேவை மையம், விருத்தாசலம்*

விருத்தாசலத்தில் பீங்கான் தொழில் சேவை மையம் செயல்பட்டு வருகிறது. விருத்தாசலம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள மட்பாண்டத் தொழில் நிலையங்களுக்கு மட்பாண்டப் பொருள் உருவாக்குவதற்குரிய மூலப் பொருட்கள் மற்றும் வெப்பப்படுத்தம் வசதிகளை அளிக்கிறது. இந்த மையம் மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவைப்படும் உருவகப் பொருட்களைத் (Body slips) தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. விருத்தாச்சலத்தைச் சுற்றியுள்ள 100 சிறிய மட்பாண்டப்



1998 ஏப்ரல் 20]

பொருட்கள் உற்பத்தி நிலையங்களுக்குத் தேவைப்படுகின்ற உருவகப் பொருட்கள் மாதமொன்றுக்கு சராசரியாக 120 மெட்ரிக் டன் உற்பத்தி செய்கிறது. சுரங்கச் சூளை (Tunnelkiln) மூலமாக வெப்பப்படுத்தும் வசதிகளை நாள் முழுவதும் இம்மையம் அளித்து வருகிறது. சுரங்கச் சூளையினை நவீனப்படுத்தி உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறைந்த மின்னழுத்த இன்சுலேட்டர்கள், கலை வண்ணப் பொருட்கள், சுகாதாரப் பணிகளுக்குரிய பீங்கான் பொருட்கள் முதலியன தயாரிக்கப்படுகின்றன.

**2.11. தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஊரக மற்றும் சிறு தொழில்களின் முன்னேற்றம்**

(I) *சேலம் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம்*

'சாகோ சர்வ்' என்றழைக்கப்படுகின்ற சேலம் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவுச் சங்கம் சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்கள் விற்பனையைக் கவனிக்கிறது. இச்சங்கத்தின் உறுப்பினர்கள் மரவள்ளிக் கிழங்கிலிருந்து சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களைத் தயாரிக்கின்றனர்.

சவ்வரிசி மற்றும் மாவுத் தொழில்கள் கடந்த 40 ஆண்டுகளாக இருந்த போதிலும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் மற்றும் நுகர்வோரின் தேவைகளைப் பாதுகாத்திடக்கூடிய அமைப்பு ரீதியிலான விற்பனை முறை ஒன்று இல்லாதிருந்தது. சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் ஆகிய இரண்டுக்கும் நுகர்வோர் மையங்கள் தமிழ்நாட்டிற்கு வெளியே இருந்ததால் இப்பொருட்களைச் சிறிய அளவில் உற்பத்தி செய்பவர்களுக்கு தாங்களே நேரடியாக விற்பனை செய்ய முடியாத சிரமம் ஏற்பட்டது. அதுபோன்ற நேரடி விற்பனைக்குப் பரவலான விற்பனை நிலையங்கள் நிலவுவதில் இடர்பாடு போதிய நிதி வசதியின்மை, நேரடித் தொடர்புகொள்வதற்கு இயலாதவகையில் மொழித் தடை, அலுவலக வசதியின்மை ஆகியவை காரணங்களாகும். இது சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள்களின் விற்பனையில் முற்றாதிக்கம் செலுத்தி இடைத் தரகர்களின் வளர்ச்சிக்கு ஏதுவாகிவிட்டது.

இச்சங்கம், ரூ.7.62 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன் 168 உறுப்பினர்களைக் கொண்டு தொடங்கப்பட்டது. தற்பொழுது

[1998 ஏப்ரல் 20

ரூ.4.49 கோடி செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன்கூடிய 815 உறுப்பினர்கள் உள்ளனர். இச்சங்கம் அமைக்கப்பட்ட பிறகு சவ்வரிசி மற்றும் மரவள்ளிக் கிழங்கு ஆகியவற்றின் விலை குறிப்பிடத்தக்க அளவிற்கு அதிகரித்துள்ளது. விவசாயிகளும் தயாரிப்பாளர்களும் இப்பொழுது நியாயமான விலையைப் பெறுகின்றனர். மாநிலத்திலுள்ள சவ்வரிசி மற்றும் மாவுப் பொருள் தயாரிப்பு நிலையங்கள் சுமார் 50,000 பேருக்கு நேரடியாக வேலைவாய்ப்பளிக்கின்றன.

தமிழ்நாடு அரசு மற்றவர்களுக்கு விதிக்கும் 5 விழுக்காடு வரிக்குப் பதிலாக, சகோ சர்வ் மூலம் விற்பனை செய்யும் சவ்வரிசி மற்றும் மரவள்ளிக் கிழங்கு மாவுக்கு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சலுகை வீதமான 2 விழுக்காடு வசூலிக்கிறது. மேலும் கூடுதல் விற்பனை வரிச் சுமையைச் சமாளிக்கும் பொருட்டு மானியம் அளிக்கிறது.

**(II)** பாலித்தின் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

நலிந்த பிரிவைச் சார்ந்த மகளிருக்கு அவர்களது கணவர்/பெற்றோர் குடும்ப வருவாயை அதிகரித்திடவும் நல்ல ஊதியத்தோடுகூடிய வேலைவாய்ப்பளித்திடும் நோக்குடன் பாலிதீன் தொழிலாளர் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் அமைக்கப்பட்டன.

தற்பொழுது பாலிதீன் தயாரிக்கும் 16 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இச்சங்கங்கள் பல்வேறு அரசுத் துறைகள் கூட்டுறவு சிறப்பங்காடிகள் வேளாண் தொழில் வளர்ச்சி நிறுவனம் ஆவின் மற்றும் தனியார் வியாபாரிகளின் தேவைகளை நிறைவு செய்கின்றன.

விரிவாக்கத் திட்டம் ஒன்று எடுத்துக்கொள்ளப்பட்டு படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

பாலிதீன் சங்கங்களுக்கென தமிழ்நாடு பிளாஸ்டிக் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் இணையம் என்ற தலையாய அமைப்பு சென்னையில் உள்ளது. இந்த இணையம், கொள்முதல், பொருள் சேமிப்பு, மூலப்பொருள் பகிர்வு விற்பனை மற்றும் தொழில்நுட்ப உதவி முதலிய அடிப்படை வசதிகளை அளிக்கிறது. இந்த இணையத்தின்



1998 ஏப்ரல் 20]

உறுப்பினர்கள் சங்கங்களில் கிடைக்கும் கழிவு பாலிதீன் பொருட்களை மீண்டும் பயன்படுத்திட மறு பதப்படுத்தும் பிரிவு ஒன்றை பெற்றுள்ளது. இந்த மறு பதப்படுத்தும் நிலையம் மைய அரசின் சிறப்பு நிதி உதவித் திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்டது.

**(III)** குடிசைத் தீப்பெட்டித் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழ்நாட்டில் கையினால் தயாரிக்கப்படும் தீப்பெட்டிகளின் உற்பத்தி நாட்டின் மொத்தத் தேவையில் 85 விழுக்காடாகும். ஊரகப் பகுதிகளில் பொருளாதாரத்தில் நலிந்துள்ள பிரிவினர்களுக்கு குறிப்பாக திருநெல்வேலி, விருதுநகர், இராமநாதபுரம் மற்றும் தூத்துக்குடி முதலிய வறட்சி மாவட்டங்களில் வறுமைக் கோட்டிற்கு கீழே உள்ள மகளிருக்கு வேலையளிப்பதில் இத்துறை மக்கத்தான பங்கு வகிக்கிறது.

தீப்பெட்டி சேவை சங்கங்கள் தரமுள்ள மூலப் பொருட்களை மொத்தமாகக் கொள்முதல் செய்து தங்களது உறுப்பினர் நிலையங்களுக்கு வழங்குகின்றன. இச்சங்கங்கள் உறுப்பினர் நிலையங்களால் தயாரிக்கப்படும் தரமான தீப்பெட்டிகளை இந்தியாவின் இதர பகுதிகளில் விற்பனை செய்வதற்கும் உதவியளிக்கிறது. 31-01-98-ல் 14 தீப்பெட்டி தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இவை 836 உறுப்பினர் நிலையங்களுக்குச் சேவை புரிகின்றன.

இது தவிர, பாரதிதாசன் குளோரேட் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவுச் சங்கம் ஒன்று 29-1-96 அன்று தொடங்கப்பட்டது. இச்சங்கம், தீப்பெட்டிச் சேவைச் சங்கங்களுக்கு முக்கிய மூலப் பொருளான பொட்டாசியம் குளோரேட்டை வழங்கிறது.

**(IV)** செங்கல் தொழிற் கூட்டுறவுச் சங்கம்

குறிப்பாக ஆதிதிராவிடர்களுக்கு இலாபகரமான மற்றும் தொடர்ந்து வேலைவாய்ப்பினை அளிக்கும் நோக்குடன் 17 செங்கல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இச்செங்கல் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தமிழ்நாடு ஆதிதிராவிடர் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மைய அரசின் சிறப்பு உதவித் திட்டத்தின்கீழ்

[1998 ஏப்ரல் 20

மானியமும் தொடக்க காலக் கடன் தொகையும் அளிக்கிறது. 31-1-98 வரை ஒப்புதலளிக்கப்பட்டு விடுவிக்கப்பட்ட தொகை பின்வருமாறு:

**சிறப்பு உதவித் திட்டம்**

| வகை | ஒப்புதல் அளிக்கப்பட்டது (ரூபாய் இலட்சத்தில்) | விடுவிக்கப்பட்டது (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| மானியம் | 102.77 | 76.30 |
| தொடக்க கால உதவித் தொகை | 61.62 | 13.86 |

### (V) கயிறு தயாரிப்புத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

மாநிலத்தில் கூட்டுறவுத் துறையிலும் தனியார் துறையிலும் 85,000 டன் கொள்ளளவு கொண்ட 660 கயிறு உற்பத்தி நிலையங்கள் உள்ளன. உற்பத்தி செய்யப்படுகின்ற பெரும்பாலான தென்னை நார் கயிறு தொழில் நிலையங்களில் கயிறு நூலிழை, முறுக்குக் கயிறு, தரை விரிப்பான், இரப்பர் கலந்த கயிறு மெத்தைகளுக்கு தலையணை, இருக்கைகள், கம்பளங்கள் முதலியவை தயாரிப்பதற்கு மூலப் பொருள்களாகப் பயன்படுத்தப்படுகின்றன.

மாநிலத்தில் ரூ.350.88 இலட்சம் செலுத்தப்பட்ட பங்கு மூலதனத்துடன்கூடிய 11,482 உறுப்பினர்களைக் கொண்ட 75 கயிறு தொழிற் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன.

சென்னையிலுள்ள தமிழ்நாடு மாநிலக் கயிறு தொழிற் கூட்டுறவுச் சங்கங்களின் உறுப்பினர்களுக்கு விற்பனை வசதியினை அளிக்கிறது. இச்சங்கங்களை அடுத்த மூன்றாண்டுகளில் நவீனப்படுத்தி, வலுப்படுத்தும் பொருட்டும், செயல்படுத்தும் பொருட்டும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த கயிறு வளர்ச்சித் திட்டம் வகுக்கப்படுகிறது.

ஒருங்கிணைந்த கயிறுத் தொழிற் வளர்ச்சித் திட்டத்தின் முதல் கட்டம் செயல்படுத்துகின்றபொழுது கயிறு சங்கங்கள் மாற்றியமைக்கப்படும்.



1998 ஏப்ரல் 20]

### (VI) தேயிலைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

நீலகிரி மாவட்டத்தில் சுமார் 40,000 ஏக்கர் பயிரிடும் நிலப்பரப்பைக் கொண்ட சுமார் 30,000 சிறு தேயிலை பயிரிடுவோர் உள்ளனர். 31,700 ஏக்கர் நிலப்பரப்பில் தேயிலை உற்பத்தி செய்கின்ற 19054 சிறுதேயிலை பயிரிடுவோருடன்கூடிய 16 கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலைகள் உள்ளன. இவற்றின் மொத்த உற்பத்தி 155 இலட்சம் கிலோ கிராமுக்கு அதிகமாகும்.

'இன்ட்கோ' தேயிலைத் தொழிற்சாலைகள் பின்வருகின்ற குறிக்கோள்களுடன் அமைக்கப்பட்டன.

1. சிறிய அளவில் தேயிலை பயிரிடுவோருக்குப் பறித்த தேயிலைக்கு நல்ல விலை பெற்றுத் தருவது.

2. தேவையான இடுபொருள்களுடன் தேயிலைத் தோட்டங்களின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவது.

3. தேயிலை உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டு நவீன முறைகளில் பயிற்சி அளிப்பது.

ரூ.238.00 இலட்சம் மதிப்பில் எப நாட்டில் அமைக்கப்பட்ட எப நாடு கூட்டுறவுத் தேயிலைத் தொழிற்சாலை 12-12-97-ல் உற்பத்தியைத் தொடங்கியுள்ளது. பிந்தர்காட்டிலுள்ள மற்றொரு தேயிலைத் தொழிற்சாலை விரைவில் உற்பத்தியைத் தொடங்கும்.

### (VII) ஏனைய துறைகளிலுள்ள தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

சென்னையிலுள்ள தமிழ்நாடு கைவினைத் தொழில் கூட்டுறவு விற்பனை இணையம் என்ற முதன்மை அமைப்பு தன்னுடன் இணைந்துள்ள 20 கைவினைத் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உதவியளிக்கிறது. தமிழ்நாட்டில் உற்பத்தியாகின்ற கைவினைப் பொருட்களின் விற்பனையை அதிகரிக்கும் பொருட்டு இந்தியா முழுவதும் முக்கியமான இடங்களில் இந்த இணையம் பொருட்காட்சிகளை நடத்துகிறது. இந்த இணையம் மேற்கொண்ட விடா முயற்சிகளின் விளைவாக கைவினைப் பொருள்களின் உற்பத்தியும், விற்பனையும் மிகவும் அதிகரித்துள்ளது.

[1998 ஏப்ரல் 20

கூட்டுறவுத் துறையின் கீழுள்ள 1000 கைவினைஞர்கள் தங்களது உற்பத்திப் பொருட்களை விற்பனை நிலையங்கள் மூலம் விற்பனை செய்ததன் விளைவாக நல்ல பலனைப் பெற்றுள்ளனர்.

## 2.12 தொழில்நுட்ப நிலையங்கள்

### I. அச்சுக் கருவிகள், பொறியியல் கருவிகள் பயிற்சி நிலையம், திண்டுக்கல்

இந்த நிலையம் கருவிப் பொறியியலில் மூன்றாண்டு தகுதிப் பட்டயப் படிப்பினை நடத்துகிறது. இந்தப் பாடமுறை சென்னையிலுள்ள தொழில்நுட்ப இயக்குநராலும் புது டெல்லியிலுள்ள அனைத்திந்திய தொழில்நுட்பக் குழுமத்தாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. பட்டயத் தகுதிப் பாடமுறை நடத்துவதைத் தவிர கருவிகள் பழுதுபார்ப்பு மற்றும் கருவிகள் தயாரிப்பது போன்ற பணிகளையும் எடுத்துக் கொள்கிறது.

ஒவ்வொரு ஆண்டும் கருவிப் பொறியியல் தகுதிப் பட்டய வகுப்பில் 30 பேர் இந்நிலையத்திலிருந்து பயிற்சி பெற்றுச் செல்கின்றனர். ஒவ்வொரு ஆண்டிலும் பயிற்சி முடிக்கப்பட்டவுடன் தேர்வு முடிவுகளுக்குக் காத்திராமல் தமிழ்நாடு மற்றும் இதர மாநிலங்களில் வேலையளிப்பதற்கு வளாக நேர்முகப் போட்டிகள் மூலம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர். கருவிப் பொறியியலில் பயிற்சி பெற்றவர்களுக்கு நல்ல தேவை உள்ளது.

### (II) அரசு தொழில் நுட்பப்பயிற்சி நிலையம், கிண்டி

சிறுதொழில் நிலையங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்பத் திறனை அளிக்கும் நோக்குடன் இந்நிலையம் ஏற்படுத்தப்பட்டது. சிறப்புப் பணிகளில் வேலையுடன் கூடிய பட்டயத் தகுதிப் பாடமுறைகள் மற்றும் பட்டய மேற்படிப்பு ஆகியவற்றில் தென்னிந்தியாவிலேயே பயிற்சியளிக்கின்ற ஒரே நிலையம் இதுதான்.

இந்தப் பயிற்சி மையம் அச்சு மற்றும் வடிவமைப்பில் பட்டயத் தகுதிப் பயிற்சியினை அளிக்கிறது.

இந்த நிலையத்தினால் அளிக்கப்படும் பயிற்சிகளுக்கும் கைவினைஞர்களுக்கும் தொழில் வணிக இயக்குநர் அவர்களால்



1998 ஏப்ரல் 20]

சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இவர்கள் பல்வேறு சிறு தொழில் நிலையங்களில் வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படுகின்றனர்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியலில் தற்காலத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை ஒட்டி நடைபோடும் வகையில் கருவிகள் வடிவமைப்பு சான்றிதழ் பாடமுறை அச்சு மற்றும் கருவிகள் வடிவமைப்பு பட்டய மேற்படிப்பாக உயர்த்தப்பட்டுள்ளது. இயந்திரப் பொறியியலில் பட்டம்/ தகுதிப் பட்டயம் பெற்றவர்கள் கருவிப் பொறியியலில் தகுதிப் பட்டயம் பெற்றவர்கள் இந்தப் பட்டய மேற்படிப்புக்கு நுழைவு பெறத் தகுதி பெற்றவர்களாவர்.

அச்சு மற்றும் கருவிகள் தயாரிப்புச் சான்றிதழ்ப் பாடமுறையானது கருவிப் பொறியியல் தகுதிப் பட்டயமாக உயர்த்தப்பட்டது. குளிர் பதனவியில் சான்றிதழ்ப் பாடமுறையும் பட்டயப் பாடமுறையாக உயர்த்தப்பட்டது. மேலும் இந்த நிலையம் மின்னணுவியல் பகுதியில் புதிய பட்டய பாடமுறையைத் தொடங்கியுள்ளது. பட்டயச் சான்றிதழ்கள் சென்னை கிண்டியிலுள்ள மாநிலத் தொழில்நுட்பவியல் குழுமத்தினால் வழங்கப்படுகின்றன.

பயிற்சியின்போது சிறப்புத் திறமை பெறுவதால் இந்த நிலையத்தில் தேர்ச்சி பெற்றவர்கள் வேலை பெறுவதில் எவ்வித இடையூறும் இல்லை. ஒவ்வொரு ஆண்டும் முன்னணியில் உள்ள தொழிலதிபர்களால் இந்நிலையத்தில் வளாக நேர்முகப் போட்டியின் மூலம் மாணவர்கள் வேலைக்குத் தெரிவு செய்யப்படுகிறார்கள்.

## 2.13 சிறப்பு வேலைவாய்ப்புப் பெருக்குத் திட்டங்கள்

### பிரதமரின் வேலைவாய்ப்புத் திட்டம்

படித்த வேலையற்ற இளைஞர்களுக்கென "பிரதமரின் வேலை வாய்ப்புத் திட்டம்" என்றழைக்கப்படும் ஒரு திட்டத்தை இந்திய அரசு 2-10-1993 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. (இத்திட்டம் 2-10-1993-ல் அமலுக்கு வந்துள்ளது) ஊரகத் தொழில் மயமாக்குவது மற்றும் படித்து வேலையற்ற இளைஞர்களுக்கு வருவாய் அளிப்பது ஆகியவற்றை எய்திடுவதற்கு தொழில்கள் வேலை மற்றும் வர்த்தகத் துறையில் சுய வேலைவாய்ப்பை உருவாக்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதற்கு குறிப்பாக தொழில் முனைவோர்கள் பயிற்சி மற்றும் திட்டச் செயலுருக்கள் (Project

[1998 ஏப்ரல் 20

Profiles) தயாரிப்பதற்கு அரசு சாரா அமைப்புகளின் உதவியும் கோரப்படுகிறது.

இத்திட்டத்தில் படித்து வேலையற்ற 18 முதல் 35 வயதுக்குட்பட்ட 10-ஆம் வகுப்பு தேறியவர்கள் அல்லது தவறியவர்கள் அல்லது ஆறு மாதத் தொழில் பயிற்சி படித்தவர்கள் பயன் பெறத் தகுதியுடையவர்கள் ஆவார்கள். குடும்ப ஆண்டு வருமானம் ரூ.24,000-க்கும் அதிகமாக இருக்கலாகாது. குறைந்தது மூன்றாண்டுகள் ஒரே இடத்தில் குடியிருப்பவர்களாக இருத்தல் வேண்டும். இத்திட்டத்தில் ஆதி திராவிடர்/பழங்குடியினருக்கு 22.5 விழுக்காடும் இதர பின்தங்கிய வகுப்பினர்களுக்கு 27 விழுக்காடும் ஒதுக்கப்பட்டுள்ளது. 1997-98 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டிற்கு 18,500 என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டு 40,364 பேருக்கு முந்தைய ஆண்டிலுள்ள நிலுவையைச் சேர்த்து கடன் ஒப்புதல் வழங்குவதற்கு வங்கிகளுக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. 30-1-98 வரை 9,717 தொழில் முனைவோர்களுக்கு ரூ.5,482.08 இலட்சம் ஒப்புதலளிக்கப்பட்டு 3,082 பேருக்கு ரூ.1,756.87 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

96-97ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட 19,438 பேரில் இதுவரை 14,784 பேருக்கு கடன் வழங்கப்பட்டுள்ளது. 15,489 பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

### 2.14 அளிக்கப்படும் பயிற்சி வசதிகள்

#### (I) அரசு அறிவியல் கண்ணாடி பயிற்சி நிலையம், கிண்டி, சென்னை-32

இந்த நிலையம் தனித் தன்மை வாய்ந்தது. இந்தியாவில் இது போன்ற நிலையம் இது மட்டுமேயாகும். அறிவியல் கண்ணாடிக் கருவிகளைத் தயாரிப்பதில் மாணவர்களுக்கு 2 ஆண்டு காலப் பயிற்சி அளிக்கிறது. ஒவ்வொரு ஆண்டும் 25 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. பயிற்சி பெறும் ஒவ்வொரு மாணவருக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.120 உதவித் தொகை அளிக்கப்படுகிறது. இதுவரை 44 தொகுதிகளில் மாணவர்கள் பயிற்சியினை வெற்றிகரமாக முடித்துள்ளனர்.



1998 ஏப்ரல் 20]

பயிற்சி முடிவுற்ற பின் மாணவர்கள் பல்வேறு அறிவியல் கண்ணாடிக் கருவிகள் தயாரிக்கும் தொழில் நிறுவனங்களில் வேலை பெறுகின்றனர்.

#### (II) அறிவியல் கண்ணாடிக் கருவிகள் உற்பத்தி மையம், கோயம்புத்தூர்

இந்த நிலையம் மாநிலம் முழுவதிலும் உள்ள கல்வி மற்றும் இதர நிலையங்களுக்குரிய அறிவியல் கண்ணாடிக் கருவிகளைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளது. ஆண்டொன்றுக்கு ரூ.4 இலட்சத்திற்கு மேல் கண்ணாடி உபகரணங்கள் உற்பத்தி செய்யப்பட்டு அரசுத் துறைகள், பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

#### (III) அரசு பீங்கான் தொழில்நுட்பப் பயிற்சி நிலையம், விருத்தாசலம்

இந்த நிலையம், மட்பாண்டத் தொழில்நுட்பவியலில் பயிற்சி அளிக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்டது. இந்தியாவிலுள்ள இத்தகைய சிறந்த பயிற்சி நிறுவனங்களில் இதுவும் ஒன்றாக விளங்குகிறது. இப்பயிற்சிக்கு ஒவ்வொரு ஆண்டும், 30 மாணவர்கள் 3½ ஆண்டு காலப் பயிற்சிக்குச் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். பள்ளி இறுதிவகுப்பு (பத்தாம் வகுப்பு) தேறியவர்கள், இதில் பங்கு பெறத் தகுதி உடையவர்களாவர். வெற்றிகரமான பயிற்சிக்குப் பிறகு இந்த நிலையத்தின் மாணவர்கள், இந்தியாவிலுள்ள பல்வேறு பீங்கான் தொழில் நிறுவனங்களில் வேலை செய்கின்றனர். மேலும், இந்தப் பயிற்சியை முடித்த மாணவர்கள் வளைகுடா நாடுகள், மலேசியா, கனடா போன்ற வெளிநாடுகளிலும் வேலை செய்கின்றனர்.

இதுதவிர, இந்த நிலையத்தில் சிறப்பாக அமைக்கப்பெற்ற ஒரு ஆய்வுக் கூடம் உள்ளது. இந்த ஆய்வுக் கூடம் தொழிற்பேட்டை மற்றும் அதனை சுற்றியுள்ள மட்பாண்டத் தொழில் நிறுவனங்களிடமிருந்து பெறப்படுகின்ற உற்பத்திப் பொருட்களுக்குரிய பரிசோதனையை மேற்கொள்கிறது. கட்டுமானத்திற்குரிய செங்கற்கள் மற்றும் சிகப்பு, மண் ஓடுகள் தயாரிப்பதற்குரிய சிவப்பு மண் பரிசோதனையை இந்த நிலையம் மட்டுமே மேற்கொள்கிறது.

[1998 ஏப்ரல் 20

**2.15 வழங்கப்படும் பரிசோதனை வசதிகள்**

**(i)** *மின்பயன் பொருட்கள் பரிசோதனை வசதிகள்*

தரமுள்ள உற்பத்திப் பொருட்களைத் தயாரிப்பதில் விழிப்புணர்ச்சி ஏற்படுத்தும் பொருட்டு, திருவள்ளூருக்கு அருகில் உள்ள காக்களூர் கோயம்புத்தூர், ஓசூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் பரிசோதனை வசதிகள் அளிக்கப்படுகின்றன.

காக்களூரிலுள்ள மத்திய மின் ஆய்வுக் கூடம், இந்திய தர நிர்ணய நிறுவனம், இரயில்வே மற்றும் பொருள் வழங்கல் விற்பனைத் துறையின் தலைமை இயக்குநரகம் ஆகியவற்றினால் பல மின்சாரப் பொருள்களுக்கு பரிசோதனை வசதியளிக்க அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்குத் தரக்கட்டுப்பாடு பற்றிய ஆலோசனைக் வழங்கும் நிலையமாக இந்த ஆய்வுக் கூடம் விளங்குகிறது. மின்சாரப் பொருட்கள், குறிப்பாக வீட்டு உபோயக மின் சாதனங்களுக்கு புது தில்லியிலுள்ள தேசிய பரிசோதனைக் கூடங்களில் அங்கீகாரக் குழுமத்தினால் (NABL) அங்கீகாரம் பெற்ற நிலையங்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்திய அரசின் வீட்டு உபயோக மின் சாதனங்களின் தரக் கட்டுப்பாட்டு ஆணையும் செயல்படுத்தப்படுகிறது. இதற்கென சென்னை, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் தரக் கட்டுப்பாட்டு மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

**(ii)** *மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடும் நிலையங்கள்*

தொழில் வணிகத் துறை மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடும் நிலையங்களை, கிண்டி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் நடத்தி வருகிறது. இந்த நிலையங்கள் மருத்துவ மனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் இதர அரசு மருத்துவ நிலையங்கள் ஆகியவற்றைச் சார்ந்த மிக நுட்பமான மின் மருத்துவச் சாதனங்களைப் பழுதுபார்க்கும் பணியை மேற்கொள்ளுமளவிற்கு வசதிகளைப் பெற்றுள்ளது.

**(iii)** *இரசாயனப் பரிசோதனை வசதிகள்*

பல்வேறு வகைத் தொழில்களுக்குத் தேவையான ஒருமித்த பரிசோதனை வசதிகளை வழங்கும் பொருட்டு, தொழில் வணிக



1998 ஏப்ரல் 20]

இயக்ககம், சென்னை, மதுரை, கோயம்புத்தூர், சேலம் மற்றும் தூத்துக்குடி ஆகிய இடங்களில் ஆய்வுக் கூடங்களை அமைத்துள்ளது.

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன், கிண்டியில் அமைக்கப்பட்ட இரசாயன பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடம், பொது மக்கள், தொழில் முனைவோர்கள் குறிப்பாக சிறு தொழில் முனைவோர்கள் ஆகியோருக்குப் பரிசோதனை வசதிகளை அளிக்கிறது. இதன் மூலம் அவர்களிடையே தரமுள்ள பொருள்களைத் தயாரித்து உடனடியாக விற்பனை செய்வதற்கு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துகிறது.

இரசாயனப் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வுக் கூடம் பின்வருகின்ற இரசாயன மற்றும் இயற்பியல் பரிசோதனையில் ஈடுபட்டுள்ளது.

1) உலோகப் பொருட்கள் மற்றும் துருப்பிடிக்காத எஃகுப் பொருட்கள் சம்பந்தப்பட்டவை.

2) தாமிரம், அலுமினியம், துத்தநாகம், டின், ஈயம் போன்ற இரும்புகலவா உலோகங்கள் மற்றும் பித்தளை வெண்கலம் போன்ற இதரப் பொருட்கள்.

3) வண்ணப் பொருட்கள்

4) சிமென்ட், செங்கல் எஃகாலான கம்பி, காங்கிரிட் பாலங்கள் மற்றும் இதே போன்ற பொருட்கள்.

5) பெட்ரோல், டீசல், மின்மாற்றி எண்ணெய் மற்றும் இது போன்ற பொருள்கள்.

6) தாதுப் பொருள் மற்றும் அனைத்து வகை கனிமப் பொருட்கள்.

7) அனைத்து வகை உரங்கள்.

8) பூச்சிக் கொல்லி மருந்துகள்.

**2.16 இதர பணிகள்**

**(i)** *தொடக்க நிலை புள்ளிவிவரப் பிரிவு*

கணக்கெடுப்பின் மூலம் பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிலையங்கள் பற்றிய விவரங்களைச் சேகரித்துக்கொள்வதற்கு, மாதிரி அளவைப் பணியின் மூலம் புள்ளிவிவரங்கள் நாளது வரையில்

[1998 ஏப்ரல் 20

தொடர்ந்து பராமரிப்பதற்கும் தொடக்க நிலைப் புள்ளிவிவரப் பிரிவு ஒன்று இந்த இயக்ககத்தில் 1977 இல் ஏற்படுத்தப்பட்டது.

100 விழுக்காடு மைய அரசின் நிதியுதவியுடன் செயல்படும் இத்திட்டம் ஒரு மைய நிதியுதவித் திட்டமாகும்.

31-3-1988 வரையிலான பதிவு செய்யப்பட்ட அனைத்து சிறு தொழில்களைப் பற்றிய இரண்டாவது அனைத்திந்திய புள்ளிவிவரங்கள் கணக்கெடுப்பு 1989-91-ல் நடத்தப்பட்டது.

இரண்டாவது அனைத்திந்திய கணக்கெடுப்பில் சேகரிக்கப்பட்ட விவரங்களை நாளது வரையில் பராமரிக்கும் பொருட்டு வளர்ச்சி ஆணையாளர் அவர்கள் (சிறு தொழில்கள்) இரு கட்டங்களில் மீண்டும் ஒரு மாதிரி அளவைப் பணி மேற்கொள்வதற்கு முடிவு செய்துள்ளார். முதல் கட்டப் பணி 31-3-1988 வரை பதிவு செய்யப்பட்ட சிறு தொழில் நிலையங்களைப் பற்றியதாகும் இரண்டாவது கட்டப் பணி 1-4-1988 முதல் 31-03-1992 முடிய பதிவு செய்யப்பட்ட சிறு தொழில்களைப் பற்றியதாகும். மேலும் புது டெல்லியிலுள்ள வளர்ச்சி ஆணையர் (சிறு தொழில்கள்) அவர்கள் நலிவுற்ற சிறு தொழில்கள் பற்றி இதே காலத்தில். இரு விழுக்காடு மாதிரி ஆய்வு நடத்துவதற்கு மாதிரிப் பொருட்களைத் தேர்ந்தெடுத்தார். ஏற்றுமதி நிலையங்கள் மற்றும் மூடப்பட்ட நிலையங்களைப் பற்றியும். ஆய்வு நிலையங்களைப் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இந்த அனைத்து ஆய்வுகளும் 1994-95 ஆம் ஆண்டில் நடைபெற்றன. புது டெல்லியிலுள்ள வளர்ச்சி ஆணையர் (சிறு தொழில்கள்) அவர்கள் சிறு தொழில்கள் பற்றிய மூன்றாவது அனைத்திந்திய கணக்கெடுப்புப் பணியை 1998 ஆம் ஆண்டில் மேற்கொள்ள வேண்டுமெனத் தெரிவித்துள்ளார். இப்பணிக்கு 1992-93, 1993-94 மற்றும் 1994-95 ஆம் ஆண்டுகளுக்குரிய முடிவுற்ற பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

(ii) பொருட்காட்சிகள்

இத்துறையின் நடவடிக்கைகள் மற்றும் சாதனைகளை விளக்கும் வகையில் 26-1-1998 அன்று குடியரசு விழாவின்போது நடைபெற்ற அலங்கார வண்டிகளின் ஊர்வலத்தில் இத்துறை கலந்து கொண்டது.

இதைத் தவிர, 31-12-1997 முடிய நடைபெற்ற பின்வருகின்ற பொருட்காட்சிகளில் இத்துறை கலந்து கொண்டது.



1998 ஏப்ரல் 20]

1. சென்னையில் நடைபெற்ற 23வது அனைத்திந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சி.

2. அரசு சித்திரைப் பொருட்காட்சி, 1997 மதுரை.

3. அரசு பொருட்காட்சி, 1997 கோயம்புத்தூர்.

4. அரசு பொருட்காட்சி, 1997 சேலம்.

5. பன்னாட்டு வர்த்தகப் பொருட்காட்சி, 1997 புது டெல்லி.

**2.17 புதிய திட்டங்கள்**

1998-99 ஆம் ஆண்டில் உத்தேசிக்கப்பட்டுள்ள புதிய திட்டங்களில் சில பின்வருமாறு :

(i) தொழில்நுட்பக் குழு

மேம்படுத்தப்பட்ட புதுமைத் தொழில்நுட்பவியலைப் பயன்படுத்தாமலேயே இந்திய சிறு தொழில் சொந்தமாக வளர்ந்துள்ள பொழுதிலும் மைய அரசின் தற்போதைய தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கையின்படி, பொருட்களின் தரம் மற்றும் விலையில் ஏற்பட்டுள்ள கடும் போட்டியினால் இந்திய சந்தை வெளிநாட்டினரோடு போட்டியிடுவதில், சிறு தொழில்துறையானது ஏமாற்றப்பட்டு வருகிறது. எனவே, தொழில்நுட்பவியலைத் தரமுயர்த்துதல் அல்லது தொழில்நுட்பத்திற்கு மாறுதல் மூலம் பெறும் தொழில்நுட்பவியல் மேம்பாடு சிறு தொழில் துறைக்கு இப்பொழுது மிகவும் அவசியமாகும். இந்தியாவில் ஆலோசனை மற்றும் நிதியுதவியுடன் கூடிய நன்கு முன்னேற்றமடைந்த தொழில்நுட்பவியல் தகவல் மற்றும் தகவல் வசதிகள் கிடைப்பது வலுவற்ற நிலையில் உள்ளது.

தற்போதைய தாராளமான மற்றும் உயர்போட்டிச் சூழ்நிலைகளில் சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களை ஊக்குவிக்கும் வகையில் இந்திய அரசு, மாநில அரசு மற்றும் சில சங்கங்களின் உதவியுடன், சென்னையில் தமிழ்நாடு சிறு தொழில்கள் தொழில்நுட்பவியல் மையம் ஒன்றை அமைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தத் தொழில்நுட்ப மையத்திலிருந்து வெளியிடப்படும் உரிய பொருட்கள் மற்றும் மேம்படுத்தப்பட்ட உற்பத்தி முறைகள் உலக அளவில் வளர்ச்சி பெற்றதாக அமைய வேண்டுமென்பதே இந்தத் தொழில்நுட்ப

மையத்தின் நோக்கமாகும். மேலும், இந்த மையம், சிறு மற்றும் நடுத்தரத் தொழில்களில் தொழில்நுட்பவியல் மேம்பாடு மற்றும் தொழில்நுட்ப முறை ஆகியவற்றைப் பெறுவதற்கும் மேற்கொள்வதற்கும் வழி வகுக்கும்.

மிக நவீன நுட்பத்திறம் மேம்பட்ட தொழில்நுட்பவியல் அறிவைப் பெறுவதில் சிறு தொழில்கள் நிதி நெருக்கடியால் இடர்படுகின்றன என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். மேம்பட்ட உயர்தொழில் நுட்பவியல் அறிவைப் பெறுவதற்கு முன் பல நிலைகளை சிறு தொழில்கள் கடக்க வேண்டியிருப்பதால் உரிய ஆதாரங்களிலிருந்து இடைப்பட்ட பல நிலைகளினை தொழில்நுட்பவியல் அறிவை அளிப்பதை இந்தத் தொழில்நுட்ப மையம் நோக்கமாக கொண்டுள்ளது. சிறுதொழில் நிலையங்களுக்குத் தொடர்ந்து தேவைப்படுகின்ற மேம்பட்ட தொழில் நுட்பவியல் அறிவினைப் பெறுவதற்கு தொழில்நுட்பக் குழு உதவுகிறது.

**(2) அலுவலர்களுக்குப் பயிற்சி**

மாற்றமடைந்து வரும் தகவல் தொழில்நுட்பவியல், இந்திய அரசின் தற்போதைய தாராளமயமாக்கப்பட்ட கொள்கைகளுடன் இணைந்து, தொழில்களின் தோற்றத்தை முற்றிலும் மாற்றியமைத்துள்ளது. கள அமைப்பாக உள்ள மாவட்டத் தொழில் மையங்கள், கால மாறுதலுக்கேற்றவாறு செயல்பட வேண்டும். தமிழ் நாட்டின் தொழில் சூழ்நிலைகளின் மாற்றத்தினைக் கருத்தில்கொண்டு, மாவட்டத் தொழில் மையங்களின் அலுவலர்களுக்கென்றே தனிப் பயிற்சித் திட்டம் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மாவட்டத் தொழில் மையங்கள் முனைப்பாகச் செயல்படுத்துவதன் மூலம் தொழில் துறையில் முழு அறிவுடன் நாளது வரை திட்டங்களைச் செயல்படுத்துவதில் இந்த மையம் முனைக் கல்லாக விளங்குகிறது. இந்த ஆண்டுமுதல் மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் தொழில் துறையின் பணியாளர்களுக்கு அதிக அளவில் ஆற்றல் பயிற்சிகளை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

**(3) தகவல் மேலாண்மை**

மாவட்ட தொழில் மையங்கள் மற்றும் மாநிலத் தொழில் வணிக இயக்ககம் ஆகியவற்றிற்குத் தேவையான தகவல்களை வழங்கும் பொருட்டு, புது டெல்லியிலுள்ள வளர்ச்சி ஆணையாளர் (சிறு



தொழில்கள்) அவர்களின் அலுவலகத்தில் கணினி மயமாக்குத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம், சிறு தொழில்கள் மீதான விவரங்கள் சேகரித்தல், சீரமைத்தல், தகவல் வழங்குதல் முதலியவற்றை எளிமைப்படுத்தும்.

இத்தகவல் முறையினை நன்முறையில் செயல்படுத்துவதற்கு இயக்ககத்தில் "விவரங்கள் பகுப்பாய்வு முறைப் பிரிவு" (System Analysis Cell) ஏற்படுத்துவது அவசியமாகும். துறையின் பணியாளர்களுக்கு நிர்வாகத் திறனை மேம்படுத்துவதன் அவசியத்தைக் கருத்தில்கொண்டு, தொழில் வணிக இயக்கத்திலுள்ள மேலாண்மைத் தகவல் முறையினை வலுப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**(4) தொழில் முனைவோர் சிறப்புப் பயிற்சித் திட்டங்கள்**

தொழில் முனைவோர் பயிற்சித் திட்டத்தின் மூலம் 200 பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கிப் பயிற்சியளிக்கும் புதிய திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தற்போது உத்தேசிக்கப்பட்ட புதிய திட்டத்தின் நடைமுறைச் செயல்பாடு, பழகுநர் பயிற்சி (Apprenticeship Training) போன்று அமையும். ஒவ்வொரு ஆண்டும் கல்லூரிகளிலிருந்து வெளியேறிய அநேக அறிவியல், கலை, வணிகப் பட்டதாரிகள் போதுமான வாய்ப்பின்றி உள்ளனர். இவர்களில் வேலைவாய்ப்புப் பெறும் திறமையுடைய பலர் உள்ளனர். அவர்களை முறைப்படி கண்டறிந்து இத்திட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டும். இத்திட்டம், புதுமையான மற்றும் தனித் தன்மை வாய்ந்த ஒன்றாகும்.

இப்புதிய திட்டத்தின்கீழ் கிண்டியிலுள்ள தொழில் முனைவோர் வளர்ச்சி மையத்தினால் 200 ஆண், பெண் பட்டதாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, தொழில் முனைவோரியலில் பயிற்சி அளிக்கப்படும். இதன் பயிற்சிக் காலம் ஆறு மாதங்களாகும். இதில் நிறுவனத்தைச் சார்ந்த மேலாண்மைப் பயிற்சி மற்றும் தொழில் முனைவோரால் தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலில் செயல்முறைப் பயிற்சியும் அடங்கியதாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்கள், செயல்முறைப் பயிற்சிக்காக தேர்ந்த நிறுவனங்களுக்கு அனுப்பி வைக்கப்படுவர். அவர்களுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ. 1,000 உதவித் தொகை வழங்கப்படும். உதவித் தொகையில் 50 விழுக்காடு மாநில அரசாலும், எஞ்சிய 50 விழுக்காடு

[1998 ஏப்ரல் 20

பயிற்சி மேற்கொள்கின்ற நிறுவனத்தாலும் அளிக்கப்படும். பாடமுறை வகுப்புக்கள், கிண்டியிலுள்ள தொழில் முனைவோர் பயிற்சி மையத்தில் வாரத்தில் ஒரு நாளைக்கு தொழில் நிறுவன மேலாண்மை குறித்து பயிற்சி அளிக்கப்படும். தொடக்கத்தில். இத்திட்டம் சென்னையில் செயல்படுத்தப்படும். பிறகு அனைத்து மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும்.

(5) திண்டுக்கல் பூட்டு

பூட்டுத் தொழில், தமிழ் நாட்டில் பழமை வாய்ந்த ஒன்றாகும். தமிழ் நாட்டிலும் வெளி மாநிலங்களிலும், பூட்டுச் சந்தைகளில், திண்டுக்கல் பூட்டுகள் நல்ல பெயர் பெற்று விளங்குகின்றன. அலிகார் பூட்டுக்களுக்கும் மேலாக திண்டுக்கல் பூட்டுகள் கருதப்படுகின்றன. இச்சங்கம் தற்பொழுது பூட்டுகளை முகவர்கள் மூலமாகவும், இரயில்வே துறை, துறைமுகத் துறை, மருத்துவமனைகள், உள்ளாட்சி அமைப்புகள் முதலியவற்றுக்கு விற்பனை செய்து வருகிறது.

இத்தொழிற்சாலையின் முக்கியமான கருவி பாகங்களை நவீன முறையில் மாற்றி அமைத்து, பூட்டுக்களின் பல்வேறு பாகங்களை ஒருங்கிணைக்கும் தயாரிப்பு முறையை விரைவுபடுத்தி நவீனமயமாக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. தயாரிப்பு முறையை நவீனமயமாக்குவதன் மூலம் பூட்டுக்களின் தரம் மேம்பட்டதாக விளங்கும். இச்சங்கம் சந்தையில் பல்வேறு பூட்டுக்களில் ஏற்படும் போட்டிகளுக்கு ஏற்ற விலையோடு போட்டி போட முடியும்.

(6) சென்னை தொழிற் கூட்டுறவுச் சங்கப் பகுப்பாய்வுக் கூடம்

சென்னை தொழிற் கூட்டுறவுச் சங்கப் பகுப்பாய்வுக் கூடமானது, தமிழ் நாடு அரசின் மருந்துகள் ஒழுங்குமுறை வாரியத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மருந்து தயாரிப்பு நிலையங்களுக்கு (உறுப்பினர்கள்) உபயோகப்படுத்தப்படும் மூலப் பொருள்கள் பற்றி பகுப்பாய்வு மேற்கொள்வதும், அந்நிலையங்களால் தயாரிக்கப்பட்ட மருந்துப் பொருட்கள், ஐ.பி., பி.பி., மற்றும் யு.எஸ்.பி. குறியீட்டுகளுக்கேற்றவாறு உள்ளதா எனச் சான்றிதழ் வழங்கும் பணிகளை இச்சங்கம் மேற்கொள்ளுகிறது.

பரிசோதனைகளுக்குத் தேவையான நுட்பமான இயந்திரக் கருவிகள் இன்மையால், உறுப்பினர்கள், தனியார் ஆய்வுக் கூடங்களை



1998 ஏப்ரல் 20]

அணுகுகின்றனர். அங்கு அவர்களால் உரிய நேரத்தில் சான்றிதழ்களைப் பெற முடிவதில்லை. தனியார் ஆய்வுக் கூடங்களின் கட்டணமும் மிக அதிகமாகும். இவை தவிர, இச்சங்கத்தில் போதுமான அளவில் மிக நுட்பமான மென்கருவிகள் இன்மையால் மாதிரிப் பொருட்களின் எண்ணிக்கை அதிக அளவில் தேங்கியுள்ளன.

மிக நுட்பமான இயந்திரக் கருவிகளைப் பயன்படுத்தி, மாதிரிப் பொருட்கள் பரிசோதனை செய்வதற்குரிய விசாரணைகளுடன், மாதிரிப் பொருட்களின் வரவும் அதிகரித்துள்ளது.

தண்ணீர் தளவாடம் நிறுவுதல் மற்றும் கணினி மயமாக்குதலை நடைமுறைப்படுத்துவதோடு, இரண்டு கூடுதல் இயந்திரங்கள் வாங்கியும் ரூ. 40 இலட்சத்தில் இந்தச் சென்னை தொழிற் கூட்டுறவுச் சங்கப் பகுப்பாய்வுக் கூடத்தை வலுப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**3.0 தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம்**

தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் 1949 ஆம் ஆண்டில் நிறுவனங்கள் சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டது. இது நாட்டில் உள்ள பழமையான நிதி நிறுவனங்களில் ஒன்றாகும். இக்கழகம் ஒரு வங்கி நிறுவனம்; ஒரு மாநில நிதி நிறுவனம்; வரையறுக்கப்பட்ட நிறுவனம் போன்ற தகுதிகளுடைய தனித் தன்மை வாய்ந்த ஒன்றாகும்.

தொழில்களை மேம்படுத்தவும் வளர்ச்சியடையச் செய்யவும் இக்கழகம் ஒரு கிரியா ஊக்கியாகச் செயல்படுகின்றது. குறிப்பாகத் தமிழ்நாட்டிலுள்ள சிறு தொழில்களை மேம்படுத்தவும் வளர்ச்சியடையச் செய்யவும் உதவுகின்றது.

**3.1 பங்கும், பணிகளும்**

தமிழ்நாட்டில் எந்த ஒரு பகுதியிலும், நிறுவப்பட்டுள்ள புதிய தொழிற் பிரிவுகளுக்கு இயந்திரங்கள், சாதனங்கள் மற்றும் நிலம், கட்டடம் ஆலைகள் போன்ற நிலையான சொத்துக்களை வாங்க இக்கழகம் உதவியளிக்கிறது. புதிய தொழில் பிரிவுகளை நிறுவுதல், விரிவுபடுத்துதல், நவீனப்படுத்துதல், தற்போதுள்ள சிறு, நடுத்தர தொழில்களை பல்திறப்படுத்துதல் போன்றவற்றிற்கும் இக்கழகம் உதவியளிக்கின்றது.

[1998 ஏப்ரல் 20

இக்கழகம் தனியொரு தொழில் பிரிவிற்கு ரூ. 240 இலட்சம் வரை கடன் வழங்குகிறது. ஏற்கெனவே உள்ள, இலாபகரமாக செயல்பட்டு வரும் சிறு தொழிலகங்களுக்கு, குத்தகை/தவணைக் கொள்முதல் திட்டத்தின்கீழ் ரூ. 5 இலட்சம் முதல் ரூ.250 இலட்சம் வரை நிதியுதவி அளிக்கிறது.

இந்திய சிறு தொழில் வளர்ச்சி வங்கியின் ஒரே இடத்தில் அனைத்து நடைமுறைகளையும் செய்து கொடுக்கும் ஒருமுனை இசைவு ஏற்பாட்டின் கீழ், சிறு தொழில் பிரிவுகளுக்கு குறித்த காலக் கடனுடன் சேர்த்து நடப்பு மூலதன உதவித் தொகையாக ரூ.100 இலட்சம் வரை மூலதனமாக வழங்குகின்றது. வணிக ரீதியான வங்கிகள் சிறு தொழில் பிரிவுகளின் சாதனைச் செயல்முறைகளைக் கவனித்த பின்னரே, நடப்பு மூலதனத் தொகைகளுக்கு அனுமதி வழங்குகின்றன. இவ்வாறு வங்கிகள் வழங்கும் கடனுதவித் தொகைக்காகக் காத்திராமல், சிறு தொழில் பிரிவுகள் அவை செயல்படத் தொடங்கியவுடன் அவற்றின் தேவைக்கான நடப்பு மூலதனத் தொகையைப் பெறப் பெரும் உதவிகளைச் செய்கிறது.

நடைமுறை மூலதனத் தேவைகளின் இடைவெளிக்குப் பாலமாக அமையும் பொருட்டு, வாடிக்கையாளர்களின் பட்டியல்களுக்கு நிதி வழங்கும் "முகவர்" திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் வாய்ப்புகளை அதிகரித்திட இத்திட்டத்தின் செயல்பாடுகளில் உள்ள இடர்களை அகற்ற தக்கமுறையில் விதிகள் தளர்த்தல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நல்ல மேம்பாட்டாளர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை வைத்துக் கொண்டு கவரத்தக்க வகையில் தொழில் மேம்பாட்டாளர்கள் பங்கு மற்றும் இணைப்பிணையம் ஆகியவற்றில் தற்பொழுதுள்ள முறைகளைத் தளர்த்துவதற்கு இக்கழகம் முடிவு செய்துள்ளது.

இக்கழகம், ஏற்கெனவே உள்ள நிலம், கட்டடம் மற்றும் இயந்திரம் ஆகியவை அடங்கிய இணைப்பிணையம் கோருவதைத் தளர்த்துவதற்கு முடிவு செய்துள்ளது. எனினும், குத்தகைக் கட்டடத்தில் இயந்திரம் நிறுவப்பட்டிருந்தாலும், இயந்திரம் வழக்கொழிந்த நிலையில் இருந்தாலும் தற்பொழுது முறைப்படி முழு இணைப்பிணையம் கோருவது தொடர்ந்து இருக்கும். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தில் ஏற்கெனவே உதவியளிக்கப்பட்டு நன்மதிப்பு பெற்றுள்ள தொழிலகங்களுக்கு, மேலும் இணைப்பிணையம் தளர்த்தப்படும்.



1998 ஏப்ரல் 20]

**4.0 தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம்**

தமிழக அரசால் 1970 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் சிறுதொழில்களை மேம்படுத்தவும் பின்தங்கிய மற்றும் மிகவும் பின்தங்கிய பகுதிகளில் சிறுதொழில்களைப் பரவலாக்கி சிறுதொழில் வளர்ச்சியைப் பல்கிப் பெருகச் செய்ய வேண்டும் என்ற குறிக்கோளுடனும் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் துவங்கப்பட்டது.

சிட்கோ நிறுவனம், சிறுதொழில்களின் மேம்பாட்டிற்குக் குறிப்பாக படித்து வேலையற்ற இளைஞர்களுக்கும், பொறியியல் பட்டதாரிகளுக்கும் மகளிர் தொழில் முனைவோர்களுக்கும் சுய வேலைவாய்ப்பினை அளிக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. மேலும், சிறுதொழில்களின் வளர்ச்சியினால், மாநிலத்தில் கூடுதலான வேலைவாய்ப்பினை நேரடியாகவும் மறைமுகமாகவும் அளிக்கிறது.

**4.1 பங்கேற்பு**

தொழில் வளர்ச்சிக்கு ஏற்ற வளம் கொண்ட வளர்ச்சிப் பகுதிகளில் தொழிற்பேட்டைகள் அமைக்கத் திட்டம் தீட்டி, தொழில் முனைவோர்களின் தேவைக்கேற்ப தொழிற்பேட்டைகளை அமைப்பது சிட்கோவின் பணிகளில் முக்கியமானதாகும். மாநிலத்திலுள்ள ஏனைய தொழிற்பேட்டைகளில் சிறுதொழில் முனைவோரின் தேவைகளை அறிந்து, தண்ணீர் வழங்கல் வடிகால் வசதி, மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகள், சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தால் செய்து தரப்படுகின்றன.

மாநிலத்தில் 73 தொழிற்பேட்டைகள் சிட்கோவால் பராமரிக்கப்படுகின்றன. 1997-98 ஆம் ஆண்டில் 25 தொழிற்கூடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள 20 தொழிற்பேட்டைகள் 1998-99 ஆம் ஆண்டிற்குள் கட்டி முடிக்கப்படும். 1997-98 ஆம் ஆண்டில் 560 தொழில்மனைகள் செப்பனிடப்பட்டுள்ளன.

சிறுதொழில் துறைக்குத் தேவைப்படுகின்ற முக்கிய மூலப் பொருட்களான இரும்பு, எஃகு, நிலக்கரி, அலுமினியம், மெழுகு போன்றவற்றை சிட்கோ வழங்கி வருகிறது. இவை தவிர, துத்தநாகம், ஈயம், பாலித்தீன் குருணைகள், பொட்டாசியம் குளோரேட்டு முதலியனவற்றையும் விநியோகிக்கிறது. தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும்

[1998 ஏப்ரல் 20

காகித நிறுவனத்திற்கு முகமை அடிப்படையில் காகித விற்பனை செய்கிறது.

சிறுதொழில்களின் தேவையின் அடிப்படையில் மேலும் பல புதிய மூலப் பொருள்கள் வழங்குவதற்கும் திட்டமிட்டுள்ளது.

சிறுதொழில்கள் வெற்றிகரமாகச் செயல்படுவதில் விற்பனை முக்கிய அங்கம் வகிக்கிறது. சிறுதொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களை நல்ல விலைக்கு விற்பதற்காக சிட்கோ விற்பனை உதவித் திட்டத்தைச் செயல்படுத்தி உதவி புரிகிறது. சிறுதொழில் நிறுவனங்களின் உற்பத்திப் பொருட்களை வாங்கி உபயோகிக்கும் நிறுவனங்களுக்குக் குறித்த காலத்தில் கிடைப்பதற்காக இத்திட்டம் வழி செய்கிறது.

மேலும் அரசு நிறுவனங்கள் விளம்பரப்படுத்தும் ஒப்பந்தங்களில் சிறுதொழில் நிறுவனங்கள் சார்பாக சிட்கோ பங்கேற்று உதவ இந்த விற்பனை உதவித் திட்டம் நல்ல வாய்ப்பினை நல்குகிறது. இதன் மூலம் அரசு நிறுவனங்களுக்கும் சிறுதொழில் நிறுவனங்களுக்கும் நல்ல தொடர்பு ஏற்படுத்தி ஒரு பாலமாக விளங்குவதில் சிட்கோ முக்கியப் பங்காற்றுகிறது.

**4.2 புதிய திட்டங்கள்**

(i) *செயல் திறமுடைய வளர்ச்சி மையங்கள்*

புதிய பரவலான பொருளாதார வளர்ச்சியில், புதிய தொழில் நுட்பவியல் செறிந்த தொழில்கள் வந்து கொண்டிருக்கின்றன. அதி தொழில்நுட்பம் சார்ந்த தொழில்களுக்கு சிறப்பு செயல் திறமிக்க பணியாளர்களின் தேவை அவசியமாகும். ஃபோர்டு, ஹூண்டாய் போன்ற ,நிறுவனங்கள் வல்லுநர்களின் உதவியுடன் உள்ளூரிலுள்ள இளைஞர்களுக்கு பயனுள்ள வகையில் செயல்படும்பொருட்டு இது போன்ற பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்கு சிட்கோ நிறுவனம், தொழிற்கூடங்களை வாடகைக்கு அளிப்பது, பயிற்சி நிலையத்திற்குத் தேவையான இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றிற்கு மானியம் வழங்குவது ஆகியவற்றின் மூலம் தனியார் பயிற்சி நிலையங்களுக்கு ஊக்கமளிக்கும்.



1998 ஏப்ரல் 20]

**(ii) *சூரிய வெப்ப சக்தி மையங்கள்***

சாண எரிவாயுவின் அடிப்படையில் மரபு வழிசார்ந்த மின் சக்தியினை சிறுதொழிலகங்களை நம்பியுள்ளதைக் குறைத்துக் கொண்டு 1998-99 ஆம் ஆண்டில் குறைந்தபட்சம் 10 தொழிற்பேட்டைகளில் சூரிய வெப்ப சக்தி சார்ந்த மின் உற்பத்தி நிலையங்களை அமைக்கத் திட்டமிட்டுள்ளது. முதல் கட்ட நிலையில், திருமுடிவாக்கம், ஆவடி, தூவக்குடி, மலுமிச்சம்பட்டி, திண்டுக்கல் மற்றும் கப்பலூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற்பேட்டைகள் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இந்த மையங்களை அமைப்பதற்கு உதவி பெறும்பொருட்டு, சிட்கோ தமிழ்நாடு மின் சக்தி வளர்ச்சிக் குழுமத்தை அணுகும். இந்திய சிறுதொழில் வளர்ச்சி வங்கி மாநில மற்றும் மத்திய அரசுகளை நிதியுதவி அளிப்பதற்கு சிட்கோ நாடும்.

**5.0 தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் (டான்சி)**

தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனம் பல சிறு தொழிற்கூடங்களைக் கொண்டு தமிழ்நாடு முழுவதும் பரவலாக ஆரம்பிக்கப்பட்ட நிறுவனமாகும். இந்த நிறுவனம் தமிழ்நாட்டில் தலைநகரம் மற்றும் குறிப்பிட்ட நகரங்களில் விற்பனைக் கூடங்களைக் கொண்ட பல்பொருள் உற்பத்தி நிறுவனமாகும்.

**5.1** *பங்கேற்பு மற்றும் பணிகள்*

டான்சி, மாநில/மத்திய அரசுத் துறைகள், அரசு சார்ந்த பொது நிறுவனங்கள் மற்றும் பொது மக்களுக்குத் தேவையான பொருட்களை உற்பத்தி செய்து வழங்கியும், மற்றும் சேவை நிலையமாகவும் விளங்குகிறது. டான்சி நிர்வாகத்தின்கீழ் 31 உற்பத்திக் கூடங்கள், 3 செயல்திட்டப் பிரிவுகள் மற்றும் விற்பனை நிலையங்கள் உள்ளன. இது தவிர, தமிழ்நாடு வண்ணங்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் (டாபாப்) மற்றும் தமிழ்நாடு மாநில பொறியியல் மற்றும் சேவை நிறுவனம் (செஸ்காட்) ஆகிய இருவகை நிறுவனங்களையும் கொண்டுள்ளது.

[1998 ஏப்ரல் 20

### 5.2 உற்பத்திப் பொருட்கள்

டான்சியில் உற்பத்திப் பொருட்களைக் கீழ்க்கண்டவாறு வகைப்படுத்தலாம் :—

| வகைகள் | உற்பத்திப் பொருட்களின் விபரம் |
|---|---|
| 1. கட்டுமானப் பொருட்கள் | சர்க்கரை ஆலைகளுக்கும், சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கும் மற்றும் அனல் மின் உற்பத்தி நிலையங்களுக்கும் தேவையான உயர் கட்டுமானப் பொருட்கள், நுண் ஆலை கோபுரங்கள் மற்றும் உயர் அழுத்த மின் கடத்தி கோபுரங்களுக்குத் தேவையான துத்தநாகம் பூசிய கோபுரப் பாகங்கள். |
| 2. பொறியியல் | தொழிற்கூடங்கள், திரை அரங்குகள், பள்ளிக் கூடங்கள் மற்றும் கிடங்குகளுக்குத் தேவையான சிறு கட்டுமானங்கள், மின் வாரியத்திற்குத் தேவையான மின் கடத்திப் பொருட்கள், சிறு கடைகள் த்யார்ரிக்கத் தேவையான தகடு உலோகப் பொருட்கள். |
| 3. வார்ப்படம் | இயந்திரம் மற்றும் இயந்திரத்தினால் அல்லாது தயாரிக்கப்படும் உதிரி பாகங்கள், இரும்புக் குழாய்கள். |
| 4. அறைகலச் சாமான்கள் | மரத்தாலான அறைகலன்கள், தடுப்பு மற்றும் உள்ளறை வேலைப்பாடுகள் வீடு அலுவலகம், மருத்துவமனை களுக்குத் தேவையான, எஃகுப் பொருட்கள் மற்றும் அறைகலச் சாமான்கள். |



1998 ஏப்ரல் 20]

| | |
|---|---|
| 5. பல வகைகள் | ஆழ்குழாய் பம்புகள் மற்றும் கைப் பம்புகள், சாராவியை (Spirit) மூலப் பொருள் ஆகக் கொண்ட பொருட்கள், காஸ்கெட், செல்லாக், பிக்சர் வார்னிஷ், லைசால், பெனாயில். டைட்டன் நிறுவனத்திற்குக் கடிகாரக் கருவிகள் இணைத்துக் கொடுப்பது. |

### 5.3 தொழிலாளர்

தற்போது 1,301 பணியாளர்கள், தொழிலாளர்களையும் சேர்த்து பணிபுரிகிறார்கள். சுமுகமான தொழில் உறவுகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

### 5.4 டான்சியின் மேம்பாட்டுத் திட்டத்திற்கு அரசின் முயற்சி

1. அதிக நட்டத்தில் இயங்கும் தொழிற்கூடங்களை மூடிவிடல்.

2. தன்னிச்சை ஓய்வு பெறும் திட்டத்தை அமல்படுத்துவதன் மூலம் உபரியான தொழிலாளர்கள், பணியாளர்கள் மற்றும் அலுவலர்களைக் குறைத்தல் மற்றும் அதற்கான நிதி வழங்குதல்.

3. மூடப்பட்ட நிலையங்களின் சொத்துக்களை விற்பனை செய்வதன் மூலம் நிதிநிலையை உயர்த்துதல்.

4. நிதிச் சீரமைப்பின்கீழ் பழைய கடன்களை மானியமாக்குதல், இதுவரை கடன்களுக்காகச் செலுத்தப்பட வேண்டிய மொத்த வட்டியை நீக்கி விடுதல் மற்றும் சில ஆண்டுகளுக்கு வட்டியை ரத்து செய்தல்.

5. விற்பனை வரி மானியம் வழங்குதல்.

### 5.5 துணை நிறுவனங்கள்

டான்சி இரு துணை நிலையங்களைக் கொண்டுள்ளது.

#### (1) தமிழ்நாடு மாநில பொறியியல் மற்றும் சேவை நிறுவனம் (SESCOT)

செஸ்காட் நிறுவனம், டான்சி பிளேம் (TANSI FLAME) என்ற துருவுறா எஃகுத் திரவ பெட்ரோலிய எரிவாயு அடுப்பினைத் தயாரித்து

[1998 ஏப்ரல் 20

அதற்கு இந்திய தரக் கட்டுப்பாட்டுச் சான்றிதழையும் பெற்றுள்ளது. சிறிய அளவில் ஒரு அடுப்பு மேடை கொண்ட பெட்ரோலிய எரிவாயு அடுப்பினைத் தயாரித்து சந்தையில் அறிமுகப்படுத்தியுள்ளது.

**(2) தமிழ்நாடு வண்ணப்பூச்சுக்கள் மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனம் (டாபாப்)**

இந்நிலையம் சிவப்பு ஆக்ஸைடு வண்ணப்பூச்சுக்கள், சாலைகளில் போக்குவரத்து அடையாளக் குறி இடுகின்ற இரப்பர் கலந்த வண்ணப்பூச்சுகள் மற்றும் மெழுகுத் தன்மை கொண்ட வண்ணப்பூச்சு முதலியவற்றைத் தயாரிக்கிறது. இந்த வண்ணங்கள் டான்சியில் தயாராகும் பொருட்களுக்கு உபயோகப்படுத்தவும், காவல் துறை, சென்னை மாநகராட்சி, நெடுஞ்சாலைத் துறை, சர்க்கரை ஆலை நிறுவனம் மற்றும் இதுபோன்ற நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

**6. தமிழ்நாடு தோல் தொழில் வளர்ச்சி நிறுவனம் (டால்கோ)**

ரூ. 10 கோடியில் அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் தமிழ்நாடு தோல்தொழில் வளர்ச்சி நிறுவனம் 1983 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அரசு நிறுவனமாக ஏற்படுத்தப்பட்டது. இதற்கு அரசு சமபங்கு மூலதனமாக ரூ. 250 இலட்சம் வழங்கியுள்ளது.

*6.1 பங்கேற்பு மற்றும் பணிகள்*

தமிழ்நாட்டில் தோல் மற்றும் தோல் பதனிடு தொழிற்சாலைகள் வளர்ச்சி அடைவதற்கு அதன் பணிகளாவன:

1. மூலப் பொருட்கள், இரசாயனப் பொருட்கள் முதலியவற்றை நியாயமான விலையில் சிறு தோல் பதனிடுபவர்களுக்கு வழங்குவது.

2. காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிப்பில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களுக்கு விற்பனை உதவி அளிப்பது.

3. காலணி மற்றும் இதர தோல் பொருட்கள் தயாரிப்பில் சிறு கைவினைஞர்களின் திறனை மேம்படுத்துவது.

4. தோல் தொழிலில் ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களுக்கு அடிப்படை வசதிகள் அளிப்பது.



1998 ஏப்ரல் 20]

5. தமிழ்நாட்டில் ஆறு இடங்களில் பொது சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதன் மூலம் தோல் தொழில்களால் ஏற்படும் மாசு மற்றும் சுற்றுப்புறக் கேட்டை நீக்குவதற்கு உதவியளிப்பது.

*6.2 தோல் தொழிற்கூடங்கள்*

டால்கோ நிறுவனத்தின் கட்டுப்பாட்டிலுள்ள நான்கு தோல் தொழிற்கூடங்களாவன:

1. டால்கோ தோல் பதனிடும் தொழிற்சாலை, வின்னமங்கலம்.

2. டால்கோ தோல் பதனிடும் தொழிற்சாலை, மாதவரம்.

3. டால்கோ தொழிற்கூடம், பல்லாவரம்.

4. டால்கோ தொழிற்கூடம், பெரம்பூர்.

தோல் பதனிடும் தொழிற்கூடங்களை மூட வேண்டுமென்ற உச்ச நீதிமன்றத்தின் ஆணைகளின்படி, மாதவரத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை 1-4-1996 முதல் செயல்படாமல் உள்ளது. எனினும், மாதவரத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலையை மாதவரத்திலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் டால்கோ நிறுவனத்தால் தோல் பதனிடுவதை புதுப்பிப்பது அல்லது தனியாருக்கு குத்தகைக்கு விடமுடியும். வின்னமங்கலத்திலுள்ள தோல் பதனிடும் தொழிற்சாலை முடிக்கப்பட்ட தோல் உற்பத்தி செய்தல் மற்றும் சேவைப் பணிகளை மேற்கொண்டு வருகிறது.

மற்ற இரண்டு தோல் தொழிற்கூடங்கள் பாத அணிகள், கால் அணிகள், உதிரி பாகங்கள், கையுறை, நடத்துநர் பைகள், இரும்புப் பட்டறைகள் முதலியவற்றை உற்பத்தி செய்து மாநிலத்தில் அரசு நிறுவனங்களின் தேவைகளை நிறைவு செய்து வருகின்றன.

*6.3 தொழிற்பேட்டைகள்*

டால்கோ நிர்வாகத்தின் கீழ், மாதவரத்தில் தோல் தொழில்களுக்கென தனித் தொழிற்பேட்டை உள்ளது. தற்பொழுது, சொந்த உரிமை அடிப்படையில் 35 தொழிற்கூடங்கள் தொழில் முனைவோர்களால் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. ஒரு தொழிற்கூடம் 'டால்கோ' நிறுவனத்தினால் வைத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

**6.4 மூலப்பொருள் கொள்முதல்**

இந்நிறுவனம், சிறு தோல் பதனிடுவோருக்கு, இரசாயனப் பொருட்கள் மற்றும் இறக்குமதி செய்யப்பட்ட இரசாயனப் பசைப் பொருள் (Imported Wattle extract) ஆகியவற்றை நியாயமான விலையில் வழங்குகிறது. திண்டுக்கல், ஈரோடு, பேரணாம்பட்டு, வாணியம்பாடி, திருச்சிராப்பள்ளி மற்றும் இராணிப்பேட்டை ஆகிய இடங்களில் 'டால்கோ' நிறுவனத்தின் மூலப் பொருள் வங்கிகள் செயல்பட்டு வருகின்றன.

**6.5 சிறு கைவினைஞர்களுக்கு உதவி**

சிறு கைவினைஞர்களுக்கு உதவிடும் வகையில், பெரம்பூரில் ஒன்றும் சேலத்தில் ஒன்றும் ஆக இரு பொருட்கள் சேகரிப்பு மையங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த மையங்களில் கைவினைஞர்களிடமிருந்து தரமான காலணிகளைச் சேகரித்து சீரான வேலைவாய்ப்பினை அளித்து வருகின்றன. இவ்வாறு சேகரிக்கப்பட்ட பொருட்கள் "டால்கோ" வின் விற்பனைக் கூடங்கள் மற்றும் பொருட்காட்சிகளில் பங்கு பெறுவதன் மூலமாகவும் விற்பனை செய்யப்படுகின்றன. 31-12-1996 வரை பொருட்கள் சேகரிப்பு நிலையங்கள் மூலம் *24.95* இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் வாங்கப்பட்டன.

"டால்கோ" நிறுவனம் இவ்விதம் பெறப்படும் கொள்முதல் அளவினை உயர்த்தி அதே சமயம், சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்கும் திட்டமிட்டுள்ளது.

**6.6. தோல் பதனிடும் தொழில்களுக்கான கழிவுகள் சுத்திகரிப்புக்கான உதவிகள்**

தமிழ்நாட்டில் தோல் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரால் சுற்றுப்புறச் சூழலுக்கு ஏற்படும் கேடு நீண்டகாலம் பிரச்சனையாக இருந்து வருகிறது. கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் ஏற்படுத்தும் தோல் பதனிடும் தொழிற்சாலைகளுக்கு 'டால்கோ' நிறுவனத்தினால் உதவி அளிக்கப்படுகிறது.

வளையம்பட்டு, உதயேந்திரம், பேரணாம்பட்டிலுள்ள பக்கல்பள்ளி, இராணிப்பேட்டை, திண்டுக்கல், திருச்சி, வாணியம்பாடியிலுள்ள



சி. வி. பட்டரை, பேரணாம்பட்டிலுள்ள வி. கோட்டா ஆகிய இடங்களிலுள்ள தோல் தொழிற்சாலைகளிடமிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளை அகற்றுவதற்கு எட்டு பொது சுத்திகரிப்பு மையங்களை அமைத்து டால்கோ மேற்பார்வை செய்கிறது. முதல் ஐந்து நீரி (NEERI) மற்றும் சி.எல்.ஆர்.ஐ. (CLRI) ஆகியவற்றினால் மேற்பார்வை செய்யப்படுகின்றன. கடைசி மூன்று பல்வேறு நிலைகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

மேற்கண்டவை தவிர, இராணிப்பேட்டையிலுள்ள வாணிவேடு செக்டார் ஆம்பூர் சாலை, ஆம்பூர் பெரியவாக்கம், வாணியம்பாடியில் உதயேந்திரம் ஆகிய 3 பொது சுத்திகரிப்பு மையங்களை அமைப்பதற்கு அரசு ஒப்புதலளித்துள்ளது. இத்திட்டங்கள் சென்னை உயர் நீதிமன்றத்தின் ஆணைகளுக்காகக் காத்துள்ளன.

ஊரக மற்றும் சிறுதொழில்களின் வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு (மானியம் எண் 47 மற்றும் 59) பிற்சேர்க்கை II-ல் தரப்பட்டுள்ளன.

**முடிவுரை**

குறுந்தொழில்கள் மற்றும் சிறுதொழில்களின் முலீட்டு அளவை இந்திய அரசு அமையில். முறையே ரூ. 25 இலட்சம் மற்றும் ரூ. 3 கோடி என உயர்த்தியுள்ளது. இந்த முதலீடு உயர்த்தப்பட்ட அளவினால், சிறுதொழில் துறையில் முதலீட்டின் துவக்கத்திலிருந்து அநேக சிறு தொழில்களுக்கு பயன் கிடைக்கும். சிறு தொழிலதிபர்கள், பெரிய தொழிலதிபர்களுடன் சேர்ந்து சந்தையில் சம அளவில் போட்டியிட முடியாத சூழ்நிலை இருந்தது என்பது அனுபவப்பூர்வமாக அறிந்த ஒன்றாகும். எனவே, குறுந்தொழில் மற்றும் சிறுதொழில் துறைகளுக்கு தாராளமாகப் புதிய தொழில்கள் வருவதை ஊக்கப்படுத்தி, அவை வெற்றிகரமாக வளமுடன் திகழ்வதற்கு அனைத்து உதவிகளும் அளிக்க வேண்டுமென்பது பொருளாதாரக் கொள்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொழில் நிறுவனங்கள் வெற்றியின் நுழைவாயிலை நெருங்கும்போது அரசு உதவியின்றி சந்தையில் போட்டியிடுகின்ற நிலையை அடைய முடியும்.

சிறுதொழில்கள் மற்றும் குறுந்தொழில்களின் முன்னேற்றத்திற்குச் சாதகமாகவே, தமிழ்நாட்டின் தொழில் கொள்கை அமைந்துள்ளது.

[1998 ஏப்ரல் 20

முந்தைய பத்திகளில் விளக்கமாகத் தெரிவிக்கப்பட்டவாறு, தமிழ் நாட்டில் சிறு தொழில்கள் மற்றும் குறுந்தொழில்களின் ஊக்கத்திற்கு அடங்கல் தொகுப்பு உதவித் திட்டங்கள் ஏற்கெனவே உள்ளன. இவை படிப்படியாக எல்லா நிலைகளிலும் பரவிச் சென்று, சிறு தொழில்களுக்கு முழுமையாக பயன்படுவதன் மூலம், இவற்றில் வேலைவாய்ப்புகளைப் பெறுகின்ற வறுமைக் கோட்டிற்குக் கீழே உள்ள மக்களின் வாழ்க்கைத் தரம் குறிப்பிடத்தக்க அளவில் முன்னேற்றமடையும் என்பதில் ஐயமில்லை.

## பிற்சேர்க்கை - 1

**1998-99 ஆம் ஆண்டிற்கான பகுதி 2 திட்டங்கள் தொழில் வணிக இயக்ககம், சென்னை - 600 005.**

| வ.எண். | திட்டத்தின் பெயர் | 1998-99-க்குரிய மொத்த மதிப்பு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| | *தமிழ்நாடு சிறு தொழில்கள்* | |
| 1. | தொழில்நுட்ப மையம், சென்னை | 30.00 |
| | *தொழில் முனைவோர் வளர்ச்சித் திட்டம்* | |
| 2. | சென்னை-32-ல் உள்ள தொழில் முனைவோர் மேம்பாட்டு மையத்தில் தமிழ்நாடு முழுவதிலும் உள்ள 1,500 பெண்களுக்குப் பயிற்சி அளித்தலும், கூடுதல் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தலும். | 26.00 |
| 3. | தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் வளர்ந்து வரும் 200 தொழில் முனைவோர்களுக்கு தனிப் பயிற்சியளித்தல். | 8.00 |
| | *சாதனங்கள் (மின்னியல்)* | |
| 4. | காக்களூர் மத்திய மின்னியல் சோதனை ஆய்வுக் கூடத்தை நிலை உயர்த்துதல். | 15.00 |



1998 ஏப்ரல் 20]

| | | |
|---|---|---|
| 5. | மதுரை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் சோதனை வசதிகளை நீட்டித்தல் | 26.00 |
| | *சாதனங்கள் (பகுப்பாய்வு சோதனைக் கூடம்)* | |
| 6. | சென்னை-32, கிண்டியிலுள்ள வேதியல் பரிசோதனை மற்றும் பகுப்பாய்வு சோதனைக் கூடத்திற்குக் கூடுதல் சாதனங்களும் பழையவற்றிற்கு புதிய சாதனங்களும் வாங்கி வலுப்படுத்துதல் | 8.35 |
| 7. | கூடுதல் சாதனங்கள் வாங்குவதன் மூலமும், பழையவற்றிற்குப் பதிலாகப் புதிய சாதனங்கள் வாங்குவதன் மூலமும், கோயம்புத்தூர் வட்டாரப் பரிசோதனை ஆய்வுக் கூடத்தை வலுப்படுத்துதல் | 5.60 |
| 8. | பழைய சாதனங்களுக்குப் பதிலாகப் புதிய சாதனங்களை வாங்குவதன் மூலமும், கூடுதல் சாதனங்கள் வாங்குவதன் மூலமும், சேலம் வட்டாரப் பரிசோதனை ஆய்வுக் கூடத்தை வலுப்படுத்தல் | 1.20 |
| | *கட்டுமானப் பணிகள் மற்றும் சாதனங்கள்* | |
| 9. | விருத்தாசலம், அரசு மட்பாண்டத் தொழிற்பேட்டையில் துளைக் கிணறுகள் தோண்டுதல் | 3.50 |
| 10. | சென்னை, கிண்டியில் உள்ள அரசுத் தொழில் நுட்ப பயிற்சி மையத்தில் ஆழ்துளைக் கிணறு தோண்டுதல் மற்றும் நீரேற்றி அறை ஒன்று கட்டுதல் | 1.60 |
| | *மாவட்ட தொழில் மையங்களை வலுப்படுத்துதல்* | |
| 11. | கரூர் அல்லது பெரம்பலூர் மாவட்டம் தொழில் மையத்திற்காக, வாகனம் ஒன்று வாங்குதல் | 3.25 |
| 12. | நாமக்கல், தேனி, திருவாரூர், திருவள்ளூர், கரூர், பெரம்பலூர் மாவட்டத் தொழில் மையங்களுக்கும் 6 ஒளியச்சு இயந்திரம் வாங்குதல் | 7.57 |

[1998 ஏப்ரல் 20

| | | |
|---|---|---|
| 13. | நாமக்கல், தேனி, திருவாரூர், திருவள்ளூர், கரூர் மற்றும் பெரம்பலூர் ஆகிய 6 மாவட்டத் தொழில் மையங்களுக்கு மோட்டார் சைக்கிள்களுக்கு வகை செய்தல் | 3.60 |
| 14. | விருதுநகர், திருநெல்வேலி, தூத்துக்குடி ஆகிய 3 மாவட்டத் தொழில் மையங்களுக்காக படிபெருக்கி (ரோனியோ) இயந்திரங்கள் வாங்குதல் | 1.08 |
| 15. | சேலம், மதுரை, கோயம்புத்தூர், திருச்சி, விழுப்புரம், காஞ்சிபுரம் ஆகிய 6 மாவட்டத் தொழில் மையங்களுக்கு நிகரி (பேக்ஸ்) சாதனங்கள் வாங்குதல் | 1.50 |
| 16. | தொழில் வணிக இயக்ககத்தின் அதிகாரிகள், பணியாளர்கள் ஆகியோருக்குப் பயிற்சி | 19.32 |
| 17. | கிண்டி, மதுரை, தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள மின் மருத்துவக் கருவிகள் செப்பனிடும் நிலையங்களை செயல்படுத்துதல் | 16.00 |
| | *கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்துதல் :* | |
| 18. | சென்னை-32-ல் உள்ள, சென்னை தொழில் கூட்டுறவு பகுப்பாய்வு ஆய்வுக் கூடத்தை விரிவுபடுத்தலும் நவீனப்படுத்தலும் | 10.00 |
| 19. | திண்டுக்கல் பூட்டுத் தயாரிப்புத் தொழிலாளர்கள் தொழிற்கூட்டுறவுச் சங்கம் நவீனப்படுத்துதல் | 10.00 |
| 20. | சென்னை-5 சேப்பாக்கத்தில் உள்ள தொழில் வணிக இயக்ககத்தின் தகவல் விவர மேலாண்மையை வலுவாக்கம் செய்தல் | 2.08 |
| | மொத்தம் | **200.15** |



1998 ஏப்ரல் 20]

## அட்டவணை 1 (அ)

### ஊரக மற்றும் சிறுதொழில்களுக்குரிய வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு

### மானியக் கோரிக்கை எண் 47

| கணக்குத் தலைப்புகள் | | 1997-98 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 1997-98 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1998-99 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் ஆயிரத்தில்) |
| 2059 | பொதுப் பணிகள் | 10.75 | 11.75 | 10.75 |
| 2551 | மலைப் பகுதி | 2 | 2 | 2 |
| 2851 | கிராமம் மற்றும் சிறு தொழில்கள் | 26,96.23 | 29,59.31 | 31,83.78 |
| 2852 | தொழில்கள் | 3,68.53 | 3,88.23 | 5,64.29 |
| 2885 | கனிமங்கள் மற்றும் தொழில்கள் மீதான இதர முதலீடுகள் | 48,23.78 | 61,55.78 | 48,43.78 |
| | மொத்தம் | **78,99.31** | **95,15.10** | **86,02.62** |

[20 ஏப்ரல் 1998

## அட்டவணை 1 (ஆ)

### ஊரக மற்றும் சிறுதொழில்களுக்குரிய வரவு-செலவுத் திட்ட ஒதுக்கீடு

### மானியக் கோரிக்கை எண் 59

| கணக்குத் தலைப்புகள் | | 1997-98 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 1997-98 ஆம் ஆண்டின் திருத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 1998-99 ஆம் ஆண்டின் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | | | (ரூபாய் ஆயிரத்தில்) |
| 4425 | மூலதன முதலீடு | 3.06 | 3.00 | 10.04 |
| 4551 | மலைப் பகுதிகளின் மூலதன முதலீடு | 3 | 3 | 3 |
| 4851 | கிராமம் மற்றும் சிறு தொழில்களின் மீதான முதலீடுகள் | 1,00.33 | 1,00.31 | 14.62 |
| | மொத்தம் | **1,03.42** | **1,03.34** | **24.69** |



20 ஏப்ரல் 1998]

## இணைப்பு-3

**(373 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)**

### பட்டு வளர்ச்சித் துறை

### 1998-99 கொள்கை விளக்கக் குறிப்பு:

குடிசை மற்றும் ஊரகத் தொழில்கள் வளர்ச்சியை ஊக்குவிப்பதே தமிழக அரசின் முக்கியக் கொள்கையாகும். இத் தொழிலானது நல்ல வருமானத்தை நல்குவதோடு நில்லாமல் கிராமப்புற ஏழைகளில் குறிப்பாக பெண்கள் மற்றும் ஆதிதிராவிடர்களுக்கு போதுமான அளவு வேலை வாய்ப்பினையும் அளிக்கிறது. இக்காரணங்களுக்காகவே தமிழக அரசு பட்டுத் தொழிலை பெரிய அளவில் நமது மாநிலத்தில் அபிவிருத்தி செய்வதற்குப் பலவிதமான திட்டங்கள் மூலம் தொடர்ந்து உதவியளித்து வருகிறது.

02. இம்மாநிலத்தில் பட்டு வளர்ச்சி முன்னேற்றத்திற்காக கீழ்க்கண்ட பணிகள் பட்டு வளர்ச்சித். துறையால் செயல்படுத்தப்படுகின்றன:

அ. வீரிய மல்பரி ரகங்களை பயிரிடுமாறு விவசாயிகளை ஊக்குவித்தல்;

ஆ. மல்பரி சாகுபடி, பட்டுப்புழு வளர்ப்பு, பட்டு நூற்பு மற்றும் விதைக்கூடு உற்பத்தி ஆகியவற்றில் தொழில்நுட்ப பயிற்சியளித்தல்;

இ. நிதி நிறுவனங்களில் கடனுதவி பெற்று, புழு வளர்ப்பு மனை கட்டவும் மற்றும் பட்டுப்புழு வளர்ப்பு உபகரணங்கள் வாங்கவும் பட்டு விவசாயிகளுக்கு உதவியளித்தல்;

ஈ. தரமான. நோயற்ற பட்டு முட்டைகளை பட்டு விவசாயிகளுக்கு விநியோகித்தல்;

உ. பட்டுப்புழு வளர்ப்பில் முறையான நோய்த் தடுப்பு முறைகளை கடைபிடித்து தரமான பட்டுக்கூடுகளை உற்பத்தி செய்யவும், விவசாயிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் தேவையான தொழில் நுட்ப ஆலோசனைகள் வழங்குதல்;

ஊ. பட்டுக்கூடு மற்றும் நூலுக்கான நியாயமான விலையினை பட்டுக்கூடு அங்காடிகளில் போட்டி விலை மூலம் கிடைக்கத் தேவையான வசதிகளை செய்து தருதல்: மற்றும்

[1998 ஏப்ரல் 20

எ. பட்டு நூற்பு மற்றும் முறுக்கேற்றும் அலகுகளைத் தனியார் மற்றும் கூட்டுறவு அமைப்புகள் மூலம் நிறுவுவதற்கு உதவுதல்.

**03. 1998-99 ஆம் ஆண்டுத் திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவிருக்கும் இயல்பு குறியீடுகள் பின்வருமாறு:**

அ. பல்வேறு திட்டங்கள் மூலம் 5060 ஏக்கர் பரப்பளவில் மல்பரி சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஆ. கலப்பின பட்டுக் கூடுகளை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு வழங்க 204.67 லட்சம் நோயற்ற பட்டு முட்டைகள் உற்பத்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இ. நமது மாநிலத்தில் 81.87 லட்சம் கிலோ அளவுள்ள கலப்பின பட்டுக் கூடுகள் உற்பத்தி செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

ஈ. 862 மெட்ரிக் டன் கச்சாப் பட்டு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

உ. கூடுதல் வேலைவாய்ப்புப் பெருக்கமானது 26,316 மனித நாட்களாக இருக்கும்.

**04. பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

இம்மாநிலத்தில் செயல்படுத்தப்படும் பெரும்பான்மையான பகுதி மேம்பாட்டுத் திட்டங்களிலும் பட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன. பல்வேறு திட்டங்களின்கீழ் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றம் மற்றும் 1998-99 ஆம் ஆண்டுக்கான செயல்திட்டம் ஆகியவை பின்வருமாறு:

**04.1 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

நீலகிரி மாவட்டத்தில் இத்திட்டம் கடந்த 1981-82ம் ஆண்டு முதல் செயல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் புதிய விவசாயிக்கு கீழ்க்கண்ட உதவிகள் அளிக்கப்படுகின்றன:

அ. 75% மானிய விலையில் உயர்ரக மல்பரி நாற்றுக்கள் ஒரு பயனாளிக்கு ரூ. 375 வீதம் மானிய உதவி.

ஆ. பயிற்சி பெறும் ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 500 உதவித் தொகை.



1998 ஏப்ரல் 20]

இ. ரூ. 500 மதிப்புக்கு இலவச பயிற்சி உபகரணங்கள்.

ஈ. ரூ. 2500 மதிப்புள்ள அடிப்படை புழு வளர்ப்புச் சாதனங்கள் ஆகியவற்றை இலவசமாகப் பெற்று பயனடைந்து வருகின்றனர்.

உ. கல்விச் சுற்றுலா செல்ல ஒரு விவசாயிக்கு ரூ. 800 வீதம். 1998-99ம். ஆண்டில் 4.675 லட்சம் மதிப்பீட்டில் 100 பட்டு விவசாயிகள் பயனடைய திட்டமிடப்பட்டுள்ளது.

**04.2. மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தித் திட்டம்**

1. கோயம்புத்தூர்
2. திண்டுக்கல்
3. தேனி
4. விருதுநகர்
5. திருநெல்வேலி
6. கன்னியாகுமரி

ஆகிய மாவட்டங்களில் மேற்குத் தொடர்ச்சிமலை அபிவிருத்தி திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.. இத்திட்டத்தில் கீழ்க்காணும் உதவிகள் புதிய பட்டு உற்பத்தியாளர்களுக்கு அளிக்கப்படுகிறது:

1. 25% மானிய விலையில் உயர்ரக மல்பரி நாற்றுக்கள் ஒரு விவசாயிக்கு ரூ. 125 வீதம்.

2. பயிற்சி உதவித் தொகையாக ரூ.500 ஒவ்வொரு விவசாயிக்கும்

3. இலவசமாக ரூ. 500 மதிப்பிற்கு பயிற்சி உபகரணங்கள்.

4. இலவசமாக ரூ. 2500 மதிப்புள்ள அடிப்படை புழு வளர்ப்புச் சாதனங்கள் ஆகியவற்றை 0.25 ஏக்கர் பர்ப்பில் மல்பரி பயிரிடும் பட்டு விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் அரசு உதவி.

5. பட்டுத் தொழில் மேன்மையாக செயல்படும் பகுதிகளுக்கு புதிய விவசாயிகளை தலா ரூ. 821 செலவில் கல்விச் சுற்றுலா அழைத்து செல்லல்.

[1998 ஏப்ரல் 20

1998-99 ஆம் ஆண்டில் மேலும் ரூ. 32.40 இலட்சம் செலவில் 560 விவசாயிகள் 140 ஏக்கர் பரப்பளவில் கூடுதலாக மல்பரி பயிரிட உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் 12 புதிய தொழில் முனைவோர்களுக்கு பயிற்சி அளித்து அவர்கள் மூலம் கோயம்புத்தூரில் ஒரு பட்டு நூற்பு தொழிற்பேட்டையை நிறுவவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**04.3 ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்**

இத்திட்டத்தின்கீழ் பட்டு வளர்ச்சித் திட்டங்கள் கீழ்க்கண்ட மலைப்பகுகளில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன:

1. நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை.

2. சேலம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களிலுள்ள கல்ராயன் மலைகள்.

3. திருச்சி மற்றும் சேலம் மாவட்டங்களிலுள்ள பச்சை மலைகள்.

4. திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது மலை.

5. வேலூர் மாவட்டத்தில் உள்ள ஜவ்வாது, ஏலகிரி மலைகள்.

6. சேலம் மாவட்டத்தில் உள்ள அறுநூத்து மலை.

7. சேலம் மாவட்டத்திலுள்ள ஏற்காடு மலை.

இத்திட்டத்தின்கீழ் மலைவாழ் விவசாயிகள் பட்டு வளர்ப்புத் தொழிலை மேற்கொள்வதற்காக கீழ்க்கண்ட உதவிகள் ஒவ்வொரு விவசாயிக்கும் அளிக்கப்பட்டு வருகின்றன:

1. ஒவ்வொரு விவசாயிக்கும் ரூ. 750 மதிப்பிற்கு மானிய விலையில் மல்பரி நாற்றுக்கள் வழங்குதல்.

2. பயிற்சி உதவித் தொகையாக ரூ. 500.

3. இலவசமாக ரூ. 500 மதிப்புக்கு பயிற்சி உபகரணங்கள்.

4. புழுவளர்ப்பு மனைகட்ட 75 சதவிகித மானியத்துடன், அதாவது மொத்தக்கடன் தொகையான ரூ. 10,000-ல் 75 சதவீத மானியமாக ரூ. 7,500 வழங்கப்படுமாறு வகை செய்யப்பட்டுள்ளது. இக்கடன் தொகை "லாம்ப்" சங்கம் மூலம் விடுவிக்கப்படும்.



1998 ஏப்ரல் 20]

5. ரூ. 2,500 பெறுமானமுள்ள அடிப்படை புழு வளர்ப்புத் தளவாடங்கள் இலவசமாக வழங்கப்படும்.

6. பட்டுத் தொழில் மேன்மையாக செயல்படும் பகுதிகளுக்கு விவசாயிகளை தலா ரூ. 815 செலவில் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லல்.

7. ஒவ்வொரு விவசாயிக்கும் இரசாயன உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் ரூ. 600 மதிப்பிற்கு வழங்குதல்.

1998-99 ஆம் ஆண்டு 760 பழங்குடியினர் பயனுக்காக ரூ. 96.98 இலட்சம் செலவு செய்ய திட்டம் வரையப்பட்டுள்ளது.

**05. அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரம் :**

பட்டுத் தொழில் வளர்ச்சியானது பட்டு நூற்பு பிரிவு வளர்ச்சியடைவதையே சார்ந்துள்ளது. எனவே கச்சாப்பட்டிற்கு போட்டி விலையினை ஏற்படுத்துவதனை நோக்கமாகக் கொண்டு, அண்ணா பட்டு பரிமாற்றகம், காஞ்சிபுரத்தில் 1991-ல் நிறுவப்பட்டுள்ளது. கச்சாப் பட்டின் தரத்தைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக மத்திய பட்டு வாரியம் "பட்டுத் தர நிர்ணயம் மற்றும் சோதனை" அலகு ஒன்றினை காஞ்சிபுரத்தில் ஏற்படுத்தி பட்டு நூற்பாளர்களுக்கு ஒருங்கிணைந்த பட்டு பரிசோதனை வசதிகளை வழங்கி வருகிறது. தமிழக பட்டு நூற்பாளர்களிடையே தரமான கச்சாப்பட்டு உற்பத்தியினை முறைப்படுத்தும் நோக்கத்துடன் மத்திய பட்டு வாரியமானது ஊக்கத் தொகை திட்டம் ஒன்றையும் செயல்படுத்தி வருகிறது. காஞ்சிபுரத்திலுள்ள அண்ணா பட்டு பரிமாற்றகத்திலும் கணிப்பொறி நிறுவப்பட்டு பரிமாற்றக செயல்பாடுகள் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளது.

சேலத்தையும் சேர்த்து வாணியம்பாடி, கோவை, தருமபுரி ஆகிய இடங்களிலுள்ள பட்டுக்கூடு அங்காடிகள் கணிப்பொறி மயமாக்கப்பட்டுள்ளன. இந்த நவீன வசதி வரும் ஆண்டுகளில் ஓசூர், பென்னாகரம், கிருஷ்ணகிரி, ஈரோடு முதலிய 4 பெரிய அங்காடிகளில் ஏற்படுத்தப்பட உள்ளது.

[1998 ஏப்ரல் 20

**06. டான்சில்க் காஞ்சிபுரம் :**

தரமான பட்டு பாவுகளையும், ஊடை ரகங்களையும் வழங்கி உரிய விலையில் நுகர்வோர்களின் தேவையை பூர்த்தி செய்யும்பொருட்டு 'டான்சில்க்' நேர்த்தியாக செயல்பட அனைத்துத் தொடர் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1998-99-ல் டான்சில்க்கானது ரூ.75.00 கோடி மதிப்பிற்கான 500 மெட்ரிக் டன் அளவிற்கு பட்டு நூல் ரகங்களை கொள்முதல் செய்து பட்டு நெசவாளர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**07. 1998-99 புதிய திட்டங்கள் (பகுதி 2 திட்டங்கள்)**

1998-99 ஆம் ஆண்டில் ரூ. 50.75 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் பகுதி இரண்டு திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளன.

| வ.எண். | திட்டத்தின் பெயர் | மொத்த மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | சிறு பட்டு நூற்பாளர்களுக்கு உதவியளித்தல் | 5.250 |
| 2. | மல்பரி விரிவாக்கம் | 8.000 |
| 3. | பயிற்சி | 7.500 |
| 4. | சொட்டுநீர் பாசனம் | 20.000 |
| 5. | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 10.000 |
| | மொத்தம் | **50.750** |

08. 1998-99 ஆம் ஆண்டிற்குச் செயல்படுத்தப்படவிருக்கும் தொடர் திட்டங்களுக்கு ரூ. 1762.27 இலட்சம் தேவைப்படும் என திட்டமிடப்பட்டுள்ளது. இந்த ஒதுக்கீட்டில் சிறப்பு மத்திய நிதியுதவி திட்டம் சேர்க்கப்படவில்லை.



1998 ஏப்ரல் 20]

1998-99 ஆம் ஆண்டிற்கான திட்ட மதிப்பீடு

| | திட்டப்பணிகள் | (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|
| **அ.** | **பகுதி-1** | |
| அ. | திட்டம் சாரா பணிகள் | 1702.58 |
| ஆ. | தன்னாட்சி நிறுவனங்களின் நிதியுதவி | 2.27 |
| இ. | பட்டு கூட்டுறவுச் சங்கங்களுக்கு நிதி உதவியளித்தல் | 6.67 |
| **ஆ.** | **பகுதி-2** | |
| அ. | சிறு பட்டு நூற்பாளர்களுக்கு உதவியளித்தல் | 5.25 |
| ஆ. | மல்பரி விரிவாக்கம் | 8.00 |
| இ. | பயிற்சி | 7.50 |
| ஈ. | சொட்டு நீர்ப்பாசனம் | 20.00 |
| உ. | ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி | 10.00 |
| | மொத்தம் | **1762.27** |

**09. 'செரி 2000'**

சுவிஸ் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்துடன் நடந்த கலந்துரையாடலின்போது தமிழ்நாட்டில் 'செரி 2000' என்னும் பட்டு வளர்ச்சித் திட்டத்தை 5 ஆண்டுகளுக்குச் செயல்படுத்தத் தேவையான நிதியுதவியை வழங்க ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டங்கள் 1998-99 ஆம் ஆண்டிலிருந்து செயலாக்கப்படும். மகளிர் மற்றும் கிராமப் பகுதிகளில் நலிவுற்ற பட்டு விவசாயிகளைக் கொண்டு தர நிர்ணயக் குழுக்களை ஏற்படுத்தி, பட்டுத் தொழிலில் உற்பத்தித் திறனையும், தரத்தையும் மேம்படுத்தி நிலைப்படுத்துவதே இத்திட்டத்தின் முக்கியக் குறிக்கோளாகும்.

[1998 ஏப்ரல் 20

**0.10. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்:**

(அ) ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் பட்டு வளர்ச்சித் திட்டப்பணிகளை பட்டுத் தொழிலுக்கு வாய்ப்புள்ள மாவட்டங்களான தர்மபுரி, சேலம், நாமக்கல், வேலூர், ஈரோடு மற்றும் கோவை மாவட்டங்களில் ரூ. 6083.21 இலட்சம் மதிப்பீட்டில் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் ரூ. 950.00 இலட்சம் வங்கிக் கடனும், ரூ. 120.00 இலட்சம் பயனாளிகள் பங்கும் அடங்கும்.

**(ஆ) மத்திய பட்டு வாரியத்துடன் இணைந்து செயல்படுத்த உள்ள முனைப்புத் திட்டங்கள்:**

மத்திய பட்டு வாரியத்தால் தேர்வு செய்யப்பட்டுள்ள 18 பட்டு வளர்ச்சித் திட்டங்களில், வாய்ப்புள்ள 10 திட்டங்களைத் தமிழகத்தில் செயல்படுத்த பிரேரணைகள் ரூ. 299.412 இலட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு, மத்திய பட்டு வாரியத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இதில் ரூ. 205.44 இலட்சம் மத்திய பட்டு வாரியத்தின் பங்காகவும், ரூ. 87.00 இலட்சம் தமிழக அரசின் பங்காகவும் அமையும். மேலும் ரூ. 6.972 இலட்சம் திட்டத்தில் பயன்பெறும் பயனாளிகளின் பங்காக அமையும்.

**தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், சென்னை**

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் கீழ்க்காணும் முக்கிய குறிக்கோள்களுடன் 1973 ஆம் ஆண்டு துவக்கப்பட்டது.

1. தமிழக கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு நிரந்தர சந்தை வாய்ப்பை ஏற்படுத்தித் தருதல்.

2. முறையான பயிற்சியின் மூலமாகக் கைவினைஞர்களின் பாரம்பரியத் தொழில் திறனை மேம்பாடடையச் செய்தல்.

3. கைவினைப் பொருட்களின் உற்பத்தித் திறனையும், தரத்தினையும் மேம்படுத்துவதற்குத் தேவையான உரிய தொழில் நுட்பத்தினை வளர்த்திடும் அதே நேரத்தில், அத்தொழிலில் உள்ள உற்சாகமற்ற கடின உழைப்பைக் குறைத்து, தொழில்முறை இடர்பாடுகளைக் களைய பாடுபடுதல்.



1998 ஏப்ரல் 20]

4. வடிவமைப்புகளில் புதுமையினை மேம்பாடு அடையச் செய்தல்.

5. கைவினைஞர்களுக்கு சமூக மற்றும் பொருளாதாரப் பாதுகாப்பு அளித்தல்.

மேற்கூறிய குறிக்கோள்களை அடைவதற்காக, இக்கழகம் சந்தை வாய்ப்பு, உற்பத்தி, பல்வேறு சிறப்புத் திட்டங்களை மேற்கொள்ளுதல் மற்றும் பயிற்சி போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது.

**1. சந்தை:**

அ. தமிழக கைவினைஞர்களால் உருவாக்கப்படும் கைவினைப் பொருட்களுக்கு சீரான சந்தை வாய்ப்பினை ஏற்படுத்துவதற்காக இந்நிறுவனம் (தூத்துக்குடி மற்றும் வேளாங்கண்ணியில் தொடர்ந்து நஷ்டத்தில் இயங்கிவந்த இரண்டு சிறிய விற்பனை நிலையங்களை மூடிவிட்ட பிறகு) தற்சமயம் தமிழகத்தில் 13 விற்பனை நிலையங்களையும், வெளிமாநிலங்களில் 4 விற்பனை நிலையங்களையும் நடத்தி வருகிறது. இங்கு கைவினைப் பொருட்கள் "பூம்புகார்" எனும் புகழ்பெற்ற பெயரில் விற்பனை செய்யப்படுகின்றன. கடந்த 5 ஆண்டுகளில் இக்கழகத்தின் விற்பனை வருமாறு:

| வருடம் | விற்பனை (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|
| 1993-94 | 781.50 |
| 1994-95 | 770.98 |
| 1995-96 | 946.36 |
| 1996-97 | 1058.21 |
| 1997-98 | 1103.04 |

உலக அளவில் தமிழக கைவினைப் பொருட்களுக்கு உள்ள பரந்த சந்தை முக்கியத்துவத்தை உணர்ந்து, இந்நிறுவனம் 1998-99 ஆம் ஆண்டில் விற்பனையினை ரூ. 1400 இலட்சங்கள் என நிர்ணயித்துள்ளது.

[1998 ஏப்ரல் 20

*ஆ. புதிய விற்பனை நிலையங்கள் துவக்குதல்:*

அதிக விற்பனையை எட்டுவதற்கு இந்நிறுவனம் மும்பை, பாண்டிச்சேரி, ஹைதராபாத், திருப்பூர் மற்றும் இதர இடங்களில் விற்பனை நிலையங்களைப் படிப்படியாகத் துவக்கத் திட்டமிட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் ஒரு பகுதியை மத்திய, மாநில அரசு நிதியுதவியுடனும், மீதியை நிறுவனத்தின் சொந்த நிதியிலிருந்தும் மற்றும் அரசுடைமை வங்கிகளிலிருந்தும் கடனுதவி பெற்றும், மும்பை மற்றும் திருப்பூரில் விற்பனை நிலையங்கள் துவக்கப்படவுள்ளது.

*இ. ஏற்றுமதி:*

ஏற்றுமதிச் சந்தையில் கைவினைப் பொருட்களுக்கு இருக்கும் மிகப் பெரிய தேவையினை இந்நிறுவனம் உணர்ந்து, தனது ஏற்றுமதியினை அதிகரிக்க ஆவல் கொண்டுள்ளது. 1996-97 ஆம் ஆண்டில் இந்நிறுவனத்தின் ஏற்றுமதியின் மதிப்பு ரூ. 79.89 இலட்சங்கள். இந்நிறுவனம் 1997-98 ஆம் ஆண்டில் இதைவிட அதிக அளவில் எட்டும் என்ற நம்பிக்கையில், 1998-99 ஆம் ஆண்டில் ஏற்றுமதியினை மேலும் அதிகரித்து ரூ. 150 இலட்சங்களை எட்டத் திட்டமிட்டுள்ளது. ஏற்றுமதிக்கு சிறப்பு முக்கியத்துவம் கொடுத்து, ஏற்றுமதியை அதிகரிக்கத் தேவையான விளம்பரச் சாதனங்களான சித்தேடு, அட்டவணை போன்றவைகள் மத்திய அரசின் நிதியுதவியுடன் அச்சிடப்படும்.

*ஈ. பொருட்காட்சிகள்:*

தமிழகத்தின் கைவினைப் பொருட்களுக்கு அகில இந்திய அளவில் நல்ல தேவை இருப்பினும், நிதி மற்றும் இதர நிர்வாகச் சிக்கல்கள் காரணமாக அனைத்து இடங்களிலும் நிரந்தர விற்பனை நிலையங்களை துவக்குவது இயலாத ஒன்று. எனினும், தமிழக கைவினைப் பொருட்களின் சிறப்பினைப் பறைசாற்றுவதற்காக இந்நிறுவனம் பல்வேறு முக்கிய நகரங்களில், உள்ளூர் விழா நாட்களில் கண்காட்சிகளை நடத்தி வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் விற்பனையினை அதிகரிக்க இந்நிறுவனம் பூனா, ஜெய்பூர், உதய்பூர், ஹைதராபாத், போபால், இந்தூர், கோவா, சண்டிகார், புதுடெல்லி, மும்பை போன்ற முக்கிய நகரங்களில் கண்காட்சிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது.



1998 ஏப்ரல் 20]

**2. உற்பத்தி:**

நாச்சியார்கோயில் உலோக உற்பத்தி நிலையத்தின் செயல்பாட்டினை திறம்பட நிர்வகிப்பதற்காக, சுவாமிமலை உலோக உற்பத்தி நிலையத்துடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு இந்நிறுவனத்தின்கீழ் பல்வேறு வகையான கைவினைப் பொருட்களுக்கென தமிழகத்தின் வெவ்வேறு இடங்களில் தற்போது எட்டு உற்பத்தி நிலையங்கள் உள்ளன. கடந்த 5 ஆண்டுகளில் அனைத்து உற்பத்தி நிலையங்களின் மொத்த உற்பத்தி கீழே குறிப்பிடப்பட்டுள்ளது :

| வருடம் | உற்பத்தி (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|
| 1993-94 | 162.97 |
| 1994-95 | 130.04 |
| 1995-96 | 146.65 |
| 1996-97 | 174.28 |
| 1997-98 | 250.28 |

பெருகிவரும் தேவையினை எதிர்கொள்வதற்கு 1998-99 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் ரூ. 300 இலட்சங்கள் மதிப்பிற்கு பல்வேறு கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்ய திட்டமிட்டுள்ளது. இந்நிறுவனம் பஞ்சலோக சிலைகள் மற்றும் பித்தளை விளக்குகள் போன்ற கூடுதல் மதிப்பு மிகுந்த பொருட்களை உற்பத்தி செய்வதில் அதிகக் கவனம் செலுத்தத் திட்டமிட்டுள்ளது.

**3. சிறப்புப் பணிகள்:**

இந்நிறுவனம் தனது தொடர் முயற்சியின் ஒரு பகுதியாக, பாரம்பரிய கைவினைஞர்களை ஊக்குவிக்கும் பொருட்டு தமிழ்நாட்டில் உள்ள கோவில்களுக்குத் தேவையான தங்கம், வெள்ளி மற்றும் மர இரதம், தேர், கோயில் மணிகள், உண்டியல்கள், பித்தளையிலான தடுப்புகள், வாகனங்கள் மற்றும் கவசப்பணிகள் போன்ற பல்வேறு கோயில்

[1998 ஏப்ரல் 20

பணிகளை ஏற்று, நிறைவேற்றி வருகிறது. இதைத் தவிர, மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை இயக்குநரகத்திற்கும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரகத்திற்கும் பித்தளை சலவைப் பெட்டிகள் செய்து வழங்க வேண்டும் என்ற அரசு ஆணைகளையும் நிறைவேற்றி வருகிறது. கீழ்க்காணும் வெகு பெருமை வாய்ந்த சிறப்புத் திட்டங்களை இந்நிறுவனம் சமீபத்தில் முடித்துள்ளது. அதன் மொத்த திட்ட மதிப்பீடு மற்றும் பணிக்காக இந்நிறுவனம் பெற்ற தொகை விபரம் கீழே தரப்பட்டுள்ளது :

| சிறப்புத் திட்டப் பணி (1) | மொத்த திட்ட மதிப்பீடு (2) | சிறப்புப் பணிகளுக்காக இந்நிறுவனம் ஈட்டிய தொகை (ரூபாய் இலட்சத்தில்) (3) |
|---|---|---|
| 1. புதுடெல்லி, ஸ்ரீவெங்கடேஸ்வரா மந்திருக்கு 40 கொடி மரமும் தேக்கு மர ராஜகோபுர கதவுகளும் செய்து வழங்கியது | 8.33 | 8.33 |
| 2. பெங்களூர் இஸ்கான் கோயில் 5 விமானங்களுக்குச் செப்புத் தகடு போர்த்துதல் | 7.90 | 6.75 |
| 3. 1997-98 ஆம் ஆண்டில் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் ஆதிதிராவிடர் நலத் துறைக்கு 7000 சலவைப் பெட்டிகள் செய்து வழங்கியது | 86.17 | 86.17 |



1998 ஏப்ரல் 20]

கீழ்க்கண்ட சில சிறப்புப் பணிகளில் இந்நிறுவனம் தற்போது கவனம் செலுத்தி வருகின்றது :

| வ. எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | மொத்த திட்ட மதிப்பீடு (3) | சிறப்புப் பணிகளின்படி இக்கழகம் பெறப்பட உள்ள தொகை (4) |
|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சங்களில்) |
| 1. | சென்னை, மாங்காடு அருள்மிகு காமாட்சி அம்மன் திருக்கோயிலுக்கு 16' 6 7/8" உயர தங்கத்தேர் செய்து வழங்குதல் | 122.34 | 24.00 |
| 2. | மருதமலையிலுள்ள அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக் கோயிலுக்கு 16' 6 7/8" உயர தங்க இரதம் செய்து வழங்குதல் | 108.00 | 15.85 |
| 3. | சென்னை மயிலாப்பூரில் உள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் திருக் கோயிலுக்கு 13' 8" உயர தங்க இரதம் செய்து வழங்குதல் | 77.00 | 9.76 |
| 4. | திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்கு 58' 6" உயர மரத்தேர் செய்து வழங்குதல் | 12.70 | 6.88 |
| 5. | கர்நாடக மாநிலத்தில் உள்ள அருள்மிகு குக்கே சுப்பிரமணிய திருக்கோயிலுக்கு 9' 8 7/8" உயர வெள்ளி இரதம் செய்து வழங்குதல் | 32.28 | 11.46 |

[1998 ஏப்ரல் 20

**4. பயிற்சி:**

*அ. புதிய கைவினைஞர்களை உருவாக்குவதற்கான பயிற்சித் திட்டங்கள்*

கைவினைப் பொருட்களின் உற்பத்தியில் கிடைக்கும் குறைந்த வருவாயின் காரணமாக, கைவினைஞர்களின் தற்போதைய சந்ததியினர் பழமை மற்றும் பாரம்பரிய கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்வதைவிட்டு அதிக வருவாய் ஈட்டக்கூடிய தொழில்களில்/ வேலைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பழமை வாய்ந்த கலைகள் நலிவடைந்து வருகின்றன. எனவே அனைத்துக் கலைகளிலும் கைவினைப் பொருட்கள் தயாரிப்பினைப் பயில ஆர்வமுள்ள இளம் சந்ததியினருக்குப் பயிற்சி வழங்குவதற்கு இதுவே தக்க தருணமாகும். 1997-98 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் கீழ்க்கண்ட கலைகளில் ஓராண்டு பயிற்சித் திட்டத்தினை நடத்தி உள்ளது :

| வரிசை எண் | திட்டத்தின் பெயர் | திட்டச் செலவு | பயன் பெற்றவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | சந்தன மரச் சிற்பத்தில் பயிற்சி, கள்ளக்குறிச்சி | ரூ. 30,000/- | 10 பயிற்சி யாளர்கள் |
| 2. | பித்தளை விளக்குகள் உற்பத்தியில் பயிற்சி, வாகைகுளம் | ரூ. 15,000/- | 5 பயிற்சி யாளர்கள் |
| 3. | கோயில் இரதம் உற்பத்தி பயிற்சி, திருநெல்வேலி | ரூ. 24,000/- | 8 பயிற்சி யாளர்கள் |
| 4. | உலோக சிற்பத்தில் பயிற்சி, சுவாமிமலை | ரூ. 33,000/- | 11 பயிற்சி யாளர்கள் |
| 5. | பித்தளை விளக்குகள் உற்பத்தியில் பயிற்சி, நாச்சியார்கோவில் | ரூ. 36,000/- | 12 பயிற்சி யாளர்கள் |

மேற்கண்ட ஐந்து திட்டங்களும் இந்நிறுவன சொந்த நிதியிலிருந்து செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



1998 ஏப்ரல் 20]

கோயில் இரதங்களுக்குப் பரந்த முக்கியத்துவம் உள்ளதால் இக்கலையின் உற்பத்திக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வருகிறது. 1998-99 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் கலைகளில் பயிற்சி அளிக்க இக்கழகம் திட்டமிட்டுள்ளது :—

1. பஞ்சலோக சிலைகள்
2. பித்தளை விளக்குகள் மற்றும் வெண்கலப் பொருட்கள்
3. சந்தன மரச் சிற்பங்கள்
4. கோயில் இரதங்கள் உற்பத்தி
5. கற்சிற்பங்கள்
6. தகட்டு வேலைகள்
7. தஞ்சாவூர் கலைத்தட்டுகள் மற்றும் அதைச் சார்ந்த பொருட்கள்
8. காகிதக் கூழ் பொம்மைகள்

*ஆ. கைவினைஞர்களுக்கு நவீனமுறை உற்பத்தியில் பயிற்சி அளித்தல்.*

தமிழ்நாட்டில் உள்ள பெரும்பாலான கைவினைஞர்கள் தங்களுடைய உற்பத்தித் திறன் மற்றும் திறம்பாடு ஆகியவற்றை அதிகரிக்கக்கூடிய நவீன கருவிகளைப் பற்றி அறிந்திருக்கவில்லை. ஆகவே இந்நிறுவனம் கைவினைஞர்கள் பயன்படுத்தக்கூடிய நவீன கருவிகளை மத்திய அரசு உதவியுடன் வாங்கி, அவற்றை கைத்திறன் வளர்ச்சி மையம் மூலமாக அவர்கள் உபயோகித்துக்கொள்ள ஏற்பாடு செய்துள்ளது. நவீன கருவிகளை கையாளும் முறையை விளக்கும் பொருட்டு கைவினைஞர்களுக்கு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகிறது. இந்நிறுவனம் புதுடில்லி, வளர்ச்சி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) அலுவலக நிதி உதவியுடன் கள்ளக்குறிச்சியில் கைத்திறன் வளர்ச்சி மையத்தினை நிறுவி, இதன் மூலம் மேம்பட்ட வடிவமைப்பு மற்றும் நவீன கருவிகளை வழங்க வழிவகை செய்ததன் மூலம் ஏறக்குறைய 60 கைவினைஞர்கள் பயன்பெற்று வருகிறார்கள். மேலும் 1997-98 ஆம் ஆண்டில் இந்நிறுவனம் பஞ்சலோக சிலைகள் உற்பத்தியில் ஆர்வமுள்ள கைவினைஞர்களைத் தேர்வு செய்து பெங்களூரிலுள்ள மண்டல வடிவமைப்பு நிலையத்திற்குப் பயிற்சிக்கு அனுப்பியதன் மூலம், அவர்களின் தொழிலறிவை வளப்படுத்திக் கொள்ளவும், அதேசமயம் தரமான பொருட்களை அதிக அளவில் உற்பத்தி செய்து, வருவாயை

[1998 ஏப்ரல் 20

அதிகரித்துக் கொள்ளவும் வழிவகை செய்துள்ளது. இதன் மூலம் ஒன்பது கைவினைஞர்கள் பயனடைந்துள்ளனர். இப்பயிற்சி இனிவரும் காலங்களிலும் தொடரும்.

### இ. வடிவமைப்பைப் புனைதல்:

வாடிக்கையாளர்களின் தேவைகள் அடிக்கடி மாறிக்கொண்டே வருவதால் புதிய வடிவமைப்புகளைப் பாரம்பரிய திறன் மூலம் செயல்படுத்துவதே சிறந்த வழியாகும். புதிய வடிவமைப்புகளுக்கான தொழிலறிவைத் தெரிந்து கொள்வதற்காக இந்நிறுவனம் பெங்களூரிலுள்ள மண்டல வடிவமைப்பு நிலையத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட உள்ளது. மேலும் பாரம்பரிய மற்றும் புதுமை வடிவமைப்புகளை வெளிப்படுத்துவதன் மூலம் கலையை நேசிப்பவர்களின் எண்ணங்களைப் பூர்த்தி செய்ய கலை மற்றும் கலைப்பொருட்களில் மேம்பட்ட பெருந்தகையாளர்களுடன் தொடர்பு கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இது தவிர பஞ்சலோகம், பித்தளை விளக்குகள், தஞ்சை கலைத்தட்டுகள் மற்றும் நெட்டிவேலை ஆகிய கைவினைப் பொருட்களுக்கான வடிவமைப்பு நிலையம் ஒன்றினைத் தஞ்சாவூரில் நிறுவ இந்நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

## 5. கைவினைஞர்களுக்கு சமூகப் பொருளாதார பாதுகாப்பு அளித்தல்:

### அ. மாநில விருதுகள்:

தமிழக கலைகளில் புதிய வடிவமைப்புகளை உருவாக்க கைவினைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் ஆண்டுதோறும் மாநில விருதுப் போட்டிகளை இந்நிறுவனம் நடத்தி வருகிறது. விருதுக்காக பெறப்பட்ட பொருட்களில் 5 கலைப்பொருட்கள் வல்லுநர்களால் தேர்வு செய்யப்பட்டு, அப்பொருட்களை உருவாக்கியவர்களுக்கு ரூ. 5000/- ரொக்கப் பரிசும், ஒரு வெள்ளிப்பதக்கமும் மற்றும் சான்றிதழும் வழங்கப்படுகிறது. இப்போட்டியில் விருது பெற்றவர்கள் 65 வயதை அடைந்தவுடன் மத்திய அரசின் ஓய்வூதியத்தைப் பெற தகுதியுடையவர் ஆவார்கள்.



1998 ஏப்ரல் 20]

### ஆ. கைவினைப் பொருட்கள் பற்றிய கணக்கெடுப்பிற்கான சிறப்புத் திட்டம்

தமிழகத்தின் கிராமங்களிலுள்ள கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்யும் நலிவுற்ற கைவினைஞர்களை, குறிப்பாக, தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியினரை அடையாளம் காண, மாநில மற்றும் மத்திய அரசு நிதியுதவியுடன் கைவினைஞர்களைப் பற்றிய கணக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. அரசின் நிதியுதவி ஒப்புதல் பெற்றவுடன் இப்பணி தொடங்கப்படும்.

பெருவாரியான கைவினைஞர்கள் தங்களின் உறைவிடங்களிலேயே கைவினைப் பொருட்களை உற்பத்தி செய்து வருகின்றனர். இத்தகைய கைவினைஞர்களுக்கு அவர்களின் உறைவிடங்களுக்கு அருகிலேயே சிறிய தொழிற்கூடங்களை அமைத்துக் கொள்ளும் திட்டத்தினை இந்நிறுவனம் மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி தேர்வு செய்யப்படும் கைவினைஞர் ஒவ்வொருவருக்கும் மத்திய அரசின் மானியமான ரூ. 4000/- வழங்கப்படும். வாகைகுளத்தில் 60 கைவினைஞர்களும், கள்ளக்குறிச்சியில் 31 கைவினைஞர்களும் இத்திட்டத்திற்கென தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு அரசு மானியம் அளிக்கப்பட்டுள்ளது.

## 6. செயல்பாடு அறிக்கை:

பங்கு மூலதன அமைப்பு:

| வ.எண் | மூலதனப் பங்குத்தொகை | ரூபாய் இலட்சங்களில் |
|---|---|---|
| 1. | தமிழ்நாடு அரசு | 146.69 |
| 2. | மத்திய அரசு | 104.00 |
| 3. | கைவினைஞர்கள் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் | 0.70 |
| | மொத்தம் | **251.39** |

1990-91-லிருந்து தொடர்ந்து இலாபம் ஈட்டியதன் மூலம் ஒட்டுமொத்த நட்டமாகிய ரூ. 161.00 இலட்சத்தை ஏறக்குறைய ஆறு ஆண்டு காலத்திற்குள் சரி செய்துள்ளது. இந்நிறுவனம் 1996-97 ஆம்

ஆண்டில் 48.97 இலட்சங்களை நிகர இலாபமாக ஈட்டியது. 1997-98 ஆம் ஆண்டில், ரூ. 1103.04 இலட்சங்களுக்கு விற்பனை செய்து ரூ. 37.25 இலட்சங்களை இலாபமாக ஈட்டியது.

**7. பகுதி இரண்டாம் திட்டம் 1998-99:**

மாநில அரசின் திட்டக்குழு மற்றும் தமிழக அரசு கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கென ரூ. 25.00 இலட்சங்களை பங்குமூலதனமாக இந்நிறுவனத்திற்கு அளிக்க அங்கீகரித்துள்ளது ;

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மாநில அரசின் மூலதனப் பங்கு (ரூபாய் இலட்சங்களில்) |
|---|---|---|
| 1. | சுவாமிமலையில் பஞ்சலோக சிலை உற்பத்தி நிலையத்திற்கென கட்டடம் கட்டுதல் | 10.00 |
| 2. | திருப்பூரில் விற்பனை நிலையம் துவக்குதல் | 4.50 |
| 3. | கோயம்புத்தூரிலுள்ள பூம்புகார் விற்பனை நிலையத்தில் முதல்மாடி கட்டுமானப்பணி | 3.00 |
| 4. | சந்தனமர உற்பத்தி நிலையத்திற்கு கள்ளக்குறிச்சியில் கட்டடம் கட்டுதல் | 5.50 |
| 5. | கைத்திறத் தொழிலில் தேர்ச்சி பெற்ற வல்லுநர்கள் மற்றும் அரசினர் கலை மற்றும் கைத்தொழில் கல்லூரித் துணையுடன் இதழ் வெளியிடுவது உட்பட ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செய்தல் | 2.00 |
| | மொத்தம் | **25.00** |

**8. ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டம்:**

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் (1997-98—2001-2002) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விற்பனையை அதிகரிக்கச் செய்யவும், அதேநேரத்தில் நமது மாநில கைவினைஞர்கள் பயன்பெறும் வகையிலும், பல்வேறு திட்டங்களை அபிவிருத்தி ஆணையர் (கைவினைப் பொருட்கள்) புதுடெல்லி மற்றும் தமிழக அரசு நிதியுதவியுடனும் செயல்படுத்த இக்கழகம் திட்டமிட்டுள்ளது.



## இணைப்பு - 4

(445 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கொள்கையும் திட்டங்களும் 1998-99

கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினைத் துரிதப்படுத்தி, நல்ல முன்னேற்றம் அடையச் செய்யும் நோக்கத்துடன், 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் கதர் கிராமத் தொழில் வாரியம் துவக்கப்பட்டது. குறைந்த மூலதனத்தில் நலிவுற்ற மக்களுக்காக அவரவர் இருப்பிடங்களிலேயே தமிழ்நாடு முழுவதும் நிறுவப்பட்டுள்ள கதர் வாரிய அலகுகள் மூலம் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலையாய நோக்கமாகும். அதுபோன்றே, கிராமத் தொழில்களிலும் ஆங்காங்கே கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு, கிராம கைவினைஞர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே குறைந்த மூலதனத்தில் கிராமத் தொழில்களை மேம்படுத்தி வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவதே வாரியத்தின் நோக்கமாகும். இந்த நோக்கங்களைக் கருத்தில் கொண்டு திட்டமிடுதல், ஒருங்கிணைத்தல் மற்றும் உரிய திட்டங்களை மாநிலம் முழுவதும் செயல்படுத்துதல் ஆகியன இவ்வாரியத்தின் முக்கியப் பணிகளாகும்.

2. மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 115 கிராமத் தொழில்களில் 59 கிராமத் தொழில்களையும் மற்றும் கதர் தொழில்களையும் வாரியம் மூன்று வகையாகப் பின்வருமாறு செயல்படுத்துகிறது :

| | | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | வாரியத்தின் சொந்த தொழில் பிரிவுகள் | 1,370 |
| 2. | வாரியம் பதிவு செய்த தொழில் கூட்டுறவு அமைப்புகள் | 1,783 |
| 3. | கதர்கிராமத் தொழில் ஆணைக்குழு அளிக்கும் வழிகாட்டு முறைகளின்படி நிதியுதவி அளிக்கப்பட்ட கைவினைஞர்கள் | 88,116 |

[1998 ஏப்ரல் 20

3. கதர் தொழில்கள் மற்றும் உண்ணா எண்ணெய், சோப்பு தொழில் ஆகியவை வாரியத்தின் அலகுகள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. பருப்பு மற்றும் தானிய வகைகள், நார், சுண்ணாம்பு, பிரம்பு மற்றும் மூங்கில் ஆகிய தொழில்கள் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனிநபர் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன. ஏனைய அனைத்து தொழில்களும் வாரியத்தின் தொழிற் பிரிவுகள் தொழிற் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனிநபர் மூலமாகச் செயல்படுத்தப்படுகின்றன.

**கதர்**

4. 756 கிராமிய நூற்பு மையங்கள் மற்றும் 87 கதர் உற்பத்தி நிலையங்கள் வாரியத்தின்கீழ் செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற் பிரிவுகள் மூலம் 48,430 கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. அவர்களுள் 35,760 பேர் மகளிர் ஆவர். 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 15.00 கோடி மதிப்பிற்கு கதர் உற்பத்தி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டது.

கடந்த கால அனுபவத்தின் அடிப்படையிலும், தற்போதைய வாரியக் கொள்கையின்படியும், அதிக அளவு கனத்த கதர் ரகங்களை உற்பத்தி செய்வதைவிட, நல்லதரமுள்ள மெல்லிய மற்றும் பாலியஸ்டர் போன்ற விற்பனைக்கு உகந்த கதர் ரகங்களை உற்பத்தி செய்ய வாரியம் முடிவு செய்துள்ள நிலையில் 1998-99 ஆம் ஆண்டில், ரூ. 10.00 கோடி மதிப்புள்ள கதர் ரக உற்பத்திக்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

5. நூற்பாளர்களுக்கு அதிக கூலி வழங்கிட வேண்டி தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் 8 கதர் இராட்டைகளை கீழ்க்கண்ட இடங்களில் அமைத்துச் செயல்படுத்தி வருகிறது:—

1. காதக்கோட்டை .. ஈரோடு மாவட்டம்
2. பெருமாநல்லூர் .. கோவை மாவட்டம்
3. கீரனூர் .. திண்டுக்கல் மாவட்டம்
4. பண்டாரான்செட்டிவிளை .. தூத்துக்குடி மாவட்டம்
5. சேவப்பூர் .. கரூர் மாவட்டம்



1998 ஏப்ரல் 20]

**கதர்ப்பட்டு**

6. வாரியம் 34 பட்டு உற்பத்தி நிலையங்களை நடத்தி வருகிறது. 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 25.00 கோடி மதிப்பிற்கு பட்டு உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டது. தமிழ்நாடு மற்றும் வட மாநிலங்களில் அதிகரித்து வரும் பட்டு ரகங்கள் தேவையை நிறைவேற்றும் பொருட்டு 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 27.00 கோடி மதிப்புள்ள கதர்ப் பட்டு ரகங்கள் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

7. மேலும் வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் கறை தவிர்க்கும் பட்டு சேலைகளை வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது. தமிழ்நாடு அரசு பகுதி II திட்டத்தின் கீழ் பட்டு நெசவாளர்களுக்கு வடிவமைப்பு அட்டைகளையும் "ஜாங்கு" சாதனங்களையும் வழங்கியதால் வாடிக்கையாளர்களை கவரும் வகையில், வாரியம் பல்வேறு நவீன வடிவமைப்புகளில் சேலைகளை உருவாக்க முடிந்தது. இதனால் கதர்ப்பட்டு சேலைகள் நுகர்வோரை கவர்ந்து அதன் பயனாக விற்பனை அதிகரித்துள்ளது.

8. பட்டு நெசவாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 15% கூலி உயர்வும், இதர மாவட்டங்களில் 10% கூலி உயர்வும் 1-1-1998 முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

**கதர் பாலியஸ்டர்**

9. தற்போது கதர் பாலியஸ்டர் துணிகளின் தேவை மிகவும் அதிகரித்துள்ளது. இதனால் 1997-98 ஆம் ஆண்டில் ரூ. 6.00 கோடிக்கு பாலியஸ்டர் உற்பத்தி செய்ய திட்டமிடப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டில் ரூ. 7.00 கோடிக்கு பாலியஸ்டர் உற்பத்தி செய்யவும் வாரியம் திட்டமிட்டுள்ளது.

**சாயச் சலவை மற்றும் அச்சிடும் அலகு**

10. வாரியத்தின்கீழ் பவானிசாகர், தாராபுரம், திருப்பூர், புதுப்பை, ஜலகண்டபுரம் மற்றும் தஞ்சாவூர் ஆகிய இடங்களில் ஆறு சாய சலவை அச்சு அலகுகள் இயங்கி வருகின்றன. வாரியம் இவ்வலகுகளில் உற்பத்தியை அதிகரிப்பதுடன் தொழிலாளர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பை அளிக்கவும் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

[1998 ஏப்ரல் 20

**நடமாடும் பழுதுபார்க்கும் அலகு**

11. வாரியத்தின் கீழ் மாநிலம் முழுவதும் 756 கிராமிய நூற்பு நிலையங்கள், 87 கதர் உற்பத்தி நிலையங்களுக்கு உதவுவதற்காக நூல் உற்பத்தியைச் செய்து வருகிறது. கிராமப்புறங்களில் செயல்படும் இராட்டைகளை உடனுக்குடன் செவ்வனே பழுதுபார்க்கவும், பராமரிப்பு மேற்கொள்ளவும் ஏதுவாக அரசு 1997-98 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் நடமாடும் பழுதுபார்க்கும் அலகினை நிறுவ ரூ. 10.00 லட்சம் அனுமதி அளித்துள்ளதால் அப்பணிக்காக ஒரு நடமாடும் ஊர்தி வாங்கப்பட்டுள்ளது. இராட்டைகளை அந்தந்த இடங்களிலேயே அவ்வப்போது பழுதுபார்க்கத் தேவையான உபகரணங்களை வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**பஞ்சுடைக்கும் அலகு நவீனப்படுத்துதல்**

12. சூலூரில் இயங்கிவரும் பஞ்சுடைக்கும் அலகினை நவீனப்படுத்தும் பொருட்டு, இரண்டு சிம்ப்ளக்ஸ் இயந்திரங்களை ரூ. 25.00 லட்சம் செலவில் கொள்முதல் செய்து நிறுவிட மாநில அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தின் செயலாக்கம் முடியும் தருவாயிலுள்ளது. இவ்வியந்திரங்கள் தரமுள்ள நல்ல பஞ்சுபட்டைகளை உற்பத்தி செய்வதன் மூலம் கிராமிய நூற்பு நிலையங்களில் தரமான நூல் உற்பத்தி செய்ய ஏதுவாகி அதிகப்படியான உற்பத்திக்கும், கூலிக்கும் உதவிடும்.

**நெசவாளர்கள் மற்றும் நூற்போர் நலத் திட்டம்**

13. வாரியம், நெசவாளர்கள் மற்றும் நூற்போர்க்கான நலநிதி திட்டத்தினை வகுத்துள்ளது. மற்றும் நூற்போர் ஊதியத்திலிருந்து 10 விழுக்காட்டுத் தொகையினை பிடித்தம் செய்து அதற்கு ஈடாக வாரியம் தனது பங்காக 10 விழுக்காட்டுத் தொகையினையும் வழங்கி வருகிறது. இந்நலநிதித் தொகை நூற்போர் மற்றும் நெசவாளர் நலனுக்குப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், இத்துடன் நூற்போர் மற்றும் நெசவாளர்கள் ஊதியத்தில் 10 விழுக்காட்டுத் தொகையினை ஊக்குவிப்புத் தொகையாகவும் வாரியம் வழங்கி வருகிறது.

14. பழைய தறிகளை நவீனப்படுத்தும் பொருட்டு 500 கதர் நெசவாளர்களுக்கு தேவைப்படும் கருவிகளைக் கொள்முதல் செய்ய



1998 ஏப்ரல் 20]

தலா ரூ. 1,500 வீதம் ரூ. 7.50 லட்சம் மான்யம் அரசு வழங்கியுள்ளது. இந்த உபகரணங்களால் தறிகளை நவீனப்படுத்தி மேம்படுத்துவதன் மூலம் உற்பத்தியினைப் பெருக்க இது உதவும். மேலும், 600 பட்டு நெசவாளர்களுக்கு, நபர் ஒருவருக்கு இரண்டு ஜக்கார்டு பெட்டிகள் வீதம் வழங்க ரூ. 7.20 லட்சம் அரசு அனுமதி அளித்துள்ளது. இதுதவிர, 1,000 பட்டு நெசவாளர்களுக்கு நபர் ஒன்றுக்கு மூன்று வகை டிசைன் அட்டைகள்/ஜாங்குகள் வழங்கி ரூ. 3.00 லட்சம் அரசு அனுமதி அளித்துள்ளது. இம்மான்யம் டிசைன் அட்டைகளை குறைந்த செலவில் நெசவாளர்கள் வாங்கிக்கொள்ள உதவியாக அமைந்துள்ளது. (அதாவது அரசின் பங்கு ரூ. 300-ம் + நெசவாளர்களின் பங்கு ரூ. 100 ஆகும்.) அரசின் மான்யம் இல்லையெனில், நெசவாளர்கள் டிசைன் அட்டைகள் தயாரிக்க மிக அதிக அளவில் செலவு செய்ய நேரிடும்.

15. வாரிய நூற்பாளர்/நெசவாளர் இறந்தால் அவர்களது வாரிசுதாரர்களுக்கு வாரியத்திலிருந்து ரூ. 10,000 கருணைத் தொகை வழங்கிடும் திட்டத்தையும் வாரியம் 01-11-1996 முதல் அறிமுகப்படுத்தியுள்ளது.

**கதர் மற்றும் பட்டு ரக விற்பனைக்கான தள்ளுபடி**

16. விழாக்காலங்களில் ஓர் ஆண்டிற்கு 10 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடி கதர் மற்றும் பட்டு ரகங்களின் விற்பனைக்கு 90 நாட்களுக்கும் கதர் பாலியஸ்டர் துணி விற்பனைக்கு 60 நாட்களுக்கும் அரசு அனுமதிக்கிறது. கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு, பருத்தி, கதர், கம்பளி மற்றும் பாப்டா ரகங்களின் விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 10 விழுக்காடு விற்பனைத் தள்ளுபடியும், விழாக்காலங்களில் கதர், பட்டு மற்றும் பாலியஸ்டர் ரகங்களுக்கு 90 நாட்களுக்கு 10 விழுக்காடு சிறப்பு விற்பனை தள்ளுபடியும் அனுமதிக்கிறது.

17. சுதந்திரதின பொன்விழா ஆண்டினை முன்னிட்டு 1997-98 ஆம் ஆண்டில் 15-8-1997 முதல் 14-8-1998 முடிய உள்ள காலத்திற்கு தமிழ்நாடு அரசு, கதர் ரகங்களுக்கு 15 விழுக்காடு சிறப்பு தள்ளுபடிக்கு அனுமதி அளித்துள்ளது. கதர் கிராமத் தொழில் ஆணையமும், கதர் ரகங்களுக்கு 15 விழுக்காடு சிறப்புத் தள்ளுபடியை கதர், பட்டு, உல்லன் மற்றும் பாலியஸ்டர் ரகங்களுக்கு 15-8-1997 முதல் 14-8-98 முடிய உள்ள 365 நாட்களுக்கு அளித்துள்ளது. இதனைத் தவிர

[1998 ஏப்ரல் 20

2-10-97 முதல் 14-8-1998 முடிய உள்ள விழாக்காலங்கள் மற்றும் தேசியத் தலைவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மொத்தம் 90 நாட்களுக்கு கூடுதல் சிறப்பு தள்ளுபடி 10 விழுக்காடு இந்த ஆணையம் அளித்துள்ளது.

18. அதன்படி ஆண்டு முழுவதும் 30 விழுக்காடு தள்ளுபடியும், விழாக்காலங்கள் மற்றும் தேசியத் தலைவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மொத்தம் 90 நாட்களுக்கு 40 விழுக்காடு தள்ளுபடியும் வழங்கப்படுகிறது. இதனால், கடந்த ஆண்டில் ரூ. 24.36 கோடியாக இருந்த விற்பனை இந்த ஆண்டில் ரூ. 34.65 கோடியாக உயர்ந்துள்ளது.

**கிராமத் தொழில்கள்**

19. ஊரகப் பகுதியில் கிடைக்கின்ற மூலப் பொருட்களையும், மனித சக்தியையும் பயன்படுத்தி ஊரகப் பகுதியில் வறுமையை அகற்றுவதற்கு இவ்வாரியம் கிராமத் தொழில் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. குறைவான மூலதனத்தில் கூடுதல் வேலை வாய்ப்பு அளிப்பது கிராமத் தொழில் திட்டங்களின் தனிச் சிறப்பாகும்.

20. இவ்வாரியத்தின் கீழ் 243 துறை அலகுகள் செயல்படுகின்றன. 1,783 கிராம தொழிற் கூட்டுறவு சங்கங்கள் பதிவு செய்யப்பட்டு செயல்படுகின்றன. இதுவரை 88,116 தனிப்பட்ட கைவினைஞர்களுக்கு சொந்தமான தொழில் தொடங்கிட நிதியுதவி அளித்துள்ளது. 1997-98-ல் கிராமத் தொழில் பொருட்கள் (பனைத் தொழில் பொருட்கள் நீங்கலாக) உற்பத்தி மற்றும் விற்பனைக்கு முறையே ரூ. 260.00 கோடி மற்றும் ரூ. 278.70 கோடி ஆக இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. 1998-99 ஆம் ஆண்டில் கிராமத் தொழில் பொருட்களின் உற்பத்தி மற்றும் விற்பனை முறையே ரூ. 275.00 மற்றும் ரூ. 295.00 கோடிக்கு உயர்த்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

**தோல் தொழில்**

21. மிகுந்த ஏழ்மையில் வாழும் கைவினைஞர்களுக்காக கூடுதலான வேலைவாய்ப்பு அளிக்கும் தொழில்களில் தோல் தொழில் முதலிடம் வகிக்கிறது. வாரியம், காலணிகள் தயாரிக்கும் 27 அலகுகளை ஏற்படுத்தியுள்ளது. இந்த அலகுகளின் மூலம் காவலர், ஊர் காவலர் முதலியோருக்கு அம்யூனிஷன் பூட்ஸ், ஷூக்கள், பேருந்து



1998 ஏப்ரல் 20]

நடத்துநர்களுக்கு தோல் பைகள், காலணிகள் பிறதோல் பொருட்களை தயாரித்து விநியோகம் செய்கிறது. ஒப்புக்கொள்ளப்பட்டத் திட்டத்தின்கீழ் 14,329 தனி நபர்களுக்கு வாரியம் நிதி உதவியினை வழங்கியுள்ளது.

**மட்பாண்டத் தொழில்**

22. மட்பாண்டத் தொழில் மிகவும் பழமை வாய்ந்த ஒன்றாகும். வாரியத்தால் ஒப்புக்கொள்ளப்பட்டத் திட்டத்தின்கீழ் 14,947 தனி நபர்களுக்கு நிதி உதவியை இத்தொழிலுக்காக வழங்கியுள்ளது. மெருகு மட்பாண்டங்கள் மற்றும் அழகு வண்ண மட்பாண்டப் பொருட்கள் ஆகியவை வாரியத்தின் கீழ் இயங்கும் திருவள்ளூர் மாவட்டம் செவ்வாப்பேட்டை, கடலூர் மாவட்டம் விருத்தாசலம் மற்றும் வீரபெருமாநல்லூர் மற்றும் திருநெல்வேலி மாவட்டம் காருக்குறிச்சி ஆகிய இடங்களில் அமைந்துள்ள 4 துறை அலகுகளில் தயாரிக்கப்படுகின்றன. இவ்வகை தயாரிப்புகளுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

**கைமுறைக் காகிதத் தொழில்**

23. தேவையற்ற பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்டு தரமான பொருட்களைத் தயாரிக்கும் நோக்கத்துடன் கைமுறைக் காகித தொழில் கதர் ஆணைக்குழு அட்டவணையின் கீழ் சேர்க்கப்பட்டு இருக்கிறது. வாரியத்தின் கீழ் 20 கைமுறை காகித அலகுகள் இயங்கி வருகின்றன. இவ்வலகுகள் மூலம் உற்பத்தியாகும் பொருட்கள் அரசின் எழுதுபொருள் அச்சுத்துறை, நீதித்துறை மற்றும் அரசு துறைகளின் தேவையை பூர்த்தி செய்கின்றன. வாரியம் இத்தொழிலை நவீனப்படுத்தி உற்பத்தியை அதிகரிக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதன் ஆரம்பமாக பிடாகம் கைமுறை காகித அலகில் பகுதி II திட்டத்தில் 1997-98 ஆம் ஆண்டிற்கு ரூ. 10.00 இலட்சம் செலவில் உருளை வார்ப்பட முறைப்படி நவீனப்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மகேந்திரமங்கலம் கைமுறை காகித அலகு மூலம் தயாரிக்கப்பட்ட கைக்காகித பைகள் புதுமையான ஒன்றாகும். இது விழாக்காலங்களில் பட்டுப் புடவை வாங்கும் வாடிக்கையாளர்களை கவர்வதுடன், வாரிய கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்களுக்கான விளம்பரமாகவும் மிகப் பெரிய அளவில் பயன்படுகிறது.

[1998 ஏப்ரல் 20

## உணவு சாரா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில்

24. கதர் வாரியத்தின் கிராமத் தொழில்களில் சோப்புத் தொழில் மிக முக்கியமான ஒன்றாகும். வாரியத்தின் கீழ் 37 சோப்பு அலகுகள் இயங்கி வருகின்றன. கோபுரம் மார்க் சலவை சோப்பு உற்பத்தியைத் தவிர, துணை உற்பத்தியாக இரண்டு வகையான சலவைத் தூள் மற்றும் சலவை கட்டியையும் உற்பத்தி செய்கிறது.

25. வாரியம் நடப்பு ஆண்டில் பெயர் பெற்ற நிறுவனங்களின் முத்திரைத் தரத்திற்கேற்ப போட்டியிட்டு விற்பனை செய்யக் கூடிய வகையில் நல்ல தரமுள்ள 4 புதிய குளியல் சோப்புகளை அதாவது வேம்பு, சந்தனம், கார்பாலிக் மற்றும் வெள்ளை சோப்பு ஆகியவற்றை தயாரித்துள்ளது. இப்புதிய சோப்புகளின் அறிமுகத்தின் விளைவாக குளியல் சோப்பு விற்பனையில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் குளியல் சோப்பு மற்றும் சலவை சோப்புகளின் விற்பனையை கூடுதலாக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

26. மேலும், வாரியம் தனது சோப்பு அலகுகளின் தேவைக்கும் மற்றும் வெளிச் சந்தைக்குமாக இரண்டு அமிலக் கலவை உற்பத்தி அலகுகளை நடத்தி வருகிறது. இவ்விரு அமிலக்கலவை அலகுகளில் தயாரிக்கப்படும் திரவ சோப்பு, பால் பண்ணைகள் மற்றும் போக்குவரத்துக் கழகங்களின் தேவைக்கு நல்ல வரவேற்பு உள்ளது. சலவை சோப்பின் தரத்தை மேலும் உயர்த்தும் வகையில் தற்போதுள்ள முறையை மேலும் நவீனப்படுத்தி உற்பத்தி செய்திட வாரியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

## குளியல் சோப்பு அலகுகளை நவினப்படுத்துதல்

27. தஞ்சாவூர் மாவட்டம் நாஞ்சிகோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் காந்தலூரில் உள்ள குளியல் சோப்பு அலகுகளை ரூ. 20.00 இலட்சம் செலவில் நவீனப்படுத்திட திட்டம் வகுக்கப்பட்டது. 1997-98 ஆம் ஆண்டில் முதல் கட்டப் பணிகள் ரூ. 10.00 இலட்சம் செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. எஞ்சிய பணிகள் ரூ. 10.00 இலட்சம் செலவில் 1998-99 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின் கீழ் செயல்படுத்தப்படவுள்ளன.



1998 ஏப்ரல் 20]

## தேன் பதப்படுத்தும் அலகு நிறுவும் திட்டம்

28. தற்போது கையாளப்படும் பழமையான முறையினை மாற்றி விஞ்ஞான முறைப்படி தேன் பதப்படுத்துவதற்காக ரூ. 17.00 இலட்சம் ஒட்டுமொத்த செலவில் கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டத்தில் ஒரு தேன் பதப்படுத்தும் அலகு நிறுவ உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் தேனின் ஈரப்பதம் வெகுவாகக் குறைக்கப்பட்டு தேன் நீண்ட நாட்கள் உபயோகப்படும் தரத்தில் இருக்கும். 1997-98 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கான அலகின் கட்டுமான பணிக்கு ரூ. 5.00 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது. 1998-99 ஆம் ஆண்டில் எஞ்சிய திட்ட செலவு ரூ. 12.00 இலட்சம் எந்திர தளவாடங்கள் வாங்கி நிறுவிடுவதற்காகச் செலவிடப்படும்.

## விற்பனை அங்காடிகள்

29. (1) *கதர் அங்காடிகள்:* தமிழ்நாட்டில் 234 கதர் அங்காடிகள் செயல்படுகின்றன. இக்கதர் அங்காடிகளில் வாரியத்தின் மூலம் உற்பத்தி செய்யப்படும் கதர் மற்றும் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

(2) *கிராம சில்பாக்கள்:* தமிழ்நாட்டில் 16 கிராம சில்பா நிலையங்கள் செயல்படுகின்றன. இந்நிலையங்களில் கதர் மற்றும் கிராமப் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

(3) *தோல் பொருட்களின் விற்பனை நிலையங்கள்:* தமிழ்நாட்டில் 15 தோல் பொருட்கள் விற்பனை நிலையங்கள் செயல்படுகின்றன. இந்நிலையங்களில் தோல் பொருட்கள் மட்டும் விற்பனை செய்யப்படுகின்றன.

30. 1997-98 ஆம் ஆண்டு கதர் விற்பனைக்கு ரூ. 50.00 கோடி எனவும், கிராமத் தொழில் பொருட்கள் விற்பனைக்கு ரூ. 278.70 கோடி எனவும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது.

31. 1998-99 ஆம் ஆண்டில் கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை முறையே ரூ. 55.00 கோடி மற்றும் ரூ. 295.00 கோடி என இலக்கு நிர்ணயம் செய்து செயல்படுத்தப்படவுள்ளது.

[1998 ஏப்ரல் 20

**பகுதி II திட்டம் (புதிய திட்டங்கள்)**

32. 1998-99 ஆம் ஆண்டில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அரசின் நிதியுதவியுடன் கீழ்க்கண்ட புதிய திட்டங்களை பகுதி II திட்டத்தின்கீழ் செயல்படுத்த கருதியுள்ளது:—

| வ.எண் | திட்டத்தின் பெயர் | தொகை திட்ட மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | மாவட்டங்களில் களப்பணி அலுவலர்களுக்கு புதிய ஈப்புகள் வழங்குதல் | 9.00 |
| 2. | வாரிய மத்திய அலுவலகத்திற்கு தானியங்கி தமிழிலான மின்னணு மென் கணிப்பொறி நிறுவிடுதல் | 5.00 |
| 3. | நெசவாளர்களுக்கு அச்சு மற்றும் விழுதுகள் வழங்குதல் | 5.25 |
| 4. | பட்டு உபகிளைக்கு மின் நிறைவுடன் கூடிய பட்டு நூல் பிழியும்/உலர் இயந்திரம் வழங்குதல் | 2.00 |
| 5. | பழைய இராட்டைகளுக்குப் பதிலாக 8 கதிர் இராட்டைகள் மாற்றுதல் | 9.00 |
| 6. | நேபாளி தறி அலகுகளை நவீனமயமாக்குதல் | 3.00 |
| 7. | தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் குறளகம், கதர் அங்காடியை நவீனப்படுத்தும் முகனாக மின் பணப் பதிவேடு அவசரகால மின் விளக்குகள், ஐஸ்கிரீம் இயந்திரம் போன்றவை வழங்குதல் | 15.00 |
| 8. | கைமுறை காகிதம் மற்றும் இதர கதர் பொருட் களுக்கு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சிக்கான திட்டம் | 1.20 |
| 9. | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்திற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தித் திட்டம் | 10.00 |
| | மொத்தம் | **59.45** |

700 கைவினைஞர்கள் இத்திட்டங்களின் செயல்பாடு மூலம் பயனடைவர்.



1998 ஏப்ரல் 20]

**கிராமத் தொழில்கள் மூலம் ஒருங்கிணைந்த பழங்குடியினர் நல மேம்பாட்டுத் திட்டம்**

33. பழங்குடியினரின் நலனுக்காகவும், அவர்களின் பொருளாதார மேம்பாட்டுக்காகவும் சில திட்டங்களை தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தெரிவு செய்துள்ளது. தேனீ வளர்ப்பு பழங்குடியினரின் குடும்பங்களுக்கு நல்ல வருவாயைக் கொடுக்கக்கூடிய ஒன்றாகும். கடுக்காய் பதப்படுத்துதல், புளி பதப்படுத்துதல், பாய் பின்னுதல், பிரம்பு மற்றும் மூங்கில் கூடைகள் செய்தல், புங்கம் எண்ணெய் பிழிந்தெடுத்தல் போன்ற பழங்குடியினரின் நலத் துணைத் திட்டங்கள், அவர்களின் முன்னேற்றத்திற்காக செயல்படுத்தப்படுகின்றன. இந்த திட்டம் தொடங்கப்பட்ட நாளிலிருந்து இதுவரையில் ரூ. 511.13 இலட்சம் அளவுக்கு 8231 பழங்குடியினருக்கு வாரியம் உதவி செய்துள்ளது.

**மைய அரசு ஏற்கும் திட்டங்கள்**

**மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டம்**

34. இத்திட்டத்தின் கீழ், தேன் தொழில் அபிவிருத்தி செய்தல், எலுமிச்சை புல் எண்ணெய் மற்றும் நீலகிரி தைலம் வடிகட்டுதல், பாய், பிரம்பு மற்றும் மூங்கில் தொழில்களுக்கு நிதி உதவி செய்தல் போன்ற திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டத்தில் ரூ 69.34 இலட்சம் நிதி உதவி மூலம் 3717 நபர்கள் பயன் அடையும் வகையில் வடிகலன்கள், தேனீப்பெட்டிகள், கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. 1998-99 ஆம் நிதி ஆண்டில் 495 பழங்குடி கைவினைஞர்கள் ரூ.20.80 இலட்சம் நிதி உதவியில் பயனடையும் வகையில் திட்டங்களை செயலாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

35. 1975-76 ஆம் ஆண்டு முதல் நீலகிரி மாவட்டத்தில் இயற்கையையே நம்பியிருக்கும் மலைவாழ் மக்களுக்கு வேலைகளுக்கான வாய்ப்புகளை வாரியம் உருவாக்கித் தந்திருக்கிறது. வாரியம் 1996-97 முடிய 5686 நபர்கள் பயனடையும் வகையில் ரூ.163.94 இலட்சம் செலவில் பல்வேறுதிட்டங்களை செயல்படுத்தியுள்ளது.

36. 1997-98 ஆம் ஆண்டில் 200 நபர்களுக்கு வடிகலன்கள், தேனீப் பெட்டிகள் மற்றும் குடியேறுதல் மானியம் வழங்குவதற்காக ரூ.14.80

[1998 ஏப்ரல் 20

இலட்சம் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1998-99ஆம் ஆண்டில் 300 தொழில் கைவினைஞர்கள் பயன் அடையும் வகையில் வடிகலன்கள், தேனீப்பெட்டிகள், உபகரணங்களுடன் வழங்க ரூ.17.73 லட்சம் நிதியுதவி அளித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**வேளாண்மை வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதி உதவித் திட்டம்**

37. வேளாண்மை வளர்ச்சிக்கான பன்னாட்டு நிதியுதவி திட்டங்கள் சேலம், தருமபுரி, மதுரை, விழுப்புரம் மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் சமூகத்தில் மகளிர் மதிப்பை உயர்த்திடும் வகையில் மகளிர் மதிப்பு சுய பொருளாதார தேவைக் குழுக்கள் கிராமங்களில் அமைத்து இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தினை நிறைவேற்றுவதில் வாரியப் பணியாளர்களும் ஈடுபட்டு வருகின்றனர்.

**சிறப்பு மைய நிதியுதவி**

38. ஆதி திராவிட கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் பொருட்டு தோல், தேனீவளர்ப்பு, பிரம்பு மற்றும் மூங்கில், தச்சு மற்றும் கருமார் போன்ற பல்வேறு திட்டங்கள் தீட்டப்பெற்று சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதுவரை 37,317 ஆதி திராவிட கைவினைஞர்கள் ரூ. 27.07 கோடி சிறப்பு மைய நிதியுதவியின் கீழ் பயனடைந்துள்ளனர்.

**வாரியத்தின் நிதிநிலை**

39. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கதர் நிதி மற்றும் கிராமத் தொழில் நிதி என்ற இருவகைத் தலைப்பின் கீழ் வரவு-செலவு திட்டங்களைத் தயாரிக்கிறது.

40. பல்வேறு கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டங்களை செயல்படுத்த நிதி உதவியினை மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி உதவி கொள்கையின்படி அனுமதித்து வருகிறது.



1998 ஏப்ரல் 20]

41. ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம் 1997-98-ன் படி மும்பை கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு, இம்மாநில வாரியத்திற்கு கீழ்க்கண்ட நிதியுதவிகளை ஒதுக்கியுள்ளது.

| திட்டத்தின் பெயர் | கதர் ஆணைக் குழுவின் நிதி | | வங்கிநிதி | | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| | மான்யம் | மூலதனக் கடன் | நடை முறை கடன் | மூலதனக் கடன் | |
| | (ரூ. இலட்சத்தில்) | | | | |
| கதர் கிராமத் தொழில்கள் (தொடர்ச்சி திட்டம்) | 38.36 | - | 155.33 | 1708.83 | 1902.52 |
| (பகுதி நடைமுறைப் படுத்தப்பட்டது) | 9.77 | 100.00 | .. | .. | 109.77 |
| மொத்தம் .. | **48.13** | **100.00** | **155.33** | **1708.83** | **2012.29** |

42. அத்துடன் மாநில அரசால் ஒப்படைக்கப்படும் பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி நிறைவேற்ற மாநில அரசிடமிருந்து வாரியம் நிதியுதவி பெற்று வருகிறது. மாநில அரசால் வழங்கப்பட்டுள்ள நிதியுதவி பற்றிய விவரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன :

| | | திருத்திய மதிப்பீடு 1997-98 | திட்டமதிப்பீடு 1998-99 |
|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 1. | நிகர செலவு மான்யம் | 1976.38 | 606.38 |
| 2. | தணிக்கைக் கட்டணம் | 120.00 | 120.00 |
| 3. | கதர் விற்பனை தள்ளுபடி | 1479.00 | 1000.00 |
| 4. | சிறப்புத் திட்டங்களை செயல்படுத்துவதற்காக | 120.68 | 146.32 |
| | மொத்தம் .. | **3696.06** | **1872.70** |

[1998 ஏப்ரல் 20

## தமிழ்நாடு பனைப் பொருள் வளர்ச்சி வாரியம்
## 1998-99 ஆம் ஆண்டிற்கான கொள்கைகளும் திட்டங்களும்

43. தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியம் 6-1-1995 முதல் செயல்பட்டு வருகிறது. நலிவுற்ற ஏழை பனைத் தொழிலாளர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளித்து, அவர்களது பொருளாதார நிலையை உயரச் செய்வதே இவ்வாரியத்தின் முக்கிய நோக்கமாகும். மாநில மற்றும் மாவட்ட சம்மேளனங்கள் மூலம் கூட்டுறவு சங்கங்கள் நிறுவி, பனைத் தொழிலாளர்களுக்கு சுயதொழில் துவங்க நிதி உதவிகள் வழங்கப்பட்டு வருகிறது. கிராமப் பகுதியில் உள்ள பனைத் தொழிலாளர்கள் முன்னேற்றம் அடைய பகுதி-II திட்டத்தின்கீழ் சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் பனைத் தொழிலில் நவீன தொழில் நுணுக்கங்களைப் புகுத்தி, பொருட்கள் உற்பத்தி செய்ய பனைத் தொழிலாளர்களுக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது. பல்வேறு பனைப் பொருட்கள் மாநில மற்றும் 7 மாவட்ட சம்மேளனங்கள் மூலம் உற்பத்தி செய்யப்பட்டு, மாநிலத்தில் உள்ள பனைப் பொருள் விற்பனை அங்காடிகளின் மூலம் விற்பனை செய்யப்படுகின்றது.

44. தமிழக பனைத் தொழிலில் தற்போது பனைவகை உண்பொருட்களான பதநீர், பனைவெல்லம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு மற்றும் பனஞ்சர்க்கரை கொண்டு தயாரிக்கப்படும் பால்வகைகள், இனிப்பு சாக்லேட் வகைகள், பனைஓலைப்பொருட்கள், பனைநார்பொருட்கள், பனந்தும்பு, பனந்தும்பினால் செய்யப்பட்ட தூரிகைகள், பல்வேறுவகையான ஈச்சங்கூடைகள் மற்றும் இதர வகையான கைவினைப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. அரசின் பொதுப் பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித் துறைகளுக்கு விதைப்பிற்காக பனைவிதைகள் விநியோகம் செய்யப்படுகின்றன.

**உற்பத்தி**

45. 1998-99 ஆம் ஆண்டில் ரூ.150.00 இலட்சம் மதிப்புள்ள பனைப் பொருட்கள் உற்பத்தி செய்திட குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**விற்பனை**

46. பனைப் பொருட்களை உரிய காலத்தில் விற்பனை செய்ய பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் 1998-99 ஆம் ஆண்டிற்கு ரூ.180.00 இலட்சம் மதிப்புள்ள பனைப்



1998 ஏப்ரல் 20]

பொருட்களை விற்பனை செய்திட குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

**வேலைவாய்ப்பு**

47. பனைத் தொழிலில், தமிழகம் முதன்மை வகித்து வருகிறது. 1998-99ஆம் ஆண்டில் ஆறு இலட்சம் தொழிலாளர்களுக்கு பனைத் தொழிலில் வேலைவாய்ப்பு அளித்திட திட்டமிடப்பட்டுள்ளது.

**பனந்தும்பு ஏற்றுமதி**

48. தூத்துக்குடியிலுள்ள மாநில இணையத்தின் தும்பு ஏற்றுமதி கிளையின் மூலம் வெளிநாடுகளுக்கு பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டு வருகிறது. 1996-97ஆம் ஆண்டில் ரூ.112.15 இலட்சம் மதிப்புள்ள பனந்தும்பு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. 1997-98-ஆம் ஆண்டில் தும்பு ஏற்றுமதி செய்வதற்கான குறியீடாக ரூ.200.00 இலட்சம் நிர்ணயிக்கப்பட்டு, அதில் இதுவரை ரூ.35.00 இலட்சம் மதிப்புள்ள தும்பு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது. மேலும் 1998-99ஆம் ஆண்டில் ரூ.200.00 இலட்சம் அளவு மதிப்புள்ள பனந்தும்பினை ஏற்றுமதி செய்திட திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

**வளர்ச்சிப் பணிகள்**

49. 1998-99 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ள பல்வேறு திட்டங்களின் விவரங்கள் பின்வருமாறு :—

| வ.எண் | திட்டத்தின் பெயர் | செலவுத்தொகை (ரூ. இலட்சத்தில்) |
|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் மாவட்ட சம்மேளனத்தின் கீழ் உள்ள கலிக்கநாயக்கன்பாளையம் பனஞ்சீனி ஆலையை புனரமைத்தல் | 3.00 |
| 2. | கன்னியாகுமரி மாவட்டம், குளச்சலில் ஆரம்ப தும்பு சுத்திகரிப்பு பிரிவு ஆரம்பித்தல் | 3.00 |
| 3. | புதிய பனை வகை பொருட்கள் உற்பத்தி செய்தல் | 5.00 |
| 4. | பனங்கன்றுகள் நாற்றங்கால் தொடங்குதல் | 2.00 |
| 5. | பனைத் தொழில் ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி | 2.00 |
| | மொத்தம் | **15.00** |

[1998 ஏப்ரல் 20

**பனைத் தொழிலில் பயிற்சிகள்**

50. பனைத் தொழிலினை புதிய சமுதாயத்தினர் பயின்று, ஆர்வத்துடன் பனைத் தொழில் செய்திட முன்வர ஏதுவாக, அரசின் ஊரக வளர்ச்சித் துறையின் சுய வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் கிராம இளைஞர்களுக்கு புதிய தொழில் நுணுக்கங்களுடன் கூடிய பல்வேறு வகையான பனைத் தொழில் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இதற்காக கடலூரில் தென்மண்டல பனைத் தொழில் பயிற்சி மையமொன்று செயல்பட்டு வருகிறது. இந்த பயிற்சி மையத்தில் தமிழக மாவட்டங்களிலிருந்து வருகின்ற கிராமப்புற தொழிலாளர்களுக்கும் அண்டை மாநிலங்களிலிருந்து வரும் தொழிலாளர்களுக்கும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்த மையத்தில் வருடந்தோறும் 110 நபர்களுக்கு மாதம் ரூ.350 உதவித் தொகையுடன் கூடிய பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

51. கிராமப்புறத்தில் உள்ள பனைத் தொழில் கைவினைஞர்களுக்கு அதிக அளவில் வேலைவாய்ப்பு ஏற்படுத்தி கொடுப்பதுதான் தமிழ்நாடு பனைபொருள் வளர்ச்சி வாரியத்தின் திட்டமாகும். சிறிய அளவில் மூலதனத்துடன், உள்ளூரில கிடைக்கும் மூலப் பொருட்களைப் பயன்படுத்தி, தினந்தோறும் மக்கள் வாங்கி பயன்படுத்தும் மற்றும் இலகுவாக விற்பனையாகும் பொருட்களை உற்பத்தி செய்து, கிராமப்புற கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவி செய்வதே இவ்வாரியத்தின் நோக்கமாகும்.

218456.
தமிழ்நாடு சென்னை-600 …